
அருட்பா

ஆயிரத்தெட்டு

வடலூர் தெய்வநிலைய வெளியீடு



அ. த.
திருச்சிற்றம் பலம

முன்னுரை

பேரன்புமிக்க பெரியோர்களே !

"அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை" என்ற மகா மந்திரத்தினை அருளிய திரு அருட் பிரகாச வள்ளலார் அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய திரு பாடலில் "ஆயிரத்திரெட்டு" அருட் பாடல்களை திரட்டி ஒரு புத்தகமாக இந்த தெய்வ நிலையத்தின் சார்பில் வெளியிடுகின்றோம்.

இதற்கு முன் 1949-ம் ஆண்டிலும், 1961-ம் ஆண்டு ஜனவரி 31-லும் அடிகளாற் தமது தெய்வத் திருக்கரங்கொண்டு எழுதி யருளிய அருட்பெருஞ்ஜோதி அகவல் புத்தகத்தையும் வெளி யிட்டுள்ளோம், இப்போது "அருட்பா ஆயிரத்தெட்டு" என் னும் ஒப்பிலா இப்பதிப்பை வெளியிடுகின்றோம். இந்த புத்தகத்தை குறைந்த விலையில் அச்சிட்டுக் கொடுத்த வேப்பேரி அச்சக உரிமையாளரும் வடலூர் சமரச சுத்த சன்மார்க்க சத் திய சங்க செயல்குழு உருப்பினருமான திரு. K. நாகரத்தினம் அவர்களுக்கும் இப்புத்தகத்தை வெளியிட எங்கள் வேண்டு கோளுக்கிணங்கியும் இதை அச்சிடும் இந்தப் பணியில் மனமுவந்து ஈடுபட்டு தொண்டாற்றியவரும், வடலூர் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத் துணைத் தலைவருமான உயர்திரு. உத்திரா அரங்கத்தரசு அரங்கதரசு அவர்களுக்கும், எங்கள் வேண்டுகோளுக்கிணங்கி அணிந்துரை அளித்த இந்து மத அற நிலைய ஆணையாளர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார், B.A.B.L. அவர்களுக்கும் இத்தெய்வ நிலையத்தின் சார்பாக எங்கள் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இந்த சிறிய பதிப்பை எல்லோரும் படித்து பயன் அடைய வேண்டும் என்ற குறிக்கோளால் இப்புத்தகத்தைத் தெய்வ நிலயத்தின் சார்பில் குறைந்தவிலைக்கே வெளியிடுகின்றோம்.

இங்ஙனம்.

A. K. கோதண்டராம படையாச்சி,
சேர்மன் டிரஸ்டி, வடலூர்
T. சதாசிவம் பிள்ளை, டிரஸ்டி, வடலூர்
N. ஷண்முக கச்சிருயர், டிரஸ்டி, மேட்டுக்குப்பம்
P. N. ஞானசம்பந்த முதலியார், டிரஸ்டி குறிஞ்சிபாடி
S. பக்தவத்சலு நாயுடு, டிரஸ்டி வடலூர்
P. குப்புசாமி முதலியார், நிர்வாக அதிகாரி

வடலூர்
26—1—63

அணிந்துரை

உயர்திரு. M. S. சாரங்கபாணி முதலியார் அவர்கள், B.A., B.L.

தலைமை ஆணையர், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை

பொன்னுலே சூழுலகம் புகழுகின்ற வடலூர் திருவருட்பிரகாச வள்ளலாரெனும் சிதம்பரம் இராமலிங்க அடிகளாரையும், அவர்களால் திருவாய் மலர்ந்தருளப் பெற்ற தெய்வத் தமிழ் மணம் மணக்கும் திருவருட்பாவினையும் பேரறிஞர்கள் பலரும் புகழ்ந்து போற்றி வருவது அனைவரும் அறிந்ததேயாகும். அத்தகு திருவருட்பாவின் ஆறு திருமுறைகளிலிருந்தும் சுமார் ஆயிரத்தெட்டு அரும்பெரும் பாடல்களை திரட்டி முறைபடத் தொகுத்து "அருட்பா ஆயிரத்தெட்டு" எனத் தக்கதோர் பெயருடன் இந்நூல் வெளியிடப் பெற்றிருக்கின்றது கண்டும், இதுவரையிலும் இத்தெய்வ நிலையத்தில் இத்தகையவோர் சிறு நூலேனும் கிடைக்கப்பெறுதிருந்துவந்தவோர் பெருங்குறை இந்நூலின் வெளியீட்டால் நீங்கப்பெற்றிருத்தலைக் கண்டும் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். மேலும் 31-1-61ல் நிகழ்ந்த தைப்பூசப் பெருவிழாவின்போது, அடிகளாரின் கையெழுத்துப் பிரதியுடன் எனது தலைமையில் வெளியிடப்பெற்ற அவ்வொப்பிலா அருட்பெருஞ்ஜோதி அகவற் புத்தகத்தின் பதிப்பாசிரியரும் வடலூர் ச. சு. ச. ச. தலைமைச் சங்கத்தின் துணைத் தலைவருமாகிய, **திரு. உத்திரா அரங்கத்தரசு** அவர்களே இத் தெய்வநிலையத்தாரின் வேண்டுகோளுக்கிணங்கி இந்நூலினையும் இத்தெய்வ நிலையத்தின் மூன்றுவது வெளியீடாய் பதிப்பித்து வெளியிட மேற்கொண்ட அவர்தம் இச்சீரிய பணியானது பெரிதும் பாராட்டுதற்குரியதாகும். அத்துடன் இந்நூலை அதிக செலவின்றி எல்லா மெய்யன்பர்களும் எளிதில் வாங்கிப் பயன் பெறவேண்டும் எனும் அவர்தம் நோக்கத்தினை யுணர்ந்த சென்னை வேப்பேரி பிரஸ் உரிமையாளரும், இத்தெய்வ நிலையத்தாரும் இதை அடக்க விலைக்கே வழங்க முன்வந்திருப்பதானது. அனைவரையும் அகமகிழச் செய்யும் என நம்புகிறேன். இத்தகைய அடக்க விலை வெளியீடுகள் இன்னும் பல வரவேண்டுமென விரும்புவதோடு, இந்நூலினுக்கு ஓர் அணிந்துரை வரைந்துதவ வேண்டுமென வேண்டிக்கொண்ட இத் தெய்வ நிலையத்தாருக்கும் எனது உளங்கனிந்த நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்

அறநிலைய ஆட்சித்துறை அலுவலகம், சென்னை 28—1—63

மா. சே. சாரங்கபாணி முதலியார்
B.A., B.L.
தலைமை ஆணையாளர்.

பதிப்புரை

ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையிற் சிறந்த பெரியோர்களே!

புத்தமிர்த போகம் புசித்து விழியிமையாத பொன்னுட்டினும் மிக்கவேறெந்தத் தெய்வத் திருநாட்டிலும் ஈடு கரைந்திடற் கரிதாம் திருச்சிற்றம்பலத்தே இன்ப நடம்புரிகின்ற இறையவன்! அந்நாடு கலந்தாள்கின்றோர் எல்லாரும் வியப்ப நண்ணித் தனித்த மணமாலையிட்ட நாயகன்! "எனை நீ பாடுக! என்னோடு கலந்தாடுக!" என்று தனக்கே பணியிட்டருளியதும், தான் செய்த பெரும்பாக்கியத்தின் பயனாக அவ்வொப்பிலாப் பாடற்பணியை அவ்வண்ணமே தான் மிகவும் உவந்து மேற்கொண்டு பாடுதற்கு, ஏற்ற குணப்பொருளும், இலக்கியமும் அவ்விறைவன்தானே கொடுத்துதவி யருள வேண்டுமென வேண்டி அவ்வாறே இறைவனால் மகிழ்வுடன் கொடுத்தருளப் பெற்ற அத்திருவருளின் தனிப்பெருந் துணைகொண்டே, கோடு தவறாது பாடியருளப் பெற்ற அத்தெய்வத் திருப்பாடல்களே, நமது திருவருட்பிரகாச வள்ளலாற் பெருமானார் திருவாய் மலர்ந்தருளிய திருவருட்பா பாடல்கள் ஆகும் என்னும் இப் பேருண்மை அறிஞருலகம் அறிந்ததேயாகும்! ஆகவே, கருணை நிறைந்து ததும்பிப் பொங்கி ஓங்கும் அறுபெருங்கடல்கள் சேர்ந்து, ஒரு பெருந் தெய்வத் திருவமுதப் பேராழியெனத் திகழ்ந்து விளங்கும் அத்திருவருட்பாவாம் ஞானவாரிதியின் அறுகடற்றிரைகளில் சிலதெள்ளமுதற் தீந்தமிழ்த் துளிகளையே அருட்பா ஆயிரத்தெட்டு" என்னும் இச்சிறு நாலின் திரட்டித் தொகுத்துள்ளேன். இதற்குமுன் இதுபோன்ற சிறு நூல்கள் பலராலும் பல ஆயிரக் கணக்கில் அச்சிட்டு வெளியிடப்பெற்றிருப்பதும், அவைகளில் எத்தனையோ ஆயிரம் இன்னும் மெய்யன்பர்களால் உபயோகப்படுத்தப் பெற்று வருவதும் கண்கூடு! அவ்வாறு அன்பர்களால் பலகாலமாகப் பாடப்பட்டு வரும் அப்பாடல்கள் பலவற்றோடு ஆறுதிருமுறைகளிலுமுள்ள இன்னும் பல்வேறு பாடல்களையும் முறை தவறாது திரட்டி இச்சிறு நூலின்கண்ணே தொகுத்து அழகுபெற அச்சியற்றப் பட்டுள்ளது. 1867-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதற்கொண்டே அச்சாகி வெளிவந்துள்ள திருவருட்பாவின் பல வெளியீடுகளிலும் முறைமயக்கங்களும் பகுதி மயக்கங்களும் காணப்படுவதும் அறிஞர்கள் அறிந்ததேயாகும். ஆகையால் அவைகளைத் தழுவித் தொகுக்கப்பட்டமையால், இந்நூலிலும் அத்தகையவை

சில காணப்படுவது இயல்பே ஆகும் என்பது சொல்லாமலே விளங்கும். மேலும் மிகக் குறுகிய காலத்துக்குள்ளேயே இந் நூல் அச்சிடவேண்டி நேர்ந்தமையால், இதன் கண் அச்சுப் பிழைகள் காணப்படின் அவைகளை அருள்கூர்ந்து திருத்தம் செய்துகொள்ளுமாறும் தாழ்மையுடன் வேண்டிக் கொள் கிறேன்.

1949-ம் ஆண்டு வெளிவந்த அருட்பெருஞ்ஜோதி அகவற் புத்தகமே இத்தெய்வ நிலையத்தின் முதல் வெளியீடாகும். மீண்டும் சார்வரி ஆண்டு தைப்பூசத்தன்று (31-1-61) நமது திருவருட்பிரகாச வள்ளற் பெருமானார் தமது தெய்வத் திருக்கரங்கள் கொண்டெழுதியருளிய கையெழுத்துப் பிரதி யுடன் வெளிவந்த அவ்வருட்பெருஞ்ஜோதி அகவற்பெருநூலே இத்தெய்வ நிலையத்தின் இரண்டாவது வெளியீடாகும். இச் சுபகிருது ஆண்டு தைப்பூசப் பெருவிழாவின்போது (7-2-63) (அருட்பா ஆயிரத்தெட்டு) என்னும் இச்சிறு நூலே இத் தெய்வ நிலையத்தின் மூன்றாவது வெளியீடாகும்.

இந்நூலை குறித்த காலத்தில், அடக்கவிலைக்கே அச்சிட் டுதவிய சென்னை வேப்பேரி பிரஸ் உரிமையாளர் திரு. K. நாகரத்தினம் அவர்களுக்கும், ஷை அச்சகக் காரியத் தலைவர் திரு T. N. கன்னியப்பருக்கும், என்னுடனிருந்து அவ்வப்போது உதவியளித்த திரு மோகன் காளிதாஸ் அவர்களும், இதிற் காணும் பாடல்களைத் திரட்டித் தொகுத்தும் பதிப்பித்து இந்நூலினை தெய்வநிலைய மூன்றாவது வெளியீடாக வெளியிட வேண்டுமென விரும்பி அடியேனை அவ்வாறே செய்ய ஊக்க மளித்த இத்தெய்வ நிலையத்தாருக்கும் எனது அன்புகனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதோடு இப்பணியைச் செவ்வனே செய்து முடிக்கத் திருவருள் பாலித்து வருகின்ற நமது திருவருட்பிரகாசவள்ளற் பெருமானாரையும், எல்லாம் வல்ல தனிப்பெருந் தலைமை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவனை யும் மன மொழி மெய்கொண்டு என்றும் இறைஞ்சுகின்றனன்.

வணக்கம்.

வள்ளலார் மனோரஞ்சித மலர்ப்பதம் வாழ்க!

இங்ஙனம் தங்கள் அன்புள்ள

வடலூர்
24—1—63

உத்திரஞான சித்திபுரத்தடிமை
உத்திரா அரங்கத்தாசு

அ. க.

திருவருட்பிரகாச வள்ளலார்

என்னும்

சிதம்பரம் இராமலிங்க அடிகளார்

திருவாய்மலர்ந்தருளிய

திருவருட்பா ஆறுதிருமுறைகளிலிருந்தும்
திரட்டித் தொகுத்த

அருட்பா ஆயிரத்தெட்டு

வடலூர் திருவருட்பிரகாச வள்ளலார்

தெய்வநிலைய மூன்றாவது வெளியீடு

7—2—63 தைப்பூச பெருவிழாவின்போது
வெளியிட்டது

வடலூர்] 1963 [விலை ந. பை. 90

அ.த.

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

திருச்சிற்றம்பலம்

எல்லாம் செயல்கூடும் என்னாணை அம்பலத்தே
எல்லாம் வல்லான்றனையே யேத்து.

இன்று வருமோ நாளைக்கே வருமோ அல்லது மற்
றென்று வருமோ அறியேன் எங்கோவே—துன்றுமல
வெம்மாயை அற்று வெளிக்குள் வெளிக்கடந்து
சும்மா இருக்கும் சுகம்.

சற்குரு தோத்திரம்

பராபரம் கோதகலும் அநாமயம் போதநிலை
பகாநலம் வாதமறு சுகோதயம் பாதிதமில்
நிராமயம் காரகம திலாதசஞ் சிவிதநல்
நிராசைகொண் டாருடைய நிகேதனம் சூதமுறல்
வராதஇன் பாரவெனை முனுளில்வந் தேயருளி
மகாபலம் சேரவருள் விராவுசெம் பாதநம
இராமலிங் தார்மனதின் இராதசந் தோடநம
இராமலிங் காயநம இராமலிங் காயநம,

திருவருட்பா மகிமை

தண்ணீர் விளக்கெரித்த தன்மைபோல் மாந்தர்கள்தம்
உண்ணீர் சிவம்விளங்க ஓங்குவிக்கும்—கண்மணியாம்
நங்கள் இராமலிங்கனல்ல அருட்பா முறையைத்
துங்கமுற மாணு தொழு.

சற்குரு நாதா சற்குரு நாதா
சன்மார்க்க சங்கம் தழைக்கவருள் தாதா,

அருட்பெருஞ்ஜோதி

அட்டவணை

திருவடிப் புகழ்ச்சி

—o—

பரசிவம் : சின்மயம் பூரணம் சிவபோக
பாக்கியம் பரம நிதியம்
பரசுகம் தன்மயம் சச்சிதா னந்தமெய்ப்
பரம ஏகாந்த நிலயம்
பரமஞானம் பரம சத்துவ மகத்துவம்
பரம கைவல்ய நிமலம்
பரம தத்துவ நிரதிசய நிட்களம் பூத
பௌதிகா தார நிபுணம் 4
பவபந்த நிக்ரக விநோத சகளஞ்
சிற்பரம் பரானந்த சொருபம்
பரிசயா ஹிதம் சுயம் சதோதயம் வரம்
பரமார்த்த முக்த மௌனம்
படன வேதாந்தாந்த மாகமாந்தாந்த நிரு
பாதிகம் பரம சாந்தம்
பரநாத தத்துவாந்தம் சகச தரிசனம்
பகிரங்கம் அந்த ரங்கம் 8

பரவியோமம் பரம ஜோதிமயம் விபுலம்
பரம்பரம் அனந்தம் அசலம்
பரம லோகாதிக்க நித்திய சாம்பிராச்சியம்
பரபதம் பரம சூக்ஷ்மம்
பராபர மநாமயம் நிராதர மகோசரம்
பரம தந்திரம் விசித்திரம்
பராமுத நிராகரம் விகாசனம் விகோடணம்
பரசுகோதயம் அக்ஷயம் 12

பரிபவ விமோசனம் குணரகிதம் விசுவம்
பதித்துவ பரோ பரிணம்
பஞ்சகிர்த்திய சுத்த கர்த்தத்துவம் தற்
பரம் சிதம்பர விலாசம்

பகர்சுபாவம் புனிதம் அதுலம் அதுலிதம்
அம்பராம்பர நிராலம் பனம்
பரவு சாக்ஷாத்கார நிரவயவங் கற்
பனாதித நிரு விகாரம் 16

பராதுரிய அனுபவம் குருதுரிய பதம்
அம்பகம் பகா திதவிமலம்
பரம கருணாம்பரம் தற்பதம் கன சொற்
பதாதிதம் இன்ப வடிவம்
பரோக்ஷ ஞானாதிதம் அபரோக்ஷ ஞானானு
பவ விலாசப் பிரகாசம்
பாவனாதிதங் குணாதிதம் உபசாந்த
பத மகா மௌன ரூபம் 20

பரமபோதம் போத ரகித சகிதம்சம்
பவாதிதம் அப்ர மேயம்
பகரனந் தானந்தம் அமலம் உசிதஞ் சிற்
பதம் சதானந்த சாரம்
பரையாதி இரணாங்க சாங்க சௌபாங்க விம்
பாகார நிருவி கற்பம்
பரசுகா ரம்பம் பரம் பிரம வித்தம்
பரானந்த புரண போகம் 24

பரிமிதா திதம் பரோதயம் பரகிதம்
பர பரிணம் பராந்தம்
பரமாற்புதம் பரம சேதனம் பசுபாச
பாவனம் பரம மோட்சம்
பரமாணு குணநவா திதம் சிதாகாச
பாஸ்கரம் பரம போகம்
பரிபாக வேதன வரோ தயானந்த
பதபாலனம் பரம யோகம் 28

பரம சாத்திய அதிதானந்த போக்கியம்
பரிகதம் பரிவேத் தியம்
பரகேவலாத் விதானந் தானுபவ சத்த
பாதாக்ர சுத்த பலிதம்

பரம சுத்தாத் விதானந்த அனுபூதிகம்
பரிபூத சிற் குணாந்தம்
பரமசித்தாந்த நிகமாந்த சமரச சுத்த
பரமானுபவ விலாசம் ¼—32

தரமிகும் சர்வ சாதிட்டான சத்தியம்
சர்வ ஆனந்த போகம்
சார்ந்த சர்வாதார சர்வமங்கள சர்வ
சத்திதரம் என் றளவிலாச்
சகுண நிர்க்குணமுறு சலட்சணவிலட்சணத்
தன்மை பலவாக நாடித்
தம்மைநிகர் மறையெலாம் இன்னும் அளவிட
நின்ற சங்கரன் அநாதியாதி 36

சாமகீதப் பிரியன் மணிகண்ட சிகண்ட
சசிகண்ட சாம கண்ட
சயசயவெனும் தொண்டர் இதயமலர் மேவிய
சடாமகுடன் மதன தகனன்
சந்திர சேகரன் இடபவாகனன் கங்கா
தரன் சூலபாணி இறைவன்
தனிமுதல் உமாபதி புராந்தகன் பசுபதி
சயம்பு மாதேவன் அமலன் 40

தாண்டவன் தலைமாலை பூண்டவன் தொழு
மன்பர் தங்களுக்கருள் ஆண்டவன்
தன்னிகரில் சித்தெலாம் வல்லவன் வடதிசைச்
சைலமெனும் ஒரு வில்லவன்
தக்ஷிணா மூர்த்தி அருண்மூர்த்தி புண்ணிய
மூர்த்தி தகும் அட்டமூர்த்தி யானோன்
தலைமைபெறு கணநாயகன் குமரன் அழகன்
மெய்ச்சாமி நந்தேவ தேவன் 44

சம்பு வேதண்டன் பிறப்பிலான் முடிவிலான்
தாணு முக்கண்க ளுடையான்
சதுரன் கடாசல உரிப் போர்வையான்
செந்தழல் கரத்தேந்தி நின்றோன்

சர்வ காரணன் வீரற் காலகாலன் சர்வ
சம்பிரமன் சர்வேச் சுரன்
தகைகொள் பரமேச்சுரன் சிவபிரான் எம்
பிரான் தம்பிரான் செம்பொற் பதம் 48

தகவுபெறு நிட்பேத நிட்கம்பமாம் பரா
சத்திவடிவாம் பொற் பதம்
தக்கநிட் காடின்ய சம்வேத நாங்க சிற்
சத்திவடிவாம் பொற்பதம்
சாற்றரிய விச்சை ஞானங் கிரியை
யென்னு முச்சத்திவடிவாம் பொற்பதம்
தடையிலா நிர்விடய சிற்குண சிவானந்த
சத்திவடிவாம் பொற்பதம் 52

தருவிந்தை மோகினியை மானே அசைவிக்கும்
ஒரு சத்திவடிவாம் பொற்பதம்
தாழ்வில் ஈசானமுதன் மூர்த்திவரை ஐஞ்சத்தி
தஞ் சத்தியாம் பொற்பதம்
சவிகற்ப நிருவிகற்பம் பெறும் அனந்தமா
சத்தி சத்தாம் பொற்பதம்
தடநிருப வவிவர்த்த சாமர்த்தியத் திருவருட்
சத்தியுருவாம் பொற்பதம் 56

தவாத சாந்தப்பதம் துவாத சாந்தப்பதம்
தருமிணை மலர்ப் பூம்பதம்
சகலர் விஞ்ஞான கலர் பிரளயாகலர் இதய
சாட்சியாகிய பூம் பதம்
தணிவிலா அணுபசு சம்புபசுங்களில்
சமரசமுறும் பூம் பதம்
தருபரஞ் சூக்குமம் தூலம் இவை நிலவிய
தமக்குள் உயிராம் பூம்பதம் 60

சரவசர அபரிமிதவிவித ஆன்மப்பகுதி
தாங்குந் திருப்பூம் பதம்
தண்டபிண்டாண்ட அகிலாண்ட பிரமாண்டந்
தடிக்க வருளும் பூம்பதம்

தத்வ தாத்விக சக சிருட்டி திதி சங்கார
சகல கர்த்துரு பூம்பதம்
சகசமல இருளகல நின்மல சுயம்பிரகா
சங் குலவு நற்பூம் பதம் ½—64

மரபுறு மதாதித வெளி நடுவில்
ஆனந்த மாநடனமிடு பூம்பதம்
மன்னும்வினை ஒப்புமல பரிபாகம் வாய்க்க
மாமாயையை மிதிக்கும் பதம்
மலிபிறவி மறலியின் அழுந்தும் உயிர்தமை
அருளின் மருவுற எடுக்கும் பதம்
வளர் ஊர்த்த விரதாண்டவமுதல் பஞ்சகம்
மகிழ்ந்திட வியற்றும் பதம் 68

வல்லமுயலகன் மீதின் ஊன்றிய திருப்பதம்,
வளந்தரத் தூக்கும் பதம்
வல்வினை யெலாம் தவிர்த்து அழியாத
சுத்தநிலை வாய்த்திட வழங்கும் பதம்
மறைதுதிக் கும்பதம் மறைச்சிலம் பொலிர்
பதம் மறைப் பாதுகைச் செம்பதம்
மறைமுடி மணிப்பதம் மறைக்கு மெட்டாப்
பதம் மறைப்பரி யுகைக்கும் பதம் 72

மறையவனுளங்கொண்டபதம் அமிதகோடி
யாம் மறையவர் சிரஞ்சும் பதம்
மறையவன் சிரசிகாமணி யெனும் பதம் மலர்
கொள் மறையவன் வாழ்த்தும் பதம்
மறையவன் செயஉலக மாக்கின்ற அதிகார
வாழ்வை ஈந்தருளும் பதம்
மறையவன் கனவினுங் காணுதபதம் அந்த
மறையவன் பரவும் பதம் 76

மால்விடை இவர்ந்திடு மலர்பதம் தெய்வ
நெடுமால் அருச்சிக்கும் பதம்
மால்பரவி நாடொறும் வணங்குபதம் மிக்க
திருமால் விழி இலங்கும் பதம்

மால்தேட நின்றபதம் ஓர் அனந்தங்கோடி
மால் தலை அலங்கற் பதம்
மான்முடிப்பதம் நெடியமால் உளப்பதம்
அந்த மாலும் அறிவரிதாம் பதம் 80

மால்கொள் அவதாரங்கள் பத்தினும் வழிபட்டு
வாய்மை பெற நிற்கும் பதம்
மாலுலகு காக்கின்ற வண்மைபெற் றடிமையின்
வதிந்திட வளிக்கும் பதம்
வரையுறும் உருத்திரர்கள் புகழ்பதம் பல கோடி
வயவுருத்திரர் சூழ்பதம்
வாய்ந்திடும் உருத்திரர்க்கு இயல்கொள் முத்
தொழில்செய்யும் வண்மை தந்தருளும் பதம் 84

வான இந்திராதி எண்டிசைக் காவலர்கள்
மாதவத் திறனும் பதம்
மதியிரவி யாதிசுரர் அசுரர் அந்தரர் வான
வாசிகள் வழுத்தும் பதம்
மணியுரகர் கருடர் காந்தருவர் விஞ்சையர்
சித்தர் மாமுனிவர் ஏத்தும் பதம்
மாநிருதர் பைசாசர் கிம்புருடர் யக்ஷர்கள்
மதித்து வரமேற்கும் பதம் 88

மன்னு கின்னரர் பூதர் வித்தியாதரர் போகர்
மற்றையர்கள் பற்றும் பதம்
வண்மைபெறு நந்திமுதல் சிவகணத் தலை
வர்கள் மனக்கோயில் வாழும் பதம்
மாதேவி எங்கள் மலைமங்கை என்னம்மை
மென் மலர்க்கையால் வருடும் பதம்
மறலியை உதைத்தருள் கழற்பதம் அரக்கனை
மலைக்கீழ் அடர்க்கும் பதம் 92

வஞ்சமறு நெஞ்சினிடை யெஞ்சலற விஞ்சு
திறன் மஞ்சுற விளங்கும் பதம்
வந்தனைசெய் புந்தியவர் தந்துயர் தவிர்ந்திட
வுன் மந்தண நவிற்றும் பதம்

மாறிலொரு மாறனுள மிறின்மகிழ்
விரியிட மாறி நடமாடும் பதம்
மறக்கருணையுந் தனி அறக்கருணையும் தந்து
வாழ்விக்கும் ஒன்மைப் பதம் ¾—96

இரவுறும் பகலடியர் இரு மருங்கினும்
உறுவரென வயங்கிய சீர்ப்பதம்
எம் பந்தமற எமது சம்பந்தவள்ளல்
மொழி இயன்மண மணக்கும் பதம்
ஈவரசர் எம்முடைய நாவரசர் சொற்பதிக
இசைபரி மளிக்கும் பதம்
ஏவலார் புகழ் எமது நாவலாரூரர் புகல்
இசைதிருப் பாட்டுப் பதம் 100

ஏதலூர் தங்காத வாதவூர்எங் கோவின்
இன்சொன் மணி அணியும் பதம்
எல்லூரு மணிமாட நல்லூரின் அப்பர்
முடி இடை வைகி அருண்மென் பதம்
எடுமேலெனத்தொண்டர்முடிமேன் மறுத்
திடவும் இடைவலிந்து ஏறும் பதம்
எழில்பரவை யிசைய ஆரூர் மருகி னருள்
கொண்டு இராமுழுதும் உலவும் பதம் 104

இன்றெண்டர் பசியறக் கச்சூரின் மனைதொ
றும்' இரக்கநடை கொள்ளும் பதம்
இளைப்புறலறிந்து அன்பர் பொதிசோ
றருந்த முனிருந்து பினடக்கும் பதம்
எரிவிறகு விற்கவளர் கூடற் றெருத்தொறும்
இயங்கிய இரக்கப் பதம்
இறு வைகையங் கரையின் மண்படப் பல்
கால் எழுந்து விளையாடும் பதம் 108

எங்கே மெய் அன்பருளர் அங்கே நலந்தர
எழுந்தருளும வண்மைப் பதம்
எவ்வண்ணம் வேண்டுகினும் அவ்வண்ணம்
அன்றே இரங்கி ஈந்தருளும் பதம்

என்போன்ற வர்க்குமிகு பொன்போன்ற
கருணை தந்து இதயத் திருக்கும் பதம்
என்னுயிரை யன்னபதம் என்னுயிர்க்குயி
ராய் இலங்குசெம் பதுமப் பதம் 112

என்னறிவெனும் பதம் என் அறிவி னுக்கறி
வாய் இருந்தசெங் கமலப் பதம்
என் அன்பெனும் பதம்என் அன்பிற்கு
வித்தாய் இசைந்த கோகனகப்பதம்
என் தவமெனும் பதம் என்மெய்த் தவப்
பயனாய் இயைந்தசெஞ் சலசப் பதம்
என்னிருகண் மணியான பதம் என்கண்மணி
களுக்கினிய நல் விருந்தாம் பதம் 116

என் செல்வமாம் பதம் என்மெய்ச் செல்வ
வருவாயெனும் தாமரைப் பொற்பதம்
என் பெரிய வாழ்வான பதம் என் களிப்பாம்
இரும்பதம் என் நிதியாம் பதம்
என் தந்தை தாயெனும் இணைப்பதம் என்
உறவாம் இயற்பதம் என் நட்பாம் பதம்
என் குருவெனும் பதம்என் இட்ட தெய்வப்
பதம் எனதுகுல தெய்வப் பதம் 120

என் பொறிகளுக்கெலாம் நல்விடயமாம் பதம்
என் எழுமையும் விடாப் பொற்பதம்
என் குறையெலாந் தவிர்த்து ஆட்கொண்ட
பதம் எனக்கு எய்ப்பில் வைப்பாகும் பதம்
எல்லார்க்கும் நல்லபதம் எல்லாஞ்செய்வல்ல
பதம் இணையிலாத் துணையாம் பதம்
எழுமனம் உடைந்து உடைந்து உருகி நெகிழ்
பத்தர்கட்கு இன்னமுத மாகும் பதம் 124

என்னுறிற் பாலில்நறு நெய்யோடு சருக்கரை
இசைந்தென இனிக்கும் பதம்
ஏற்றமுக் கனிபாகு கன்னல் கற்கண்டுதே
னென்ன மதுரிக்கும் பதம்

எங்கள் பதம் எங்கள் பதம் என்று சமயத்
தேவர் இசைவழக்கிடு நற்பதம்
ஈறிலாப்பதம் எலாம்தரு திருப்பதம் அழிவில்
இன்புதவு கின்ற பதமே. 1—128

திருவடிப் புகழ்ச்சி முற்றிற்று.

விண்ணப்பக் கலிவெண்பா

சொற்பெறுமெய்ஞ் ஞானச் சுயஞ்ஜோதி யாந்தில்லைச்
சிற்சபையில் வாழ்தலைமைத் தெய்வமே?-மண்ணுலகில்

என்போன் றவர்க்கும் இருள்நீக்கி இன்புதவும்
பொன்போன்ற மேனிப் புராதனனே-மின்போன்ற 2

செஞ்சடையாய் மூவருக்கும் தேவருக்கு மியாவருக்கும்
அஞ்சடையா வண்ணம் அளிப்போனே-விஞ்சுலகில் 3

எல்லோர்க்கு நல்லவனே எல்லாஞ்செய் வல்லவனே
எல்லார்க்கும் ஒன்றா யிருப்பவனே-தொல்லூழி 4

ஆர்ந்த சராசரங்க ளெல்லா மடிநிழலில்
சேர்ந்தொடுங்க மாநடனஞ் செய்வோனே-சார்ந்துலகில்

எத்தேவர் மெய்த்தேவ ரென்றுரைக்கப் பட்டவர்கள்
அத்தேவர்க் கெல்லாமுன் னானானே-அந்தணவெண்

நீறுடையா யாறுடைய நீண்முடியாய் நேடரிய
வீறுடையாய் நின்றனக்கோர் விண்ணப்பம்-பின்னெஞ்சாப்

பண்ணீர்மை கொண்டதமிழ்ப் பாமாலை யாற்றுதித்துக்
கண்ணீர்கொண் டுன்பாற் கனிந்ததிலை-ஆதலினால் 8

பேயினையொத் திவ்வுலகில் பித்தாகி நின்றவிந்த
நாயினைநீ ஆண்டிடுதல் நன்கன்றே-ஆயினுமுன் 9

மண்ணு ருயிர்களுக்கும் வானவர்க்குந் தானிரங்கி
உண்ணக் கொடுவிடமும் உண்டனையே - என்னுமல் 10

வெய்த்தவள வெற்பெடுத்த வெய்ய அக்கன்ர தனக்கும்
வாய்த்த வரமெல்லாம் வழங்கினையே - துஞ்சுபன்றித்

தோயாக் குருளைகளின் துன்பம் பொறுதன்று
தாயாய் முலைப்பாலுந் தந்தனையே - ஆண்டொருநாள்

வாய் முடியாத் துன்பு கொண்ட வந்திக்கோராளாகித்
தாய்முடிமேல் மண்ணுஞ் சுமந்தனையே-ஆய்துயர 13

வில்லடிக்கு நெஞ்சம் விரும்பியதல் லாளறிந்த
கல்லடிக்கும் உள்ளங் களித்தனையே - மல்லலுறும் 14

வில்வக் கிளையுதிர்த்த வெய்ய முசுக்கலையைச்
செல்வத் துரைமகனாய்ச் செய்தனையே - சொல்ல கலின்

நிலுகின்ற நெய்யருந்த நேரெலியை மூவுலகும்
ஆளுகின்ற மன்னவனாய் ஆக்கினையே - கோளகல 16

வாய்ச்சங்கு நூலிழைத்த வாய்ச்சிலம்பி தன்னைஉயர்
கோச்செங்கட் சோழனெனக் கூட்டினையே-ஏச்சறு நல்

ஆறடுத்த வாகிசர்க் காம்பசியைக் கண்டுகட்டுச்
சோறெடுத்துப் பின்னே சுமந்தனையே - கூறுகின்ற 18

தொன்மைபெறுஞ் சுந்தரர்க்குத் தோழனென்று
பெண்பரவை
நன்மனைக்குத் தூதுநடந்தனையே - நன்மைபெற 19

அன்புடைய தாயர்களோ ராயிரம்பே ரானாலும்
அன்புடையாய் நின்னைப் போலாவாரோ-துட்டனென

மாலுந் திசை முகனும் வானவரும் வந்துதடுத்
தாலுஞ் சிறியேனைத் தள்ளிவிடேல் - சாலுலக 21

வாதனைகொண் டோனென்று மற்றெவ ராலும்வந்து
போதனைசெய் தாலுமெனைப் போக்கிவிடேல் - நீதயவு

சூழ்ந்திடுக என்னையுநின் தொண்டருடன் சேர்ந்தருள்க
வாழ்ந்திடுக நின் தாண் மலர்! 23

விண்ணப்பக் கலிவெண்பா சுருக்கம் முற்றிற்று.

நெஞ்சறிவுறுத்தல்

பொன்னார் மலைபோற் பொலிவுற் றசையாமல்
எந்நாளும் வாழியநீ என்னெஞ்சே—பின்னான 1

இப்பிறப்பி னோடிங் கெழுபிறப்பும் அன்றியெனை
எப்பிறப்பும் விட்டகலா என்னெஞ்சே—செப்பமுடன்

செவ்வொருசார் நின்று சிறியேன் கிளக்கின்ற
இவ்வொருசொல் கேட்டிடுக என்னெஞ்சே—எவ்வெவ்

உலகும் பரவும் ஒருமுதலாய் எங்கும்
இலகும் சிவமாய் இறையாய்—விலகும் 4

உருவாய் உருவில் உருவாய் உருவுள்
அருவாய் அருவில் அருவாய்—உருஅருவாய் 5

நித்தியமாய் நிர்க்குணமாய் நிற்சலமாய் நின்மலமாய்ச்
சத்தியமாய்ச் சத்துவமாய்த் தத்துவமாய்-முத்தியருள்

ஒன்றாய்ப் பலவாய் உயிராய் உயிர்க்குயிராய்
நன்றாய் நவமாய் நடுநிலையாய்—மட்டகன்ற 7

அண்டங்கள் எல்லாம் அணுவில் அடைத்தருளித்
திண்டங்கு மாறிருத்தும் சித்தனெவன்—பண்டங்கு 8

வியாச் சிறுபெண் விளையாட்டுள் அண்டமெலாம்
தேயாது கூட்டுவிக்கும் சித்தனெவன்—ஒப்புறவே 9

நில்லாத் காற்றை நிலையாக் கட்டத்தடைத்துச்
செல்லாது வைக்கின்ற சித்தனெவன்—நீடச்சிர் 10

நல்வந் தனைசெய்யும் நம்போல்வார்க் கோர் ஞானச்
செல்வந் தருநமது தெய்வம்காண்—இம்மைதனில் 11

அன்றொருநாள் நம்பசிகண் டந்தோ தரியாது
நன்றிரவில் சோறளித்த நற்றாய்காண்—செந்நெறியில்

நாம்தேடா முன்னம் நமைத்தேடிப் பின்புதனை
நாம்தேடச் செய்கின்ற நற்றாய்காண்—நீடுலகில் 13

தான்பாடக் கேட்டுத் தமியேன் களிக்குமுன்னம்
நான்பாடக் கேட்டுவக்கும் நற்றாய்காண்—போகாத 14

பாபக் கடற்கோர் படுகடலாம் பாழ்வெகுளிக்
கோபக் கடலில் குளித்தனையே—தாபமுறச் 15

செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்லதனில் தீயதென்ற தெண்ணிலையே-மல்லல்பெறத்

தன்னைத்தான் காக்கில் சினங்காக்க என்றதனைப்
பொன்னைப்போல் போற்றிப் புகழ்ந்திலையே—துன்னி

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல என்னுந்
திகழ்வாய் மையும்நீ தெளியாய்—ஆய்ந்தறிவோர் 18

எல்லா நலமும் இஃதேயென் றேத்துகின்ற
கொல்லா நலம்சிறிதும் கொண்டிலையே—பொல்லாத

வன்போ டிருக்கு மதியிலிநீ மன்னுயிர்க்கண்
அன்போ டிரக்கம் அடைந்திலையே—சிராக 20

இன்றிருந்தார் நாளைக் கிருப்பதுபொய் என்றறவோர்
நன்றிருந்த வார்த்தையும்நீ நாடிலையே—ஒன்றி 21

உறங்குவது போலுமென்ற ஒண்குறளின் வாய்மை
மறங்கருதி அந்தோ மறந்தாய்—கறங்கின் 22

நெருநல் உளனொருவன் என்னும் நெடுஞ்சொல்
மருவும் குறட்பா மறந்தாய்—சம்பந்தர் 23

அற்றவருக் கற்றசிவ னாமெனுமப் பொன்மொழியை
மற்றைமொழி போன்று மறந்தனையே-சிற்றுயிர்க்குக்

கற்பனையில் காய்ப்புளதாய்க் காட்டும் பிரபஞ்சக்
கற்பனையை மெய்யென்று கண்டனையே—ஓகோநும்

கோமுடிக்கண் தீப்பற்றிக் கொண்டதென்றால்-மற்றதற்குப்
பூமுடிக்கத் தேடுகின்றோர் போன்றனையே-செவ்வாற்றில்

பற்றற்றான் பற்றினையே பற்றியிடல்வேண்டுமது
பற்றற்றால் அன்றிப் பலியாதால்—பற்றற்றல் 27

வேதனையால் ஈங்கு விரியும் சகப்பழக்க
வாதனைபோய் நீங்கிலன்றி வாராதால்—வாதனையும்

ஈனமந்தோ இவ்வுலகம் என்றருளை நாடுகின்ற
ஞானம்வந்தால் அன்றி நலியாதால்—ஞானமது 26

போகமுற்றும் பொய்யெனவே போதும் அனித்தியவி
வேகமுற்றால் அன்றி விளங்காதால்—ஆகவஃ 30

துண்ணவந்தால் போலுமிவண் உற்றுவிசா ரித்திடுமோர்
எண்ணம்வந்தா அன்றி இசையாதால்—எண்ணமது

பங்கமடைந் தார்அவையைப் பாராது சாதுக்கள்
சங்கமடைந்தா லன்றிச் சாராதால்—கைந்நேர்ந்து 32

கோடாது கோடி கொடுத்தாலும் சைவநெறி
நாடா தவரவையை நண்ணியிடேல்—கோடாது 33

கொல்லா விரதமது கொள்ளாரைக் காணிலொரு
புல்லாக எண்ணிப் புறம்பொழிக—செஞ்சோதித் 34

தாதொன்று அம்பைமுடித் தாணுஅடி யொன்றிமற்றை
யாதொன்றும் நோக்கா தமைந்திடுக—தீதென்ற 35

பாழ்வாழ்வு நீங்கப் பதிவாழ்வில் எஞ்ஞான்றும்
வாழ்வாய் என்றேடும் மகிழ்ந்து. ! 36

நெஞ்சறிவுறுத்தல் சுருக்கம் முற்றிற்று.

சிவநேச வெண்பா

முன்னவனே யானை முகத்தவனே முத்திநலம்
சொன்னவனே தூய்மெய்ச் சுகத்தவனே—மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே நின்தாள் சரண். 1

வீறுடையாய் வேலுடையாய் விண்ணுடையாய் வெற்புடையாய்
நீறுடையாய் நேயர்கடந் நெஞ்சுடையாய்—கூறு
முதல்வாஓர் ஆறு முகவா முக்கண்ணன்
புதல்வாநின் தாளெம் புகல் 2

சீர்சான்ற வேதச் செழும்பொருளே சிற்சொருபப்
பேர்சான்ற உண்மைப் பிரமமே—நேர் சான்றோர்
நாடும் பரமசிவமே நாயேனுக் கன்புநின்பால்
நீடும் படிநீ நிகழ்த்து 3

வந்தித்தேன் பிட்டுகந்த வள்ளலே நின்னடியான்
சிந்தித்தேன் என்றல் சிரிப்பன்றோ—பந்தத்தாஞ்
சிந்துசிந்திப் பித்தெனது சிந்தையுனின் பொன்னருளே
வந்துசிந்திப் பித்தல் மறந்து. 4

வெள்ளமுதும் தேனும் வியன் கரும்பும் முக்கனியின்
உள்ளமுதும் தெள்ளமுதும் ஒவ்வாதால் - கள்ளமிலா
நின்னன்பர் தம்புகழின் நீள்மதுரந் தன்னை இனி
என்னென்ப தையா இயம்பு. 5

பண்ணுலுன் சிரினேச்சம் பந்தர்சொல வெள்ளெலும்பு
பெண்ணான தென்பார் பெரிதன்றே—அன்றுஅச்
சைவவடி வாஞான சம்பந்தர் சீருரைக்கில்
தெய்வவடி வாஞ்சாம்பர் சேர்ந்து. 6

பூவைவிட்டுப் புல்லெடுப்பார் போலுன் திருப்பாதத்
தேவைவிட்டு வெம்பிறவித் தேவர்களைக்-கோவையிட்டுக்
கூவுவார் மற்றவரைக் கூடியிடேன் கூடுவனேல்
ஒவ்வா ராவ லுனே. 7

எம்பரவை யோமண் ணிடந்தலைந்தான் சுந்தரனுர்
தம்பரவை விட்டுத் தலைக்கடையாய் - வெம்பனையாய்
வாயிற் படியாய் வடிவெடுக்க நேர்ந்திலனே
மாயப்பெயர் நீண்ட மால். 8

நண்ணித் தலையால் நடக்கின்றோம் என்பதெங்கள்
மண்ணில் பழைய வழக்கங்காண் - பண்ணிற் சொல்
அம்மையார் வாமத்தோய் ஆயினுமுன் காரைக்கால்
அம்மையார் போனடந்தார் ஆர். 9

மாலெங்கே வேதனுயர் வாழ்வெங்கே இந்திரன்சொல்
கோலெங்கே வானோர் குடியெங்கே—கோலஞ்சேர்
அண்டமெங்கே அவ்வவ் வரும் பொருளெங் கேநினது
கண்டமங்கே நீல முருக் கால். 10

என்சிறுமை நோக்கா தெனக்கருளல் வேண்டுமென்றே
நின்பெருமை நோக்கிஇங்கு நிற்கின்றேன்—என்பெரும
யாதோ நின் சித்தம். அறியேன் அடியேற்கெப்
போதோ அருள்வாய் புகல். 11

எள்ளலே என்னினுமோர் ஏத்துதலாய்க் கொண்டருளெம்
வள்ளலே என்றனைநீ வாழ்வித்தால்—தள்ளலே
வேண்டுமென யாரே விளம்புவார் நின்னடியர்
காண்டுமெனச் சூழ்வார் களித்து. 12

முத்தேவர் போற்று முதற்றேவ நின்னையன்றி
எத்தேவர் சற்றே எடுத்துரைநீ—பித்தேன்செய்
குற்றமெலாம் இங்கோர் குணமாகக் கொண்டென்னை
அற்றமிலா தாள்கின் றவர். 13

கண்ணப்பன் ஏத்துநுதற் கண்ணப்ப மெய்ஞ்ஞான
விண்ணப்ப நின்றனக்கோர் விண்ணப்பம் - மண்ணிற்சில்
வானவரைப் போற்றும் மதத்தோர் பலருண்டு
நானவரைச் சேராமல் நாட்டு. 14

பொன்னின் றொளிரும் புரிசடையோய் நின்னையன்றிப்
பின்னொன் றறியேன் பிழைநோக்கி - என்னை
அடித்தாலு நீயே அணைத்தாலு நீயே
பிடித்தேனுன் பொற்பாதப் பேறு. 15

இப்பாரில் என்பிழைகள் எல்லாம் பொறுத்தருளென்
அப்பாநின் தாட்கே அடைக்கலங்காண் - இப்பாரில்
நாவினது தாணிழல் நண்ணுமட்டும் நின்னடியார்
பாவினது சீர்கேட்கப் பண்.

சிவநேச வெண்பா சுருக்கம் முற்றிற்று

மஹாதேவ மாலை

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்.

கருணைநிறைந்து அகம்புறமும் துளும்பி வழிந்
துயிர்க்கெல்லாம் களைக ணாகித்
தெருள்நிறைந்த இன்பநிலை வளர்க்கின்ற
கண்ணுடையோய்! சிதையா ஞானப்
பொருள்நிறைந்த மறையமுதம் பொழிகின்ற
மலர்வாயோய்! பொய்ய னேன்றன்
மருள்நிறைந்த மனக்கருங்கற் பாறையும் உட்
கசிந்துருக்கும் வடிவத் தோயே!

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

உலகநிலை முழுதாகி ஆங்காங் குள்ள
உயிராகி உயிர்க்குயிராம் ஒளிதா னாகிக்
கலகநிலை அறியாத காட்சி யாகிக்
கதியாகி மெய்ஞ்ஞானக் கண்ண தாகி
இலகுசிதா காசமதாய்ப் பரமா காச
இயல்பாகி இணையொன்றும் இல்லா தாகி
அலகில்அறி வானந்த மாகிச் சச்சி
தானந்த மயமாகி அமர்ந்த தேவே. 1

உலகமெலாம் தனிநிறைந்த உண்மை யாகி
யோகியர்தம் அனுபவத்தின் உவப்பாய் என்றும்
கலகமுறு உபசாந்த நிலைய தாகிக்
களங்கமற்ற அருண்ஞானக் காட்சி யாகி
விலகலுறு நிபிட ஆனந்த மாகி
மீதானத் தொளிர்கின்ற விளக்கமாகி
இலகுபரா பரமாய்ச்சிற் பரமாய் அன்பர்
இதயமலர் மீதிருந்த இன்பத் தேவே. 2

வித்தாகி முளையாகி விளைவ தாகி
விளைவிக்கும் பொருளாகி மேலு மாகிக்
கொத்தாகிப் பயனாகிக் கொள்வோ னாகிக்
குறைவாகி நிறைவாகிக் குறைவி லாத
சத்தாகிச் சித்தாகி இன்ப மாகிச்
சதாநிலையாய் எவ்வுயிர்க்குஞ் சாட்சி யாகி
முத்தாகி மாணிக்க மாகித் தெய்வ
முழுவயிரத் தனிமணியாய் முளைத்த தேவே. 3

வேதாந்த நிலையாகிச் சித்தாந் தத்தின்
மெய்யாகிச் **சமரசத்தின்** விவேக மாகி
நாதாந்த வெளியாகி முத்தாந் தத்தின்
நடுவாகி நவநிலைக்கும் நண்ணு தாகி
மூதாண்ட கோடியெல்லாம் தாங்கி நின்ற
முதலாகி மனாதித முத்தி யாகி
வாதாண்ட சமயநெறிக் கமையா தென்றும்
மௌனவியோ மத்தினிடை வயங்குந் தேவே. 4

தோன்றுதுவி தாத்துவித மாய்வி ரிட்டாத்
துவிதமாய்க் கேவலாத் துவித மாகிச்
சான்றசுத்தாத் துவிதமாய்ச் சுத்தந் தோய்ந்த
சமரசாத் துவிதமுமாய்த் தன்னை யன்றி
ஊன்றுநிலை வேறொன்று மிலதாய் என்றும்
உள்ளதாய் நிரதிசய உணர்வாய் எல்லாம்
ஈன்றருளும் தாயாகித் தந்தை யாகி
எழிற் குருவாய்த் தெய்வதமாய் இலங்குந் தேவே.

பரமாகிச் சூக்குமமாய்த் தூல மாகிப்
பரமார்த்த நிலையாகிப் பதத்தின் மேலாஞ்
சிரமாகித் திருவருளாம் வெளியாய் ஆன்ம
சிற்சத்தி யாய்ப்பரையின் செம்மை யாகித்
திரமாகித் தற்போத நிவர்த்தி யாகிச்
சிவமாகிச் சிவானுபவச் செல்வ மாகி
அரமாகி ஆனந்த போத மாகி
ஆனந்தா தீதமதாய் அமர்ந்த தேவே. 6

இந்தியமாய்க் கரணாதி அனைத்து மாகி
இயல்புருட னுய்க்கால பரமு மாகிப்
பந்தமற்ற வியோமமாய்ப் பரமாய் அப்பாற்
பரம்பரமாய் விசுவமுண்ட பான்மை யாகி
வந்தவுப சாந்தமதாய் மௌன மாகி
மகாமௌன நிலையாகி வயங்கா நின்ற
அந்தமில்தொம் பதமாய்த்தத் பதமாய் ஒன்றும்
அசிபதமாய் அதீதமாய் அமர்ந்த தேவே. 7

நின்மயமாய் என்மயமாய் ஒன்றுங் காட்டா
நிராமயமாய் நிருவிகற்ப நிலையாய் மேலாந்
தன்மயமாய்த் தற்பரமாய் விமல மாகித்
தடத்தமாய்ச் சொரூபமாய்ச் சகச மாகிச்
சின்மயமாய்ச் சிற்பரமாய் அசல மாகிச்
சிற்சொலித மாய்அகண்ட சிவமாய் எங்கும்
மன்மயமாய் வாசகா தீத மாகி
மனாதீத மாய்அமர்ந்த மௌனத் தேவே. 8

அளவிறந்த நெடுங்காலம் சித்தர் யோகர்
அறிஞர்மல ரயன் முதலோர் அனந்த வேதம்
களவிரந்துங் கரணாதி இறந்தும் செய்யும்
கடுந்தவத்துங் காண்பரிதாங் கடவு ளாகி
உளவிறந்த எம்போல்வார் உள்ளத் துள்ளே
ஊறுகின்ற தெள்ளமுத ஊற லாகிப்
பிளவிறந்து பிண்டாண்ட முழுதுந் தானாய்ப்
பிறங்குகின்ற பெருங்கருணைப் பெரிய தேவே. 9

வாயாகி வாயிறந்த மௌன மாகி
மதமாகி மதங்கடந்த வாய்மை யாகிக்
காயாகிப் பழமாகித் தருவாய் மற்றைக்
கருவிகர ணாதிகளின் கலப்பாய்ப் பெற்ற
தாயாகித் தந்தையாய்ப் பிள்ளை யாகித்
தானாகி நானாகிச் சகல மாகி
ஓயாத சத்தியெலாம் உடைய தாகி
ஒன்றாகிப் பலவாகி ஓங்குந் தேவே. 10

அண்டங்கள் பலவாகி அவற்றின் மேலும்
அளவாகி அளவாத அதீத மாகிப்
பிண்டங்கள் அனந்தவகை யாகிப் பிண்டம்
பிறங்குகின்ற பொருளாகிப் பேதந் தோற்றும்
பண்டங்கள் பலவாகி இவற்றைக் காக்கும்
பதியாகி ஆனந்தம் பழுத்துச் சாந்தங்
கொண்டெங்கும் நிழல்பரப்பித் தழைந்த ஞானக்
கொழுங்கடவுள் தருவாகிக் குலவுந் தேவே, 11

பொன்னாகி மணியாகிப் போக மாகிப்
புறமாகி அகமாகிப் புனித மாகி
மன்னாகி மலையாகிக் கடலு மாகி
மதியாகி ரவியாகி மற்று மாகி
முன்னாகிப் பின்னாகி நடுவு மாகி
முழுதாகி நாதமுற முழங்கி யெங்கும்
மின்னாகிப் பரவிஇன்ப வெள்ளந் தேக்க
வியன்கருணைப் பொழிமுகிலாய் விளங்குந் தேவே.

அரிதாகி அரியதினும் அரிய தாகி
அநாதியாய் ஆதியாய் அருள தாகிப்
பெரிதாகிப் பெரியதினும் பெரிய தாகிப்
பேதமாய் அபேதமாய்ப் பிறங்கா நின்ற
கரிதாகி வெளிதாகிக் கலைக ளாகிக்
கலைகடந்த பொருளாகிக் கரணாதிதத்
தெரிதான வெளிநடுவில் அருளாம் வண்மைச்
செழுங்கிரணச் சுடராகித் திகழுந் தேவே, 13

உருவாகி உருவினில்உள் ளுருவ மாகி
உருவத்தில் உருவாகி உருவுள் ஒன்றாய்
அருவாகி அருவினில்உள் ளருவ மாகி
அருவத்தில் அருவாகி அருவுள் ஒன்றாய்க்
குருவாகிச் சத்துவசிற் குணத்த தாகிக்
குணரகிதப் பொருளாகிக் குலவா நின்ற
மருவாகி மலராகி வல்லி யாகி
மகத்துவமா யணுத்துவமாய் வயங்குந் தேவே. 14

சகலமாய்க் கேவலமாய்ச் சுத்த மாகிச்
சராசரமாய் அல்லவாய்த் தானே தானாய்
அகலமாய்க் குறுக்கமாய் நெடுமை யாகி
அவையனைத்தும் அணுகாத அசல மாகி
இகலுறுத் துணையாகித் தனிய தாகி
எண்குணமாய் எண்குணத்தெம் இறையாய் என்றும்
உகலிலாத் தண்ணருள்கொண் டுயிரையெல்லாம்
ஊட்டி வளர்த் திடுங்கருணை ஓவாத் தேவே. 15

வாசகமாய் வாச்சியமாய் நடுவாய் அந்த
வாசகவாச் சியங் கடந்த மௌன மாகித்
தேசகமாய் இருளகமாய் இரண்டுங் காட்டாச்
சித்தகமாய் வித்தகமாய்ச் சிறிதும் பந்த
பாசமுறாப் பதியாகிப் பசுவு மாகிப்
பாசநிலை யாகிஒன்றும் பகரா தாகி
நாசமிலா வெளியாகி ஒளிதா னாகி
நாதாந்த முடிவில்நடம் நவிற்றுந் தேவே. 16

சகமாகிச் சிவனாய் ஈச னாகிச்
சதுமுகனாய்த் திருமாலாய் அரன்தா னாகி
மகமாயை முதலாய்க் கூடத்த னாகி
வான்பிரம மாகிஅல்லா வழக்கு மாகி
இகமாகிப் பரமாகிச் சமய கோடி
எத்தனையு மாகிஅவை எட்டா வான்கற்
பகமாகிப் பரமாகிப் பரம மாகிப்
பராபரமாய்ப் பரம்பரமாய்ப் பதியுந் தேவே. 17

விதியாகி அரியாகிக் கிரீச னாகி
விளங்கு மகேச்சுரனாகி விமல மான
நிதியாகும் சதாசிவனாய் விந்து வாகி
நிகழ்நாத மாய்ப்பரையாய் நிமலா னந்தப்
பதியாகும் பரசிவமாய்ப் பரமாய் மேலாய்ப்
பக்கமிரண் டாய்இரண்டும் பகரா தாகிக்
கதியாகி அளவிறந்த கதிக ளெல்லாம்
கடந்து நின்று நிறைந்தபெருங் கருணைத் தேவே,

மானாகி மோகினியாய் விந்து வாகி
மற்றவையாற் காணாத வான மாகி
நானாகி நானல்ல னாகி நானே
நானாகும் பதமாகி நான்றான் கண்ட
தானாகித் தானல்ல னாகித் தானே
தானாகும் பதமாகிச் சகச ஞான
வானாகி வானடுவில் வயங்கு கின்ற
மௌனநிலை யாகிஎங்கும் வளருந் தேவே 19

மந்திரமாய்ப் பரமாகி வன்ன மாகி
வளர்கலையாய்த் தத்துவமாய்ப் புவன மாகிச்
சந்திரனாய் இந்திரனாய் இரவி யாகித்
தானவராய் வானவராய்த் தயங்கா நின்ற
தந்திரமாய் இவையொன்றும் அல்ல வாகித்
தானாகித் தனதாகித் தானான் காட்டா
அந்தரமாய் அப்பாலாய் அதற்கப் பாலாய்
அப்பாலுக் கப்பாலாய் அமர்ந்த தேவே. 20

மலைமேலும் கடல்மேலும் மலரின் மேலும்
வாழ்கின்ற மூவுருவின் வயங்குங் கோவே
நிலைமேலும் நெறிமேலும் நிறுத்துகின்ற
நெடுந்தவத்தோர் நிறைமேலு நிகழ்த்தும் வேதக்
கலைமேலும் எம்போல்வார் உளத்தின் மேலும்
கண்மேலும் தோண்மேலும் கருத்தின் மேலும்
தலைமேலும் உயிர்மேலும் உணர்வின் மேலும்
தகுமன்பின் மேலும்வளர் தாண்மெய்த் தேவே.

பொற்குன்றே அகம்புறமும் பொலிந்து நின்ற
பூரணமே ஆரணத்துட் பொருளே என்றும்
கற்கின்றோர்க்கினியசுவைக் கரும்பே தான
கற்பகமே கற்பகத்திங் கனியே வாய்மைச்
சொற்குன்றா நாவகத்துண் மாறா இன்பம்
தோற்றுகின்ற திருவருட்சிர்ச் சோதியே விண்
நிற்கின்ற சுடரேஅச் சுடருள் ஓங்கும்
நீளொளியே அவ்வொளிக்குள் நிறைந்த தேவே.

தேசுவிரித்து இருளகற்றி என்றும் ஓங்கித்
திகழ்கின்ற செழுங்கதிரே செறிந்த வாழ்க்கை
மாசுவிரித் திடுமனத்திற் பயிலாத் தெய்வ
மணிவிளக்கே ஆனந்த வாழ்வே எங்கும்
காசுவிரித் திடும்ஒளிபோல் கலந்து நின்ற
காரணமே சாந்தமெனக் கருதா நின்ற
தூசுவிரித் துடுக்கின்றோர் தம்மை நீங்காச்
சுகமயமே அருட்கருணை துலங்குந் தேவே. 23

கோவேஎன் குணக்குன்றே குன்று ஞானக்
கொழுந்தேனே செழும்பாகே குளிர்ந்த மோனக்
காவேமெய் அறிவின்ப மயமே என்றன்
கண்ணேமுக் கண்கொண்ட கரும்பே வானத்
தேவேஅத் தேவுக்குந் தெளிய வொண்ணுத்
தெய்வமே, வாடாமல் திகழ்சிற் போதப்
பூவேஅப் பூவிலுறும் மணமே எங்கும்
பூரணமாய் நிறைந்தருளும் புனிதத் தேவே. 24

வானேஅவ் வானுலவுங் காற்றே காற்றின்
வருநெருப்பே நெருப்புறுநீர் வடிவே நீரிற்
றானேயும் புவியேஅப் புவியிற் றங்கும்
தாபரமே சங்கமமே சாற்று கின்ற
ஊனேநல் லுயிரேஉள் ளொளியே உள்ளத்
துணர்வேஅவ் வுணர்வுகலந்து ஊறு கின்ற
தேனேமுக் கனியேசெங் கரும்பே பாகின்
தீஞ்சுவையே சுவையனைத்துந் திரண்ட தேவே. 25

விண்ணேவிண் ணுருவேவிண் முதலே விண்ணுள்
வெளியேஅவ் வெளிவிளங்கு வெளியே என்றன்
கண்ணேகண் மணியேகண் ஒளியே கண்ணுட்
கலந்துநின்ற கதிரேஅக் கதிரின் வித்தே
தண்ணேதண் மதியேஅம் மதியில் பூத்த
தண்ணமுதே தண்ணமுத சாரமே சொற்
பண்ணேபண் ணிசையேபண் மயமே பண்ணின்
பயனேமெய்த் தவர்வாழ்த்திப் பரவுந் தேவே. 26

மாணேயத் தவருளத்தே மலர்ந்த செந்தா
மரைமலரின் வயங்குகின்ற மணியே ஞானப்
பூணேமெய்ப் பொருளேஅற் புதமே மோனப்
புத்தமுதே ஆனந்தம் பொலிந்த பொற்பே
ஆணேபெண் உருவமே அலியே ஒன்றும்
அல்லாத பேரொளியே அனைத்துந் தாங்குந்
தூணேசிற் சுகமேஅச் சுகமேற் பொங்கும்
சொரூபானந் தக்கடலே சோதித் தேவே. 27

பூதமே அவைதோன்றிப் புகுந்தொ டுங்கும்
புகலிடமே இடம்புரிந்த பொருளே போற்றும்
வேதமே வேதத்தின் விளைவே வேத
வியன்முடிவே அம்முடிவின் விளங்குங் கோவே
நாதமே நாதாந்த நடமே அந்த
நடத்தினையுள் நடத்துகின்ற நலமே ஞான
போதமே போதமெலாம் கடந்து நின்ற
பூரணமே யோகியருள் பொலிந்த தேவே. 28

ஞாலமே ஞாலமெல்லாம் விளங்க வைத்த
நாயகமே கற்பமுதல் நவிலா நின்ற
காலமே காலமெலாம் கடந்த ஞானக்
கதியேமெய்க் கதியளிக்குங் கடவுளே சிற்
கோலமே குணமேயுட் குறியே கோலங்
குணங்குறிகள் கடந்துநின்ற குருவே அன்பர்
சீலமே மாலறியா மனத்திற் கண்ட
செம்பொருளே உம்பர்பதஞ் செழிக்கும் தேவே.

தத்துவமே தத்துவா தீதமே சிற்
சயம்புவே எங்கும்நிறை சாக்ஷியே மெய்ச்
சத்துவமே சத்துவத்தின் பயனும் இன்பம்
தந்தருளும் பெருவாழ்வாம் சாமியே எஞ்
சித்தநிலை தெளிவிக்கும் ஒளியே சற்றும்
தெவிட்டாத தெள்ளமுதே தேனே என்றும்
சுத்தநெறி திறம்பாதார் அறிவில் தோய்ந்த
சுகப்பொருளே மெய்ஞ்ஞானம் துலங்கும் தேவே.

யோகமே யோகத்தின் பயனே யோகத்
தொருமுதலே யோகத்தின் ஓங்குந் தூய
போகமே போகத்தின் பொலிவே போகம்
புரிந்தருளும் புண்ணியமே புனித ஞான
யாகமே யாகத்தின் விளைவே யாகத்
திறையேஅவ் விறைபுரியும் இன்பே அன்பர்
மோகமே மோகமெலாம் அழித்து வீறு
மோனமே மோனத்தின் முளைத்த தேவே. 31

காட்சியே காண்பதுவே ஞேயமே யுட்
கண்ணுடையார் கண்ணிறைந்த களிப்பே ஓங்கும்
மாட்சியே உண்மையறி வின்ப மென்ன
வயங்குகின்ற வாழ்வேமா மௌனக் காணி
ஆட்சியே ஆட்சிசெயும் அரசே சுத்த
அறிவேமெய் யன்பேதெள் ளமுதே நல்ல
சூட்சியே சூட்சியெலாங் கடந்து நின்ற
துரியமே துரியமுடிச் சோதித் தேவே. 32

மறைமுடிக்குப் பொருத்தமுறும் மணியே ஞான
வாரிதியே அன்பர்கள்தம் மனத்தே நின்ற
குறைமுடிக்குங் குணக்குன்றே குன்று மோனக்
கோமளமே தூயசிவக் கொழுந்தே வெள்ளைப்
பிறைமுடிக்கும் பெருமானே துளவ மாலைப்
பெம்மானே செங்கமலப் பிரானே இந்த
இறைமுடிக்கும் மூவர்கட்கும் மேலாய் நின்ற
இறையேஇவ் வுருவுமின்றி இருந்த தேவே. 33

கோதகன்ற யோகர்மனக் குகையில் வாழும்
குருவேசண் முகங்கொண்ட கோவே வஞ்ச
வாதகன்ற ஞானியர்தம் மதியி லூறும்
வானமுதே ஆனந்த மழையே மாயை
வேதகன்ற முத்தர்களை விழுங்குஞ் ஞான
வேழமே மெய்யின்ப விருந்தே நெஞ்சில்
தீதகன்ற மெய்யடியர் தமக்கு வாய்த்த
செல்வமே எல்லையிலாச் சீர்மைத் தேவே. 34

அருளருவி வழிந்துவழிந்து ஒழுக ஓங்கும்
ஆனந்தத் தனிமலையே அமல வேதப்
பொருளளவு நிறைந்தவற்றின் மேலும் ஓங்கிப்
பொலிகின்ற பரம்பொருளே பூரண மாகி
இருளறுசிற் பிரகாச மயமாம் சுத்த
ஏகாந்தப் பெருவெளிக்குள் இருந்த வாழ்வே
தெருளளவும் உளமுழுதுங் கலந்து கொண்டு
தித்திக்குஞ் செழுந்தேனே தேவ தேவே. 35

அளவையெலாங் கடந்துமனங் கடந்து மற்றை
அறிவையெலாங் கடந்துகடந் தமல யோகர்
உளவையெலாங் கடந்துபதங் கடந்து மேலை
ஒன்றுகடந்து இரண்டுகடந் துணரச் சூழ்ந்த
களவையெலாங் கடந்தண்ட பிண்ட மெல்லாம்
கடந்துநிறை வானசுகக் கடலே அன்பர்
வளவையெலாம் இருளகற்றும் ஒளியே மோன
வாழ்வேஎன் உயிர்க்குயிராய் வதியும் தேவே. 36

வன்புகலந் தறியாத மனத்தோர் தங்கள்
மனங்கலந்து மதிகலந்து வயங்கா நின்ற
என்புகலந் தூன்கலந்து புலன்க ளோடும்
இந்திரிய மவைகலந்துள் இயங்கு கின்ற
அன்புகலந் தறிவுகலந் துயிரைம் பூதம்
ஆன்மாவுங் கலந்துகலந் தண்ணித் தூறி
இன்புகலந்தருள்கலந்து துளும்பிப் பொங்கி
எழுங்கருணைப் பெருக்காறே இன்பத் தேவே. 37

தண்ணமுத மதிகுளிர்ந்த கிரணம் வீசத்
தடம்பொழிற்பூ மணம்வீசத் தென்றல் வீச
எண்ணமுதப் பனிக்குநிலா முற்றத்தே இன்
இசைவீசத் தண்பனிநீர் எடுத்து வீசப்
பெண்ணமுதம் அனையவர்விண் ணமுதம் ஊட்டப்
பெறுகின்ற சுகமனைத்தும் பிற்பட் டோடக்
கண்ணமுதத் துடம்புயிர்மற் றனைத்தும் இன்பங்
கலந்துகொளத் தருங்கருணைக் கடவுள் தேவே 38

சுழியாத அருட்கருணைப் பெருக்கே என்றுந்
தூண்டாத மணிவிளக்கின் சோதியே வான்
ஒழியாது கதிர்பரப்புஞ் சுடரே அன்பர்க்
கோவாத இன்பருளும் ஒன்றே விண்ணோர்
விழியாலும் மொழியாலும் மனத்தி னாலும்
விழைதருமெய்த் தவத்தாலும் விளம்பும் எந்த
வழியாலும் கண்டுகொளற் கரிதாய்ச் சுத்த
மௌனவெளி யூடிருந்து வயங்கும் தேவே. 39

சொல்லொழியப் பொருளொழியக் கரண மெல்லாம்
சோர்ந்தொழிய உணர்வொழியத் துளங்கா நின்ற
அல்லொழியப் பகலொழிய நடுவே நின்ற
ஆனந்த அனுபவமே அதீத வாழ்வே
நெல்லொழியப் பதர்கொள்வார் போல இன்ப
நிறைவொழியக் குறைகொள்மத நெறியோர் நெஞ்சக்
கல்லொழிய மெய்யடியர் இதய மெல்லாங்
கலந்துகலந் தினிக்கின்ற கருணைத் தேவே. 40

அலைகடலும் புவிவரையும் அனல்கால் நீரும்
அந்தரமும் மற்றைஅகி லாண்டம் யாவும்
நிலைகுலையா வண்ணம்அருள் வெளியி னூடு
நிரைநிரையா நிறுத்திஉயிர் நிகழும் வண்ணம்
தலைகுலையாத் தத்துவஞ்செய் திரோதை யென்னும்
தனியாணை நடத்திஅருள் தலத்தில் என்றும்
மலைவறவீற் றிருந்தருளும் அரசே முத்தி
வழித்துணையே விழித்துணையுண் மணியாம் தேவே.

வரம்பழுத்த நெறியேமெய்ந் நெறியில் இன்ப
வளம்பழுத்த பெருவாழ்வே வானோர் தங்கள்
சிரம்பழுத்த பதப்பொருளே அறிவா னந்தச்
சிவம்பழுத்த அநுபவமே சிதாகா சத்தில்
பரம்பழுத்த நடத்தரசே கருணை என்னும்
பழம்பழுத்த வான்தருவே பரம ஞானத்
திரம்பழுத்த யோகியர்தம் யோகத் துள்ளே
தினம்பழுத்துக் கனிந்தஅருட் செல்வத் தேவே 42

அண்டமெலாம் கண்ணுகக் கொளினும் காண்டற்
கணுத்துணையுங் கூடாவென் றனந்த வேதம்
விண்டலறி ஓலமிட்டுப் புலம்ப மோன
வெளிக்குள்வெளி யாய்நிறைந்து விளங்கும் ஒன்றே
கண்டவடி வாய்அகண்ட மயமாய் எங்கும்
கலந்துநின்ற பெருங்கருணைக் கடவுளே எம்
சண்டவினைத் தொடக்கறச்சின் மயத்தைக் காட்டும்
சற்குருவே சிவகுருவே சாந்தத் தேவே. 43

பேதமுறு மெய்ப்போத வடிவ மாகிப்
பெருங்கருணை நிறம்பழுத் துச் சாந்தம் பொங்கிச்
சீதமிருந் து அருள்கனிந்து கனிந்து மாறுச்
சின்மயமாய் நின்மலமே மணந்து நீங்கா
ஆதரவோ டியன்மௌனச் சுவைமேன் மேற்கொண்
டானந்த ரசமொழுக்கி அன்பால் என்றும்
சேதமுறு தறிஞருளந் தித்தித் தோங்கும்
செழும்புனிதக் கொழுங்கனியே தேவ தேவே. 44

உடல்குளிர உயிர்தழைக்க உணர்ச்சி ஓங்க
உளங்கனிய மெய்யன்பர் உள்ளத் தூடே
கடலனைய பேரின்பம் துளும்ப நாளுங்
கருணைமலர்த் தேன்பொழியுங் கடவுட் காவே
விடலரிய எம்போல்வார் இதயந் தோறும்
வேதாந்த மருந்தளிக்கும் விருந்தே வேதம்
தொடலரிய வெளிமுழுதும் பரவி ஞானச்
சோதிவிரித் தொளிர்கின்ற சோதித் தேவே. 45

கிரியைநெறி அகற்றிமறை முடிவில் நின்று
கேளாமற் கேட்கின்ற கேள்வியே சொற்
கரியவரை விடுத்துநவ நிலைக்கு மேலே
காணுமற் காண்கின்ற காட்சியே உள்
அரியநிலை ஒன்றிரண்டின் நடுவே சற்றும்
அறியாமல் அறிகின்ற அறிவே என்றும்
உரியசதா நிலைநின்ற உணர்ச்சி மேலோர்
உன்னுமல் உன்னுகின்ற ஒளியாம் தேவே. 46

சொற்போதற் கரும்பெரிய மறைகள் நாடித்
தொடர்ந்துதொடர்ந் தயர்ந்திளைத்துத் துளங்கி ஏங்கிப்
பிற்போத விரைந்தன்பர் உளத்தே சென்ற
பெருங்கருணைப் பெருவாழ்வே பெயரா தென்றும்
தற்போத ஒழிவினிடை நிறைந்து பொங்கித்
ததும்பிவழிந் தோங்கியெல்லாந் தானே யாகிச்
சிற்போதத் தகம்புறமும் கோத்து நின்ற
சிவானந்தப் பெருக்கேமெய்ச் செல்வத் தேவே, 47

பொங்குபல சமயமெனும் நதிக ளெல்லாம்
புகுந்துகலந் திடநிறைவாய்ப் பொங்கி ஓங்கும்
கங்குகரை காணுத கடலே எங்கும்
கண்ணுகக் காண்கின்ற கதியே அன்பர்
தங்கநிழல் பரப்பிமயல் சோடை யெல்லாந்
தணிக்கின்ற தருவே பூந்தடமே ஞானச்
செங்குமுத மலரவரு மதியே எல்லாம்
செய்யவல்ல கடவுளே தேவ தேவே. 48

வான்காணு மறைகாணு மலரோன் காணுன்
மால்காணுன் உருத்திரனும் மதித்துக் காணுன்
நான்காணு இடத்ததனைக் காண்பேம் என்று
நல்லோர்கள் நவில்கின்ற நலமே வேட்கை
மான்காணு உளக்கமல மலர்த்தா நின்ற
வான்சுடரே ஆனந்த மயமே ஈன்ற
ஆன்காணு இளங்கன்ருய் அலமந் தேங்கும்
அன்பர்தமைக் கலந்துகொளும் அமலத் தேவே.

மெய்ஞ்ஞான விருப்பத்தில் ஏறிக் கேள்வி
மிதேறித் தெளிந்திச்சை விடுதல் ஏறி
அஞ்ஞான மற்றபடி ஏறி உண்மை
அறிந்தபடி நிலைஏறி அதுநான் என்னும்
கைஞ்ஞானங் கழன்றேறி மற்ற எல்லாங்
கடந்தேறி மௌனவியற் கதியில் ஏறி
எஞ்ஞானம் அறத்தெளிந்தோர் கண்டுங் காணேம்
என்கின்ற அநுபவமே இன்பத் தேவே. 50

பற்றறியா முத்தர்தமை யெல்லாம் வாழைப்
பழம்போல விழுங்குகின்ற பரமே மாசு
பெற்றறியாப் பெரும்பதமே பதத்தைக் காட்டும்
பெருமானே ஆனந்தப் பேற்றின் வாழ்வே
உற்றறியா நின்னுமின்னும் மறைக ளெல்லாம்
ஓலமிட்டுத் தேடநின்ற ஒன்றே ஒன்றும்
கற்றறியாப் பேதையேன் றனக்கும் இன்பம்
கனிந்தளித்த அருட்கடலே கருணைத் தேவே. 51

மெய்யுணர்ந்த வாதவூர் மலையைச் சுத்த
வெளியாக்கிக் கலந்துகொண்ட வெளியே முற்றும்
பொய்யுணர்ந்த எமைப்போல்வார் தமக்கும் இன்பம்
புரிந்தருளும் கருணைவெள்ளப் பொற்பே அன்பர்
கையுறைந்து வளர்நெல்லிக் கனியே உள்ளம்
கரைந்துகரைந் துருகஅவர் கருத்தி னூடே
உய்யுநெறி ஒளிகாட்டி வெளியும் உள்ளும்
ஓங்குகின்ற சுயஞ்சுடரே உண்மைத் தேவே. 52

ஒலிவடிவு நிறஞ்சுவைகள் நாற்றம் ஊற்றம்
உறுதொழில்கள் பயன்பலவே றுளவாய் எங்கும்
மலிவகையாய் எவ்வகையும் ஒன்ருய் ஒன்றும்
மாட்டாதாய் எல்லாமும் வல்ல தாகிச்
சலிவகையில் லாதமுதற் பொருளே எல்லாம்
தன்மயமாய் விளங்குகின்ற தனியே ஆண்பெண்
அலிவகையல் லாதவகை கடந்து நின்ற
அருட்சிவமே சிவபோகத் தமைந்த தேவே. 53

பேராய அண்டங்கள் பலவும் பிண்ட
பேதங்கள் பற்பலவும் பிண்டாண் டதின்
வாராய பலபொருளும் கடலும் மண்ணும்
மலையுளவும் கடலுளவும் மணலும் வானும்
ஊராத வான்மீனும் அணுவும் மற்றை
உள்ளனவும் அளந்திடலாம் ஓகோ உன்னை
ஆராலும் அளப்பரிதென் றனந்த வேதம்
அறைந்திளைக்க அதிதூர மாகுந் தேவே. 54

கற்பகங்கள் பலகோடி செல்லத் தீய
கனலினடு ஊசியின்மேற் காலை ஊன்றிப்
பொற்பறமெய் உணவின்றி உறக்க மின்றிப்
புலர்ந்தெலும்பு புலப்படஐம் பொறியை ஓம்பி
நிற்பவருக் கொளித்துமறைக் கொளித்து யோக
நின்முனிவர்க் கொளித்தமரர்க் கொளித்து மேலாம்
சிற்பதத்தில் சின்மயமாய் நிறைந்து ஞானத்
திருவாளர் உட்கலந்த தேவ தேவே. 55

மட்டகன்ற நெடுங்காலம் மனத்தால் வாக்கால்
மதித்திடினும் புலம்பிடினும் வாரா தென்றே
கட்டகன்ற மெய்யறிவோர் கரணம் நீக்கிக்
கலையகற்றிக் கருவியெலாம் கழற்றி மாயை
விட்டகன்று கருமமல போதம் யாவும்
விடுத்தொழித்துச் சகசமல வீக்கம் நீக்கிச்
சுட்டகன்று நிற்கஅவர் தம்மை முற்றும்
சூழ்ந்துகலந் திடுஞ்சிவமே துரியத் தேவே. 56

உருநான்கும் அருநான்கும் நடுவே நின்ற
உருஅருவ மொன்றும்இவை உடன்மேல் உற்ற
ஒருநான்கும் இவைகடந்த ஒன்று மாய்அவ்
வொன்றினடு வாய்நடுவுள் ஒன்றாய் நின்றே
இருநான்கும் அமைந்தவரை நான்கி னேடும்
எண்ணான்கின் மேலிருத்தும் இறையே மாயைக்
கருநான்கும் பொருள்நான்கும் காட்டும் முக்கட்
கடவுளே கடவுளர்கள் கருதுந் தேவே. 57

பாங்குளநாம் தெரிதும்எனத் துணிந்து கோடிப
பழமறைகள் தனித்தனியே பாடிப் பாடி
ஈங்குளதென்று ஆங்குளதென்று ஓடி யோடி
இளைத்திளைத்துத் தொடர்ந்துதொடர்ந் தெட்டுந் தோறும்
வாங்குபர வெளிமுழுதும் நீண்டு நீண்டு
மறைந்துமறைந் தொளிக்கின்ற மணியே எங்கும்
தேங்குபர மானந்த வெள்ள மேசச்
சிதானந்த அருட்சிவமே தேவ தேவே. 58

எழுத்தறிந்து தமையுணர்ந்த யோகர் உள்ளத்
தியலறிவாம் தருவினில்அன் பெனுமோர் உச்சி
பழுத்தளிந்து மௌனநறுஞ் சுவைமேற் பொங்கிப்
பதம்பொருந்த அனுபவிக்கும் பழமே மாயைக்
கழுத்தறிந்து கருமமலத் தலையை வீசுங்
கடுந்தொழிலோர் தமக்கேநற் கருணை காட்டி
விழுத்துணையாய் அமர்ந்தருளும் பொருளே மோன
வெளியில்நிறை ஆனந்த விளைவாந் தேவே. 59

உருத்திரர்நா ரணர்பிரமர் விண்ணோர் வேந்தர்
உறுகருடர் காந்தருவர் இயக்கர் பூதர்
மருத்துவர்யோ கியர்சித்தர் முனிவர் மற்றை
வானவர்கள் முதலோர்தம் மனத்தால் தேடிக்
கருத்தழிந்து தனித்தனியே சென்று வேதங்
களைவினவ மற்றவையுங் காணேம் என்று
வருத்தமுற்றுங் கவரோடு புலம்ப நின்ற
வஞ்சவெளி யேஇன்ப மயமாம் தேவே. 60

பாயிரமா மறைஅனந்தம் அனந்தம் இன்னும்
பார்த்துஅளந்து காண்டும்எனப் பல்கால் மேவி
ஆயிரமா யிரமுகங்க ளாலும் பன்னாள்
அளந்தளந்தோர் அணுத்துணையும் அளவு காணா
தேயிரங்கி அழுதுசிவ சிவவென் றேங்கித்
திரும்பஅருட் பரவெளிவாழ் சிவமே ஈன்ற
தாயிரங்கி வளர்ப்பதுபோல் எம்போல் வாரைத்
தண்ணருளால் வளர்த்தென்றும் தாங்குந் தேவே.

அந்தரமிங் கறிவோமற் றதனில் அண்டம்
அடுக்கடுக்காய் அமைந்தஉள வறிவோம் ஆங்கே
உந்துறும்பல் பிண்டநிலை அறிவோஞ் சிவன்
உற்றநிலை அறிவோமற் றனைத்து நாட்டும்
எந்தைநின தருள்விளையாட் டந்தோ அந்தோ
எள்ளளவும் அறிந்திலோம் என்னே என்று
முந்தனந்த மறைகளெலாம் வழுத்த நின்ற
முழுமுதலே அன்பர்குறை முடிக்கும் தேவே. 62

தோன்றுபர சாக்கிரமும் கண்டோம் அந்தச்
சொப்பனமும் கண்டோம்மேல் சுழுத்தி கண்டோம்
ஆன்றபர துரியநிலை கண்டோம் அப்பால்
அதுகண்டோம் அப்பாலாம் அதுவுங் கண்டோம்
ஏன்றஉப சாந்தநிலை கண்டோம் அப்பால்
இருந்தநினைக் காண்கிலோம் என்னே என்று
சான்றவுப நிடங்களெலாம் வழுத்த நின்ற
தன்மயமே சின்மயமே சகசத் தேவே. 63

பரிக்கிரக நிலைமுழுதுந் தொடர்ந்தோம் மேலைப்
பரவிந்து நிலையனைத்தும் பார்த்தோம் பாசம்
எரிக்கும்இயற் பரநாத நிலைக்கண் மெல்ல
எய்தினேம் அப்பாலும் எட்டிப் போனேம்
தெரிக்கரிய வெளிமூன்றுந் தெரிந்தோம் எங்கும்
சிவமேநின் சின்மயம்ஓர் சிறிதுந் தேறேம்
தரிக்கரிதென் றுகமங்க ளெல்லாம் போற்றத்
தனிநின்ற பரம்பொருளே சாந்தத் தேவே. 64

மணக்குமலர்த் தேனுண்ட வண்டே போல
வளர்பரமா னந்தமுண்டு மகிழ்ந்தோர் எல்லாம்
இணக்கமுறக் கலந்துகலந் ததீத மாதற்
கியற்கைநிலை யாததுதான் எம்மாற் கூறும்
கணக்குவழக் கனைத்தினையும் கடந்த தந்தோ
காண்பரிதிங் கெவர்க்கும்எனக் கலைக ளெல்லாம்
பிணக்கறநின் றோலமிடத் தனித்து நின்ற
பெரும்பதமே மதாதீதப் பெரிய தேவே 65

பொதுவென்றும் பொதுவில்நடம் புரியா நின்ற
பூரணசிற் சிவமென்றும் போதா னந்த
மதுவென்றும் பிரமமென்றும் பரமமென்றும்
வகுக்கின்றோர் வகுத்திடுக அதுதான் என்றும்
இதுவென்றும் சுட்டவொணா ததனால் சும்மா
இருப்பதுவே துணிவெனக்கொண் டிருக்கின் றோரை
விதுவென்ற தண்ணளியால் கலந்து கொண்டு
விளங்குகின்ற பெருவெளியே விமலத் தேவே. 66

அருமறையா கமங்கள்முதல் நடுவீ றெல்லாம்
அமைந்தமைந்து மற்றவைக்கும் அப்பா லாகிக்
கருமறைந்த உயிர்கள்தொறுங் கலந்து மேவிக்
கலவாமல் பன்னெறியும் கடந்து ஞானத்
திருமணிமன் றகத்தின்ப வுருவாய் என்றுந்
திகழ்கருணை நடம்புரியும் சிவமே மோனப்
பெருமலையே பரமஇன்ப நிலையே முக்கட்
பெருமானே எத்திறத்தும் பெரிய தேவே. 67

என்னுயிர்நீ என்னுயிர்க்கோர் உயிரும் நீஎன்
இன்னுயிர்க்குத் துணைவன்நீ என்னை ஈன்ற
அன்னைநீ என்னுடைய அப்பன்நீ என்
அரும்பொருள்நீ என்னிதயத் தன்பு நீ என்
நன்னெறிநீ எனக்குரிய உறவு நீஎன்
நற்குருநீ எனைக்கலந்த நட்பும் நீஎன்
தன்னுடைய வாழ்வுநீ என்னைக் காக்குந்
தலைவன்நீ கண்மூன்று தழைத்த தேவே. 68

தானாகித் தானல்ல தொன்று மில்லாத்
தன்மையனாய் எவ்வெவைக்குந் தலைவ னாகி
வானாகி வளியனலாய் நீரு மாகி
மலர்தலைய உலகாகி மற்று மாகித்
தேனாகித் தேனினறுஞ் சுவைய தாகித்
தீஞ்சுவையின் பயனாகித் தேடு கின்ற
நானாகி என்னிறையாய் நின்றோய் நின்னை
நாயடியேன் எவ்வாறு நவிற்று மாறே. 69

ஆனேறும் பெருமானே அரசே என்றன்
ஆருயிருக் கொருதுணையே அமுதே கொன்றைத்
தேனேறு மலர்ச்சடையெஞ் சிவனே தில்லைச்
செழுஞ்சுடரே ஆனந்தத் தெய்வமே என்
ஊனேறும் உயிர்க்குள்நிறை ஒளியே எல்லாம்
உடையானே நின்னடிச்சீர் உன்னி அன்பர்
வானேறு கின்றார் நான் ஒருவன் பாவி
மண்ணேறி மயக்கேறி வருந்து கின்றேனே. 70

செஞ்சடையெம் பெருமானே சிறுமான் ஏற்ற
செழுங்கமலக் கரத்தவனே சிவனே சூழ்ந்து
மஞ்சடையும் மதிற்றில்லை மணியே ஒற்றி
வளர்மருந்தே என்னுடைய வாழ்வே வேட்கை
அஞ்சடைய வஞ்சியர் மாலடைய வஞ்ச
மடைய நெடுந் துயரடைய அகன்ற பாவி
நெஞ்சடைய நினைதியோ நினைதியேல் மெய்ந்
நெறியுடையார் நெஞ்சமர்ந்த நீத னன்றே. 71

அன்னையினும் பெரிதினிய கருணை ஊட்டும்
ஆரமுதே என்னுறவே அரசே இந்த
மன்னுலகில் அடியேனை என்னே துன்ப
வலையி லகப்பட இயற்றி மறைந்தா யந்தோ
பொன்னை மதித்திடுகின்றோர் மருங்கே சூழ்ந்து
போனகமும் பொய்யுறவும் பொருந்த லாற்றேன்
என்னைஉளங் கொள்ளுதியோ கொள்கி லாயோ
என்செய்வேன் என்செய்வேன் என்செய்வேனே.

படித்தேன் பொய் யுலகியனூல் எந்தாய் நீயே
படிப்பித்தா யன்றியு மப்படிப்பி லிச்சை
ஒடித்தேனா னொடித்தேனோ ஒடிப்பித்தாய் பின்
உன்னடியே துணையெனநான் உறுதி யாகப்
பிடித்தேன் மற்றதுவும் நீபிடிப்பித் தாய்
இப்பேதையேன் நின்னருளைப் பெற்றோர் போல
நடித்தேன் எம்பெருமான் ஈதொன்றும் நானே
நடித்தேனோ அல்லது நீநடிப்பித் தாயோ. 73

மத்தேறி அலை தயிர்போல் வஞ்ச வாழ்க்கை
மயலேறி விருப்பேறி மதத்தி னேடு
பித்தேறி உழல்கின்ற மனத்தால் அந்தோ
பேயேறி நலிகின்ற பேதை யானேன்
வித்தேறி விளைவேறி மகிழ்கின்றோர் போல்
மேலேறி அன்பரெல்லாம் விளங்கு கின்றார்
ஒத்தேறி உயிர்க்குயிராய் நிறைந்த எங்கள்
உடையானே இதுதகுமோ உணர்கி லேனே. 74

மதியணிந்த முடிக்கனியே மணியே யெல்லாம்
வல்லஅருட் குருவேநின் மலர்த்தாள் வாழ்த்திக்
கதியணிந்தார் அன்பரெலாம் அடியேன் ஒன்றுங்
கண்டறியேன் கருமத்தாற் கலங்கி அந்தோ
பொதியணிந்து திரிந்துழலும் ஏறு போலப்
பொய்யுலகில் பொய் சுமந்து புலம்பா நின்றேன்
துதியணிந்த நின்னருள் என்றனக்கும் உண்டோ
இன்றெனில் இப்பாவியேன் சொல்வ தென்னே.

என்னரசே என்னுயிரே என்னை ஈன்ற
என்தாயே என்குருவே எளியேன் இங்கே
தன்னரசே செலுத்தி எங்கும் உழலா நின்ற
சஞ்சல நெஞ் சகத்தாலே தயங்கி அந்தோ
மின்னரசே பெண்ணமுதே என்று மாதர்
வெய்யசிறு நீர்க் குழிக்கண் விழவே எண்ணிக்
கொன்னரைசேர் கிழக்குருடன் கோல்போல் வீணே
குப்புறுகின் றேன்மயலிற் கொடிய னேனே. 76

அல்விலங்கு செழுஞ்சுடராய் அடியா ருள்ளத்து
அமர்ந்தருளுஞ் சிவகுருவே அடியேன் இங்கே
இல்விலங்கு மடந்தையென்றே எந்தாய் அந்த
இருப்பு விலங்கினை ஒழித்தும் என்னே பின்னும்
மல்விலங்கு பரத்தையர்தம் ஆசை யென்னும்
வல்விலங்கு பூண்டந்தோ மயங்கி நின்றேன்
புல்விலங்கும் இதுசெய்யா ஓகோ இந்தப்
புலைநாயேன் பிழைபொறுக்கிற் புதிதே அன்றே.

வன்கொடுமை மலம்நீக்கி அடியார் தம்மை
வாழ்விக்குங் குருவேநின் மலர்த்தாள் எண்ண
முன்கொடு சென்றிடும் அடியேன் றன்னைஇந்த
மூடமனம் இவ்வுலக முயற்சிநாடிப்
பின்கொடுசென் றலைத்திழுக்கு தந்தோ நாயேன்
பேய்பிடித்த பித்தனைப்போல் பிதற்றுகின்றேன்
என்கொடுமை என்பாவம் எந்தாய் எந்தாய்
என்னுரைப்பேன் எங்குறுவேன் என்செய் வேனே.

உய்குவித்து மெய்யடியார் தம்மை எல்லாம்
உண்மைநிலை பெற அருளும் உடையாய் இங்கே
மைகுவித்த நெடுங்கண்ணார் மயக்கில் ஆழ்ந்து
வருந்துகின்றே னல்லாலுன் மலர்த்தா ளெண்ணிக்
கைகுவித்துக் கண்களில்நீர் பொழிந்து நானோர்
கணமேனுங்கருதி நினைக் கலந்த துண்டோ
செய்குவித்துக் கொள்ளுதியோ கொள்கிலாயோ
திருவுளத்தை அறியேன்என் செய்குவேனே. 79

அருள்வெளியில் ஆனந்த வடிவினால் நின்
றாடுகின்ற பெருவாழ்வே அரசே இந்த
மருள்வலையில் அகப்பட்ட மனத்தால் அந்தோ
மதிகலங்கி மெய்ந் நிலைக்கோர் வழிகா ணாதே
இருள்நெறியிற் கோலிழந்த குருட் டுமன்போல்
எண்ணாதெல் லாம்எண்ணி யேங்கி யேங்கி
உருள்சகடக் கால்போலுஞ் சுழலா நின்றேன்
உய்யும்வகை யறியேன் இவ்வொதிய னேனே. 80

கற்றவனை தனக்கும் உணவளிக்கும் உன்றன்
கருணைநிலை தனை அறியேன் கடையேன் இங்கே
எற்றவனை எறும்பேபோல் திரிந்து நாளும்
இளைத்துநினது அருள்காணா தெந்தா யந்தோ
பெற்றவளைக் காணாத பிள்ளை போலப்
பேதுறுகின்றேன் செய்யும் பிழையை நோக்கி
இற்றவனைக் கேள்விடல்போல் விடுதியேல் யான்
என்செய்வேன் எங்குறுவேன் என்சொல் வேனே.

அடிமைசெயப் புகுந்திடும் எம்போல்வார் குற்றம்
ஆயிரமும் பொறுத்தருளும் அரசே நாயேன்
கொடுமைசெயும் மனத்தாலே வருந்தி அந்தோ
குரங்கின்கை மாலையெனக் குலையாநின்றேன்
கடுமைசெயப் பிறர்துணிந்தால் அடிமை தன்னைக்
கண்டிருத்தல் அழகன்றே கருணைக் கெந்தாய்
செடிமையுளப் பாதகனேன் என்செய்வேன் நின்
திருவுளத்தை அறிந்திலேன் திகைக்கின் றேனே.

கூம்பாத மெய்ந்நெறியோர் உளத்தே என்றும்
குறையாத இன்பளிக்கும் குருவே ஆசைத்
தாம்பாலே ஆப்புண்டு வருந்தி நாயேன்
தையலார் மையலெனுஞ் சலதி ஆழ்ந்து
ஓம்பாமல் உவர்நீருண்டு உயங்கு கின்றேன்
உன்னடியர் அக்கரைமேல் உவந்து நின்றே
தீம்பாலும் சருக்கரையும் தேனும் நெய்யும்
தேக்குகின்றார் இதுதகுமோ தேவ தேவே. 83

வெள்ளம் அணி சடைக்கனியே மூவராகி
விரிந்தருளும் ஒருதனியே விமல னேனைக்
கள்ளமனக் குரங்காட்டும் ஆட்டமெல்லாம்
கண்டிருந்தும் இரங்கிலையேற் கவலை யாலே
உள்ளமெலிந்து உழல்கின்ற சிறியேன் பின்னர்
உய்யும்வகை எவ்வகை ஈதுன்னுந் தோறும்
பொள்ளெனமெய் வியர்க்க உளம்பதைக்கச் சோபம்
பொங்கி வழிகின்றது நான் பொறுக்கி லேனே. 84

எனையறியாய் பருவத்தே ஆண்டு கொண்ட
என்னரசே என்குருவே இறையே இன்று
மனையறியாப் பிழைகருதும் மகிழ்நன் போல
மதியறியேன் செய்பிழையை மனத்துட் கொண்டே
தனையறியா முகத்தவர்போல் இருந்தாய் எந்தாய்
தடங்கருணைப் பெருங்கடற்குத் தகுமோகண்டாய்
அனையறியாச் சிறுகுழவி யாகி இங்கே
அடிநாயே னரற்றுகின்றே னந்தோ வந்தோ. 85

தீவினை நல்வினையெனும்வன் கயிற்றால் இந்தச்
சீவர்களை ஆட்டுகின்ற தேவே நாயேன்
ஏவினைநேர் கண்மடவார் மையற் பேயால்
இடருழந்தும் சலிப்பின்றி என்னே இன்னும்
நாவினைஎன் பால்வருந்திக் கரண்டு கின்ற
நாய்க்கும்நகை தோன்றநின்று நயக்கின் றேனுன்
ஆவினைவிட் டெருதுகறந் திடுவான் செல்லும்
அறிவிலிக்கும் அறிவிலியேன் ஆன ஆறே. 86

எம்பெருமான் நின்விளையாட் டென்சொல் கேன்நான்
ஏதுமறி யாச்சிறியேன் எனைத்தான் இங்கே
செம்புனலால் குழைத்தபுலால் சுவர்சூழ் பொத்தைச்
சிறுவீட்டில் இருட்டறையில் சிறைசெய் தந்தோ
கம்பமுறப் பசித்தழலுங் கொளுந்த அந்தக்
கரணமுதற் பொறிபுலப்பேய் கவர்ந்து சூழ்ந்து
வம்பியற்றக் காமாதி அரட்டர் எல்லாம்
மடிபிடித்து வருத்தவென்றோ வளர்த்தாய் எந்தாய்.

அம்பரத்தே ஆனந்த வடிவால் என்றும்
ஆடுகின்ற மாமணியே அரசே நாயேன்
இம்பரத்தம் எனும்உலக நடையில் அந்தோ
இடருழந்தேன் பன்னெறியில் எனைஇழுத்தே
பம்பரத்தின் ஆடியலைப் படுத்தும் இந்தப்
பாவிமனம் எனக்குவயப் படுவ தில்லை
கொம்பரற்ற இளங்கொடிபோல் தளர்ந்தேன் என்னைக்
குறிக்கொள்ளக் கருதுதியோ குறித்தி டாயோ. 88

கண்ணுடைய நுதற்கரும்பே மன்றில் ஆடுங்
காரணகா ரியங்கடந்த கடவு ளேநின்
தண்ணுடைய மலரடிக்கோர் சிறிதும் அன்பு
சார்ந்தேனே செம்மரம்போல் தனிந்த நெஞ்சேன்
பெண்ணுடைய மயலாலே சுழல்கின் றேன்என்
பேதைமையை என்புகல்வேன் பேய னேனைப்
புண்ணுடைய புழுவிரும்பும் புள்ளென் கேனே
புலைவிழைந்து நிலைவெறுத்தேன் புலைய னேனே.

பொன்னுடையார் இடம்புகவோ அவர்கட் கேற்கப்
பொய்ம்மொழிகள் புகன்றிடவோ பொதிபோல்இந்தக்
கொன்னுடையா உடல்பருக்கப் பசிக்குச் சோறு
கொடுக்கவோ குளிர்க்காடை கொளவோ வஞ்ச
மின்னிடையார் முடைச்சிறுநீர்க் குழிக்கண் அந்தோ
வீழ்ந்திடவோ தாழ்ந்திளைத்து விழிக்க வோதான்
என்னுடையாய் என்னுடையாய் என்னை இங்கே
எடுத்துவளர்த் தனைஅறியேன் என்சொல் வேனே.

வருகணத்து வாழ்ந்திடுமோ விழுமோ இந்த
மலக்கூடென் றறிஞரெலாம் வருந்தக் கேட்டும்
அருகணைத்துக் கொளப்பெண்பேய் எங்கே மேட்டுக்
கடைத்திடவெண் சோறெங்கே ஆடை எங்கே
இருகணுக்கு வியப்பெங்கே வசதி யான
இடமெங்கே என்றுதிரிந் திளைத்தேன் அல்லால்
ஒருகணத்தும் உனைநினைந்த துண்டோ என்னை
உடையானே எவ்வகைநான் உய்யும் ஆறே. 91

பொன்மலையோ சிறிதெனப்பே ராசை பொங்கிப்
புவிநடையிற் பற்பலகால் போந்து போந்து
நென்மலையோ நிதிமலையோ என்று தேடி
நிலைகுலைந்த தன்றிஉனை நினைந்து நேடி
மன்மலையோ மாமணியோ மருந்தோ என்று
வழுத்தியதே இல்லைஇந்த வஞ்ச நெஞ்சம்
கன்மலையோ இரும்போசெம் மரமோ பாறைக்
கருங்கல்லோ பாராய்முருட்டுக் கட்டை யேயோ.

தம்மைமறந் தருளமுதம் உண்டு தேக்கும்
தகையுடையார் திருக்கூட்டம் சார்ந்து நாயேன்
வெம்மையெலாம் தவிர்ந்துமனங் குளிரக் கேள்வி
விருந்தருந்தி மெய்யறிவாம் வீட்டில் என்றும்
செம்மையெலாம் தரும்மௌன அணைமேற் கொண்டு
செறிஇரவு பகலொன்றும் தெரியா வண்ணம்
இம்மையிலே எம்மையினும் காணுச் சுத்த
இன்பநிலை அடைவேனே ஏழை யேனே. 93

அடியனேன் பிழையனைத்தும் பொறுத்தாட் கொண்ட
அருட்கடலே மன்றோங்கும் அரசே இந்நாள்
கொடியனேன் செய்பிழையைத் திருவுள் ளத்தே
கொள்ளுதியோ கொண்டுகுலங் குறிப்ப துண்டோ
நெடியனே முதற்கடவுட் சமுகத் தோர்தம்
நெடும்பிழைகள் ஆயிரமும் பொறுத்து மாயை
ஓடியநேர் நின்றபெருங் கருணை வள்ளல்
எனமறைகள் ஓதுவதிங் குனைத்தா னன்றே. 94

கண்மயக்கும் பேரிருட்டுக் கங்குற் போதில்
கருத்தறியாச் சிறுவனைஓர் கடுங்கா னத்தே
உண்மயக்கம் கொளவிடுத்தே ஒருவன் பின்போம்
ஒருதாய்போல் மாயைஇருள் ஓங்கும் போதின்
மண்மயக்கம் பெறும்விடயக் காட்டில் அந்தோ
மதியிலேன் மாழாந்து மயங்க நீதான்
வண்மையுற்ற நியதியின்பின் என்னை விட்டே
மறைந்தனையே பரமேநின் வண்மை என்னே. 95

நற்றாயும் பிழைகுறிக்கக் கண்டோம் இந்த
நானிலத்தே மற்றவர்யார் நாடார் வீணே
பற்றாயும் அவர்தமைநாம் பற்றோம் பற்றில்
பற்றாத பற்றுடையார் பற்றி உள்ளே
உற்றாயுஞ் சிவபெருமான் கருணை ஒன்றே
உறுபிழைகள் எத்துணையும் பொறுப்பதென்றுன்
பொற்றாளை விரும்பியது மன்று ளாடும்
பொருளேஎன் பிழையனைத்தும் பொறுக்க வன்றே

எண்ணியநம் எண்ணமெலாம் முடிப்பான் மன்றுள்
எம்பெருமான் என்றுமகிழ்ந் திறுமாந் திங்கே
நண்ணியமற் றையர்தம்மை உறாமை பேசி
நன்குமதி யாதிருந்த நாயி னேனைத்
தண்ணியநல் அருட்கடலே மன்றில் இன்பத்
தாண்டவஞ்செய் கின்றபெருந் தகையே எங்கள்
புண்ணியனே பிழைகுறித்து விடுத்தி யாயில்
பொய்யனேன் எங்குற்றென் புரிவேன் அந்தோ.

அன்பர்திரு வுளங்கோயி லாகக் கொண்டே
அற்புதச்சிற் சபையோங்கும் அரசே இங்கு
வன்பரிடைச் சிறியேனை மயங்க வைத்து
மறைந்தனையே ஆனந்த வடிவோய் நின்னைத்
துன்ப வடி வுடைப்பிறரில் பிரித்து மேலோர்
துரியவடி வினனென்று சொன்ன வெல்லாம்
இன்பவடி வடைந்தன்றே எந்தாய் அந்தோ
என்னளவென் சொல்கேனிவ் வேழை யேனே. 98

புற்றோங்கும் அரவமெல்லாம் பணியாக் கொண்டு
பொன்மேனி தனில்அணிந்த பொருளே மாயை
உற்றோங்கு வஞ்சமனக் கள்வ னேனை
உளங்கொண்டு பணிகொள்வ துனக்கே ஒக்கும்
மற்றோங்கும் அவரெல்லாம் பெருமை வேண்டும்
வன்மனத்தர் எனைவேண்டார் வள்ள லேநான்
கற்றோங்கும் அறிவறியேன் பலவாச் சொல்லும்
கருத்தறியேன் எனக்கருளக் கருது வாயே. 99

அருளுடைய பரம்பொருளே மன்றி லாடும்
ஆனந்தப் பெருவாழ்வே அன்பு ளோர்தம்
தெருளுடைய உளமுழுதும் கோயில் கொண்ட
சிவமேமெய் யறிவுருவாம் தெய்வ மேஇம்
மருளுடைய மனப்பேதை நாயி னேன்செய்
வன்பிழையைச் சிறிதேனும் மதித்தி யாயில்
இருளுடைய பவக்கடல்விட் டேறேன் என்னை
ஏற்றுவதற் கெண்ணுகஎன் இன்பத் தேவே. 100

மஹாதேவ மாலை முற்றிற்று.

திருஅருண் முறையீடு

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

துனியால் உளந்தளர்ந் தந்தோ
துரும்பில் சுழலுகின்றேன்
இனியா யினும்இரங் காதோநின்
சித்தம்எந் தாய் இதென்ன
அனியாய மோஎன் அளவின்நின்
பால்தண் அருளிலையோ
சனியாம்என் வல்வினைப் போதனை
யோஎன்கொல் சாற்றுவதே. 1

நானபடும் பாடு சிவனே
உலகர் நவிலும்பஞ்சு
த்தான்படு மோசொல்லத் தான்படு
மோஎண்ணத் தான்படுமோ
கான்படு கண்ணியின் மான்படு
மாறு கலங்கிநின்றேன்
ஏன்படு கின்றனை என்றிரங்
காய்என்னில் என்செய்வனே. 2

கைக்கின்ற காயும் இனிப்பாம்
விடமும் கன அமுதாம்
பொய்க்கின்ற கானலும் நீராம்வன்
பாவமும் புண்ணியமாம்
வைக்கின்ற ஓடுஞ்செம் பொன்னும்என்
கெட்ட மனதுநின்சீர்
துய்க்கின்ற நல்ல மனதாவ
தில்லைஎன் சொல்லுவனே. 3

பொன்னுடை யார்தமைப் போய்அடுப்
பாய்என்ற புன்மையினேர்க்
கென்னுடை யான்றனை யேஅடுப்
பேன் இதற் கெள்ளளவும்
பின்னிடை யேன்அவர் முன்னடை
யேன்எனப் பேசிவந்தேன்
மின்னிடை மாதுமை பாகாஎன்
சோகம் விலக்குகவே. 4

அடுத்தார் தமைஎன்றும் மேலோர்
விடார்கள் அவர்க்குப்பிச்சை
எடுத்தா யினும்இடு வார்கள்என்
பார்அதற் கேற்கச்சொற்பூத்
தொடுத்தார் ஒருவர்க்குக் கச்சூரி
லேபிச்சைச் சோறெடுத்துக்
கொடுத்தாய்நின் பேரருள் என்சொல்லு
கேன்எண் குணக்குன்றமே. 5

நாடிநின் றேநினை நான்கேட்டுக்
கொள்வது நண்ணும்பத்துக்
கோடியன் றேஒரு கோடியின்
நூற்றொரு கூறுமன்றே
தேடிநின் றேபுதைப் போருந்
தருவர்நின் சீர்நினைந்துட்
பாடியந் தோமனம் வாடிநின்
றேன்முகம் பார்த்தருளே. 6

ஏட்டாலுங் கேளயல் என்பாரை
நான்சிரித் தென்னைவெட்டிப்
போட்டாலும் வேறிடம் கேளேன்என்
நாணைப் புறம்விடுத்துக்
கேட்டாலும் என்னை உடையான்
இடஞ்சென்று கேட்பனென்றே
நீட்டாலும் வாயுரைப் பாட்டாலுஞ்
சொல்லி நிறுத்துவனே. 7

சீர்க்கின்ற கூடலில் பாணனுக்
காட்படச் சென்ற அந்நாள்
வேர்க்கின்ற வெம்மணல் என்தலை
மேல்வைக்கு மெல்லடிக்குப்
பேர்க்கின்ற தோறும் உறுத்திய
தோஎனப் பேசிஎண்ணிப்
பார்க்கின்ற தோறும்என் கண்ணேஎன்
உள்ளம் பதைக்கின்றதே. 8

உருவத்தி லேசிறி யேனுகி
யூகத்தி லொன்றுமின்றித்
தெருவத்தி லேசிறு கால்வீசி
யாடிடச் சென்றஅந்தப்
பருவத்தி லேநல் அறிவளித்
தேஉனைப் பாடச்செய்தாய்
அருவத்தி லேஉரு வானேய்நின்
தண்ணளி யார்க்குளதே. 9

வன்பட்ட கூடலில் வான்பட்ட
வையை வரம்பிட்டநின்
பொன்பட்ட மேனியில் புண்பட்ட
போதில் புவிநடையாம்
துன்பட்ட வீரர்அந் தோவாத
வூரர்தம் தூயநெஞ்சம்
என்பட்ட தோஇன்று கேட்டஎன்
நெஞ்சம் இடிபட்டதே. 10

நீர்சிந்தும் கண்ணும் நிலைசிந்தும்
நெஞ்சமும் நிணடையில்
சீர்சிந்து வாழ்க்கையும் தேன்சிந்தி
வாடிய செம்மலர்போல்
கூர்சிந்து புந்தியும் கொண்டுநின்
றேன்உட் குறைசிந்தும்வா
ரூர்சிந்து போலருள் நேர்சிந்தன்
ஏத்தும் உடையவனே. 11

பெற்ருளனையநின் குற்றேவல்
செய்து பிழைக்கறியாச்
சிற்ருள் பலரினும் சிற்ரு
ளெனுமென் சிறுமைதவிர்த்
துற்ருள் கிளேஎனின் மற்ருர்
துணைஎனக் குன்கமலப்
பொற்ருள் அருட்புகழ்க் கற்ருய்ந்து
பாடப் புரிந்தருளே. 12

வான்மா றினுமொழி மாருத
மாறன் மனங்களிக்கக்
கான்மாறி யாடிய கற்பக
மேநின் கருணையென்மேல்
தான்மா றினும்விட்டு நான்மாறி
டேன்பெற்ற தாய்க்குமுலேப்
பான்மாறி னும்பிள்ளை பான்மாறு
மோஅதில் பல்விடுமே. 13

மைகண்ட கண்டமும் மான்கண்ட
வாமமும் வைத்தருளில்
கைகண்ட நீஎங்கும் கண்கண்ட
தெய்வம் கருதிலென்றே
மெய்கண்ட நான்மற்றைப் பொய்கண்ட
தெய்வங்கள் மேவுவனே
நெய்கண்ட ஊண்விட்டு நீர்கண்ட
கூழுக்கென் நேடுவதே, 14

பாம்பா யினும்உணப் பால்கொடுப்
பார்வளர்ப் பார்மனைப்பால்
வேம்பாயி னும்வெட்டல் செய்யார்
வளர்த்த வெருட்சிக்கடாத்
தாம்பா யினும்ஒரு தாம்பாயி
னுங்கொடு தாம்பின் செல்வார்
தேம்பாய் மலர்க்குழற் காம்பாக
என்னையும் சேர்த்துக்கொள்ளே. 15

நெருப்புக்கு முட்டையும் கூழ்க்கிட
உப்பையும் நேடிச்செல்வோர்
பருப்புக்கு நெய்யும்ஒன் பாலுக்கு
வாழைப் பழமுங்கொள்ளத்
தெருப்புக்கு வாரொடு சேர்கிலென்
னும்இச் சிறுநடையாம்
இருப்புக்கு வேண்டிய நான்சிவ
யோகர்பின் எய்திலென்னே. 16

கல்லாத புந்தியும் அந்தோநின்
தாளில் கணப்பொழுதும்
நில்லாத நெஞ்சமும் பொல்லாத
மாயையும் நின்மதமும்
கொல்லாமல் கொன்றெனைத் தின்னுமல்
தின்கின்ற கொள்கையைஇங்
கெல்லாம் அறிந்த உனக்கெளி
யேனின் றிசைப்பதென்னே. 17

அல்லுண்ட கண்டத் தரசேநின்
சீர்த்தி அமுதமுண்டோர்
கொல்லுண்ட தேவர்தங் கோளுண்ட
சீரெனும் கூழுண்பரோ
சொல்லுண்ட வாயினர் புல்லுண்ப
ரோஇன் சுவைக்கண்டெனும்
கல்லுண்ட பேர்கருங் கல்லுண்ப
ரோஇக் கடலிடத்தே. 18

வேணிக்கண் நீர்வைத்த தேவே
மதுரை வியன்தெருவில்
மாணிக்கம் விற்றசெம் மாணிக்க
மேஎனை வாழ்வித்ததோர்
ஆணிப்பொன் னேதெள் ளமுதேநின்
செய்ய அடிமலர்க்குக்
காணிக்கை ஆக்கிக்கொண் டாள்வாய்
எனது கருத்தினையே. 19

பிட்டுக்கும் வந்துமுன் மண்சுமந்
தாயென்பர் பித்தனென்ற
திட்டுக்கும் சீரருள் செய்தளித்
தாயென்பர் தீவிறகுக்
கட்டுக்கும் பொன்முடி காட்டிநின்
றாயென்பர் கண்டிடஎன்
மட்டுக்கும் வஞ்சகத் தெய்வமென்
கோமுக்கண் மாணிக்கமே. 20

ஆட்டுக்குக் காலெடுத் தாய்நினைப்
பாடலர் ஆங்கியற்றும்
பாட்டுக்குப் பேரென்கொல் பண்ணென்கொல்
நீட்டியப் பாட்டெழுதும்
ஏட்டுக்கு மையென்கொல் சேற்றில்
உறங்க இறங்குங்கடா
மாட்டுக்கு வீடென்கொல் பஞ்சணை
என்கொல் மதித்திடினே. 21

போற்றிஎன் ஆவித் துணையேஎன்
அன்பில் புகுஞ்சிவமே
போற்றுஎன் வாழ்வின் பயனேஎன்
இன்பப் புதுநறவே
போற்றிஎன் கண்ணுண் மணியேஎன்
உள்ளம் புனைஅணியே
போற்றிஎன் ஓர்பெருந் தேவே
கருணை புரிந்தருளே. 22

இலங்கா புரத்தன் இராக்கதர்
மன்னன் இராவணன்முன்
மலங்காநின் வெள்ளி மலைக்கி
ழிருந்து வருந்தநின்சீர்
கலங்காமல் பாடிடக் கேட்டே
இரங்கிக் கருணைசெய்த
நலங்காணின் தன்மைஇன் றென்னள
வியாண்டையின் நண்ணியதே. 23

அருள்அர சேஅருட் குன்றேமன்
றுடும் அருளிறையே
அருள்அமு தேஅருட் பேறே
நிறைந்த அருட்கடலே
அருள்அணி யேஅருட் கண்ணேவிண்
ணேங்கும் அருள்ஒளியே
அருள்அற மேஅருட் பண்பேமுக்
கண்கொள் அருட்சிவமே. 24

மெய்யகத் தேகணப் போதும்
விடாது விரும்புகின்றோர்
கையகத் தேநின் றொளிர்கனி
யேநுதற் கட்கரும்பே
வையகத் தேநினை அல்லாமல்
நற்றுணை மற்றிலைஇப்
பொய்யகத் தேன்செயும் தீங்கா
யிரமும் பொறுத்தருளே, 25

மதிக்கண்ணி வேணிப் பெருந்தகை
யேநின் மலரடிக்குத்
துதிக்கண்ணி சூட்டுமெய்த் தொண்டரில்
சேர்ந்துநின் தூயஒற்றிப்
பதிக்கண்ணி நின்னைப் பணிந்தேத்தி
உள்ளம் பரவசமாக்
கதிக்கண்ணி வாழும் படிஅரு
ளாயென் கருத்திதுவே. 26

இரையேற்று துன்பக் குடும்ப
விகார இருட்கடலில்
புரையேற்று நெஞ்சம் புலர்ந்துநின்
றேனைப் பொருட்படுத்திக்
கரையேற்ற வேண்டுமென் கண்ணே
பவத்தைக் கடிமருந்தே
திரையேற்று செஞ்சடைத் தேவே
அமரர் சிகாமணியே. 27

திருஅருண் முறையீடு சுருக்கம் முற்றிற்று.

வடிவுடை மாணிக்க மாலை

சீர்கொண்ட ஒற்றிப் பதியுடை யானிடம் சேர்ந்தமணி
வார்கொண்ட கொங்கை வடிவாம் பிகைதன் மலரடிக்குத்
தார்கொண்ட செந்தமிழ்ப் பாமாலை சாத்தத் தமியனுக்கே
ஏர்கொண்ட நல்லருள் ஈயும் குணாலய ஏரம்பனே. 1

கடலமு தேசெங் கரும்பே அருட்கற்ப கக்கனியே
உடல்உயி ரேஉயிர்க் குள்உணர் வேஉணர் வுள்ஒளியே
அடல்விடை யார்ஒற்றி யார்இடங் கொண்ட அருமருந்தே
மடலவிழ் ஞான மலரே வடிவுடை மாணிக்கமே 2

அணியே அணிபெறும் ஒற்றித் தியாகர்தம் அன்புறுசற்
குணியேஎம் வாழ்க்கைக் குலதெய்வ மேமலைக் கோன்தவமே
பணியேன் பிழைபொறுத் தாட்கொண்ட தெய்வப் பதிகொள்சிந்தா
மணியேஎன் கண்ணுண் மணியே வடிவுடை மாணிக்கமே. 3

மானேர் விழிமலை மானேஎம் மானிடம் வாழ்மயிலே
கானேர் அளகப் பசுங்குயி லேஅருட் கட்கரும்பே
தேனே திருவொற்றி மாநகர் வாழும் சிவசத்தியே
வானே கருணை வடிவே வடிவுடை மாணிக்கமே. 4

நீயே எனது பிழைகுறிப் பாயெனில் நின்னடிமைப்
பேயேன் செய்யும்வண்ணம் எவ்வண்ண மோஎனைப் பெற்றளிக்கும்
தாயே கருணைத் தடங்கட லேஒற்றிச் சார்குமுத
வாயேர் சவுந்தர மானே வடிவுடை மாணிக்கமே. 5

திருநாள் நினைத்தொழும் நன்னாள் தொழாமல் செலுத்தியநாள்
கருநாள் எனமறை எல்லாம் புகலும் கருத்தறிந்தே
ஒருநா ளினுநின் றனைமற வார்அன்பர் ஒற்றியில்வாழ்
மருநாள் மலர்க்குழல் மானே வடிவுடை மாணிக்கமே. 6

வாணாள் அடைவர் வறுமை யுறார்நன் மனைமக்கள்பொன்
பூணாள் இடம்புகழ் போதம் பெறுவர்பின் புன்மைஒன்றும்
காணார்நின் நாமம் கருதுநின் றோர்ஒற்றிக் கண்ணுதல்பால்
மாணார்வம் உற்ற மயிலே வடிவுடை மாணிக்கமே 7

போற்றிடு வோர்தம் பிழைஆ யிரமும் பொறுத்தருள்செய்
விற்றொளிர் ஞான விளக்கே மரகத மென்கரும்பே
ஏற்றொளிர் ஒற்றி யிடத்தார்இடத்தில் இலங்கும்உயர்
மாற்றொளி ரும்பசும் பொன்னே வடிவுடை மாணிக்கமே. 8

இட்டார் மறைக்கும் உபநிட தத்திற்கும் இன்னுஞ்சற்றும்
எட்டாநின் பொன்னடிப் போதெளி யேன்தலைக் கெட்டுங்கொலோ
கட்டார் சடைமுடி ஒற்றிஎம் மான்நெஞ்ச கத்தமர்ந்த
மட்டார் குழன்மட மானே வடிவுடை மாணிக்கமே. 9

பன்னும்பல் வேறண்டம் எல்லாம்அவ் அண்டப் பரப்பினின்று
துன்னும் சராசரம் யாவையும் ஈன்றது சூழ்ந்தும்உன்னை
இன்னும் இளந்தை அழியாத கன்னிகை என்பதென்னே
மன்னும் சுகாநந்த வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 10

தரும்பேர் அருளொற்றி யூருடை யான்இடஞ் சார்ந்தபசுங்
கரும்பே இனியகற் கண்டே மதுரக் கனிரசுமே
இரும்பேய் மனத்தினர் பால்இசை யாத இளங்கிளியே
வரும்பேர் ஒளிச்செஞ் சுடரே வடிவுடை மாணிக்கமே 11

தாயே மிகவும் தயவுடை யாள்எனச் சாற்றுவர்இச்
சேயேன் படுந்துயர் நீக்கஎன் னேஉளம் செய்திலையே
நாயேன் பிழைஇனி நாடாது நல்லருள் நல்கவரு
வாயேஎம் ஒற்றி மயிலே வடிவுடை மாணிக்கமே. 12

சுந்தர வான்முகத் தோகாய் மறைகள் சொலும்பைங்கிள்ளாய்
கந்தர வார்குழற் பூவாய் கருணைக் கடைக்கண்நங்காய்
அந்தர நேரிடைப் பாவாய் அருள்ஒற்றி அண்ணல்மகிழ்
மந்தர நேர்கொங்கை மங்காய் வடிவுடை மாணிக்கமே. 13

ஆரணம் பூத்த அருட்கோ மளக்கொடி அந்தாபூந்
தோரணம் பூத்த எழில்ஒற்றி யூர்மகிழ் சுந்தரிசற்
காரணம் பூத்த சிவைபார்ப் பதிநங் கவுரிஎன்னும்
வாரணம் பூத்த தனத்தாய் வடிவுடை மாணிக்கமே. 14

கற்பதும் கேட்பதும் எல்லாம்நின் அற்புதக் கஞ்சமலர்ப்
பொற்பதம் காணும் பொருட்டென என்னுவர் புண்ணியரே
சொற்பத மாய்அவைக் கப்புற மாய்நின்ற தூய்ச்சுடரே
மற்பதம் சேரொற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 15

நின்னால் எனக்குள எல்லா நலனும் நினைஅடைந்த
என்னால் உனக்குள தென்னைகண் டாய்எமை ஈன்றவளே
முன்னால் வருக்கருள் ஒற்றிஎம் மான்கண் முழுமணியே
மன்னுன மறையின் முடிவே வடிவுடை மாணிக்கமே. 16

கூறுத வாழ்க்கைச் சிறுமையை நோக்கிக் குறித்திடும்என்
தேறுத விண்ணப்பம் சற்றேனும் நின்றன் திருச்செவியில்
ஏறுத வண்ணம்என் ஒற்றித் தியாகர் இடப்புறத்தின்
மாறு தமர்ந்த மயிலே வடிவுடை மாணிக்கமே. 17

பொய்விட்டி டாதவன் நெஞ்சகத் தேனைப் புனம்பும்வண்ணம்
கைவிட்டி டாதின்னும் காப்பாய் அதுநின் கடன்கரும்பே
மெய்விட்டி டாருள் வினைஇன்ப மேஒற்றி வித்தகமே
மைவிட்டி டாவிழி மானே வடிவுடை மாணிக்கமே. 18

நேயானு கூல மனமுடை யாய்இனி நீயும்என் றன்
தாயாகில் யான்உன் தனையனும் ஆகில்என் தன்உளத்தில்
ஓயா துறுந்துயர் எல்லாம் தவிர்த்தருள் ஒற்றியில்செவ்
வாயார் அமுத வடிவே வடிவுடை மாணிக்கமே. 19

வாழிநின் சேவடி போற்றிநின் பூம்பத வாரிசங்கள்
வாழிநின் தாண்மலர் போற்றிநின் தன்னளி வாழிநின்சீர்
வாழிஎன் உள்ளத்தில் நீயுநின் ஒற்றி மகிழ்நரும்நீ
வாழிஎன் ஆருயிர் வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 20

வடிவுடை மாணிக்க மாலை சுருக்கம் முற்றிற்று.

இங்கித மாலை

விண்ணூர் பொழில்சூ ழொற்றியுளீர்
விளங்குந்தாம மிகுவாசத்
தண்ணூர் மலர்வே தனையொழிக்கத்
தருதல் வேண்டு மெனக்கென்றேன்
பண்ணூர் மொழியா யுபகாரம்
பண்ணுப் பகைவ ரேனுமிதை
யெண்ணு ரெண்ணு ரென்கின்று
ரிதுதான் சேடி யென்னேடீ. 1

வள்ளன் மதியோர் புகழொற்றி வள்ளா
ஒமது மணிச்சடையின்
வெள்ள மகண்மேற் பிள்ளைமதி
விளங்க லழகி தென்றேனின்
னுள்ள முகத்தும் பிள்ளைமதி யொளி
கொண்முகத்தும் பிள்ளைமதி
யெள்ள லுடையா யென்கின்று
ரிதுதான் சேடி யென்னேடீ. 2

பங்கே ருகப்பூம் பணையொற்றிப்
பதியிர் நடுவம் பரமென்னு
மங்கே யாட்டுக் காலெடுத்தி
ரழகென்றேனவ் வம்பரமே
லிங்கே யாட்டுத் தோலெடுத்தா யாமொன்
றிரண்டு நீயென்று
லெங்கே நின்சொல் லென்கின்று
ரிதுதான்சேடி யென்னேடீ. 3

யான்செய் தவத்தின் பெரும்பயனே
யென்னு ரமுதே யென் றுணையே
வான்செ யரசே திருவொற்றி
வள்ளால் வந்த தென்னென்றேன்
மான்செய் விழிப்பெண் ணேநியாண்
வடிவா னதுகேட் டுள்ளம்வியந்
தேன்கண் டிடவே யென்கின்று
ரிதுதான் சேடி யென்னேடீ. 4

கருணைக் கடலே யென்னிரண்டு கண்ணே
முக்கட் கரும்பேசெவ்
வருணப் பொருப்பே வளரொற்றி வள்ளன்
மணியே மகிழ்ந்தணையத்
தருணப் பருவ மிஃதென்றேன் றவிரன்
றெனக்காட் டியதுன்றன்
இருணச் சளக மென்கின்றா
ரிதுதான் சேடி யென்னேடீ. 5

காவிக் களங்கொள் களியேயென் கண்ணுண்
மணியே யணியேயென்
னாவித் துணையே திருவொற்றி யரசே
யடைந்த தென்னென்றேன்
பூவிற் பொலியுங் குழலாய்நீ பொன்னி
னுயர்ந்தா யெனக்கேட்டுன்
னீவைக் கருதி யென்கின்றா
ரிதுதான் சேடி யென்னேடீ. 6

நிலையைத் தவறார் தொழுமொற்றி நிமலப்
பெருமா னீர்முன்னம்
மலையைச் சிலையாக் கொண்டீர் நும்
மாவல் லபமற் புதமென்றேன்
வலையத் தறியாச் சிறுவர்களு மலையைச்
சிலையாக் கொள்வர்களி
திலையற் புதந்தா னென்கின்றா
ரிதுதான் சேடி யென்னேடீ. 7

தேவர்க் கரிய வானந்தத் திருத்தாண்
டவஞ்செய பெருமானீர்
மேவக் குகுகு குகுகுவணி வேணி
யுடையீர் ராமென்றேன்
தாவக் குகுகு குகுகுகுகுத் தாமே
யைந்து விளங்கவணி
யேவற் குணத்தா யென்கின்று
ரிதுதான் சேடி என்னேடீ. 8

இங்கித மாலை சருக்கம் முற்றிற்று

---o---

இரண்டாவது திருமுறை

புண்ணிய விளக்கம்

பாடற் கினிய வாக்களிக்கும் பாலுஞ் சோறும் பரிந்தளிக்கும்
கூடற் கினிய அடியவர்தங் கூட்ட மளிக்கும் குணமளிக்கும்
ஆடற் கினிய நெஞ்சேநீ யஞ்சே லென்மே லாணைகண்டாய்
தேடற் கினிய சீரளிக்குஞ் சிவாய நமவென் றிடுநீறே. 1

சிந்தா மணியை நாம்பலநாள் தேடி யெடுத்த செல்வமதை
இந்தார் வேணி முடிக்கனியை யின்றே விடைமேல் வரச்செயுங்காண்
அந்தோ வினையா னெஞ்சேநீ யஞ்சே லென்மே லாணைகண்டாய்
செந்தா மரையோன் றெழுதேத்துஞ் சிவாய நமவென் றிடுநீறே.

உற்ற விடத்தி லுதவநமக் குடையோர் வைத்த வைப்பதனைக்
கற்ற மனத்திற் புகுங்கருணைக் கனியை விடைமேற் காட்டுவிக்கும்
அற்ற மடைந்த நெஞ்சேநீ யஞ்சே லென்மே லாணைகண்டாய்
செற்ற மகற்றித் திறலளிக்குஞ் சிவாய நமவென் றிடுநீறே. 3

புண்ணிய விளக்க சருக்கம் முற்றிற்று.

அருள் நாம விளக்கம்

வாங்கு வின்னுதன் மங்கையர் விழியான்
மயங்கி வஞ்சர்பால் வருந்திநா டோறும்
ஏங்கு கின்றதி லென்பயன் கண்டாய்
எழில்கொ ளொற்றியூர்க் கென்னுடன் போந்து
தேங்கு லாவுசெங் கரும்பினு மினிதாய்த்
தித்தித் தன்பர்தஞ் சித்தத்துள் ளூறி
ஓங்கும் ஓம்சிவ சண்முக சிவவோம்
ஓம்சி வாயவென் றுன்னிநீ மனனே. 1

வாது செய்மட வார்தமை விழைந்தாய்
மறலி வந்துனை வாவென வழைக்கில்
ஏது செய்வையோ வேழைநீ யந்தோ
எழில்கொ ளொற்றியூர்க் கென்னுடன் போந்து
போது வைகிய நான்முகன் மகவான்
புணரி வைகிய பூமகள் கொழுநன்
ஓதும் ஓம்சிவ சண்முக சிவவோம்
ஓம்சி வாயவென் றுன்னுதி மனனே. 2

நிலவு மொண்மதி முகத்தியர்க் குழன்றாய்
நீச நெஞ்சர்த நெடுங்கடை தனிற்போய்
இலவு காத்தனை யென்னைநின் மதியே
எழில்கொ ளொற்றியூர்க் கென்னுடன் போந்து
பலவு மாய்ந்துநன் குண்மையை யுணர்ந்த
பத்த ருள்ளகப் பதுமங்க டோறும்
உலவும் ஓம்சிவ சண்முக சிவவோம்
ஓம்சி வாயவென் றுன்னிதி மனனே. 3

அருள் நாம விளக்க சுருக்கம் முற்றிற்று.

நமச்சிவாய ஸங்கீர்த்தனலகரி

சொல்ல வாவிய தொண்டர்தம் மனத்திற்
சுதந்த ரங்கொடு தோன்றிய துணையைக்
கல்ல வாவிய வேழையே னெஞ்சுங்
கரைந்து வந்திடக் கலந்திடுங் களிப்பைச்
செல்ல வாவிய பொழிற்றிரு வொற்றித்
தேனைத் தில்லைச்சிற் றம்பலத் தாடும்
நல்ல வாழ்வினை நான்மறைப் பொருளை
நமச்சி வாயத்தை நான்மற வேனே! 1

பெற்ற தாய்தனை மகமறந் தாலும்
பிள்ளை யைப்பெறுந் தாய்மறந் தாலும்
உற்ற தேகத்தை யுயிர்மறந் தாலும்
உயிரை மேவிய வுடன்மறந் தாலுங்
கற்ற நெஞ்சகங் கலைமறந் தாலும்
கண்கள் நின்றிமைப் பதுமறந் தாலும்
நற்ற வத்தவ ருள்ளிருந் தோங்கும்
நமச்சி வாயத்தை நான்மற வேனே. 2

உடையு டுத்திட இடைமறந் தாலும்
உலகு ளோர்பசிக் குணமறந் தாலும்
படையெ டுத்தவர் படைமறந் தாலும்
பரவைதா னலைப் பதுமறந் தாலும்
புடைய டுத்தவர் தமைமறந் தாலும்
பொன்னை வைத்தவப் புதைமறந் தாலும்
நடைய டுத்தவர் வழிமறந் தாலும்
நமச்சி வாயத்தை நான்மற வேனே. 3

வன்மை செய்திடும் வறுமைவந் தாலும்
மகிழ்வு செய்பெரு வாழ்வுவந் தாலும்
புன்மை மங்கையர் புணர்ச்சிநேர்ந் தாலும்
பொருந்தி னாலுநின் றாலுஞ்சென் றாலுந்
தன்மை யில்லவர் சார்பிருந் தாலுஞ்
சான்ற மேலவர் தமையடைந் தாலும்
நன்மை யென்பன யாவையு மளிக்கும்
நமச்சி வாயத்தை நான்மற வேனே. 4

இன்னும் பற்பல நாளிருந் தாலும்
இக்க.ணந்தனி லேயிறந் தாலுந்
துன்னும் வான்கதிக் கேபுகுந் தாலுஞ்
சோர்ந்து மாநர கத்துழன் றாலும்
என்ன மேலுமிங் கெனக்குவந் தாலும்
எம்பிரா னெனக்கு யாதுசெய் தாலும்
நன்னர் நெஞ்சக நாடிநின் றோங்கும்
நமச்சி வாயத்தை நான்மற வேனே, 5

நமச்சிவாய ஸங்கீர்த்தனலகரி சுருக்கம் முற்றிற்று.

நற்றுணை விளக்கம்

எஞ்ச வேண்டிய வைம்புலப் பகைபால்
இடர்கொண் டோய்ந்தனை யென்னினு மினி நீ
அஞ்ச வேண்டிய தென்னையென் நெஞ்சே!
அஞ்ச லஞ்சல்கா ணருமறை நான்கும்
விஞ்ச வேண்டியு மாலவன் மலரோன்
விளங்க வேண்டியு மிடற்றின்க ணமுதாம்
நஞ்சை வேண்டிய நாதன்றன் னாமம்
நமச்சி வாயங்காண் நாம்பெறுந் துணையே! 1

காவின் மன்னவ னெதிர்க்கினுங் காமன்
கணைக ளேவினுங் காலனே வரினும்
பூவின் மன்னவன் சிறினுந் திருமால்
போர்க்கு நேரினும் பொருளல நெஞ்சே!
ஓவின் மாதுய ரெற்றினுக் கடைந்தாய்
ஒன்று மஞ்சலி யுளவறிந் திலையோ
நாவின் மன்னரைக் கரைதனிற் சேர்த்த
நமச்சி வாயங்காண் நாம்பெறுந் துணையே! 2

ஓடு கின்றனன் கதிரவ னவன்பின்
ஓடுகின்றன வொவ்வொரு நாளாய்
வீடு கின்றன வென்செய்வோ மினியவ்
வெய்ய கூற்றுவன் வெகுண்டிடி லென்றே
வாடு கின்றனை யஞ்சலை நெஞ்சே!
மார்க்கண் டேயர்தம் மாண்பறிந் திலையோ
நாடுகின்றவர் நாதன்றன் னுமம்
நமச்சி வாயங்காண் நாம்பெறுந் துணையே. 3

மாலுந் துஞ்சுவான் மலரவ னிறப்பான்
மற்றை வானவர் முற்றிலு மழிவார்
ஏலு நற்றுணை யார்நமக் கென்றே
எண்ணி நிற்றியோ வேழைநெஞ் சே!
கோலு மாயிரங் கோடியண் டங்கள்
குலைய நீக்கியு மாக்கியு மளிக்கும்
நாலு மாமறைப் பரம்பொரு ளுமம்
நமச்சி வாயங்காண் நாம்பெறுந் துணையே. 4

நற்றுணை விளக்க சுருக்கம் முற்றிற்று.

திருவருள் வழக்க விளக்கம்

எல்லாஞ் செயவல்ல சித்தரின்
மேவி யெழின்மதுரை
வல்லாரின் வல்லவ ரென்றறி
யாமுடி மன்னன்முன்னே
பல்லா யிரவண்ட மும்பய
மெய்தப் பராக்கிரமித்துக்
கல்லானை தின்னக் கரும்பளித்
தார்எங் கடவுளரே. 1

மாற்பதஞ் சென்றபி னிந்திரர்
நான்முகர் வாமனர்மான்
மேற்பதங் கொண்ட வுருத்திரர்
விண்ணவர் மேன்மற்றுள்ளோர்
ஆற்பதங் கொண்டபல் லாயிரங்
கோடியண் டங்களெல்லாங்
காற்பத மொன்றி லொடுக்கிநிற்
பாரெங் கடவுளரே, 2

சிவ புண்ணியத் தேற்றம்

கடவுள் நீறிடாக் கடையரைக் கண்காள்!
கனவி லேனுநீர் காணுத லொழிக
அடவுண் மாசுதீர்த் தருள்திரு நீற்றை
அணியுந் தொண்டரை யன்புடன் காண்க
தடவு மின்னிசை வீணைகேட் டர்க்கன்
றனக்கு வாளொடு நாள்கொடுத் தவனை
நடவு மால்விடை யொற்றியூ ருடைய
நாதன் றன்னைநா நண்ணுதற் பொருட்டே, 1

அருள்செய் நீறிடா ரமுதுனக் கிடினும்
    அம்ம லத்தினை யருந்துத லொழிக
தெருள்கொ ணீறிடுஞ் செல்வர்கூ ழிடினுஞ்
    சேர்ந்து வாழ்த்தியத் திருவமு துண்க
இருள்செய் துன்பநீத் தென்னுடை நாவே!
    இன்ப நல்லமு தினிதிருந் தருந்தி
மருள்செய் யானையின் றேளுடுத் தென்னுள்
    வதியு மீசன்பால் வாழுதற் பொருட்டே. 2

இனிய நீறிடா வீனநாய்ப் புலையர்க்
    கெள்ளிற் பாதியு மீகுத லொழிக
இனிய நீறிடுஞ் சிவனடி யவர்கள்
    எம்மைக் கேட்கினு மெடுத்தவர்க் கீக!
இனிய நன்னெறி யிதுகாண் கரங்காள்!
    ஈச னம்முடை யிறையவன் றுதிப்போர்க்
கினிய மால்விடை யேறிவந் தருள்வோன்
    இடங்கொண் டெம்முளே யிசைகுதற் பொருட்டே

சிவ புண்ணியத் தேற்ற சுருக்கம் முற்றிற்று

அவலத்தழுங்கல்

அழுத பிள்ளைக்கே பாலூண வளிப்பாள்
    அன்னை யென்பர்க ளழுவலி யில்லாக்
கொழுது நேர்சிறு குழவிக்குங் கொடுப்பாள்
    குற்ற மன்றது மற்றவள் செயலே

தொழுது நின்னடி துதிக்கின்றோர்க் கெனவே
துட்ட னேனுக்குஞ் சூழ்ந்தருள் செயலாஞ்
செழுது மாதவி மலர்திசை மணக்கத்
திகழு மொற்றியூர்த் தியாகமா மணியே. 1

உள்ளி யோவென வலறிநின் றேத்தி
யுருகி நெக்கிலா வுளத்தன்யா னெனினும்
வள்ளி யோயுனை மறக்கவு மாட்டேன்
மற்றைத் தேவரை மதிக்கவு மாட்டேன்
வெள்ளி யோவெனப் பொன்மகிழ் சிறக்க
விரைந்து மும்மதிள் வில்வளைத் தெரித்தோய்
தெள்ளி யோர்புகழ்ந் தரகர வென்னத்
திகழு மொற்றியூர்த் தியாகமா மணியே, 2

புன்னு னிப்படுந் துளியினுஞ் சிறிய
போகம் வேட்டுநின் பொன்னடி மறந்தேன்
என்னி னிப்படும் வணமஃ தறியேன்
என்செய் கேனெனை யென்செயப் புகுகேன்
மின்னி னிற்பொலி வேணியம் பெருமான்
வேற லேனெனை விரும்பலுன் கடனே
தென்ன னிப்படுஞ் சோலைசூழ்ந் தோங்கித்
திகழு மொற்றியூர்த் தியாகமா மணியே. 3

அடிய னேனல னென்னினு மடியே
னாக நின்றன னம்மையிம் மையினுங்
கடிய னேன்பிழை யாவையும் பொறுக்கக்
கடனு னக்கலாற் கண்டில னையா

பொடிகொள் மேனியெம் புண்ணிய முதலே
புன்னை யஞ்சடைப் புங்கவ ரேறே
செடியர் தேடுருத் திவ்விய வொளியே
திகழு மொற்றியூர்த் தியாகமா மணியே. 4

அவலத்தழுங்கல் சுருக்கம் முற்றிற்று.

பழமொழி மேல்வைத்துப் பரிவுகூர்தல்

வாயி லான்பெரு வழக்குரைப் பதுபோல்
வள்ள லுன்னடி மலர்களுக் கன்பாந்
தாயி லாதுநின் னருள்பெற விழைந்தேன்
துட்ட னேனருட் சுகம்பெற நினைவாய்
கோயி லாகநல் லன்பர்தம் முளத்தைக்
கொண்ட மர்ந்திடுங் குணப்பெருங் குன்றே
தேயி லாதபல் வளஞ்செறிந் தோங்கித்
திகழு மொற்றியூர்த் தியாகநா யகனே. 1

வித்தை யின்றியே விளைத்திடு பவன்போல்
மெய்ய நின்னிரு மென்மலர்ப் பதத்திற்
பத்தியின்றியே முத்தியை விழைந்தேன்
பாவி யேனருட் பண்புற நினைவாய்
மித்தை யின்றியே விளங்கிய வடியார்
விழைந்த யாவையுந் தழைந்திட வருள்வோய்
சித்தி வேண்டிய முனிவரர் பரவித்
திகழு மொற்றியூர்த் தியாகநா யகனே. 2

பழமொழி மேல்வைத்துப் பரிவுகூர்தல் சுருக்கம் முற்றிற்று.

அருளியல் வினுவல்

தேனென விளிக்குந் திருவருட் கடலே
தெள்ளிய வமுதமே சிவமே
வானென நிற்குந் தெய்வமே முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே
ஊனென நின்ற வுணர்விலே னெனினும்
உன்றிருக் கோயில்வந் தடைந்தால்
ஏனெனக் கேளா திருந்தனை யையா
ஈதுநின் றிருவருட் கியல்போ. 1

துப்புநே ரிதழி மகிழ்ந்தகல் யாண
சுந்தரா சுந்தரன் றூதா
மைப்பொதி மிடற்றுய் வளர்திரு முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே
அப்பனே யுன்னை விடுவனோ வடியேன்
அறிவிலே னெனினுநின் கோயிற்
கெய்ப்புடன் வந்தால் வாவென வுரையா
திருப்பதுன் றிருவருட் கியல்போ. 2

அருளியல் வினுவல் சுருக்கம் முற்றிற்று.

கோடை மடப் புகழ்ச்சி

வெள்ளி மாமலை வீடென வுடையீர்
விளங்கும் பொன்மலை வில்லெனக் கொண்டீர்
வள்ளி யீரென நும்மைவந் தடைந்தால்
வாய்தி றந்தொரு வார்த்தையுஞ் சொல்லீர்

எள்ளி லெண்ணெய்போ லெங்கணு நின்றீர்
ஏழை யேன்குறை யேனறி யீரோ
ஒள்ளி யிருமை யன்றியொன் றறியேன்
ஓங்குசி ரொற்றி யூருடை யீரே. 1

தாயி லாரென நெஞ்சகந் தளர்ந்தேன்
தந்தை யுந்திருச் சந்நிதி யடைந்தேன்
வாயி லாரென விருக்கின்றீ ரல்லால்
வாய்தி றந்தொரு வார்த்தையுஞ் சொல்லீர்
கோயி லாகவென் னெஞ்சகத் தமர்ந்த
குணத்தி னீரென்றன் குறையறி யீரோ
ஓயி லாதுநற் றெண்டருக் கருள்வான்
ஓங்குசி ரொற்றி யூருடை யீரே 2

கொடைமடப் புகழ்ச்சி சுருக்கம் முற்றிற்று.

திருவருள் வேட்கை

ஊர்மதிக்க வீணி லுளறுகின்ற தல்லதுநின்
சீர்மதிக்க நின்னடியைத் தேர்ந்தேத்தே னுயிடினுங்
கார்மதிக்கு நஞ்சமுண்ட கண்டநினைந் துள்குகின்றேன்
ஏர்மதிக்கு மொற்றியூ ரெந்தையளி யெய்தாயோ. 1

தாய்க்குமினி தாகுமுன்றன் றுண்மலரை யேத்தாது
நாய்க்குங் கடையாய் நலிகின்றே னுயிடினும்
வாய்க்குமுன்றன் சந்நிதிக்கண் வந்துவந்து வாடுகின்றேன்
தாய்க்குமரன் றந்தாயென் சோர்வறிந்து திராயோ. 2

அறியாப் பருவத் தடியேனை யாட்கொண்ட
நெறியாங் கருணை நினைந்துருகே னாயிடினுங்
குறியாப் பொருளேயுன் கோயிலிடை வந்துநின் றும்
பறியாப் பிணியேன் பரதவிப்பைப் பார்த்திலையே. 3

பார்நடையாங் கானிற் பரிந்துழல்வ தல்லதுநின்
சீர்நடையா நன்னெறியிற் சேர்ந்திலே னாயிடினும்
நேர்நடையா நின்கோயி லின்றுநின்று வாடுகின்றேன்
வார்நடையார் காணு வளரொற்றி மன்னமுதே. 4

திருவருள் வேட்கை சுருக்கம் முற்றிற்று.

அபராத விண்ணப்பம்

தேவிய லறியாச் சிறியனேன் பிழையைத்
திருவுளத் தெண்ணிநீ கோபம்
மேவியிங் கையோ கைவிடிற் சிவனே
வேறுநான் யாதுசெய் வேனே
மூவிரு முகஞ்சேர் முத்தினை யளித்த
முழுச்சுவை முதிர்ந்தசெங் கரும்பே
சேவின்மே லோங்குஞ் செழுமணிக் குன்றே
திருவொற்றி யூர்மகிழ் தேவே. 1

அஞ்செழுத் தோதி யுய்ந்திடாப் பிழையை
ஐயநின் றிருவுளத் தெண்ணி
வெஞ்சனென் றையோ கைவிடிற் சிவனே
வேறுநான் யாதுசெய் வேனே

கஞ்சன்மான் முதலோ ருயிர்பெற விடத்தைக்
களத்திருத் தியவருட் கடலே
சஞ்சித மறுக்குஞ் சண்முக முடையோன்
றந்தையே யோற்றியெந் தவமே. 2

அபராத விண்ணப்ப சுருக்கம் முற்றிற்று.

அறிவரும் பெருமை

காண்பது கருதி மாலொடு மலர்வாழ்
கடவுள ரிருவருந் தங்கண்
மாண்பது மாறி வேறுரு வெடுத்தும்
வள்ளலின் னுருவறிந் திலரே
கோண்பதர் நெஞ்சக் கொடியனே னெந்தக்
கொள்கை கொண்ட றிகுவ தையா
பூண்பது பணியாய் பொதுவினின் றுடும்
புனிதநின் னருளலா தின்றே. 1

பார்த்துநிற் கின்று யாவையு மெளியேன்
பரதவித் துறுகணு னெஞ்சம்
வேர்த்துநிற் கின்றேன் கண்டிலே கொல்லோ
விடமுண்ட கண்டனி யன்றே
ஆர்த்துநிற் கின்று ரைம்புல வேட
ரவர்க்கிலக் காவனோ தமியேன்
ஓர்த்துநிற் கின்றுர் பரவுநல் லொற்றி
யூரில்வா ழென்னுற வினனே. 2

அறிவரும் பெருமை சுருக்கம் முற்றிற்று.

எழுத்தறியும் பெருமான் மாலை

சிந்தை மயங்கித் தியங்குகின்ற நாயேனை
முந்தை வினைதொலைத்துன் மொய்கழற்கா ளாக்காதே
நிந்தையுறு நோயால் நிகழவைத்தல் நீதியதோ
எந்தைநீ யொற்றி எழுத்தறியும் பெருமானே! 1

மத்தனைவன் நெஞ்சகனை வஞ்சகனை வன்பிணிகொள்
பித்தனைவி ணுட்போக்கும் பேயேனை நாயேனை
முத்தனையா யுன்றன் முளரித்தாட் காளாக்க
எத்தனைநாட் செல்லும் எழுத்தறியும் பெருமானே. 2

பூமாந்தும் வண்டெனநின் பொன்னருளைப் புண்ணியர்கள்
தாமாந்தி நின்னடிக்கீழ்ச் சார்ந்துநின்று ரையோநான்
காமாந்த காரமெனுங் கள்ளுண்டு கண்மூடி
ஏமாந்தேன் ஒற்றி எழுத்தறியும் பெருமானே. 3

வீட்டுக் கடங்கா விளையாட்டுப் பிள்ளையெனத்
தேட்டுக் கடங்காத தீமனத்தா லாந்துயரம்
பாட்டுக் கடங்காநின் பத்தரடிப் புகழ்போல்
ஏட்டுக் கடங்காது எழுத்தறியும் பெருமானே. 4

பொன்னைமதித் தையாநின் பொன்னடியைப் போற்றுத
கன்னிகரு நெஞ்சாற் கலங்குகின்ற கைதவனேன்
இன்ன லுழக்கின்ற வேழைகட்கு மேழைகண்டாய்
என்னை விடாதே எழுத்தறியும் பெருமானே. 5

நீக்கமிலா மெய்யடியர் நேசமிலாப் பொய்யடியேன்
ஊக்கமிலா நெஞ்சத்தி னேட்டகலச் செய்வாயேல்
தூக்கமிலா வானந்தத் தூக்கமன்றி மற்றுமிங்கோர்
ஏக்கமிலே னொற்றி எழுத்தறியும் பெருமானே. 6

ஒல்லையே நஞ்சனைத் துமுண்ட தயாநிதிநீ
அல்லையோ நின்றிங் கயர்வேன்முன் வந்தொருசொற்
சொல்லையோ வொற்றியூர்த் தூயதிருக் கோயினுணீ
இல்லையோ வையா எழுத்தறியும் பெருமானே. 7

நினையுடையாய் நீயன்றி நேடிலெங்கு மில்லாதாய்
மனையுடையார் மக்களெனும் வாழ்க்கையிடைப் பட்டவமே
இனையுடையா னென்றிங் கெனையாள்வ துன்கடனே
எனையுடையா யொற்றி எழுத்தறியும் பெருமானே. 8

எழுத்தறியும் பெருமான் மாலை சுருக்கம் முற்றிற்று.

திருச் சாதனத் தெய்வத் திறம்

அருள்பழுக்குங் கற்பகமே யரசே முக்கண்
ஆரமுதே நினைப்புகழே னந்தோ வஞ்ச
மருள்பழுக்கு நெஞ்சகத்தேன் வாளா நாளை
வாதமிட்டுக் கழிக்கின்றேன் மதியி லேனை
வெருள்பழுக்கும் கடுங்காட்டில் விடினு மாற்று
வெள்ளத்தி லடித்தேக விடினும் பொல்லா
இருள் பழுக்கும் பிலஞ்சேர விடினு மன்றி
என்செயினும் போதாதே யெந்தா யெந்தாய் 1

பெருங்கருணைக் கடலேயென் குருவே முக்கட்
பெருமானே நினைப்புகழேன் பேயே னந்தோ!
கருங்கன்மனக் குரங்காட்டி வாளா நாளைக்
கழிக்கின்றேன் பயனறியாக் கடைய னேனை

ஒருங்குருள வுடல்பதைப்ப வுறுங்குன் றேற்றி
உருட்டுகினு முயிர்நடுங்க வுள்ள மேங்க
இருங்கழுவி லேற்றுகினு மன்றி யின்னும்
என்செயினும் போதாதே யெந்தா யெந்தாய். 2

திருச் சாதனத் தெய்வத் திறம் சுருக்கம் முற்றிற்று.

ஆடலமுதப் பத்து

ஒருக ணப்பொழு தேனுநின் னடியை
உள்கி டாதுள மோடுகின் றதனல்
இருக ணப்பெறுந் தியனேன் செய்யுந்
திறம றிந்திலேன் செப்பலென் சிவனே
வருக ணத்துடல் நிற்குமோ விழுமோ
மாயு மோவென மயங்குவேன் றன்னை
அருக ணைத்தரு ளொற்றியூ ரிறையே
அம்ப லத்தினின் ருடல்செய் யமுதே. 1

யாது நின்கருத் தறிந்திலேன் மனமோ
என்வ சப்படா திருத்தலை யுரைத்தேன்
தீது செய்யினும் பொறுத்தெனைச் சிவனே
தீய வல்வினைச் சேர்ந்திடா வண்ணம்
பாது காப்பதுன் பரமின்றேற் பலவாய்ப்
பகர்த லென்னகாண் பழிவரு முனக்கே
யாது காண்டியெம் மொற்றியூ ரரசே
அம்ப லத்தினின் ருடல்செய் யமுதே. 2

ஆடலமுதப் பத்து சுருக்கம் முற்றிற்று.

சிவானந்தப் பத்து

வஞ்ச நெஞ்சர்தஞ் சேர்க்கையைத் துறந்து
வள்ள லுன்றிரு மலரடி யேத்தி
விஞ்சு நெஞ்சர்தம் அடித்துணைக் கேவல்
விரும்பி நிற்குமப் பெரும்பயன் பெறவே
தஞ்ச மென்றரு ளின்றிருக் கோயில்
சார்ந்து நின்றனன் றருதன்மற் றின்றே
செஞ்சொ லோங்கிய வொற்றியெம் பெருமான்
தில்லை யோங்கிய சிவாநந்தத் தேனே. 1

எளிய னேன்பிழை யியற்றிய வெல்லாம்
எண்ணி னுட்படா வேனுமற் றவையை
அளிய நல்லரு ளிந்திடும் பொருட்டால்
ஆய்த னன்றல வாதலி னின்டே
களிய நெஞ்சமாங் கருங்கலைக் கரைத்துக்
கருணை யிருதல் கடனுனக் கையா
தெளிய வோங்கிய வொற்றியென் னமுதே
தில்லை யோங்கிய சிவானந்தத் தேனே. 2

சிவானந்தப் பத்து சுருக்கம் முற்றிற்று.

நெஞ்சொடு நேர்தல்

தேனெய் யாடிய செஞ்சடைக் கனியைத்
தேனை மெய்யருட் டிருவினை யடியர்
ஊனை நெக்கிட வுருக்கிய வொளியை
உள்ளத் தோங்கிய வுவப்பினை மூவர்

கோனை யானந்தக் கொழுங்கட லமுதைக்
கோம ளத்தினைக் குன்றவில் லியையெம்
மானை யம்பல வாணனை நினையாய்
வஞ்ச நெஞ்சமே மாய்ந்திலை யினுமே. 1

தூய நெஞ்சமே சுகம்பெற வேண்டிற்
சொல்லு வாமது சொல்லள வன்றாற்
காய மாயமாங் கான்செறிந் துலவுங்
கள்வ ரைவரைக் கைவிடுத் ததன்மேற்
பாய வாணவப் பகைகெட முருக்கிப்
பகலி ராவிலாப் பாங்கரி னின்றே
ஆய வானந்தக் கூத்துடைப் பரமா
காய சோதிகண் டமருத லணியே. 2

நெஞ்சோடு நேர்தல் சுருக்கம் முற்றிற்று.

நெசறைஞ் கூவல்

விதியு மாலுமுன் வேறுரு வெடுத்து
மேலுங் கீழுமாய் விரும்புற நின்றோர்
நதியுங் கொன்றையு நாகமும் பிறையும்
நண்ணி யோங்கிய புண்ணியச் சடையார்
பதியு நாமங்க ளனந்தமுற் றுடையார்
பணைகொ ளொற்றியூர்ப் பரமர்கா ணவர்தாம்
வதியுங் கோயிற்குத் திருவிளக் கிடுவோம்
வாழ்க நீயுடன் வருதியென் மனனே. 1

நெஞ்சறை கூவல் சுருக்கம் முற்றிற்று.

நெஞ்சைத் தேற்றல்

ஈது வேண்டிய சிறியர்தம் மனையிற்
சென்று நின்றுநீ திகைத்திட னெஞ்சே
யாது வேண்டுதி வருதியென் னுடனே
யாணர் மேவிய வொற்றியூ ரகத்து
மாது வேண்டிய நடனநா யகனூர்
வள்ளலா ரங்கு வாழ்கின்றார் கண்டாய்
ஈது வேண்டிய தென்னுமுன் னளிப்பார்
ஏற்று வாங்கிநா னீகுவ னுனக்கே. 1

மறப்பி லாச்சிவ யோகம்வேண் டுகினும்
வழுத்த ரும்பெரு வாழ்வுவேண் டுகினும்
இறப்பி லாதின்னு மிருக்கவேண் டுகினும்
யாது வேண்டினு மீகுவ னுனக்கே
பிறப்பி லானெங்கள் பரசிவ பெருமான்
பித்த னென்றுநீ பெயர்ந்திட னெஞ்சே
வறப்பி லானருட் கடலவ னமர்ந்து
வாழு மொற்றியின் வருதியென் னுடனே. 2

சென்று நீபுகும் வழியெலா முன்னைத்
தேட வென்வச மல்லவென் னெஞ்சே
இன்ற ரைக்கண மெங்குநேர்ந் தோடா
தியல்கொ ளொற்றியூர்க் கென்னுடன் வருதி
அன்று வானவ ருயிர்பெற நஞ்சம்
அருந்தி நின்றவெம் மண்ணலா ரிடத்தே
நின்று வேண்டிய யாவையு முனக்கு
நிகழ வாங்கிநா னீகுவ னன்றே. 3

கெடுக்கும் வண்ணமே பலருனக் குறுதி
 கிளத்து வாரவர் கெடுமொழி கேளேல்
அடுக்கும் வண்ணமே சொல்கின்றே னென்னை
 அம்மை யிம்மையு மகன்றிடா மையினுற்
றடுக்கும் வண்ணமே செய்திடே லொற்றித்
 தலத்தினுக் கின்றென் றன்னுடன் வருதி
மடுக்கும் வண்ணமே வேண்டிய வெல்லாம்
 வாங்கி யீகுவேன் வாழ்த்தியென் னெஞ்சே. 4

நெஞ்சைத் தேற்றல் சுருக்கம் முற்றிற்று.

நாளவத்தலைசல்

மடிக்குறு நீர்மே லெழுத்தினுக் கிடவே
 மைவடித் தெடுக்குநர் போல
கொடிக்குளே மறையு முடம்பினை வளர்க்க
 நொந்தன னெந்தது மல்லாற்
படிக்குளே மனத்தாற் பரிவுறு கின்றேன்
 பாவியேன் றனக்கருள் புரியாய்
வடிக்குறுந் தமிழ்கொண் டன்பருக் கருளும்
 வள்ளலே யொற்றியூர் வாழ்வே. 1

அருட்டிறத்தலைசல்

அலைவளைக்கும் பாற்கடலா னம்புயத்தான் வாழ்த்திநிதந்
தலைவளைக்குஞ் செங்கமலத் தாளுடையா யாளுடையாய்
உலைவளைக்கா முத்தலைவே லொற்றியப்பா வுன்னுடைய
மலைவளைக்குங் கைம்மலரின் வண்மைதனை வாழ்த்தேனே.

பூணாக மாடப் பொதுநடிக்கும் புண்ணியனே
சேணாகம் வாங்குஞ் சிவனே கடல்விடத்தை
ஊணாக வுள்ளுவந்த வொற்றியப்பா மாலயனுங்
காணாத நின்னுருவைக் கண்டு களியேனே. 2

கொள்ளுவார் கொள்ளுங் குலமணியே மாலயனுந்
துள்ளுவார் துள்ளடக்குந் தோன்றலே சூழ்ந்துநிதம்
உள்ளுவா ருள்ளுறையு மொற்றியப்பா வுன்னுடைய
தெள்ளுவார் பூங்கழற்கென் சிந்தைவைத்து நில்லேனே.

கற்பவற்றைக் கல்லாக் கடையரிடஞ் சென்றவர்முன்
அற்பவற்றைக் கூவிக் கலையு மலைப்பொழிய
உற்பவத்தை நீக்குகின்ற வொற்றியப்பா வுன்னுடைய
நற்பதத்தை யேத்தியரு ணன்னலந்தா னண்ணேனே.

கூட்டுவிக்குண் மேலெழவே கூற்றுவன்வந் தாவிதனை
வாட்டுவிக்குங் காலம் வருமுன்னே யெவ்வுயிர்க்கும்
ஊட்டுவிக்குந் தாயாகு மொற்றியப்பா நியுலகை
ஆட்டுவிக்கு மம்பலத்துன் னாட்டமதைப் பாரேனே.

மின்னெனுப்பாம் வாழ்வை வியந்திடருள் வீழ்ந்தலைந்தேன்
பொன்னெனுப்பாய் தெய்வமணப் பூவொப்பா யென்னினுமே
உன்னெனுப்பா ரில்லாத வொற்றியப்பா வுன்னுடைய
தன்னெனுப்பாம் வேணியின்மேற் சார்பிறையைப் பாரேனே.

அருட்டிறத் தலைசல் சுருக்கம் முற்றிற்று.

திருவிண்ணப்பம்

சழக்கி ருந்ததென் னிடத்திலா யினுநீர்
 தந்தை யாதலிற் சார்ந்தநன் னெறியிற்
பழக்கி வைப்பது தேவரீர்க் குரிய
 பண்பன் றேவெனைப் பரிந்திலி ரானல்
வழக் கிருப்பதிங் குமக்குமென் றனக்கும்
 வகுத்துக் கூறுதன் மரபுமற் றன்றாற்
புழைக்கை மாவுரி யீரொற்றி யுடையீர்
 பொய்ய னென்னில்யான் போம்வழி யெதுவோ, 1

முன்னை மாதவ முயற்சியொன் றில்லா
 மூட னேன்றனை முன்வர வழைத்துப்
பின்னை யொன்றும்வாய்ப் பேச்சிலி ராறைற்
 பித்த ரென்றுமைப் பேசிட லாமே
என்னை நான்பழித் திடுகின்ற தல்லால்
 இகழ்கி லேனுமை யெழிலொற்றி யுடையீர்
புன்னை யஞ்சடை யிரெனை யுடையீர்
 பொய்ய னென்னில்யான் போம்வழி யெதுவோ. 2

கரும்பின் கட்டியுங் கனியையுங் கொடுத்தாற்
 கயவ ராயினுங் கசக்குமென் றுரையார்
அரும்பின் கட்டிள முலையுமை மகிழும்
 ஐய நிரும தருளெனக் களிக்க
இரும்பின் கட்டிநேர் நெஞ்சினே னெனினும்
 ஏற்று வாங்கிடா திருந்ததுண் டேயோ
பொரும்பின் கட்டுரி யீரொற்றி யுடையீர்
 பொய்ய னென்னில்யான் போம்வழி யெதுவோ. 3

விருப்பு நின்றதும் பதுமலர் மிசையவ்
　　விருப்பை மாற்றுதல் விரகுமற் றன்றூர்
கருப்பு நேரினும் வள்ளியோர் கொடுக்குங்
　　கடமை நீங்குரு குடைமையின் றேனும்
நெருப்பு நம்முரு வாயினு மருகில்
　　நிற்க வஞ்சுறே விலனு மன்றூற்
பொருப்பு வில்லுடை யீரோற்றி யுடையீர்
　　பொய்ய னென்னில்யான் போம்வழி யெதுவோ. 4

திருவிண்ணப்பம் சுருக்கம் முற்றிற்று.

வழிமொழி விண்ணப்பம்

தாய்க்குந் தந்தைக்கு நிகருநின் னிருதாட்
　　சார்ந்த மேலவர் தமைத்தொழு தேத்தா
நாய்க்கு நாயெனும் பாவியேன் பிழையை
　　நாடி நல்லருள் நல்கிடா திருந்தால்
ஏய்க்கு மாளிறக் காலன்வந் திடும்போ
　　தென்கொலா மிந்த வெண்ணமென் மனத்தைத்
தீய்க்கு தென்செய்வே னுற்றியெஞ் சிவனே
　　தில்லை யம்பலந் திகழொளி விளக்கே. 1

சிறுமை விண்ணப்பம்

ஞால வாழ்க்கையை நம்பிநின் றுழலும்
　　நாயக ளுக்கெலா நாயக சானேன்
சில மொன்றிலேன் றிகைக்கின்றேன் சிவனே
　　செய்வ தென்னைநான் சிறியருட் சிறியேன்

ஏல நின்னரு ளிதியே லுய்வேன்
இல்லையே லெனக் கில்லையுய் திறமே
போல வென்றுரை யாவொற்றி யரசே
போற்றும் யாவர்க்கும் பொதுவினின் றவனே. 1

இரங்கல் விண்ணப்பம்

மண்ணி னின்றவர் வாழ்வதுங் கணத்தில்
வருந்தி மாய்வது மற்றிவை யெல்லாங்
கண்ணி னேர்நிதங் கண்டுமிவ் வாழ்விற்
காத லிங்கிலாக் கன்மனக் கொடியேன்
எண்ணி நின்றவோ ரெண்ணமு முடியா
தென்செய் கேன்வரு மிருவினைக் கயிற்றால்
உண்ணி ரம்பநின் றுட்டுகின் றனைநீ
ஒற்றி மேவிய வுலகுடை யோனே, 2

ஞான மென்பதி னுறுபொரு ளறியேன்
ஞானி யல்லனு ளுயினுங் கடையேன்
ஆன போதிலு மெனக்குநின் னருளோர்
அணுவிற் பாதியே யாயினு மடைந்தால்
வான மேவிய வமரரு மயனும்
மாலு மென்முனம் வலியில ரன்றே
ஊன நீக்கிநல் லருடரும் பொருளே
ஒற்றி மேவிய வுலகுடை யோனே. 3

அளிய நெஞ்சமோ ரறிவுரு வாகும்
அன்பர் தம்புடை யணுகிய வருள்போல்
எளிய நெஞ்சினேற் கெய்திடா தேனும்
எள்ளிற் பாதிமட் டேந்தருள் வாயேற்
களிய மாமயற் காடற வெறிந்தாங்
கார வேரினைக் களைந்துமெய்ப் போத
வொளிய வித்தினுற் போகமும் விளைப்பேன்
ஒற்றி மேவிய வுலகுடை யோனே. 4

இரங்கல் விண்ணப்ப சுருக்கம் முற்றிற்று.

காதல் விண்ணப்பம்

மறைகளு மின்னுந் தலைத்தலை மயங்க
மறைந்துல குயிர்தொறு மொளித்த
இறைவநின் றிருத்தாட் கன்பிலாக் கொடியன்
என்னினு மேழையேன் றனக்கு
நிறைதரு நினது திருவரு ளளிக்க
நினைத்தலே நின்கடன் கண்டாய்
கறைமணி மிடற்றுத் தெய்வமே யொற்றிக்
காவல்கொள் கருணையங் கடலே 1

கொடி விண்ணப்பம்

ஒழுக்க மில்லவ னேரிடத் தடிமைக்
குதவு வான்கொலென் றுன்னுகிற் பீரேற்
புழுக்க நெஞ்சினே னும்முடைச் சமுகம்
போந்து நிற்பனேற் புண்ணியக் கனிகள்

பழுக்க நின்றிடுங் குணத்தரு வாவேன்
பார்த்த பேருமப் பரிசின ராவர்
தொழுக்க னென்னையாள் வீரொற்றி யுடையீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே. 1

ஆல முண்டநீ ரின்னுமவ் வானோர்க்
கமுது வேண்டிமா லக்கடல் கடைய
ஓல வெவ்விடம் வரிலதை நீயே
உண்கென் றுனும் முரைப்படி யுண்பேன்
சாலஞ் செய்வது தகையன்று தருமத்
தனிப்பொற் குன்றனிர் சராசர நடத்துஞ்
சூல பாணியீர் திருவொற்றி நகரீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே. 2

கொடி விண்ணப்ப சுருக்கம் முற்றிற்று.

நாடக விண்ணப்பம்

மடுக்கு நீருடைப் பாழ்ங்கிண றதனுள்
வழுக்கி வீழ்ந்தவன் வருந்துரு வண்ணம்
எடுக்கின் றேரென இடையிற்கை விடுதல்
இரக்க முள்ளவர்க் கியல்பன்று கண்டீர்
தடுக்கி லாதெனைச் சஞ்சல வாழ்விற்
றாழ்த்து கின்றது தருமமன் றுமக்கு
நடுக்கி லார்தொழு மொற்றியூ ருடையீர்
ஞான நாடக நவிற்றுகின் றீரே. 1

அரந்தை யோடொரு வழிச்செல்வோன் றனையோர்
ஆற்று வெள்ளமீர்த் தலைத்திட வவனும்
பரந்த நீரிடை நின்றழு வானேற்
பகைவ ராயினும் பார்த்திருப் பாரோ !
கரந்தை யஞ்சடை யண்ணனி ரடியேன்
கலங்கக் கண்டிருக் கின்றது கடனே
நரந்த மார்பொழி லொற்றியூ ருடையீர்
ஞான நாடக நவிற்றுகின் றீரே, 2

பிறவிக் கண்ணிலான் கைக்கொளுங் கோலைப்
பிடுங்கி வீசுதல் பெரியவர்க் கறமோ !
மறவிக் கையறை மனத்தினே னும்மேல்
வைக்கு மன்பைநீர் மாற்றுத லழகோ
உறவிக் கொள்கையை யுள்ளிரே லிதனை
ஓதிக் கொள்ளிட மொன்றிலை கண்டீர்
நறவிக் கோங்கிய வொற்றியம் பதியீர்
ஞான நாடக நவிற்றுகின் றீரே. 3

கல்வி வேண்டிய மகன்றனைப் பெற்றோர்
கடுத்த லோர்சிறு கதையிலு மிலைகாண் !
செல்வம் வேண்டிலேன் றிருவருள் விழைந்தேன்
சிறிய னேனைநீர் தியக்குத லழகோ
பல்வி தங்களாற் பணிசெயு முரிமைப்
பாங்கு நல்குமப் பரமுமக் கன்றே
நல்வி தத்தினர் புகழொற்றி யுடையீர்
ஞான நாடக நவிற்றுகின் றீரே,

நாடக விண்ணப்ப சுருக்கம் முற்றிற்று.

சிறு விண்ணப்பம்

பண்ணாலுன் னருட்புகழைப் பாடு கின்றார்
பணிகின்றார் நின்னழகைப் பார்த்துப் பார்த்துக்
கண்ணார வுளங்குளிரக் களித்தா நந்தக்
கண்ணீர்கொண் டாடுகின்றார் கருணை வாழ்வை
எண்ணாநின் றுனையெந்தா யெந்தா யெந்தாய்
என்கின்றார் நின்னன்ப ரெல்லா மென்றன்
அண்ணாவொ ருபாவி வஞ்ச நெஞ்சால்
அலைகின்றே னென்செய்கே னந்தோ வந்தோ, 1

பொய்யாத நின்னடியா ரெல்லா நல்ல
புண்ணியமே செய்துநினைப் போற்று கின்றார்
நையாநின் றலைகின்ற மனத்தா லிங்கே
நாயொருவன் பெரும்பாவி நாயேன் றீமைச்
செய்யாநின் றுழைக்கின்றேன் சிறிது நின்னைச்
சிந்தியேன் வந்திக்குந் திறமு நாடேன்
ஐயாவென் னப்பாவென் னரசே வீணின்
அலைகின்றே னென்செய்கே னந்தோ வந்தோ. 2

கொலையறியாக் குணத்தோர்நின் னன்ப ரெல்லாங்
குணமேசெய் துன்னருடான் கூடு கின்றார்
புலையறிவே னொருவன் பிழையே செய்து
புலங்கெட்ட விலங்கேபோற் கலங்கு கின்றேன்
நிலையறியே னெறியொன்று மறியே னெங்கும்
நினையன்றித் துணையொன்று மறியேன் சற்றும்
அலையறியா வருட்கடனி யாள்க வீணில்
அலைகின்றே னென்செய்கே னந்தோ வந்தோ, 3

திருக்காட்டிக் கிரங்கல்

நீதியிலார் வாயிலிடை நின்றலைந்த நெஞ்சகனேன்
சோதியெலாஞ் சூழ்ந்தபரஞ் சோதியே செஞ்சடைமேற்
பாதிநிலா வோங்கும் பரமேநி யொற்றிநகர்
வீதியுலா வந்தவெழின் மெய்குளிரக் கண்டிலனே.

திருவருட் கிரங்கல்

ஒப்பாரு மில்லாத வுத்தமனே யொற்றியிலென்
அப்பாவுன் பொன்னடிக்கே அன்பிலே னுறைனும்
தப்பா தகமெலியச் சஞ்சலத்தா லேங்குகின்ற
இப்பாத கத்தேற்கு இரங்கினு லாகாதோ. 1

பற்றுஞ் செழுந்தமிழாற் பாடுகின்றோர் செய்தபெருங்
குற்றங் குணமாகக் கொள்ளுங் குணக்கடலே
மற்றங்கு மெண்டோன் மலையே மரகதமே
பெற்றிங் கடியேன் பிணிகெடுத்தா லாகாதோ. 2

சேய்பிழையைத் தாயறிந்துஞ் சீருள் பொறுப்பாளிங்
நாய்பிழையை நீபொறுக்க ஞாயமுமுண் டையாவே
தேய்மதிபோ னெஞ்சந் தியக்கமுறச் சஞ்சலத்தால்
வாயலறி வாடுமெனை வாவென்ரு லாகாதோ. 3

கண்ணுன் மணிபோற் கருதுகின்ற நல்லோரை
எண்ணுங் கணமும்விடுத் தேகாத வின்னமுதே
உண்ணு முணவுக்கு முடைக்குமுயன் ரேடுகின்ற
மண்ணுலகத் தென்றன் மயக்கறுத்தா லாகாதோ. 4

அர்ப்பித் திரங்கல்

மருள ளித்தெனை மயக்கியிவ் வுலகில்
வருத்து கின்றனை மற்றெனக் குன்றன்
அருள ளிக்கிலை யாயினு நினக்கே
அடிமை யாக்கிலை யாயினும் வேற்றுப்
பொருள ளிக்கிலை யாயினு மொருநின்
பொன்மு கத்தையோர் போதுகண் டிடவே
தெருள ளித்திடிற் போதுமிங் குனது
சித்த மன்றியான் செய்வதொன் றிலையே. 1

கருணைபெரு திரங்கல்

அன்னை யப்பனு நீயென மகிழ்ந்தே
அகங்கு ளிர்ந்துநா னுதரித் திருந்தேன்
என்னை யிப்படி யிடர்கொள விடுத்தால்
என்செய் கேனிதை யாரொடு புகல்கேன்
பொன்னை யொத்தநின் னடித்துணை மலரைப்
போற்று வார்க்குநீ புரிகுவ திதுவோ
உன்னை யெப்படி யாயினு மறவேன்
உனைய லாலெனை யுடையவ ரெவரே. 1

கொடிய பாவியேன் படும்பரி தாபங்
குறித்துக் கண்டுமென் குறையகற் றுறுது
நெடிய காலமுந் தாழ்த்தனை நினது
நெஞ்சும் வஞ்சக நேர்ந்ததுண் டேயோ

அடியர் தந்துயர் கண்டிடிற் றறியார்
ஐய ரென்பரென் னளவஃ திலையோ
ஓடிய மாதுயர் நீக்கிடா யென்னில்
உனைய லாலெனை யுடையவ ரெவரே. 2

அடிய னேன்மிசை யாண்டவ நினக்கோர்
அன்பி ருந்ததென் றகங்கரித் திருந்தேன்
கொடிய னேன்படு மிடர்முழு தறிந்துங்
கூலி யாளனைப் போலெனை நினைத்தே
நெடிய வித்துணைப் போதுமோர் சிறிதும்
நெஞ்சி ரங்கிலை சஞ்சலத் தறிவும்
ஓடிய நின்றன னென்செய்கேன் சிவனே
உனைய லாலெனை யுடையவ ரெவரே. 3

திருவண்ணப் பதிகம்

திருவண்ண நதியும்வளை யொருவண்ண மதியும்வளர்
செவ்வண்ண நன்று சடையுந்
தெருள்வண்ண நுதல்விழியு மருள்வண்ண வதனமுந்
திகழ்வண்ண வெண்ண கையுமோர்
மருள்வண்ண மணிகுவளை மலர்வண்ண மிடறுமலை
மகள்வண்ண மருவு மிடமு
மன்வண்ண மிகுதுணைப் பொன்வண்ண வடிமலரு
மாணிக்க வண்ண வடிவும்
இருவண்ண வெனதுமன தொருவண்ண மாகியே
இடைவிடா தேத்தும் வண்ணம்
எவ்வண்ண மவ்வண்ண மிவ்வண்ண மென்றிவண்
இயம்பலுன் கருணை வண்ணங்

கருவண்ண மறவுளம் பெருவண்ண முறநின்று
கடல்வண்ண னென்னு மமுதே
கனகவம் பலநாத கருணையங் கணபோத
கமல குஞ்சித பாதனே. 1

கூர்கொண்ட வாள்கொண்டு கொலைகொண்ட வேட்டுவக்
குடிகொண்ட சேரி நடுவிற்
குவைகொண்ட வொருசெல்வ னருமைகொண் டென்றிடு
குலங்கொண்ட சிறுவ னொருவன்
ஏர்கொண்டு சென்றவர்கள் கைகொண் டுறக்கண்கள்
நீர்கொண்டு வாட லெனவே
நிலைகொண்ட நீயருட் கலைகொண் டளித்தயான்
நெறிகொண்ட குறித வறியே
போர்கொண்ட பொறிமுதற் புலைகொண்ட தத்துவப்
புரைகொண்ட மறவர் குடியாம்
பொய்கொண்ட மெய்யென்னு மைகொண்ட சேரியிற்
போந்துநின் றவர லைக்கக்
கார்கொண்ட விடியொலிக் கண்கொண்ட பார்ப்பிற்
கலங்கினே னருள்புரிகுவாய்
கனகவம் பலநாத கருணையங் கணபோத
கமல குஞ்சித பாதனே. 2

எழுவகைப் பிறவிகளு ளெப்பிறவி யெய்துகினும்
எய்துக பிறப்பி லினிநான்
எய்தாமை யெய்துகினு மெய்திடுக விருமையினும்
இன்ப மெய்தினு மெய்துக

வழுவகைத் துன்பமே வந்திடினும் வருகமிகு
வாழ்வுவந் திடினும் வருக
வறுமைவரு கினும்வருக மதிவரினும் வருகவவ
மதிவரினும் வருக வுயர்வோ:
டிழிவகைத் துலகின்மற் றெதுவரினும் வருகவல
தெது போகினும் போகநின்
இணையடிகள் மறவாத மனமொன்று மாத்திரம்
எனக்கடைதல் வேண்டு மரசே
கழிவகைப் பவரோக நீக்குநல் லருளெனுங்
கதிமருந் துதவு நிதியே
கனகவம் பலநாத கருணையங் கணபோத
கமல குஞ்சித பாதனே. 3

எளியனேன் சிறியன்யான் செய்பிழைகள் சிறியவோ!
எழுகடலி னும்பெரி யவே
என்செய்கே னென்செய்கே னினியாயி னுஞ்செயா
தெந்தைநினை யேத்த வென்றால்
வளியின்வான் சுழல்கின்ற பஞ்சாக நெஞ்சான்
மயங்குகின் றேனடிய னேன்
மனமெனது வசமாக நினதுவச நானுக
வந்தறிவு தந்தருளு வாய்
ஒளியினொளி யேநாத வெளியின்வெளி யேவிடய
உருவினுரு வேயுரு வினும்
உயிரினுயி ரேயுயர்கொ ளுணர்வினுணர் வேயுணர்வின்
உறவினுற வேயே மிறையே

களியிளிறை வேயளிகொள் கருணைநிதி யேமணிகொள்
கண்டவெண் டோட் கடவுளே
கனகவம் பலநாத கருணையங் கணபோத
கமல குஞ்சித பாதனே. 4

சந்ததமெ னக்குமகிழ் தந்தைநீ யுண்டுநின்
றன்னிடத் தேம வல்லி
தாயுண்டு நின்னடிய ரென்னுநற் றமருண்டு
சாந்தமெனு நேய ருண்டு
புந்திகொள் நிராசையா மனைவியுண் டறிவெனும்
புதல்வனுண் டிரவு பகலும்
போனவிட முண்டருட் பொருளுமுன் டானந்த
போகபோக் கியமு முண்டு
வந்தனைசெய் நீறெனுங் கவசமுண் டக்கமா
மணியுமுண் டஞ்செ ழுத்தாம்
மந்திரப் படையுண்டு சிவகதியெ னும்பெரிய
வாழ்வுண்டு தாழ்வு முண்டோ
கந்தமிகு கொன்றையொடு கங்கைவளர் செஞ்சடைக்
கடவுளே கருணை மலையே
கனகவம் பலநாத கருணையங் கணபோத
கமல குஞ்சித பாதனே. 5

நான்முகனு மாலுமடி முடியுமறி வரியபர
நாதமிசை யோங்கு மலையே
ஞானமய மானவொரு வானநடு வானந்த
நடனமிடு கின்ற வொளியே

மான்முகம் விடாதுழலு மெனையுமுயர் நெறிமருவ
வைத்தவண் வளர்த்த பதியே
மறைமுடிவி னிறைபரப் பிரமமே யாகம
மதிக்குமுடி வுற்ற சிவமே
ஊன்முகச் செயல்விடுத் துண்முகப் பார்வையின்
உறுந்தவர் பெறுஞ் செல்வமே
ஒழியாத வுவகையே யழியாத வின்பமே
ஒன் றிரண் டற்ற நிலையே
கான்முகக் கடகளிற் றுரிகொண்ட கடவுளே
கண்கொண்ட நுதலண் ணலே
கனகவம் பலநாத கருணையங் கணபோத
கமல குஞ்சித பாதனே. 6

அம்மை திருப்பதிகம்

உலகினுயிர் வகையுவகை யுறவினிய அருளமுதம்
உதவு மாநந்த சிவையே
உவமைசொல அரியவொரு பெரியசிவ நெறிதனை
உணர்ந்துபே ரின்ப நிதியே
இலகுபர வபரநிலை யிசையுமவ ரவர்பருவம்
இயலுற வுளங்கொள் பரையே
இருமைநெறி யொருமையுற அருமைபெறு பெருமைதனை
ஈந்தெனை யளித்த அறிவே
கலகமுறு சகசமல இருளகல வெளியான
காட்சியே கருணை நிறைவே
கடகரட விமலகய முகவமுதும் அறுமுகக்
கநவமுது முதவு கடலே

அலகில்வள நிறையுமொரு தில்லையம் பதிமேவும்
அண்ணலார் மகிழு மணியே
அகிலாண்ட முஞ்சரா சரமுமீன் றருள்பரசி
வாநந்த வல்லி யுமையே 1

கற்பவையெ லாங்கற்று ணுர்பவையெ லாமனக்
கரிசற வுணர்ந்து கேட்டுக்
காண்பவையெ லாங்கண்டு செய்பவையெ லாஞ்செய்து
கருநெறி யகன்ற பெரியோர்
பொற்பவையெ லாஞ்சென்று புகல்பவையெ லாங்கொண்டு
புரிபவை யெலாம் புரிந்துன்
புகழுவையெ லாம்புகழ்ந் துறுமவையெ லாமுறும்
போதவை யெலா மருளுவாய்
நிற்பவையெ லாநிற்ப அசைபவையெ லாமசைய
நிறைவவை யெலாஞ்செய் நிலையே
நினைபவையெ லாநெகிழ நெறியவையெ லாமோங்கும்
நித்தியா நந்த வடிவே
அற்புடைய வடியர்புகழ் தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழு மணியே
அகிலாண்ட முஞ்சரா சரமுமீன் றருள்பரசி
வாநந்த வல்லி யுமையே, 2

பொய்யாத மொழியுமயல் செய்யாத செயலும்வீண்
போகாத நாளும் விடயம்
புரியாத மனமுமுட் பிரியாத சாந்தமும்
பூந்தி தளராத நிலையும்

எய்யாத வாழ்வும்வே றெண்ணாத நிறைவுநினை
என்றுமற வாத நெறியும்
இறவாத தகவுமேற் பிறவாத கதியுமிவ்
வேழையேற் கருள்செய் கண்டாய்
கொய்யாது குவியாது குமையாது மணம்வீசு
கோமளத் தெய்வ மலரே
கோவாத முத்தமே குறையாத மதியமே
கோடாத மணிவி ளக்கே
ஐயாநங் கொண்ட தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழு மணியே
அகிலாண்ட முஞ்சரா சரமுமீன் றருள்பரசி
வாநந்த வல்லி யுமையே. 3

பவமான வெழுகடல் கடந்தமேற் கதியான
பதிநிலை யணைந்து வாழப்
பகலான சகலமுட னிரவான கேவலப்
பகையுந் தடாத படியோர்
தவமான கலனினருண் மீகாம னுலலது
தமியே னடத்த வருமோ
தானு நடக்குமோ வென்செய்கே னின்றிருச்
சரணமே சரண மருள்வாய்
உவமாந மற்றபர சிவமான சுத்தவெளி
உறவான முத்த ருறவே
உருவான வருவான வொருவான ஞானமே
உயிரான வொளியி னுணர்வே

அவமாற நீக்கியருள் தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழு மணியே
அகிலாண்ட முஞ்சரா சரமுமீன் றருள்பரசி
வாநந்த வல்லி யுமையே. 4

வெவ்வினைக் கீடான காயமிது மாயமென
வேதமுத லாகம மெலாம்
மிகுபறைய றைந்துமிது வெயின்மஞ்ச ணிறமெனும்
விவேகர்சொற் கேட்ட றிந்துங்
கவ்வைபெறு கடலுலகில் வைரமலை யொத்தவர்
கணத்திடை யிறத்தல் பலகாற்
கண்ணுறக் கண்டுமிப் புலையுடலின் மாநமோர்
கடுவளவும் விடுவ தறியேன்
எவ்வமுறு சிறியனே னேழைமதி யென்னமதி
இன்னமதி யென்றுணர் கிலேன்
இந்தமதி கொண்டுநா னெந்தவகை யழியாத
இன்பநிலை கண்டு மகிழ்வேன்
அவ்வியம கற்றியருள் தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழு மணியே
அகிலாண்ட முஞ்சரா சரமுமீன் றருள்பரசி
வாநந்த வல்லி யுமையே. 5

ஒளிமருவு முனதுதிரு வருளனுத் துணையேனும்
உற்றிடிற் சிறு துரும்பும்
உலகம் படைத்தமுதன் முத்தொழிலி யற்றுமென
உயர்மறை களோர நந்தந்

தெளிவுறமு முக்கவது கேட்டுநின் றிருவடித்
        தியாநமில் லாம லவமே
    சிறுதெய்வ நெறிசெல்லு மாகிடப் பேய்கள்பாற்
        சேராமை யெற்க ருளுவாய்
களிமருவு மிமயவரை யரையன்மக ளெனவருங்
        கருணைதரு கலப மயிலே
    கருதும்மடி யவரிதய கமலமலர் மிசையருட்
        கலைகிளர வள ரன்னமே
அளிநறைகொ ளிதழிவனை தில்லையம் பதிமருவும்
        அண்ணலார் மகிழு மணியே
    அகிலாண்ட முஞ்சரா சரமுமீன் றருள்பரசி
        வாநந்த வல்லி யுமையே. 6

கலைமகளார் திருப்பதிகம்

தவளமலர்க் கமலமிசை விற்றிருக்கு
    மம்மனையைச் சாந்தம் பூத்த
குவளைமலர்க் கண்ணுளைப் பெண்ணுளும்
    பெண்ணமுதைக் கோதி லாத
பவளவிதழ்ப் பசுங்கொடியை நான்முகனுர்
    நாவோங்கும் பாவை தன்னைக்
கவளமத கயக்கொம்பின் முலையாளைக்
    கலைமாதைக் கருது வோமே. 1

சங்கம்வளர்ந் திடவளர்ந்த தமிழ்க்கொடியைச்
    சரச்சுவதி தன்னை யன்பர்
துங்கமுறக் கலைபயிற்றி யுணர்வளிக்குங்
    கலைஞானத் தோகை தன்னைத்

திங்கணுதற் றிருவையருட் குருவைமல
ரோங்கியபெண் டெய்வந் தன்னைத்
தங்கமலை முலையாளைக் கலையாளைத்
தொழுதுபுகழ் சாற்று கிற்பாம். 2

கலைபயின்ற வுளத்தினிக்குங் கரும்பினைமுக்
கனியையருட் கடலை யோங்கும்
நிலைபயின்ற முனிவரருந் தொழுதேத்த
நான்முகனார் நீண்ட நாவிற்
றலைபயின்ற மறைபயின்று மூவுலகுங்
காக்கின்ற தாயை வாகைச்
சிலைபயின்ற நுதலாளைக் கலைவாணி
யம்மையைநாஞ் சிந்திப் போமே. 3

வேட்கைக் கொத்து

விண்படைத்த புகழ்த்தில்லை யம்பலத்தா னெவர்க்கும்
மேலானு னன்பருள மேவுநட ராஜன்
பண்படைத்த வெனையறியா விளம்பருவந் தனிலே
பரிந்துவந்து மாலையிட்டான் பார்த்தறியான் மீட்டும்
பெண்படைத்த பெண்களெலா மவ்மதித்தே வலது
பேசுகின்றார் கூசுகின்றேன் பிச்சியென லானேன்
கண்படைத்துங் குழியில்விழக் கணக்குமுண்டோ அவன்றன்
கணக்கறிந்தும் விடுவேனோ கண்டாயென் றோழி.

சித்தமணி யம்பலத்தா னென்பிராண நாதன்
சிவபெருமா னெம்பெருமான் செல்வநட ராஜன்
வாய்த்தவென்னை யறியாத விளம்பருவந் தனிலே
மகிழ்ந்துவந்து மாலையிட்டார் மறித்துமுகம் பாரார்

ஆய்ந்தகலை கற்றுணர்ந்த வணங்கனையார் தமக்குள்
ஆர்செய்த போதனையோ வானுலு மிதுகேள்
காய்த்தமரம் வளையாத கணக்குமுண்டோ அவன்றன்
கணக்கறிந்தும் விடுவேனோ கண்டாயென் றோழி.

என்னுயிரிற் கலந்துகலந் தினிக்கின்ற பெருமான்
என்னிறைவன் பொதுவினட மியற்றுநட ராஜன்
தன்னையறி யாப்பருவத் தென்னைமணம் புரிந்தான்
தனையறிந்த பருவத்தே யெனையறிய விரும்பான்
பின்னையன்றி முன்னுமொரு பிழைபுரிந்தே னில்லை
பெண்பரிதா பங்காணல் பெருந்தகைக்கு மழகோ
கன்னலென்றுற் கைக்கின்ற கணக்குமுண்டோ அவன்றன்
கணக்கறிந்தும் விடுவேனோ கண்டாயென் றோழி.

சின்மயமாம் பொதுவினிலே தன்மயமாய் நின்று
திருநடஞ்செய் பெருங்கருணைச் செல்வநட ராஜன்
என்மயநா னறியாத விளம்பருவந் தனிலே
என்னைமணம் புரிந்தனனி தெல்லாரு மறிவார்
இன்மயமில் லாதவர்போ லின்றுமணந் தருளான்
இறையளவும் பிழைபுரிந்தே னில்லையவ னிதயங்
கன்மயமோ வன்றுசுவைக் கனிமயமே யென்னுங்
கணக்கறிந்தும் விடுவேனோ கண்டாயென் றோழி.

ஊன்மறந்த வுயிரகத்தே யொளிநிறைந்த வொருவன்
உலகமெலா முடையவனென் னுடையநட ராஜன்
பான்மறந்த சிறியவிளம் பருவமதின் மாலைப்
பரிந்தணிந்தான் றெரிந்ததனிப் பருவமிதிற் பரியான்

தான்மறந்தா னெனினுமிங்கு நான்மறக்க மாட்டேன்
தவத்தேறி யவத்திழியச் சம்மதமும் வருமோ
கோன்மறந்த குடியேபோன் மிடியேனு றவன்றன்
குணமறிந்தும் விடுவேனோ கூறுயென் றோழி. 5

தனித்தபர நாதமுடித் தலத்தின்மிசைத் தலத்தே
தலைவரெலாம் வணங்கநின்ற தலைவனட ராஜன்
இனித்தசுக மறிந்துகொளா விளம்பருவந் தனிலே
என்புருவ நடுவிருந்தான் பின்புகண்டே னில்லை
அனித்தடிலா விச்சரிதம் யார்க்குரைப்பே னந்தோ
அவனறிவா னனறிவே னயலறிவா ருளரோ
துனித்தநிலை விடுத்தொருகாற் சுத்தநிலை யதனிற்
சுகங்கண்டும் விடுவேனோ சொல்லாயென் றோழி. 6

திருவருள் விலாசம்

திருநெறிமெய்த் தமிழ்மறையாந்
திருக்கடைக்காப் பதனுற்
றிருவுளங்காட் டியநாளிற்
றெரிந்திலனிச் சிறியேன்
பெருநெறியென் னுளத்திருந்து
காட்டியநா ளறிந்தேன்
பிழைபடாத் தெய்வமறை
யிதுவெனப்பின் புணர்ந்தேன்
ஒருநெறியி லெனதுகரத்
துவந்தளித்த நாளில்
உணராத வுளவையெலா
மொருங்குணர்ந்து தெளிந்தேன்

தெருணெறிதந் தருளுமறைச்
சிலம்பணிந்த பதுத்தாள்
சிவகாம வல்லிமகிழ்
திருநடத்தெள் ளமுதே, 1

அறநிலை விளக்கம்

மருவாணைப் பெண்ணாக்கி ஒருகணத்திற்
கண்விழித்து வயங்கு மப்பெண்
உருவாணை யுருவாக்கி இறந்தவரை
யெழுப்புகின்ற வுருவ னேனும்
கருவாணை யுறஇரங்கா துயிருடம்பைக்
கடிந்துண்ணுங் கருத்த னேல்எங்
குருவாணை யெமதுசிவக் கொழுந்தாணை
ஞானியெனக் கூறொ ணாதே. 1

அருள்நிலை விளக்கம்

மெய்விளக்கே விளக்கல்லால் வேறுவிளக்
கில்லையென்றார் மேலோர் நானும்
பொய்விளக்கே விளக்கெனவுட் பொங்கிவழி
கின்றேனேர் புதுமை யன்றே
செய்விளக்கும் புகழுடைய சென்னநகர்
நண்பர்களே செப்பக் கேளீர்
நெய்விளக்கே போன்றொருதண் ணீர்விளக்கு
மெரிந்தது சந்நிதியின் முன்னே. 1

பொதுத்தனித் திருவெண்பா

பகுதி தகுதி விகுதியெனும் பாட்டில்
இகலி லிடையை யிரட்டித் — தகவின்
அருச்சித்தான் முன்னு மதுகடையாங் கண்டூர்
திருச்சிற் சபையானைத் தேர்ந்து. 1

தாதாதா தாதாதா தாக்குறைக்கென் செய்குதும்யாந்
தாதாதா வென்றுலகிற் றூனலைந்தோம் — போதாதா
நந்தா மணியே நமச்சிவாயப் பொருளே
யெந்தா யெனப்புகழ வே. 2

தனித்திரு விருத்தம்

கஞ்சமலர்த் தவிசிருந்த நான்முகனு
நெடுமாலுங் கருதிப் போற்ற
அஞ்சநடை யம்மைக்கண்டு களிக்கப்பொன்
னம்பலத்தி லாடுகின்ற
எஞ்சலிலாப் பரம்பொருளே யென்குருவே
யேழையினே னிடத்து நீயும்
வஞ்சநினைத் தனையாயி லென்செய்வே
னென்செய்வேன் மதியி லேனே. 1

சேணுடர் முனிவருயர் திசைமுகன்மா
லுருத்திரனத் திரளோர் சற்றுங்
காணுத காட்சியைநான் கண்டேன்சிற்
றம்பதத்தின் கண்ணே பன்னுள்

ஆளுகப் பிறந்தடியே னருந்தவமென்
புரிந்தேனோ வறிகிலேன்முன்
பேறாத பிறப்பெல்லாம் பிறப்பலவிப்
பிறப்பேயென் பிறப்பா மந்தோ. 2

இன்பப் புகழ்ச்சி

மாடொன் றுடையா ருணவின்றி
மண்ணுள் டதுகாண் மலரோன்றன்
ஓடொன் றுடையா ரொற்றிவைத்தா
ரூரை மகிழ்வோ டுவந்தாலங்
காடொன் றுடையார் கண்டமட்டுங்
கறுத்தார் பூத கணத்தோடும்
ஈடொன் றுடையார் மகளேநீ
யேதுக் கவரை விழைந்தனையே. 1

பித்த ரெனும்பேர் பிறங்கநின்றார்
பேயோ டாடிப் பவுரிகொண்டார்
பத்தர் தமக்குப் பணிசெய்வார்
பணியே பணியாப் பரிவுற்றார்
சித்தர் திருவா ழொற்றியினார்
தியாக ரென்றுன் கலைகவர்ந்த
எத்த ரன்றோ மகளேநீ யேதுக்
கவரை விழைந்தனையே, 2

மாறித் திரிவார் மனமடையார்
வணங்கு மடியார் மனந்தோறும்
வீறித் திரிவார் வெறுவெளியின்
மேவா நிற்பார் விறகுவிலை

கூறித் திரிவார் குதிரையின்மேற்
கொள்வார் பசுவிற் கோல்வளையோ
டேறித் திரிவார் மகளேநீ யேதுக்
கவரை விழைந்தனையே. 3

புனராவிரகு பொருந்துறு வேட்கையின் இரங்கல்

எட்டிக் கனியு மாங்கனிபோ லினிக்க
வுரைக்கு மின்சொலினர்
தட்டிற் பொருந்தா ரொற்றியில்வாழ்
தலைவ ரின்னுஞ் சார்ந்திலரே
மட்டிற் பொலியு மலர்க்கணைசெல்
வழியே வழிசெல் வழியன்றோ
தெட்டிற் பொலியும் விழியாய்நான்
செய்வ தொன்றுந் தெரிந்திலனே. 1

காலை மலர்ந்த கமலம்போற் கவின்செய்
முகத்தார் கண்ணுதலார்
சோலை மலர்ந்த வொற்றியினர்
சோகந் தீர்க்க வந்திலரே
மாலை மலர்ந்த மையலனோய் வசந்த
மதனல் வளர்ந்ததையோ
சேலை விழியா யென்னடிநான்
செய்வ தொன்றுந் தெரிந்திலனே. 2

திருக்கோலச் சிறப்பு

அள்ளிக் கொடுக்குங் கருணையினு
 ரணிசே ரொற்றி யாலயத்தார்
வள்ளிக் குவந்தோன் றனையின்ற
 வள்ளல் பவனி வரக்கண்டேன்
துள்ளிக் குதித்தென் மனமவரைச்
 சூழ்ந்த தின்னும் வந்ததிலை
எள்ளிக் கணியா வவரழகை
 யென்னென் றுரைப்ப தேந்திழையே. 1

சொல்லுண் ணிறைந்த பொருளானுர்
 தூய்ய ருளத்தே துன்னிநின்ருர்
மல்லல் வயற்சூழ் திருவொற்றி
 வாணர் பவனி வரக்கண்டேன்
கல்லு மரமு மானந்தக் கண்ணீர்
 கொண்டு கண்டதெனில்
எல்லை யில்லா வவரழகை யென்னென்
 றுரைப்ப தேந்திழையே. 2

நீர்க்கு மதிக்கு நிலையாக நீண்ட
 சடையார் நின்றுநரு
வார்க்கும் பொழில்சூழ் திருவொற்றி
 வாணர் பவனி வரக்கண்டேன்
பார்க்கு வரிக்கும் பங்கயற்கும் பன்மா
 தவர்க்கும் பண்ணவர்க்கும்
யார்க்கு மடங்கா வவரழகை யென்னென்
 றுரைப்ப தேந்திழையே. 3

காதற்சிறப்புக் கருவாமாண்பு

என்கண் ணனையார் மலைமகளை
 யிச்சித் தணைந்தா ரானாலும்
வன்கண் ணடையார் திக்கண்ணான்
 மதனை யெரித்தா ரானாலும்
புன்கண் ணறுப்பார் புன்னகையாற்
 புரத்தை யழித்தா ரானாலுங்
கன்னன் மொழியாய் நானவர்மேற்
 காத லொழியேன் கனவினுமே. 1

விமலை யிடத்தா ரின்பதுன்பம்
 வேண்டா நலத்தா ரானாலும்
அமல முடையார் திவண்ண
 ராமென் றுரைப்பா யானாலும்
நமல மறுப்பார் பித்தரெனு
 நாம முடையா ரானாலுங்
கமலை யனையாய் நானவர்மேற்
 காத லொழியேன் கனவினுமே. 2

நான்காவது திருமுறை

அன்பு மாலை

அற்புதப்பொன் னம்பலத்தே யாடுகின்ற வரசே
 ஆரமுதே யடியேன்ற னன்பேயென் னறிவே
கற்புதவு பெருங்கருணைக் கடலேயென் கண்ணே
 கண்ணுதலே யாநந்தக் களிப்பேமெய்க் கதியே

வெற்புத்தவு பசுங்கொடியை மருவுபெருந் தருவே
வேதவா கமமுடியின் விளங்குமொளி விளக்கே
பொற்புறவே இவ்வுலகிற் பொருந்துசித்த னேன்
பொருத்தமுநின் றிருவருளின் பொருத்தமது தானே.

நிறையணிந்த சிவகாமி நேயநிறை யொளியே
நித்தபரி பூரணமாஞ் சுத்தசிவ வெளியே
கறையணிந்த களத்தரசே கண்ணுடைய கரும்பே
கற்கண்டே கனியேயென் கண்ணே கண் மணியே
பிறையணிந்த முடிமலையே பெருங்கருணைக் கடலே
பெரியவரெல் லாம்வணங்கும் பெரியபரம் பொருளே
குறையணிந்து திரிகின்றேன் குறைகளெலாந் தவிர்த்தே
குற்றமெலாங் குணமாகக் கொள்வதுநின் குணமே.

துப்பாடு திருமேனிச் சோதிமணிச் சுடரே
துரியவெளிக் குள்ளிருந்த சுத்தசிவ வெளியே
அப்பாடு சடைமுடியெம் மானந்த மலையே
அருட்கடலே குருவேயென் னுண்டவனே யரசே
இப்பாடு படவெனக்கு முடியாது துரையே
இரங்கியருள் செயல்வேண்டு மிதுதருணங் கண்டாய்
தப்பாடு வேனெனினு மென்னைவிடத் துணியேல்
தனிமன்றுள் நடம்புரியுந் தாண்மலரெந் தாயே. 3

அந்தோவி தெதிசயமீ தெதிசயமென் புகல்வேன்
அறிவறியாச் சிறியேனை யறிவறியச் செய்தே
இந்தோங்கு சடைமணிநின் னடிமுடியுங் காட்டி
இதுகாட்டி யதுகாட்டி யென்னிலையுங் காட்டிச்

சந்தோட சித்தர்கடந் தனிச்சூதுங் காட்டிச்
சாகாத நிலைகாட்டிச் சகசநிலை காட்டி
வந்தோடு நிகர்மனம்போய்க் கரைந்த விடங்காட்டி
மகிழ்வித்தாய் நின்னருளின் வண்மையெவர்க் குளதே. 4

அன்பருளக் கோயிலிலே யமர்ந்தருளும் பதியே
அம்பலத்தி லாடுகின்ற வானந்த நிதியே
வன்பருளத் தேமறைந்து வழங்குமொளி மணியே
மறைமுடியா கமமுடியின் வயங்குநிறை மதியே
என்பருவங் குறியாம லென்னைவலிந் தாட்கொண்
டின்பநிலை தனையளித்த வென்னறிவுக் கறிவே
முன்பருவம் பின்பருவங் கண்டருளிச் செய்யு
முறைமைநின தருணெறிக்கு மொழிதலறிந் திலனே.

பாடும்வகை யனுத்துணையும் பரிந்தறியாச் சிறிய
பருவத்தே யணிந்தணிந்து பாடும்வகை புரிந்து
நாடும்வகை யுடையோர்கள் நன்குமதித் திடவே
நல்லறிவு சிறிதளித்துப் புல்லறிவு போக்கி
நீடும்வகை சன்மார்க்க சுத்தசிவ நெறியில்
நிறுத்தினையிச் சிறியேனை நின்னருளென் னென்பேன்
கூடும்வகை யுடையரெலாங் குறிப்பெதிர் பார்க்கின்றார்
குற்றமெலாங் குணமாகக் கொண்டகுணக் குன்றே. 6

ஆரணமு மாகமமு மெதுதுணிந்த ததுவே
அம்பலத்தி லாடுகின்ற வாட்டமென வெனக்குக்
காரணமுங் காரியமும் புலப்படவே தெரித்தாய்
கண்ணுதலே யிங்கிதற்குக் கைம்மாறென் றறியேன்

பூரணநின் னடித்தொண்டு புரிகின்ற சிறியேன்
போற்றிசிவ போற்றியெனப் போற்றிமகிழ் கின்றேன்
நாரணநான் முகன்முதலோர் காண்பருமந் நடத்தை
நாயடியே னிதயத்தி னவிற்றியருள் வாயே. 7

சத்தியமெய் யறிவின்ப வடிவாகிப் பொதுவிற்
றனிநடஞ்செய் தருளுகின்ற சற்குருவே யெனக்குப்
புத்தியொடு சித்தியுநல் லறிவுமளித் தழியாப்
புநிதநிலை தனிலிருக்கப் புரிந்தபரம் பொருளே
பத்தியறி யாச்சிறியேன் மயக்கமின்னுந் தவிர்த்துப்
பரமசுக மயமாக்கிப் படிற்றுளத்தைப் போக்கித்
தத்துவநீ நானென்னும் போதமது நீக்கித்
தனித்தசுகா தீதமுநீ தந்தருள்க மகிழ்ந்தே. 8

ஏதுமறி யாதிருளி லிருந்தசிறி யேனை
எடுத்துவிடுத் தறிவுசிறி தேய்ந்திடவும் புரிந்து
ஓதுமறை முதற்கலைக ளோதாம லுணர
உணர்விலிருந் துணர்த்தியரு ளுண்மைநிலை காட்டித்
தீதுசெறி சமயநெறி செல்லுதலைத் தவிர்த்துத்
திருவருண்மெய்ப் பொதுநெறியிற் செலுத்தியநான் மருளும்
போதுமயங் கேன்மகனே யென்றுமயக் கெல்லாம்
போக்கியெனக் குள்ளிருந்த புநிதபரம் பொருளே.

பூதநிலை முதற்பரம நாதநிலை யளவும்
போந்தவற்றி னியற்கைமுதற் புணர்ப்பெல்லாம் விளங்க
வேதநிலை யாகமத்தி னிலைகளெலாம் விளங்க
வினையேன்ற னுளத்திருந்து விளக்கியமெய் விளக்கே

போதநிலை யாயதுவுங் கடந்தவின்ப நிலையாய்ப்
பொதுவினின்மெய் யறிவின்ப நடம்புரியும் பொருளே
ஏதநிலை யாவகையென் மயக்கமின்னுந் தவிர்த்தே
எனைக்காத்தல் வேண்டுகின்ற திதுதருணங் காணே.

செவ்வண்ணத் திருமேனி கொண்டொருபாற் பசந்து
திகழ்படிக வண்ணமொடு தித்திக்குங் கனியே
இவ்வண்ண மெனமறைக்கு மெட்டாமெய்ப் பொருளே
என்னுயிரே யென்னுயிர்க்கு ளிருந்தருளும் பதியே
அவ்வண்ணப் பெருந்தகையே யம்பலத்தே நடஞ்செய்
ஆரமுதே யடியேனிங் ககமகிழ்ந்து புரிதல்
எவ்வண்ண மதுவண்ண மிசைந்தருளல் வேண்டும்
என்னுடைய நாயகனே யிதுதருணங் காணே. 11

அருட் பிரகாச மாலை

உலகமெலா முதிக்கின்ற வொளிநிலைமெய் யின்பம்
உறுகின்ற வெளிநிலையின் றுபயநிலை யாகி
இலகியநின் சேவடிகள் வருந்தியிட நடந்தே
இரவிலெளி யேனிருக்கு மிடந்தேடி யடைந்து
கலகமிலாத் தெருக்கதவங் காப்பவிழ்க்கப் புரிந்து [தாய்
களித்தெனையங் கழைத்தெனது கையிலொன்று கொடுத்
அலகிலருட் கடலாமுன் பெருமையையென் னென்பேன்
ஆனந்த வல்லிமகி ழருணடநா யகனே. 1

அன்றொருநா ளிரவிடைவந் தணிக்கதவந் திறப்பித்
தருண்மலர்ச்சே வடிவாயிற் படிப்புறத்து மகத்து
மன்றவைத்துக் கொண்டென்னை வரவழைத்து மகனே
வருந்தாதே யிங்கிதனை வாங்கிக்கொள் ளென்ன

ஒன்றுசிறி யேன்மறுப்ப மறித்தும்வலிந் தெனது
ஒருகைதனிற் கொடுத்திங்கே யுறைதியென்று மறைந்தாய்
இன்றதுதா னநுபவத்துக் கிசைந்ததுநா யடியேன்
என்னதவம் புரிந்தேனோ வினித்துயரொன் றிலனே.

துரியவெளி தனிற்பரம நாதவணை நடுவே
சுயஞ்சுடரிற் றுலங்குகின்ற துணையடிகள் வருந்தப்
பிரியமொடு நடந்தெளியே னிருக்குமிடந் தேடிப்
பெருங்கதவந் திறப்பித்துப் பேயனெனை யழைத்து
உரியபொரு ளொன்றெனது கையிலளித் திங்கே
உறைகமகிழ்ந் தெனவுரைத்த வுத்தமநின் னருளைப்
பெரியபொரு ளெவற்றினுக்கும் பெரியபொரு ளென்றே
பின்னரறிந் தேனிதற்கு முன்னரறி யேனே. 3

காணுகின்ற கண்களுக்குக் காட்டுகின்ற வொளியாய்க்
காட்டுகின்ற வொளிதனக்குக் காட்டுவிக்கு மொளியாய்ப்
பூணுகின்ற திருவடிகள் வருந்தநடந் தடியேன்
பொருந்துமிடத் தடைந்துகத வந்திறக்கப் புரிந்து
கோணுகின்ற மனத்தாலே நாணுவதேன் மகனே
குறைவறவாழ் கெனமகிழ்ந்து கொடுத்தனையொன் றெனக்கு
மாணுகின்ற நின்னருளின் பெருமையையென் னென்பேன்
மணிமன்றி லானந்த மாநடஞ்செய் யரசே. 4

பூதவெளி கரணவெளி பகுதிவெளி மாயா
போகவெளி மாமாயா யோகவெளி புகலும்
வேதவெளி யபரவிந்து வெளியபர நாத
வெளியேக வெளிபரம வெளிஞான வெளிமா

நாதவெளி சுத்தவெறு வெளிவெட்ட வெளியா
நவில்கின்ற வெளிகளெலா நடிக்குமடி வருந்த
ஏதவெளி யேன்பொருட்டா நடந்தென்பா லடைந்தே
என்கையிலொன் றளித்தனைநின் னிரக்கமெவர்க் குளதே

சௌந்தர மாலை

கரும்பனையா ளென்னிரண்டு கண்களிலே யிருந்தாள்
கற்பகப்பொன் வல்லிசிவ காமவல்லி யுடனே
விரும்புமணிப் பொதுவினிலே விளங்கியநின் வடிவை
வினையுடையே னினைக்கின்ற வேளையிலென் புகல்வேன்
இரும்பனைய மனநெகிழ்ந்து நெகிழ்ந்துருகி யொருபேர்
இன்பமய மாகுமெனி லன்பர்கண்ட காலம்
அரும்பிமலர்ந் திட்டசிவா நந்தவநு பவத்தை
யாரறிவார் நீயறிவா யம்பலத்தெம் மரசே. 1

அதிசய மாலை

அத்தோவி தகிசயமீ தகிசயமென் புகல்வேன்
அந்தணரெல் லாருமறை மந்தணமே புகன்று
ஒத்தோல மிடவுமவர்க் கொருசிறிது மருளான்
ஓதியனையேன் விதியறியே னெருங்கேன்வன் குரங்கேன்
இத்தோட மிகவுடையேன் கடைநாய்க்குங் கடையேன்
எனைக்கருதி யானிருக்கு மிடந்தேடி நடந்து
சத்தோடே முறவெனக்குஞ் சித்தியொன்று கொடுத்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே. 1

ஐயோவி வதிசயமி தநிசயமென் புகல்வேன்
அருவினைக ளணுகாம லறநெறியே நடந்து
மெய்யோது மறிஞரெலாம் விரும்பியிருந் திடவும்
வெய்யவினைக் கடல்குளித்து விழற்கிறைத்துக் களித்துப்
பொய்யோதிப் புலைபெருக்கி நிலைசுருக்கி யுழலும்
புரைமனத்தே னெனைக்கருதிப் புகுந்தருளிக் கருணைச்
சையோக முறவெனக்கும் வலிந்தொன்று கொடுத்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே. 2

அபராத மன்னிப்பு மாலை

செய்வகைநன் கறியாதே திருவருளோ டுடிச்
சிலபுகன்றே னறிவறியாச் சிறியரினுஞ் சிறியேன்
பொய்வகையேன் புகன்றபிழை பொருத்தருளல் வேண்டும்
புண்ணியனே மதியணிந்த புரிசடையாய் விடையாய்
மெய்வகையோர் விழித்திருப்ப விரும்பியெனை யன்றே
மிகவலிந்தாட் கொண்டருளி வினைதவிர்த்த விமலா
ஐவகைய கடவுளரு மந்தணரும் பரவ
ஆனந்தத் திருநடஞ்செய் யம்பலத்தெம் மரசே. 1

ஒல்லும்வகை யறியாதே யுன்னருளோ டுடி
ஊறுபுகன் றேன்றுயர மாறும்வகை யுணரேன்
புல்லியனேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்
பூதியணிந் தொளிர்கின்ற பொன்மேனிப் பெருமான்
சொல்லியலும் பொருளியலுங் கடந்தபர நாதத்
துரியவெளிப் பொருளான பெரியநிலைப் பதியே
மெல்லியநற் சிவகாம வல்லிகண்டு மகிழ
விரியுமறை யேத்தநடம் புரியுமரு ளிறையே. 2

ஆளுடைய பிள்ளையார் அருள் மாலை

உலகிய லுணர்வோ ரறுத்துணை யேனும்
உற்றிலாச் சிறியவோர் பருவத்
திலகிய வெனக்குள் ளிருந்தரு ணெறியில்
ஏற்றவுந் தரமிலா மையினுன்
விலகுறுங் காலத் தடிக்கடி யேற
விடுத்துப்பின் விலகுறு தளித்தாய்
திலகநற் காழி ஞானசம் பந்தத்
தெள்ளமு தாஞ்சிவ குருவே. 1

சீரார் சண்பைக் கவுணியர்தந்
தெய்வ மரபிற் றிகழ்விளக்கே
தெவிட்டா துளத்திற் றித்திக்குந்
தேனே யழியாச் செல்வமே
காரார் மிடற்றுப் பவளமலைக்
கண்ணின் முளைத்த கற்பகமே
கரும்பே கனியே யென்னிரண்டு
கண்ணே கண்ணிற் கருமணியே
ஏரார் பருவ மூன்றிலுமை யினிய
முலைப்பா லெடுத்தூட்டும்
இன்பக் குதலை மொழிக்குருந்தே
யென்னு ருயிருக் கொருதுணையே
பேரார் ஞான சம்பந்தப் பெருமா
னேநின் திருப்புகழைப்
பேசு கின்றோர் மேன்மேலும்
பெருஞ்செல் வத்திற் பிறங்குவரே. 2

ஆளுடைய அரசுகள் அருள் மாலை

தேவரெலாந் தொழுந்தலைமைத் தேவர் பாதத்
திருமலரை முடிக்கணிந்து திகழ்ந்து நின்ற
நாவரசே நான்முகனும் விரும்பு ஞாந
நாயகனே நல்லவர்க்கு நண்ப னேயெம்
பாவமெலா மகற்றியருட் பான்மை நல்கும்
பண்புடைய பெருமானே பணிந்து நின்பான்
மேவவிருப் புறுமடியர்க் கன்பு செய்ய
வேண்டினே னவ்வகைநீ விதித்தி டாயே. 1

ஆளுடைய நம்பிகள் அருள் மாலை

இலைக்குளநீ ரழைத்ததனி
விடங்கருற வழைத்ததன்வாய்த்
தலைக்குதலை மதலையுயிர்
தழைப்பவழைத் தருளியநின்
கலைக்கும்வட கலையின்முதற்
கலைக்குமுறு கணக்குயர்பொன்
மலைக்குமணு நிலைக்குமுரு !
வன்றொண்டப் பெருந்தகையே. 1

தேன்படிக்கு மமுதாமுன்
திருப்பாட்டைத் திநந்தோறும்
நான்படிக்கும் போதென்னை
நானறியே னுவொன்றே

ஊன்படிக்கு முளம்படிக்கு
முயிர்படிக்கு முயிர்க்குயிருந்
தான்படிக்கு மநுபவங்காண்
தனிக்கருணைப் பெருந்தகையே. 2

பேரூரும் பரவைமனப் பிணக்கறவெம் பெருமானை
ஊரூரும் பலபுகல வோரிரவில் தூதனெனத்
தேரூருந் திருவாரூர்த் தெருவுதொறும் நடப்பித்தாய்
ஆரூர ! நின்பெருமை யயன்மாலு மளப்பரிதே. 3

ஆளுடைய அடிகள் அருள் மாலை

வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து வுயிர்கலந்து வுவட்டாம லினிப்பதுவே. 1

பெண்சுமந்த பாகப் பெருமா ளொருமாமேல்
எண்சுமந்த சேவகன்போ லெய்தியதும் வைகைநதி
மண்சுமந்து நின்றதுமோர் மாறன் பிரம்படியாற்
புண்சுமந்து கொண்டதுநின் பொருட்டன்றோ புண்ணியனே. 2

வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளு மெய்ஞ்ஞான
நாட்டமுறு மென்னிலிங்கு நானடைதல் வியப்பன்றே.

ஐந்தாவது திருமுறை

சித்திவிநாயகர் பதிகம்

உலகெலாந் தழைப்ப வருண்மத வருவி
ஒழுகுமா முகமுமைங் கரமும்
இலகுசெம் மேனிக் காட்சியு மிரண்டோ
டிரண்டென வோங்குதிண் டோளும்
திலகவா ணுதலார் சித்திபுத் திகளைச்
சேர்த்தணைத் திடுமிரு மருங்கும்
விலகுறு தெளியேன் விழைந்தனன் சித்தி
விநாயக விக்கிநேச் சுரனே. 1

நாதமுங் கடந்து நிறைந்துநின் மயமே
நானென வறிந்துநான் றானும்
பேதமுங் கடந்த மௌனராச் சியத்தைப்
பேதையேன் பிடிப்பதெந் நாளோ
ஏதமுஞ் சமய வாதமும் விடுத்தோர்
இதயமு மேழையேன் சிரமும்
வேதமுந் தாங்கும் பாதனே சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. 2

சச்சிதா னந்த வடிவநம் வடிவந்
தகுமதிட் டானமற் றிரண்டும்
பொய்ச்சிதா பாசக் கற்பனை யிவற்றைப்
போக்கியாங் கவ்வடி வாகி

அச்சிதா கார போதமு மதன்மேல்
ஆனந்த போதமும் விடுத்தல்
மெய்ச்சிதாம் வீடென் றுரைத்தனை சித்தி
விநாயக விக்கிநேச் சுரனே. 3

கானலிர் விழைந்த மானென வுலகக்
கட்டினை நட்டுமுன் றலையும்
ஈனவஞ் சகநெஞ் சகப்புலை யேனை
என்றுகொண் டருளுநா ளுளதோ
ஊனமொன் றில்லா வுத்தம ருளத்தே
ஓங்குசீர்ப் பிரணவ வொளியே
வேனவில் கரத்தோர்க் கினியவா சித்தி
விநாயக விக்கிநேச் சுரனே. 4

பெரும்பொருட் கிடனும் பிரணவ வடிவிற்
பிறங்கிய வொருதனிப் பேறே
அரும்பொரு ளாகி மறைமுடிக் கண்ணே
அமர்ந்தபே ரானந்த நிறைவே
தரும்பர போக சித்தியுஞ் சுத்த
தருமமு முத்தியுஞ் சார்ந்து
விரும்பினோர்க் களிக்கும் வள்ளலே சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. 5

கணேசத் திருவருள் மாலை

திருவுங் கல்வியுஞ் சீருஞ் சிறப்புமுன்
திருவ டிப்புகழ் பாடுந் திறமுநல்
உருவுஞ் சீலமு மூக்கமுந் தாழ்வுறு
உணர்வுந் தந்தென துள்ளத் தமர்ந்தவா

குருவுந் தெய்வமு மாகியன் பாளர்தங்
குறைத விர்க்குங் குணப்பெருங் குன்றமே
வெருவுஞ் சிந்தை விலகக் கஜானனம்
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே, 1

தஞ்ச மென்றுனைச் சார்ந்தன னெந்தைநீ
தானு மிந்தச் செகத்தவர் போலவே
வஞ்ச மெண்ணி யிருந்திடி லென்செய்வேன்
வஞ்ச மற்ற மனத்துறை யண்ணலே
பஞ்ச பாதகந் தீர்த்தனை யென்றுநின்
பாத பங்கயம் பற்றினன் பாவியேன்
விஞ்ச நல்லருள் வேண்டித் தருதியோ
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே, 2

நாவி னுனை நாடொறும் பாடுவார்
நாடு வார்தமை நண்ணிப் புகழவும்
ஒவி லாதுனைப் பாடவுந் துன்பெலாம்
ஓட வும்மகி ழோங்கவுஞ் செய்குவாய்
காவி நேர்களத் தான்மகி ழைங்கரக்
கடவு ளேநற் கருங்குழி யென்னுமூர்
மேவி யன்பர்க் கருள்கண நாதனே
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே 3

திருத்தணிகை பதிகம்

சீர்கொண்ட தெய்வ வதனங்க
ளாறுந் திகழ்கடப்பந்
தார்கொண்ட பன்னிரு தோள்களுந்
தாமரைத் தாள்களுமோர்

கூர்கொண்ட வேலு மயிலுநற்
கோழிக் கொடியுமருட்
கார்கொண்ட வண்மைத் தணிகா
சலமுமென் கண்ணுற்றதே. 1

வேல்கொண்ட கையும்
விறல்கொண்ட தோளும் விளங்குமயின்
மேல்கொண்ட வீறு மலர்முக
மாறும் விரைக்கமலக்
கால்கொண்ட வீரக் கழலுங்கண்
டாலன்றிக் காமனெய்யுங்
கோல்கொண்ட வன்மை யறுமோ
தணிகைக் குருபரனே. 2

வானோர் குடிகளை வாழ்வித்த
தெய்வ மணிச்சுடரே
நானோ ரெளியனென் றன்பறுத்
தாளென நண்ணிநின்றேன்
ஏனோநின் னெஞ்ச மிரங்காத
வண்ண மிருங்கணிப்பூந்
தேனோ டருவி பயிலுந்
தணிகைச் சிவகுருவே. 3

கையாத துன்பக் கடன்மூழ்கி
நெஞ்சங் கலங்கியென்றன்
ஐயாநின் பொன்னடிக் கோலமிட்
டேனென்னை யாண்டுகொளாய்

மையார் தடங்கண் மலைமகள்
கண்டு மகிழ்செல்வமே
செய்யார் தணிகை மலையர
சேயயிற் செங்கையனே. 4

செழுஞ்சுடர் மாலை

ஊனே யுடையே பொருளேயென்
றுருகி மனது தடுமாறி
வினே துயரத் தழுந்துகின்றேன்
வேறோர் துணைநின் னடியன்றிக்
கானே னமுதே பெருங்கருணைக்
கடலே கனியே கரும்பேநற்
சேனோர் தணிகை மலைமருந்தே
தேனே ஞானச் செழுஞ்சுடரே. 1

கல்லா நாயே னெனினுமெனைக்
காக்குந் தாய்நீ யென்றுலகம்
எல்லா மறியு மாதலினு லெந்தா
யருளா திருத்தியெனிற்
பொல்லா பழிவந் தடையுமுனக்
கரசே யினியான் புகல்வதென்னே
செல்லார் பொழில்சூழ் திருத்தணிகைத்
தேவே ஞானச் செழுஞ்சுடரே. 2

குறையிரந்த பத்து

சீர்பூத்த வருட்கடலே கரும்பே தேனே
செம்பாகே யெனதுகுல தெய்வ மேநற்
கூர்பூத்த வேன்மலர்க்கை யரசே சாந்த
குணக்குன்றே தணிகைமலைக் கோவே ஞானப்
பேர்பூத்த நின்புகழைக் கருதி யேழை
பிழைக்கவருள் செய்வாயோ பிழையை நோக்கிப்
பார்பூத்த பவத்திலுற விடினென் செய்கேன்
பாவியே னந்தோவன் பயந்தி ரேனே. 1

தீராத துயர்க்கடலி லழுந்தி நாளுந்
தியங்கியழு தேங்குமிந்தச் சேய்க்கு நீகண்
பாராத செயலென்னே யெந்தா யெந்தாய்
பாவியென விட்டனையோ பன்னு ளாக
ஏராய வருள்தருவா யென்றே யேமாந்
திருந்தேனே யென்செய்கேன் யாரு மில்லேன்
சீராருந் தணிகைவரை யமுதே யாதி
தெய்வமே நின்கருத்தைத் தெளிந்தி லேனே. 2

உண்டாய வுலகுயிர்கள் தம்மைக் காக்க
ஒளித்திருந்தவ் வுயிர்வினைக ளொருங்கே நாளுங்
கண்டாயே யிவ்வேழை கலங்குந் தன்மை
காணுயோ பன்னிரண்டு கண்கள் கொண்டோய்
தண்டாத நின்னருட்குத் தகுமோ விட்டால்
தருமமோ தணிகைவரைத் தலத்தின் வாழ்வே
விண்டாதி தேவர்தொழு முதலே முத்தி
வித்தேசொற் பதங்கடந்த வேற்கை யானே. 3

ஜீவசாக்ஷி மாலை

பண்ணேறு மொழியடியர் பரவி வாழ்த்தும்
　　பாதமல ரழகினையிப் பாவி பார்க்கிற்
கண்ணேறு படுமென்றோ கனவி லேனுங்
　　காட்டென்றாற் காட்டுகிலாய் கருணை யிதோ
விண்ணேறு மரிமுதலோர்க் கரிய ஞான
　　விளக்கேயென் கண்ணேமெய் வீட்டின் வித்தே
தண்ணேறு பொழிற்றணிகை மணியே ஜீவ
　　சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 1

பண்டுமன துவந்துகுணஞ் சிறிது மில்லாப்
　　பாவியேன் றனையாண்டாய் பரிவா லின்று
கொண்டுகுலம் பேசுதல்போ லெளியேன் குற்றங்
　　குறித்துவிடி லென்செய்கேன் கொடிய னேனைக்
கண்டுதிருத் தொண்டர்நகை செய்வா ரெந்தாய்
　　கைவிடே லுன்னுணை காண்முக் காலும்
தண்டுளவன் புகழ்தணிகை மணியே ஜீவ
　　சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 2

பன்னரும்வன் றுயரால்நெஞ் சழிந்து நாளும்
　　பதைத்துருகி நின்னருட்பால் பருகக் கிட்டா
துன்னரும்பொய் வாழ்க்கையெனுங் கானத் திந்த
　　ஊர்நகைக்கப் பாவியழ லுணர்ந்தி லாயோ
என்னருமை யப்பாவென் னையா வென்றன்
　　இன்னுயிர்க்குத் தலைவாவிங் கெவர்க்குந் தேவா
தன்னியற்சீர் வளர்தணிகை மணியே ஜீவ
　　சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 3

கல்லாத வஞ்சகர்பாற் சென்று வீணாள்
கழித்துநிற்குங் கடையனிவன் கருணை யில்லாப்
பொல்லாத பாவியென வெண்ணி யென்னைப்
புறம்போக்கி லையாயான் புரிவ தென்னே
எல்லாஞ்செய் வல்லவனே தேவர் யார்க்கும்
இறைவனே மயிலேறு மெம்பி ரானே
சல்லாப வளத் தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 4

உள்ளமனக் குரங்காட்டித் திரியு மென்றன்
உளவறிந்தோ வையாநீ யுன்னைப் போற்றார்
கள்ளமனக் குரங்குகளை யாட்ட வைத்தாய்
கடையனேன் பொறுத்துமுடி கில்லேன் கண்டாய்
தெள்ளமுதப் பெருங்கடலே தேனே ஞானத்
தெளிவேயென் றெய்வமே தேவர் கோவே
தள்ளரிய புகழ்த்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 5

மாயைநெறி யாமுலக வாழ்க்கை தன்னில்
வருந்திநினை யழைத்தலறி மாழ்கா நின்றேன்
தாயையறி யாதுவருஞ் சூலுண் டோவென்
சாமிநீ யறியாயோ தயையில் லாயோ
பேயைநிகர் பாவியென நினைந்து விட்டாற்
பேதையே னென்செய்கேன் பெருஞ்சீர்க் குன்றே
சாயைகடற் செறிதணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 6

முந்தைவினை யால்நினது வழியிற் செல்லா
 மூடனேன் றனையன்பர் முனிந்து பெற்ற
தந்தைவழி நில்லாத பாவி யென்றே
 தள்ளிவிடிற் றலைசாய்த்துத் தயங்கு வேனே
எந்தைநின தருள்சற்றே யளித்தால் வேறோர்
 எண்ணமிலே னேகாந்தத் திருந்து வாழ்வேன்
சந்தனவான் பொழிற்றணிகை மணியே ஜீவ
 சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 7

இரந்த விண்ணப்பம்

நாளை யேகியே வணங்குது
 மெனத்தின நாளையே கழிக்கின்றோம்
ஊளை நெஞ்சமே யென்னையோ
 வென்னையோ வுயர்திருத் தணிகேசன்
தாளை யுன்னியே வாழ்ந்தில
 முயிருடல் தணந்திடல் தனையிந்த
வேளை யென்றறி வுற்றில
 மென்செய்வோம் விளம்பரும் விடையோமே.

தேனுந் தெள்ளிய வமுதமுந்
 கைக்குநின் றிருவருட் டேனுண்டே
யானு நீயுமாய்க் கலந்துற
 வாடுநா ளெந்தநா ளறியேனே
வானும் பூமியும் வழுத்திடுந்
 தணிகைமா மலையமர்ந் திடுதேவே
கோனுந் தற்பர குருவுமாய்
 விளங்கிய குமாரசற் குணக்குன்றே. 2

குன்று பொய்யுடல் வாழ்வினை
மெய்யெனக் குறித் திவணலை கின்றேன்
இன்று நின்றிரு வருளடைந்
துய்வனோ வில்லையிவ் வுலகத்தே
என்று மிப்படிப் பிறந்திறந்
துழல்வனோ யாதுமிங் கறிகில்லேன்
நன்று நின்றிருச் சித்தமென்
பாக்கியம் நற்றணி கைபிற்றேவே. 3

வேட்கை விண்ணப்பம்

இரங்கா நின்றிங் கலைதருமிவ்
வெளியேன் கனவி னிடத்தேனும்
அரங்கா வரவி னடித்தோனு
மயனுங் காண்டற் கரிதாய
உரங்கா முறுமா மயின்மேனின்
னுருவந் தரிசித் துவப்படையும்
வரங்கா தலித்தேன் தணிகைமலை
வாழ்வே யின்று வருவாயோ. 1

பார்க்கின் றிலையே பன்னிருகண்
படைத்து மெளியேன் பாடனைத்துந்
தீர்க்கின் றிலையே யென்னையான்
செய்வேன் சிறியேன் சிமானே
போர்க்குன் றெடுசூர் புயக்குன்றும்
பொடிசெய் வேற்கைப் புண்ணியனே
சீர்க்குன் றெனுநல் வளத்தணிகைத்
தேவே மயிலூர் சேவகனே, 2

எளியே னினது சேவடியா
 மின்ப நறவை யெண்ணியெண்ணி
அளியே னெஞ்சஞ் சற்றேனு
 மன்போன் றில்லே னதுசிறிதும்
ஒளியே னெந்தா யென்னுள்ளத்
 தொளித்தே யெவையு முணர்கின்றாய்
வளியே முதலாய் நின்றருளு
 மணியே தணிகை வாழ்மன்னே. 3

ஆறெழுத்துண்மை

பெருமை நிதியே மால்விடைகொள்
 பெம்மான் வருந்திப் பெறும்பேறே
அருமை மணியே தணிகைமலை
 அமுதே யுன்றன் ஆறெழுத்தை
ஒருமை மனத்தி னுச்சரித்திங்
 குயர்ந்த திருவெண் ணீறிட்டால்
இருமை வளனு மெய்துமிட
 ரென்ப தொன்று மெய்தாதே. 1

தோன்று ஞானச் சின்மயமே
 தூய சுகமே சுயஞ்சுடரே
ஆன்றார் புகழுந் தணிகைமலை
 அரசே யுன்ற னாறெழுத்தை
ஊன்று மனத்தி னுச்சரித்திங்
 குயர்ந்த திருவெண் ணீறிட்டால்
ஈன்றாள் நிகரும் அருளடையு
 மிடுக்க ணென்றும் அடையாதே. 2

போக்குரையிடு

கற்கி லேலுன தருட்பெய ராங்குக
கந்தவென் பவைநாளும்
நிற்கி லேனுன தாகம நெறிதனி
னீசனே னுய்வேனே
சொற்கி லேசமி லடியவ ரன்பினுட்
டோய்தரு பசுந்தேனே
அற்கி லேர்தருந் தணிகையா
ரமுதமே யானந்த வருட்குன்றே. 1

பணித்திறம் வேட்டல்

பாவியேன் படுந்துயருக் கிரங்கியருள்
தணிகையிலென் பால்வா வென்று
கூவிநீயாட் கொளவோர் கனவேனுங்
காணேனே குணப்பொற் குன்றே
ஆவியே யறிவேயெ னன்பேயென்
அரசேநின் னடியைச் சற்றும்
சேவியே னெனினுமெனைக் கைவிடேல்
அன்பர்பழி செப்பு வாரே. 1

இவ்வேளை யருட்டணிகை யமர்ந்தருளுந்
தேவையென திருகண் ணுய
செவ்வேளை மனங்களிப்பச் சென்றுபுகழ்ந்
தானந்தத் தெளிதே னுண்டே
எவ்வேளை யும்பரவி யேத்தேனே
அவன்பணிக ளியற்றி டேனே
தெவ்வேளை யடர்க்கவகை தெரியாம
லுழல்தருமிச் சிறிய னேனே. 2

நெஞ்சோடு புலத்தல்

வாழும் படிநல் லருள்புரியு
மருவுந் தணிகை மலைத்தேனைச்
சூழுங் கலப மயிலரசைத்
துதியாப் பவமும் போதாமல்
வீழுங் கொடியர் தமக்கன்றி
மேவா நினைவு மேவியின்று
தாழும் படியென் றனையலைத்தாய்
சவலை மனநீ சாகாயோ. 1

நெஞ்சே யுகந்த துணையெனக்கு
நீயென் றறிந்தே நேசித்தேன்
மஞ்சேர் தணிகை மலையமுதை
வாரிக் கொளும்போ தென்னுள்ளே
நஞ்சே கலந்தா யுன்னுறவு
நன்றே யினியுன் னட்பகன்றால்
உஞ்சே னிலையேல் வன்னரகத்
துள்ளேன் கொள்ளே னென்றையுமே. 2

ஆற்றுவிரக்கம்

தணிகை மலையைச் சாரேனோ
சாமி யழகைப் பாரேனோ
பிணிகை யறையைப் பேரேனோ
பேரா வன்பு கூரேனோ
அணிசெய் யருள்நீ ராரேனோ
ஆறாத் தாகந் தீரேனோ
பணிசெய் தொழும்பிற் சேரேனோ
பார்மி திரங்கு நீரேனே. 1

செய்கொள் தணிகை நாடேனே
செவ்வேள் புகழைப் பாடேனே
கைகள் கூப்பி யாடேனே
கருணைக் கடலில் நீடேனே
மெய்கொள் புளக மூடேனே
மெய்யன் பர்க்ள்பாற் கூடேனே
பொய்கொ ளுலகோ டேனே
புவிமீ திருகான் மாடேனே. 2

ஏழைமையினிரங்கல்

தேனே யுளங்கொள் தெளிவே யகண்ட
சிதமேவி நின்ற சிவமே
கோனே கனிந்த சிவபோத ஞான
குருவே விளங்கு குகனே
தானே தனக்கு நிகராய் விளங்கு
தணிகா சலத்தெம் மரசே
நானேழை யிங்கு மனநொந்து நொந்து
நலிகின்ற செய்கை நலமோ. 1

மணியே கலாப மயிலமே லமர்ந்த
மதியே நினைச்சொன் மலரால்
அணியே னலன்பு மமையேன் மனத்தி
லடியா ரடிக்கண் மகிழ்வாய்ப்
பணியே னினைந்து பதையே னிருந்து
பருகே னுவந்த படியே
யெணியே நினைக்கி லவமாமிவ் வேழை
யெதுபற்றி யுய்வ தரசே. 2

நண்ணாத வஞ்ச ரிடநாடி நெஞ்ச
நனிநொந்து நைந்து நவையாம்
புண்ணாகி நின்ற வெளியேனை யஞ்சல்
புரியாது நம்பொ னடியை
எண்ணாத பாவி யிவனென்று தள்ளி
னென்செய்வ துய்வ தறியேன்
தண்ணார் பொழிற்கண் மதிவந் துலாவு
தணிகா சலத்தி றைவனே. 3

அவநாள் கழிக்க வறிவே னலாது
னடிபேணி நிற்க வறியேன்
தவநாடு மன்ப ரொடுசேர வந்து
தணிகா சலத்தை யடையேன்
எவனா னெனக்கு மவணீ யிருக்கு
மிடமீயி லூன்ற னடியார்
இவனா ரிவன்ற னியல்பென்ன வென்னி
லெவனென் றுரைப்பை யெனையே. 4

முதுவோர் வணங்கு தணிகா சலத்து
முதலேயிவ் வேழை முறியேன்
மதுவான் மயங்கு மளிபோன் மயங்கி
மதியாது நின்ற பிழையால்
விதுவாகி யன்ப ருளமேவு நீகை
விடிலேழை யெங்கு மெலிவேன்
இதுநீதி யல்ல வெனவுன் றனக்கு
மெவர்சொல்ல வல்ல ரரசே. 5

குறை நேர்ந்த பத்து

வான்பிறந்தார் புகழ்தணிகை மலையைக் கண்டு
வள்ளலே நின்புகழை மகிழ்ந்து கூறேன்
தேன்பிறந்த மலர்க்குழலார்க் காளா வாளா
திரிகின்றேன் புரிகின்றேன் றீமை நாளும்
ஊன்பிறந்த வுடலோம்பி யவமே வாழ்நாள்
ஒழிக்கின்றேன் பழிக்காளா யுற்றே னந்தோ
ஏன்பிறந்தே னேன்பிறந்தேன் பாவி யேன்யான்
என்குறையை யெவர்க்கெடுத்திங் கியம்பு கேனே.

பொல்லாத மங்கையர்த மயற்குள் ளாகும்
புலையமனத் தால்வாடிப் புலம்பு கின்றேன்
கல்லாத பாவியென்று கைவிட் டாயோ
கருணையுரு வாகியசெங் கரும்பே மேரு
வில்லான்றன் செல்வமே தணிகை மேவும்
மெய்ஞ்ஞான வொளியேயிவ் வினையேன் றுன்பம்
எல்லாநீ யறிவாயே யறிந்தும் வாரா
திருந்தாலென் குறையையெவர்க் கியம்பு கேனே.

புண்ணிய நீற்று மான்மியம்

மாலேந்திய குழலார்தரு மயல்போமிட ரயல்போங்
கோலேந்திய வரசாட்சியுங் கூடும்புகழ் நீடும்
மேலேந்திய வானுடர்கண் மெலியாவித மொருசெவ்
வேலேந்திய முருகாவென வெண்ணீறணிந் திடிலே. 1

தேருப்பெரு மனமானது தேறுந்துயர் மாறும்
மாருப்பிணி மாயுந்திரு மருவுங்கரு வொருவும்
வீருப்பொடு வருசூர்முடி வேருக்கிட வருமோர்
ஆருக்கரப் பொருளேயென வருள்நீறணிந் திடிலே. 2

எத்தாப் பிறவி யிழிவு

கல்லை யொத்தவென் னெஞ்சினை யுருக்கேன்
　　கடவுள் நின்னடி கண்டிட விழையேன்
அல்லை யொத்தகோ தையர்க்குளங் குழைவேன்
　　அன்பி லாரொடு மமர்ந்தவ முழல்வேன்
தில்லை யப்பனென் றுலகெடுத் தேத்துஞ்
　　சிவபிரான் றருஞ் செல்வநின் றணிகை
எல்லை யுற்றுனை யேத்திநின் றுடேன்
　　என்செய் வான்பிறந் தேனெளி யேனே. 1

பண்ணை ளாவிய மொழியினுன் மயக்கும்
　　படிற்று மங்கையர் பால்விழை வுற்றேன்
தண்ணை ளாவிய சோலைசூழ் தணிகைத்
　　தடத்த ளாவிய தருமநற் றேவே
பெண்ணை ளாவிய புடையுடைப் பெருமான்
　　பெற்ற செல்வமே யற்றவர்க் கமுதே
எண்ண ளாவிய வஞ்சக நெஞ்சோ
　　டென்செய் வான்பிறந் தேனெளி யேனே, 2

திருவருள் விலாசப்பத்து

ஆறுமுகப் பெருங்கருணைக் கடலே தெய்வ
யானைமகிழ் மணிக்குன்றே யரசே முக்கட்
பேறுமுகப் பெருஞ்சுடர்க்குட் சுடரே செவ்வேல்
பிடித்தருளும் பெருந்தகையே பிரம ஞானம்
வீறுமுகப் பெருங்குணத்தோ ரிதயத் தோங்கும்
விளக்கமே யானந்த வெள்ள மேமுன்
றேறுமுகப் பெரியவருட் குருவா யென்னைச்
சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே. 1

கண்ணிமதி புனைந்தசடைக் கனியே முக்கட்
கரும்பேயென் கண்ணேமெய்க் கருணை வாழ்வே
புண்ணியநன் னிலையுடையோ ருளத்தில் வாய்க்கும்
புத்தமுதே யானந்த போக மேசீர்
எண்ணியமெய்த் தவர்க்கெல்லா மெளிதி லீந்த
என்னரசே ஆறுமுகத் திறையாம் வித்தே
திண்ணியவென் மனமுருக்கிக் குருவா யென்னைச்
சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே. 2

கல்வியெலாங் கற்பித்தாய் நின்பால் நேயங்
காணவைத்தா யிவ்வுலகங் கான லென்றே
ஒல்லும்வகை யறிவித்தா யுள்ளே நின்றெ‌ன்
உடையானே நின்னருளு முதவு கின்றாய்
இல்லையெனப் பிறர்பாற்சென் றிரவா வண்ணம்
ஏற்றமளித் தாயிரக்க மென்னே யென்னே
செல்வவருட் குருவாகி நாயி னேனைச்
சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே. 3

எந்தைபிரா னென்னிறைவ னிருக்க விங்கே
என்னகுறை நமக்கென்றே யிறுமாப் புற்றே
மந்தவுல கினிற்பிறரை யொருகா சுக்கும்
மதியாமல் நின்னடியே மதிக்கின் றேன்யான்
இந்தவடி யேனிடத்துன் றிருவு ளந்தான்
எவ்வாறோ வறிகிலே னேழை யேனுன்
சிந்தைமகிழ்ந் தருட்குருவா யென்னை முன்னே
சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே. 4

கற்றறிந்த மெய்யுணர்ச்சி யுடையோ ருள்ளக்
கமலத்தே யோங்குபெருங் கடவு ளேநின்
பொற்றகைமா மலரடிச்சீர் வழுத்து கின்ற
புண்ணியர்தங் குழுவிலெனைப் புகுத்தி யென்றும்
உற்றவருட் சிந்தனைதந் தின்ப மேவி
உடையாயுன் னடியவனென் றோங்கும் வண்ணஞ்
சிற்றறிவை யகற்றியருட் குருவா யென்னைச்
சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே. 5

கற்பனையே யெனுமுலகச் சழக்கி லந்தோ
காலூன்றி மயங்குகின்ற கடைய னேனைச்
சொற்பனமிவ் வுலகியற்கை யென்று நெஞ்சந்
துணிவுகொளச் செய்வித்துன் றுணைப்பொற் றாளை
அற்பகலு நினைந்துகனிந் துருகி ஞான
ஆனந்த போகமுற வருளல் வேண்டுஞ்
சிற்பரசற் குருவாய்வந் தென்னை முன்னே
சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே. 6

பன்னிருகண் மலர்மலர்ந்த கடலே ஞானப்
பரஞ்சுடரே ஆறுமுகம் படைத்த கோவே
என்னிருகண் மணியேயென் தாயே யென்னை
ஈன்றுனே யென்னரசே யென்றன் வாழ்வே
மின்னிருவர் புடைவிளங்க மயின்மீ தேறி
விரும்புமடி யார்காண மேவுந் தேவே
சென்னியில்நின் னடிமலர்வைத் தென்னை முன்னே
சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே, 7

செல்வச்சீர்த்தி மாலை

காயா தளியக் கனிந்தன்பாற்
கல்லா லடிநின் றருளொழுகுங்
கனியுட் சுவையே யடியார்மனக்
கவலை யகற்றுங் கற்பகமே
ஓயா துயிர்க்கு ளொளித்தெவையு
முணர்த்தி யருளு மொன்றேயென்
உள்ளக் களிப்பே யைம்பொறியு
மொடுக்கும் பெரியோர்க் கோருறவே
தேயாக் கருணைப் பாற்கடலே
தெளியா வசுரர் போர்க்கடலே
தெய்வப் பதியே முதற்கதியே
திருச்செந் தூரிற் றிகழ்மதியே
தாயா யென்னைக் காக்கவருந்
தனியே பரம சற்குருவே
தணிகா சலமாந் தலத்தமர்ந்த
சைவ மணியே சண்முகனே. 1

மாலு மயனு முருத்திரனும்
வானத் தவரு மானிடரும்
மாவும் புள்ளு மூர்வனவு
மலையுங் கடலும் மற்றவையும்
ஆலுங் கதியுஞ் சதகோடி
யண்டப் பரப்புந் தானாக
அன்றோர் வடிவ மேருவிற்கோண்
டருளுந் தூய வற்புதமே
வேலு மயிலுங் கொண்டுருவாய்
விளையாட் டியற்றும் வித்தகமே
வேதப் பொருளே மதிச்சடைசேர்
விமலன் றனக்கோர் மெய்ப்பொருளே
சாலுஞ் சுகுணத் திருமலையே
தவத்தோர் புகழுந் தற்பரனே
தணிகா சலமாந் தலத்தமர்ந்த
சைவ மணியே சண்முகனே. 2

தெய்வமணி மாலை

திருவோங்கு புண்ணியச் செயலோங்கி யன்பருள்
திறலோங்கு செல்வ மோங்கச்
செறிவோங்க அறிவோங்கி நிறைவான இன்பந்
திகழ்ந்தோங்க அருள் கொடுத்து
மருவோங்கு செங்கமல மலரோங்கு வணமோங்க
வளர்கருணை மயமோங்கி யோர்
வரமோங்கு தெள்ளமுத வயமோங்கி ஆனந்த
வடிவாகி யோங்கி ஞான

உருவோங்கும் உணர்வினிறை யொளியோங்கி யோங்குமயில்
ஊர்ந்தோங்கி யெவ்வு யிர்க்கும்
உறவோங்கு நின்பதமென் உளமோங்கி வளமோங்க
உய்கின்ற நாளெந்த நாள்
தருவோங்கு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 1

வள்ளலுனை உள்ளபடி வாழ்த்துகின் றோர்தமை
மதித்திடுவ தன்றி மற்றை
வானவரை மதியென்னில் நானவரை யொருகனவின்
மாட்டினு மறந்து மதியேன்
கள்ளமறும் உள்ளமுறும் நின்பதம லால்வேறு
கடவுளர் பதத்தை யவரென்
கண்ணெதி ரடுத்தைய நண்ணென அளிப்பினுங்
கடுவென வெறுத்து நிற்பேன்
எள்ளளவும் இம்மொழி யிலேசுமொழி யன்றுண்மை
என்னையாண் டருள் புரிகுவாய்
என்றந்தை யேயெனது தாயேயென் இன்பமே
என்றனறி வேயென் அன்பே
தள்ளரிய சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே, 2

காமவுட் பகைவனுங் கோபவெங் கொடியனுங்
கனலோப முழுமூ டனும்
கடுமோக வீணனுங் கொடுமதமெ னுந்துட்ட
கன்கெட்ட ஆங்கா ரியும்

ஏமமறு மாச்சரிய விழலனுங் கொலையென்
றியம்புபா தகனு மாமிவ்
எழுவரும் இவர்குற்ற உறவான பேர்களும்
எனைப்பற்றி டாமல் அருள்வாய்

சேமமிகு மாமறையின் ஓமெனும் அருட்பதத்
திறனருளி மலய முனிவன்
சிந்தனையின் வந்தனையு வந்தமெய்ஞ் ஞானசிவ
தேசிக சிகா ரத்னமே

தாமமொளிர் சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 3

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமை வேண்டும்

பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண் டும்பொய்மை
பேசா திருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியா திருக்க வேண்டும்

மருவுபெண் ணாசையை மறக்கவே வேண்டுமுனை
மறவா திருக்க வேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வில்நான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே, 4

ஈயென்று நானொருவ ரிடநின்று கேளாத
இயல்புமென் னிடமொ ருவர்ஈ
திடுவென்ற போதவர்க் கிலையென்று சொல்லாமல்
இடுகின்ற திறமு மிறையாம்
நீயென்றும் எனைவிடா நிலையுநா னென்றுமுள்
நினைவிடா நெறியும் அயலார்
நிதியொன்றும் நயவாத மனமுமெய்ந் நிலையென்றும்
நெகிழாத திடமும் உலகிற்
சீயென்று பேயென்று நாயென்று பிறர்தமைத்
தீங்குசொல் லாத தெளிவும்
திரமொன்று வாய்மையுந் தூய்மையுந் தந்துநின்
திருவடிக் காளாக் குவாய்
தாயொன்று சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 5

பார்கொண்ட நடையில்வன் பசிகொண்டு வந்திரப்
பார்முகம் பார்த்தி ரங்கும்
பண்பும்நின் திருவடிக் கன்பும்நிறை ஆயுளும்
பதியும்நன் னிதியு முணர்வும்
சீர்கொண்ட நிறையுமுட் பொறையுமெய்ப் புகழுநோய்த்
தீமையொரு சற்று மணுகாத்
திறமுமெய்த் திடமுநல் இடமுநின் னடியர்புகழ்
செப்புநின் ஞேரடைவர் காண்
கூர்கொண்ட நெட்டிலைக் கதிர்வேலு மயிலுமொரு
கோழியங் கொடியும் விண்ஞேர்
கோமான்றன் மகளுமொரு மாமான்றன் மகளுமால்
கொண்டநின் கோலமற வேன்
தார்கொண்ட சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 6

வன்பெருநெ ருப்பினைப் புன்புழுப் பற்றுமோ
வானையொரு மான்தா வுமோ
வலியுள்ள புலியையோர் எலிசிறு மோபெரிய
மலையையோர் ஈச்சி றகினல்:
துன்புற அசைக்குமோ வச்சிரத் தாஞெரு
துரும்பினல் துண்ட மாமோ
சூரியனை இருள்வந்து சூழுமோ காற்றில்மழை
தோயுமோ இல்லை யதுபோல்

அன்புடைய நின்னடியர் பொன்னடியை யுன்னுமவர்
அடிமலர் முடிக்க ணிந்தோர்க்கு
அவலமுறு மோகாமம் வெகுளியுறு மோமனத்
தற்பமும் விகற்ப முறுமோ?
தன்புகழ்செய் சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 7

கானலிடை நீருமொரு கட்டையிற் கள்வனுங்
காணுறு கயிற்றி லரவுங்
கடிதரு கிளிஞ்சிலிடை வெள்ளியும் பொன்னைக்
கதித்தபித் தளையி னிடையும்
மானலிற் கண்டுளம் மயங்கல்போற் கற்பனையை
மாயையிற் கண்டு வீணே
மனையென்றும் மகவென்றும் உறவென்றும் நிதியென்றும்
வாழ்வென்றும் மான மென்றும்
ஊனலி னுடம்பென்றும் உயிரென்றும் உளமென்றும்
உள்ளென்றும் வெளியென் றும்வான்
உலகென்றும் அளவறு விகாரமுற நின்றவெனை
உண்மையறி வித்த குருவே
தானமிகு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 8

எந்தைநினை வாழ்த்தாத பேயர்வாய் கூழுக்கும்
ஏக்கற்றி ருக்கும் வெறுவாய்
எங்கள்பெரு மானுனை வணங்காத மூடர்தலை
இகழ்விற கெடுக்குந் தலை

கந்தமிகு நின்மேனி காணாத கயவர்கண்
கலநீர் சொரிந்த அழுகண்
கடவுள்நின் புகழ்தனைக் கேளாத வீணர்செவி
கைத்திழவு கேட்குஞ் செவி

பந்தமற நினையெணாப் பாவிகள்தம் நெஞ்சம்
பகீரென நடுங்கு நெஞ்சம்
பரமநின் றிருமுன்னர் குவியாத வஞ்சர்கை
பலியேற்க நீள்கொ டுங்கை

சந்தமிகு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே, 9

ஐயநின் சீர்பேசு செல்வர்வாய் நல்லதெள்
ளமுதுண்டு உவந்த திருவாய்
அப்பநின் றிருவடி வணங்கினோர் தலைமுடி
அணிந்தோங்கி வாழுந் தலை

மெய்யநின் திருமேனி கண்டபுண் ணியர்கண்கள்
மிக்கவொளி மேவு கண்கள்
வேலநின் புகழ்கேட்ட வித்தகர் திருச்செவி
விழாச்சுபங் கேட்குஞ் செவி

துய்யநின் பதமென்னு மேலோர்கள் நெஞ்சமெய்ச்
சுகரூப மான நெஞ்சம்
தோன்றலுன் திருமுன் குவித்தபெரி யோர்கைகள்
சுவர்ன்னமிடு கின்ற கைகள்
சையமுயர் சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 10

வாய்கொண் டுரைத்தலரி தென்செய்கே னென்செய்கேன்
வள்ள லுன் சேவ டிக்கண்
மன்னுது பொன்னசை மண்ணசை பெண்ணசை
வாய்ந்துழலு மெனது மனது
பேய்கொண்டு கள்ளுண்டு கோலினுல் மொத்துண்டு
பித்துண்ட வன் குரங்கோ
பேசுறு குலாலனுற் சுழல்கின்ற திகிரியோ
பேதைவிளை யாடு பந்தோ
காய்கொண்டு பாய்கின்ற வெவ்விலங் கோபெருங்
காற்றினுல் சுழல் கறங்கோ
காலவடி வோஇந்த்ர ஜாலவடி வோவெனது
கர்மவடி வோஅறி கிலேன்
தாய்கொண்ட சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 11

கற்றமே லவரொடுங் கூடிநில் லேன்கல்வி
கற்குநெறி தேர்ந்து கல்லேன்
கனிவுகொண் டுனதுதிரு வடியையொரு கனவினுங்
கருதிலே னல்ல னல்லேன்

குற்றமே செய்வதென் குணமாகு மப்பெருங்
குற்றமெல் லாங்கு ணமெனக்
கொள்ளுவது நின்னருட் குணமாகு மென்னிலென்
குறைதவிர்த் தருள்பு ரிகுவாய்

பெற்றமேல் வருமொரு பெருந்தகையி னருளுருப்
பெற்றெழுந் தோங்கு சுடரே
பிரணவா காரசின் மயவிமல சொரூபமே
பேதமில் பரப்பி ரமமே

தற்றகைய சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 12

நீருண்டு பொழிகின்ற காருண்டு விளைகின்ற
நிலனுண்டு பலனு முண்டு
நிதியுண்டு துதியுண்டு மதியுண்டு கதிகொண்ட
நெறியுண்டு நிலையு முண்டு

ஊருண்டு பேருண்டு மணியுண்டு பணியுண்டு
உடையுண்டு கொடையு முண்டு
உண்டுண்டு மகிழவே உணவுண்டு சாந்தமுறும்
உளமுண்டு வளமு முண்டு

தேருண்டு கரியுண்டு பரியுண்டு மற்றுள்ள
செல்வங்கள் யாவு முண்டு
தேனுண்டு வண்டுறு கடம்பணியு நின்பதத்
தியாளமுண் டாயி லரசே!
தாருண்ட சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 13

எத்திக்கு மென்னுளந் தித்திக்கு மின்பமே
என்னுயிர்க் குயிரா குமோர்
ஏகமே யானந்த போகமே யோகமே
என்பெருஞ் செல்வ மேநன்
முத்திக்கு முதலான முதல்வனே மெய்ஞ்ஞான
மூர்த்தியே முடிவி லாத
முருகனே நெடியமான் மருகனே சிவபிரான்
முத்தாடும் அருமை மகனே
பத்திக்கு உவந்தருள் பரிந்தருளு நின்னடிப்
பற்றருளி யென்னை யிந்தப்
படியிலே யுழல்கின்ற குடியிலே யொருவனுப்
பண்ணும லாண்ட ருளுவாய்
சத்திக்கு நீர்சென்னை கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 14

நான்கொண்ட விரதநின் னடியலாற் பிறர்தம்மை
நாடாமை யாகு மிந்த
நல்விரத மாங்கனியை யின்மையெனு மொருதுட்ட
நாய்வந்து கவ்வி யந்தோ
தான்கொண்டு போவதினி யென்செய்வே னென்செய்வேன்
தளராமை யென்னு மொருகைத்
தடிகொண் டடிக்கவோ வலியிலேன் சிறியனேன்
றன்முகம் பார்த்தரு ளுவாய்
வான்கொண்ட தெள்ளமுத வாரியே மிகுகருணை
மழையே மழைக்கொண் டலே
வள்ளலே யென்னிருகண் மணியேயெ னின்பமே
மயிலேறு மாணிக் கமே
தான்கொண்ட சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே, 15

கந்தர் சரணப்பத்து

பண்ணேர் மறையின் பயனே சரணம்
பதியே பரமே சரணஞ் சரணம்
விண்ணே ரொளியே வெளியே சரணம்
வெளியின் விளைவே சரணஞ் சரணம்
உண்ணே ருயிரே யுணர்வே சரணம்
உருவே யருவே யுறவே சரணம்
கண்ணே மணியே சரணஞ் சரணம்
கந்தா சரணஞ் சரணஞ் சரணம். 1

ஆறாவது திருமுறை

பரசிவ வணக்கம்

திருவிளங்கச சிவயோகச் சித்தியெலாம் விளங்கச்
சிவஞான நிலைவிளங்கச் சிவானுபவம் விளங்கத்
தெருவிளங்கு திருத்தில்லைத் திருச்சிற்றம் பலத்தே
திருக்கூத்து விளங்கவொளி சிறந்ததிரு விளக்கே!

உருவிளங்க வுயிர்விளங்க வுணர்ச்சியது விளங்க
உலகமெலாம் விளங்கவரு ளுதவுபெருந் தாயாம்
மருவிளங்கு குழல்வல்லி மகிழ்ந்தொருபால் விளங்க
வயங்குமணிப் பொதுவிளங்க வளர்ந்தசிவக் கொழுந்தே 1

பதிவிளக்கம்

அகரநிலை விளங்கு சத்த ரனைவருக்கு மவர்பால்
அமர்ந்தசத்தி மாரவர்க ளனைவருக்கு மவராற்
பகரவரு மண்டவகை யனைத்தினுக்கும் பிண்டப்
பகுதிகளங் கனைத்தினுக்கும் பதங்களனைத் தினுக்கும்

இகரமுறு முயிரெவைக்குங் கருவிகளங் கெவைக்கும்
எப்பொருட்கு மனுபவங்க ளெவைக்குமுத்தி யெவைக்கும்
சிகரமுதற் சித்திவகை யெவைக்குமொளி வழங்குந்
திருச்சிற்றம் பலந்தனிலே தெய்வமொன்றே கண்டீர்!

எல்லாந்தா னுடையதுவா யெல்லாம்வல் லதுவாய்
எல்லாந்தா னானதுவா யெல்லாந்தா னலதாய்ச்
சொல்லாலும் பொருளாலுந் தோன்றுமறி வாலுந்
துணிந்தளக்க முடியாதாய்த் துரியவெளி கடந்த

வல்லாள ரனுபவத்தே யதுவதுவா யவரும்
மதித்திடுங்கா லரியதுவாய்ப் பெரியதுவா யணுவுஞ்
செல்லாத நிலைகளினுஞ் செல்லுவதாய் விளங்குந்
திருச்சிற்றம் பலந்தனிலே தெய்வமொன்றே கண்டீர்!

ஒன்றுமலா ரிரண்டுமலா ரொன்றிரண்டு மானார்
உருவுமலா ரருவுமலா ருருவருவு மானார்
அன்றுமுளா ரின்றுமுளா ரென்றுமுளார் தமக்கோர்
ஆதியிலா ரந்தமிலா ரரும்பெருஞ்ஜோ தியினார்
என்றுகனல் மதியகத்தும் புறத்தும்விளங் கிடுவார்
யாவுமிலார் யாவுமுளார் யாவுமலார் யாவும்
ஒன்றுறுதா மாகிநின்றார் திருச்சிற்றம் பலத்தே
ஓங்குகின்ற தனிக்கடவு ளொருவருண்டே கண்டீர்! 4

அருட்பெருஞ்ஜோதி யட்டகம்

அருட்பெரு வெளியி லருட்பெரு வுலகத்
தருட்பெருந் தலத்துமே னிலையில்
அருட்பெரும் பீடத் தருட்பெரு வடிவில்
அருட்பெருந் திருவிலே யமர்ந்த
அருட்பெரும் பதியே யருட்பெரு நிதியே
அருட்பெருஞ் சித்தியென் னமுதே
அருட்பெருங் களிப்பே யருட்பெருஞ் சுகமே
அருட்பெருஞ் ஜோதியென் னரசே! 1

குலவுபே ரண்டப் பகுதியோ ரனந்த
கோடிகோ டிகளுமாங் காங்கே
நிலவிய பிண்டப் பகுதிகள் முழுது
நிகழ்ந்தபற் பலபொருள் திரளும்

விலகுறு தகத்தும் புறத்துமே லிடத்தும்
மெய்யறி வானந்தம் விளங்க
அலகுறு தொழியா ததுவதில் விளங்கும்
அருட்பெருஞ்ஜோதியென் னரசே. 2

கண்முதற் பொறியால் மனமுதற் கரணக்
கருவினுற் பகுதியின் கருவால்
எண்முதற் புருட தரத்தினுற் பரத்தால்
இசைக்குமோர் பரம்பர வுணர்வால்
விண்முதற் பரையால் பராபர வறிவால்
விளங்குவ தரிதென வுணர்ந்தோர்
அண்முதற் றடித்துப் படித்திட வோங்கும்
அருட்பெருஞ் ஜோதியென்னரசே. 3

நசைத்தமே னிலேயி தெனவுணர்ந் தாங்கே
நண்ணியுங் கண்ணுறு தந்தோ
திசைத்தமா மறைக ளுயங்கின மயங்கித்
திரும்பின வெனிலத னியலே
இசைத்தலெங் ஙனமோ வையகோ சிறிதும்
இசைத்திடு வேமென நாவை
அசைத்திடற் கரிதென் றுணர்ந்துளோர் வழுத்தும்
அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 4

சுத்தவே தாந்த மவுனமோ வலது
சுத்தசித் தாந்தரா சியமோ
நித்தநா தாந்த நிலேயனு பவமோ
நிகழ்பிற முடிபின்மேன் முடிபோ

புத்தமு தனைய சமரசத் ததுவோ
பொருளிய லறிந்தில மெனவே
அத்தகை யுணர்ந்தோ ருரைத்துரைத் தேத்தும்
அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 5

ஏகமோ வன்றி யனேகமோ வென்றும்
இயற்கையோ செயற்கையோ சித்தோ
தேகமோ பொதுவோ சிறப்பதோ பெண்ணோ
திகழ்ந்திடு மாணதோ வதுவோ
யோகமோ பிரிவோ வொளியதோ வெளியோ
உரைப்பதற் றோவென வுணர்ந்தோர்
ஆகமோ டுரைத்து வழுத்தநின் றோங்கும்
அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 6

தத்துவ மனைத்துந் தனித்தனி கடந்தே
தத்துவா தீதமே னிலையில்
சித்தியல் முழுதுந் தெரிந்தன மவைமேற்
சிவநிலை தெரிந்திடச் சென்றேம்
ஒத்தவந் நிலைக்கண் யாமுமெம் முணர்வும்
ஒருங்குறக் கரைந்துபோ யினமென்
றத்தகை யுணர்ந்தோர் வழுத்தநின் றோங்கும்
அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 7

எங்குமாய் விளங்குஞ் சிற்சபை யிடத்தே
இதுவது வெனவுரைப் பரிதாய்த்
தங்குமோ ரியற்கைத் தனியனு பவத்தைத்
தந்தெனைத் தன்மய மாக்கிப்

பொங்குமா னந்த போகபோக் கியனுய்ப்
புத்தமு தருத்தியென் னுளத்தே
அங்கையிற் கனிபோன் றமர்ந்தருள் புரிந்த
அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 8

பதி விளக்கம்

உரைவளர் கலையே கலைவள ருரையே
உரைகலை வளர்தரு பொருளே
விரைவளர் மலரே மலர்வளர் விரையே
விரைமலர் வளர்தரு நறவே
கரைவளர் தருவே தருவளர் கரையே
கரைதரு வளர்கிளர் கனியே
பரைவள ரொளியே யொளிவளர் பரையே
பரையொளி வளர்சிவ பதியே 1

நிதிவளர் நிலமே நிலம்வளர் நிதியே
நிதிநிலம் வளர்தரு நிறைவே
மதிவளர் நலமே நலம்வளர் மதியே
மதிநலம் வளர்தரு பரமே
கதிவளர் நிலையே நிலைவளர் கதியே
கதிநிலை வளர்தரு பொருளே
பதிவளர் பதமே பதம்வளர் பதியே
பதிபதம் வளர்சிவ பதியே. 2

ஆற்ருமை

குலத்திடையுங் கொடியனொரு குடித்தனத்துங் கொடியேன்
குறிகளிலுங் கொடியனன்றிக் குணங்களிலுங் கொடியேன்
மலத்திடையே புழுத்தசிறு புழுக்களிலுங் கடையேன்
வன்மனத்துப் பெரும்பாவி வஞ்சநெஞ்சப் புலையேன்
நலத்திடையோ ரணுவளவும் நண்ணுகிலேன் பொல்லா
நாய்க்குநகை தோன்றநின்றேன் பேய்க்குமிக இழிந்தேன்
நிலத்திடைநா னேன்பிறந்தே னின்கருத்தை யறியேன்
நிர்க்குணனே நடராஜ நிபுணமணி விளக்கே. 1

விளக்கறியா விருட்டறையிற் கவிழ்ந்துகிடந் தழுது
விம்முகின்ற குழவியினு மிகப்பெரிதுஞ் சிறியேன்
அளக்கறியாத் துயர்க்கடலில் விழுந்துநெடுங் காலம்
அலைந்தலைந்து மெலிந்ததுரும் பதனின்மிகத் துரும்பேன்
கிளக்கறியாக் கொடுமையெலாங் கிளைத்தபழு மரத்தேன்
கெடுமதியேன் கடுமையினேன் கிறிபேசும் வெறியேன்
களக்கறியாப் புவியிடைநா னேன்பிறந்தே னந்தோ
கருணைநடத் தரசேநின் கருத்தையறி யேனே. 2

இனித்தபழச் சாறுவிடுத் திழிந்தமலங் கொளுமோர்
இழிவிலங்கி னிழிந்துநின்றே னிரக்கமொன்று மில்லேன்
அனித்தநெறி யிடைத்தொடர்ந்து மனித்தவுடம் பெடுத்த
அறக்கடையர் தமக்கெல்லா மறக்கடைய னானேன்
பனித்தமனக் குரங்காட்டிப் பலிக்குழலுங் கொடியேன்
பாதகமுஞ் சூதகமும் பயின்றபெரும் படிறேன்
தனித்தகடுங் குணத்தேனா னேன்பிறந்தே னினது
தனிக்கருத்தை யறிந்திலேன் சபைக்கேற்று மொளியே. 3

ஏறுகின்றே மெனமதித்தே யிறங்குகின்ற கடையேன்
ஏதமெலா நிறைமனத்தே னிரக்கமிலாப் புலையேன்
சீறுகின்ற புலியனையேன் சிறுதொழிலே புரிவேன்
செய்வகையொன் றறியாத சிறியரினுஞ் சிறியேன்

மாறுகின்ற குணப்பேதை மதியதனு லிழிந்தேன்
வஞ்சமெலாங் குடிகொண்ட வாழ்க்கைமிக வுடையேன்
வீறுகின்ற வுலகிடைநா னேன்பிறந்தே னினது
மெய்க்கருத்தை யறிந்திலேன் விளங்குநடத் தரசே. 4

காட்டுகின்ற வுவர்க்கடல்போற் கலைகளினுஞ் செல்வக்
களிப்பினிலுஞ் சிறந்துமிகக் களித்துநிறை கின்றேன்
நீட்டுகின்ற வாபத்தி லொருசிறிது முதவேன்
நெடுந்தூர மாழ்ந்துதவாப் படுங்கிணறு போல்வேன்
ஆட்டுகின்ற வருட்பெருமை யொருசிறிதுந் தெரியேன்
அச்சமிலே னுணமிலே னடக்கமொன்று மில்லேன்
கூட்டுகின்ற வுலகிடைநா னேன்பிறந்தே னினது
குறிப்பறியேன் மன்றினடங் குலவுகுல மணியே. 5

ஆற்றாமை

போக மாதியை விழைந்தனன் வீணிற்
பொழுது போக்கிடு மிழுதையே னழியாத்
தேகமாதிமைப் பெறமுயன் றறியேன்
சிரங்கு நெஞ்சகக் குரங்கொடு முழல்வேன்
காக மாதிக ளருந்தவோர் பொருக்குங்
காட்ட நேர்ந்திடாக் கடையரிற் கடையேன்
ஆக மாதிசொல் லறிவறி வேனோ
அப்ப னேயெனை யாண்டுகொண் டருளே. 1

தூங்கு கின்றதே சுகமென வறிந்தேன்
சோற தேபெறும் பேறதென் றுணர்ந்தேன்
ஏங்கு கின்றதே தொழிலெனப் பிடித்தேன்
இரக்கின் றோர்களே யென்னினு மவர்பால்

வாங்கு கின்றதே பொருளென வலித்தேன்
வஞ்ச நெஞ்சினுற் பஞ்செனப் பறந்தேன்
ஓங்கு கின்றதற் கென்செயக் கடவேன்
உடைய வாவெனை யுவந்துகொண் டருளே 2

முறையீடு

மருந்தறியேன் மணியறியேன் மந்திரமொன் றறியேன்
மதியறியேன் விதியறியேன் வாழ்க்கைநிலை யறியேன்
திருந்தறியேன் திருவருளின் செயலறியேன் அறந்தான்
செய்தறியேன் மனமடங்கும் திறத்தினிலோ ரிடத்தே
இருந்தறியேன் அறிந்தோரை ஏத்திடவும் அறியேன்
எந்தைபிரான் மணிமன்றம் எய்தவறி வேனோ
இருந்ததிசை சொலவறியேன் எங்ஙனநான் புகுவேன்
யார்க்குரைப்பே னென்னசெய்வேன் ஏதுமறிந் திலனே.

கற்குமுறை கற்றறியேன் கற்பனகற் றறிந்த
கருத்தர்திருக் கூட்டத்திற் களித்திருக்க வறியேன்
நிற்குநிலை நின்றறியே னின்னுரி னடித்தேன்
நெடுங்காமப் பெருங்கடலை நீந்தும்வகை யறியேன்
சிற்குணமா மணிமன்றிற் றிருநடனம் புரியுந்
திருவடியென் சென்னிமிசைச் சேர்க்கவறி வேனோ
இற்குணஞ்செய் துழல்கின்றே னெங்ஙனநான் புகுவேன்
யார்க்குரைப்பே னென்னசெய்வே னேதுமறிந் திலனே.

சாதிமதஞ் சமயமெனுஞ் சங்கடம்விட் டறியேன்
சாத்திரச்சே ருடுகின்ற சஞ்சலம்விட் டறியேன்
ஆதியந்த நிலையறியே னலையறியாக் கடல்போல்
ஆனந்தப் பெரும்போகத் தமர்ந்திடவு மறியேன்
நீதிநெறி நடந்தறியேன் ஜோதிமணிப் பொதுவில்
நிருத்தமிடு மொருத்தர்திருக் கருத்தையறி வேனோ
ஏதிலர்சா ருலகினிடை யெங்ஙனநான் புகுவேன்
யார்க்குரைப்பே னென்னசெய்வே னேது மறிந்திலனே.

சாகாத தலையறியேன் வேகாத காலின்
தரமறியேன் போகாத தண்ணீரை யறியேன்
ஆகாய நிலையறியேன் மாகாய நிலையும்
அறியேன்மெய்ந் நெறிதனையோ ரணுவளவு மறியேன்
மாகாத லுடையபெருந் திருவாளர் வழுத்தும்
மணிமன்றந் தனையடையும் வழியுமறி வேனோ
ஏகாய உலகினிடை யெங்ஙனநான் புகுவேன்
யார்க்குரைப்பே னென்னசெய்வே னேதுமறிந் திலனே.

வரையபர மார்க்கமொடு பரமார்க்க மறியேன்
மரணபயந் தவிர்த்திடுஞ்சன் மார்க்கமதை யறியேன்
திரையறுதண் கடலறியே னக்கடலைக் கடைந்தே
தெள்ளமுத முணவறியேன் சினமடக்க வறியேன்
உரையுணர்வு கடந்ததிரு மணிமன்றந் தனிலே
ஒருமைநடம் புரிகின்றார் பெருமையறி வேனோ
இறையுறுபொய் யுலகினிடை யெங்ஙனநான் புகுவேன்
யார்க்குரைப்பே னென்செய்வே னேதுமறிந் திலனே. 5

அடியார் பேறு

அடியார் வருத்தந் தனைக்கண்டு
தரியா ரின்ப மளித்திடுவார்
வடியாக் கருணைப் பெருங்கடலா ரென்ற
பெரியோர் வார்த்தையெலாம்
நெடியார்க் கரியாய் கொடியேனென்
ஞெருவன் றனையு நீக்கியதோ
கடியாக் கொடுமா பாதகன்முன்
கண்ட பரிசுங் கண்டிலனே. 1

பையார் பாம்பு கொடியதெனப்
பகர்வா ரதற்கும் பரிந்துமுன்னுள்
ஐயா கருணை யளித்தனையென்
னளவி லின்னு மளித்திலையே
மையார் மிடற்ருே யானந்த மன்றி
னடிப்போய் வல்வினையேன்
னையா நின்றேனையோநான்
பாம்பிற் கொடிய ருனேனே. 2

மருணு டுலகிற் கொலைபுரிவார்
மனமே கரையாக் கல்லென்று
பொருணு டியநின் றிருவாக்கே
புகல வறிந்தே னென்னளவிற்
கருணு நிதிநின் றிருவுளமுங்
கல்லென் றுரைக்க வறிந்திலனே
இருணு டியவிச் சிறியேனுக்
கின்னு மிரங்கா திருந்தாயே. 3

தீது நினைக்கும் பாவிகட்குஞ்
செய்தாய் கருணை யெனத்தெளிந்து
வாது நினைக்கு மனக்கடையேன்
மகிழ்வுற் றிருந்தே னென்னளவில்
சூது நினைப்பா யெனில்யார்க்குச்
சொல்வேன் யாரைத் துணைகொள்வேன்
ஏது நினைப்பே னையோநான்
பாவி யுடம்பே னெடுத்தேனே. 4

கல்லுங் கனியத் திருநோக்கம்
புரியுங் கருணைக் கடலேநான்
அல்லும் பகலுந் திருக்குறிப்பை
யெதிர்பார்த் திங்கே அயர்கின்றேன்
கொல்லுங் கொடியார்க் குதவுகின்ற
குறும்புத் தேவர் மனம்போலச்
சொல்லு மிரங்கா வன்மைகற்க
வெங்கே யையோ துணிந்தாயோ. 5

நயத்தா லுனது திருவருளை
நண்ணுக் கொடியே னுயுடம்பை
உயத்தான் வையேன் மடித்திடுவேன்
மடித்தாற் பின்ன ருலகத்தே
வயத்தா லெந்த வுடம்புறுமோ
வென்ன வருமோ வென்கின்ற
பயத்தா லையோ விவ்வுடம்பைச்
சுமக்கின் றேனெம் பரஞ்சுடரே. 6

அடுக்குந் தொண்டர் தமக்கெல்லா
மருளீந் திங்கே யென்னளவிற்
கொடுக்குந் தன்மை தனையொளித்தா
லொளிக்கப் படுமோ குணக்குன்றே
தடுக்குந் தடையும் வேறில்லைத்
தமியேன் றனையித் தாழ்வகற்றி
எடுக்குந் துணையும் பிறிதில்லை
யையோ வின்னு மிரங்கிலையே. 7

கூடுங் கருணைத் திருக்குறிப்பை
யிற்றைப் பொழுதே குறிப்பித்து
வாடுஞ் சிறியேன் வாட்டமெலாந்
தீர்த்து வாழ்வித் திடவேண்டும்
பாடும் புகழோய் நினையல்லால்
துணைவே றில்லைப் பரவெளியில்
ஆடுஞ் செல்வத் திருவடிமே
லாணை முக்கா லாணையதே. 8

ஆத்தும விசாரத் தழுங்கல்

புலைவிலைக் கடையிற் றலைகுனிந் தலைந்து
பொறுக்கிய சுணங்கனேன் புறத்தில்
தலைவிலை பிடித்துக் கடைவிலை படித்த
தயவிலாச் சழக்கனேன் சழக்கர்
உலைவிலை யெனவே வியக்கவெந் தொழிலில்
உழன்றுழன் றழன்றதோ ருளத்தேன்
இலைவிலை யெனக்கென் றகங்கரித் திருந்தேன்
என்னினுங் காத்தரு ளெனையே. 1

கொட்டிலை யடையாப் பட்டிமா டனையேன்
கொட்டைகள் பரப்பிமேல் வனைந்த
கட்டிலை விரும்பி யடிக்கடி படுத்த
கடையனேன் கங்குலும் பகலும்
அட்டிலை யடுத்த பூனையே னுணவை
அறவுண்டு குப்பைமேற் போட்ட
நெட்டிலை யனையே னென்னினும் வேறு
நினைத்திடேல் காத்தரு ளெனையே. 2

அவா அறுப்பு

தாலவாழ்க் கையிலே சார்ந்தவ ரெல்லாந்
தக்கமுப் போதினுந் தனித்தே
சீலமார் பூசைக் கடன்முடிக் கின்றார்
சிறியனேன் தவஞ்செய்வான் போல
ஞாலமே லவர்க்குக் காட்டிநான் றனித்தே
நவிலுமிந் நாய்வயிற் றினுக்கே
காலையா தியமுப் போதினுஞ் சோற்றுக்
கடன்முடித் திருந்தன னெந்தாய். 1

சோற்றிலே விருப்பஞ் சூழ்ந்திட லொருவன்
றன்னுநற் றவமெலாஞ் சுருங்கி
ஆற்றிலே கரைத்த புளியெனப் போமென்
றறிஞர்க ளுரைத்திடல் சிறிதும்
போற்றிலே னுன்னைப் போற்றிலேன் சுவையிற்
பொருந்திய கார்சா ரஞ்சேர்
சாற்றிலே கலந்த சோற்றிலே யாசை
தங்கினே னென்செய்வே னெந்தாய். 2

விருப்பிலேன் போலக் காட்டினே னன்றி
　　வினைவிலா தாணொலா மறுத்த
கருப்பிலே யெனினுங் கஞ்சியா திகளைக்
　　கருத்துவந் துண்ணுதற் கமையேன்
நெருப்பிலே யுருக்கு நெய்யிலே சிறிதும்
　　நீரிடாத் தயிரிலே நெகிழ்ந்த
பருப்பிலே சோற்றுப் பொருப்பிலே யாசை
　　பற்றினே னென்செய்வே னெந்தாய் 3

தண்டுகாய் கிழங்கு பூமுத லொன்றுந்
　　தவிரவிட் டிடுவதற் கமையேன்
கொண்டுபோய் வயிற்றுக் குழியெலா நிரம்பக்
　　கொட்டினேன் குணமிலாக் கொடியேன்
வண்டுபோல் விரைந்து வயலெலா நிரம்ப
　　மலங்கொட்ட வோடிய புலையேன்
பண்டுபோற் பசித்தூண் வருவழி பார்த்த
　　பாவியே னென்செய்வே னெந்தாய். 4

உண்டியே விழைந்தே னெனினுமென் றன்னை
　　உடையவா வடியனே னுனையே
அண்டியே யிருந்தே னிருக்கின்றே னிருப்பேன்
　　அப்பநின் னணைநின் றனக்கே
தொண்டுறு தவர்கைச் சோற்றினை விரும்பேன்
　　தாயனே துணைநினை யல்லாற்
கண்டிலே னென்னைக் காப்பதுன் கடன்காண்
　　கைவிடேல் கைவிடே லெந்தாய் 5

திருவருட் பெருமை

முன்னவனே சிறியேனுன் சிறிதுமறி யாதே
முனிந்துரைத்த பிழைபொறுத்துக் கனிந்தருளல் வேண்டும்
என்னவனே யென்றுணையே யென்னுறவே யென்னை
ஈன்றவனே யென்றாயே யென்குருவே யெனது
மன்னவனே யென்னுடைய வாழ்முதலே யென்கண்
மாமணியே மணிமிடற்றோர் மாணிக்க மலையே
அன்னவனே யம்பலத்து ளாடுகின்ற வமுதே
ஆறணிந்த சடையாயான் வேறுதுணை யிலனே. 1

சினந்துரைத்தேன் பிழைகளெலாம் மனம்பொறுத்தல்வேண்டும்
தினதயா நிதியேமெய்ஞ் ஞானசபா பதியே
புனைந்துரைப்பா ரகத்தொன்றும் புறத்தொன்று நினைத்தே
பொய்யுலக ராங்கவர்போற் புனைந்துரைத்தே னலனுன்
இனந்திருத்தி யெனையாட்கொண் டென்னுளமர்ந் தெனைத்தான்
எவ்வுலகுந் தொழுநிலைமே லேற்றியசற் குருவே
கனந்தருசிற் சுகவமுதங் களித்தளித்த நிறைவே
கருணைநடத் தரசேயென் கண்ணிலங்கு மணியே. 2

ஊடுதற்கோ ரிடங்காணே னுவக்குமிட முளதோ
உன்னிடமு மென்னிடமு மோரிடமா தலினால்
வாடுதற்கு நேர்ந்திடிலோ மாட்டாமை யாலும்
மனம்பிடியா மையினாலுஞ் சினந்துரைப்பேன் சிலவே
கூடுதற்கு வல்லவனி கூட்டியெனைக் கொண்டே
குலம்பேச வேண்டாமென் குறிப்பனைத்து மறிந்தாய்
நாடுதற்கிங் கென்னாலே முடியாது நீயே
நாடுவித்துக் கொண்டருள்வாய் ஞானசபா பதியே.

என்னுளநீ கலந்துகொண்டா யுன்னுளநான் கலந்தேன்
 என்செயலுன் செயலுன்ற னிருஞ்செயலென் செயலே
பின்னுளநான் பிதற்றலெலாம் வேறுகுறித் தெனைநீ
 பிழையேற்ற நினைந்திடிலோ பெருவழக்கிட் டிடுவேன்
அன்னையினுந் தயவுடையா யப்பனெனக் கானாய்
 அன்றியுமென் னுருயிருக் காருயிராய் நிறைந்தாய்
மன்னுமணிப் பொதுநடஞ்செய் மன்னவனே கருணை
 மாநிதியே யெனக்கருள்வாய் மனக்கலக்கந் தவிர்த்தே.

பிரிவாற்றுமை

செய்வகை யறியேன் மன்றுண்மா மணிநின்
 திருவுளக் குறிப்பையுந் தெரியேன்
உய்வகை யறியே னுணர்விலே னந்தோ
 உறுகண்மே லுறுங்கொலென் றுலைந்தேன்
மெய்வகை யடையேன் வேறெவர்க் குரைப்பேன்
 வினையனே னென்செய விரைகேன்
பொய்வகை யுடையே னெங்ஙனம் புகுகேன்
 புலையனேன் புகலறி யேனே. 1

உன்கட னடியேற் கருளலென் றுணர்ந்தேன்
 உடல்பொரு ளாவியு முனக்கே
பின்கட னின்றிக் கொடுத்தனன் கொடுத்த
 பின்னுநான் றளருத லழகோ
என்கடன் புரிவேன் யார்க்கெடுத் துரைப்பேன்
 என்செய்வேன் யார்துணை யென்பேன்
முன்கடன் பட்டார் போன்மனங் கலங்கி
 முறிதலோர் கணந்தரி யேனே. 2

ஞானமு மதனு லடையனு பவமும்
நாயினே னுணர்ந்திட வுணர்த்தி
ஈனமு மிடருந் தவிர்த்தனை யந்நாள்
இந்தநா ளடியனே னிங்கே
ஊனமொன் றில்லோய் நின்றனைக் கூவி
அழைக்கின்றே னொருசிறி தெனினும்
ஏனென வினவா திருத்தலு மழகோ
இறையுநான் றரிக்கல னினியே. 3

இனியநற் றயி லினியவென் னரசே
என்னிரு கண்ணுண்மா மணியே
கனியென வினிக்குங் கருணையா ரமுதே
கனக்கவம் பலத்துறுங் களிப்பே
துனியுறு மனமுஞ் சோம்புறு முணர்வுஞ்
சோர்வுறு முகமுங்கொண் டடியேன்
தனியுளங் கலங்க லழகதோ வெனைத்தான்
தந்தநற் றந்தைநீ யலையோ. 4

தந்தையுந் தாயுங் குருவும்யான் போற்றுஞ்
சாமியும் பூமியும் பொருளுஞ்
சொந்தநல் வாழ்வு நேயமுந் துணையுஞ்
சுற்றமு முற்றுநீ யென்றே
சிந்தையுற் றிங்கே யிருக்கின்றே னிதுநின்
திருவுளந் தெரிந்ததே யெந்தாய்
நிந்தைசெய் யுலகில் யானுளங் கலங்கல்
நீதியோ நின்னருட் கழகோ. 5

அழகனே ஞான வமுதனே யென்றன்
அப்பனே யம்பலத் தரசே
குழகனே யின்பக் கொடியுளங் களிக்குங்
கொழுநனே சுத்தசன் மார்க்கக்
கழகநேர் நின்ற கருணைமா நிதியே
கடவுளே கடவுளே யெனநான்
பழகநேர்ந் திட்டே னின்னுமிவ் வுலகிற்
பழங்கண லழுங்குத லழகோ. 6

தாயுமென் னொருமைத் தந்தையும் ஞான
சபையிலே தனிநடம் புரியுந்
தூயநின் பாதந் துணையெனப் பிடித்தேன்
தூக்கமுஞ் சோம்பலுந் துயரும்
மாயையும் வினையு மறைப்புமா ணவமும்
வளைத்தெனைப் பிடித்திடல் வழக்கோ
நாயினே னினியோர் கணந்தரிப் பறியேன்
நல்லருட் சோதிதந் தருளே. 7

இல்லையுண் டெனுமிவ் விருமையுங் கடந்தோர்
இயற்கையி னிறைந்தபே ரின்பே
அல்லையுண் டெழுந்த தனிப்பெருஞ் சுடரே
அம்பலத் தாடல்செய் யமுதே
வல்லையின் றடியேன் றுயரெலாந் தவிர்த்து
வழங்குக நின்னருள் வழங்கல்
நல்லையின் றலது நாளையென் றிடிலோ
நானுயிர் தரிக்கல னரசே. 8

சிவந்திகழ் கருணைத் திருநெறிச் சார்புந்
தெய்வமொன் றேயெனுந் திறமும்
நவந்தரு நிலைகள் சுதந்தரத் தியலும்
நன்மையு நரைதிரை முதலாந்
துவந்துவந் தவிர்த்துச் சுத்தமா தியமுச்
சுகவடி வம்பெறும் பேறுந்
தவந்திக ழெல்லாம் வல்லசித் தியுநீ
தந்தருள் தருணமீ தெனக்கே. 9

தருணமிஞ் ஞான்றே சுத்தசன் மார்க்கத்
தனிநெறி யுலகெலாந் தழைப்பக்
கருணையுஞ் சிவமே பொருளெனக் கருதுங்
கருத்துமுற் றெம்மனோர் களிப்பப்
பொருணிறை யோங்கத் தெருணிலை விளங்கப்
புண்ணியம் பொற்புற வயங்க
அருணயந் தருள்வாய் திருச்சிற்றம் பலத்தே
அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 10

வந்தருள் புரிக விரைந்திது தருணம்
மாமணி மன்றிலே ஞான
சுந்தர வடிவச் சோதியாய் விளங்குஞ்
சுத்தசன் மார்க்கசற் குருவே
தந்தருள் புரிக வரமெலாம் வல்ல
தனியருட் சோதியை யெனது
சிந்தையிற் புணர்ப்பித் தென்னொடுங் கலந்தே
செய்துவித் தருள்கசெய் வகையே. 11

சிற்சபை விளக்கம்

சோறு வேண்டினுந் துகிலணி முதலாஞ்
சுகங்கள் வேண்டினுஞ் சுகமலாற் சுகமாம்
வேறு வேண்டினு நினையடைந் தன்றி
மேவொ ணாதெனு மேலவ ருரைக்கே
மாறு வேண்டிலேன் வந்துநிற் கின்றேன்
வள்ளலே யுன்றன் மனக்குறிப் பறியேன்
சாறு வேண்டிய பொழில்வட லரசே
சத்தி யச்சபைத் தனிம்பெரும் பதியே. 1

கயவு செய்மத கரியெனச் செருக்குங்
கருத்தி னேன்மனக் கரிசினு லடைந்த
மயர்வு நீக்கிட வந்துநிற் கின்றேன்
வள்ளலே யுன்றன் மனக்குறிப் பறியேன்
உயவு வந்தருள் புரிந்திடா யெனிலென்
உயிர்த ரித்திடா துன்னடி யாணை
தயவு செய்தருள் வாய்வட லரசே
சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே. 2

திருவடி முறையீடு

சீரிடம் பெறுமோர் திருச்சிற்றம் பலத்தே
திகழ்தனித் தந்தையே நின்பாற்
சேரிட மறிந்தே சேர்ந்தனன் கருணை
செய்தருள் செய்திடத் தாழ்க்கில்

யாரிடம் புகுவேன் யார்துணை யென்பேன்
யார்க்கெடுத் தென்குறை யிசைப்பேன்
போரிட முடியா தினித்துய ரொடுநான்
பொறுக்கலே னருள்கவிப் போதே. 1

போதுதான் விரைந்து போகின்ற தருணி
புரிந்திடத் தாழ்த்தியே லையோ
யாதுதான் புரிவேன் யாரிடம் புகுவேன்
யார்க்கெடுத் தென்குறை யிசைப்பேன்
தீதுதான் புரிந்தே னெனினுநீ யதனைத்
திருவுளத் தடைத்திடு வாயேல்
ஈதுதான் றந்தை மரபினுக் கழகோ
என்னுயிர்த் தந்தைநீ யலையோ. 2

தந்தைநீ யலையோ தநயனு னலனே
தமியனேன் றளர்ந்துளங் கலங்கி
எந்தையே குருவே யிறைவனே முறையோ
என்றுநின் றேலிடு கின்றேன்
சிந்தையே யறியார் போன்றிருந் தனைமேற்
சிறியனே னென்செய்கே னையோ
சந்தையே புகுந்த நாயினிற் கடையேன்
தளர்ச்சியைத் தவிர்ப்பவர் யாரே. 3

யாரினுங் கடையேன் யாரினுஞ் சிறியேன்
என்பிழை பொறுப்பவர் யாரே
பாரினும் பெரிதாம் பொறுமையோய் நீயே
பாவியேன் பிழைபொறுத் திலையேல்

ஊரினும் புகுத வொண்ணுமோ பாவி
யுடம்பைவைத் துலாவும் படுமோ
சேரினு மெனைத்தான் சேர்த்திடார் பொதுவாந்
தெய்வத்துக் கடாதவ னென்றே. 4

அடாதகா ரியங்கள் செய்தன னெனினும்
அப்பநீ யடியனேன் றன்னை
விடாதவா றறிந்தே களித்திருக் கின்றேன்
விடுதியோ விட்டிடு வாயேல்
உடாதவெற் றரைநேர்ந் துயங்குவே னையோ
வுன்னரு ளடையநா னிங்கே
படாதபா டெல்லாம் பட்டன னந்தப்
பாடெலாம் நீயறி யாயோ. 5

சாற்றுவே னெனது தந்தையே தாயே
சற்குரு நாதனே யென்றே
போற்றுவேன் திருச்சிற் றம்பலத் தாடும்
பூரணா வெனவுல கெல்லாந்
தூற்றுவே னன்றி யெனக்குநீ செய்த
தூயபே ருதவிக்கு நானேன்
ஆற்றுவே னுவி யுடல்பொரு ளெல்லாம்
அப்பநின் சுதந்தர மன்றே 6

சுதந்தர முனக்கே கொடுத்தன முனது
தாயநல் லுடம்பினிற் புகுந்தேம்
இதந்தரு முளத்தி லிருந்தனம் உனையே
யின்புறக் கலந்தன மழியாப்

பதந்தனில் வாழ்க அருட்பெருஞ் ஜோதிப்
பரிசுபெற் றிடுகபொற் சபையுஞ்
சிதந்தரு சபையும் போற்றுக வென்றாய்
தெய்வமே வாழ்கநின் சீரே. 7

தற்சுதந்தர மின்மை

இப்பாரி லுடலாவி பொருளுமுன்பாற்
கொடுத்தேன்மற் றெனக்கென் றிங்கே
எப்பாலுஞ் சுதந்தரமோ ரிறையுமிலே
யருட்சோதி யியற்கை யென்னுந்
துப்பாய உடலாதி தருவாயோ
வின்னுமெனைச் சோதிப் பாயோ
அப்பாநின் றிருவுளத்தை யறியேனிவ்
வடியேனு லாவ தென்னே. 1

பொடியெடுக்கப் போயதனை மறந்துமடி
யெடுத்தரையிற் புனைவேன் சில்லோர்
தடியெடுக்கக் காணிலதற் குளங்கலங்கி
யோடுவனித் தரத்தே னிங்கே
முடியெடுக்க வல்லேனோ விறைவாநின்
னருளிலதேல் முன்னே வைத்த
அடியெடுக்க முடியாதே யந்தோவிச்
சிறியேனுலாவ தென்னே. 2

பாட்டுவித்தாற் பாடுகின்றேன் பணிவித்தாற்
பணிகின்றேன் பதியே நின்னைக்
கூட்டுவித்தாற் கூடுகின்றேன் குழைவித்தாற்
குழைகின்றேன் குறித்த வூணை

ஊட்டுவித்தா லுண்கின்றே னுறக்குவித்தா
 லுறங்குகின்றே னுறங்காதென்றும்
ஆட்டுவித்தா லாடுகின்றே னந்தோவிச்
 சிறியேனு லாவ தென்னே. 3

சாவதென்றும் பிறப்பதென்றுஞ் சாற்றுகின்ற
 பெரும்பாவந் தன்னை யெண்ணி
நோவதின்று புதிதன்றே யென்றுமுள
 தாலிந்த நோவை நீக்கி
ஈவதுமன் றிடைநடிப்போய் நின்னாலே
 யாகுமற்றை யிறைவ ராலே
ஆவதொன்று மில்லையென்ரு லந்தோவிச்
 சிறியேனு லாவ தென்னே. 4

இசைத்திடவு நினைத்திடவும் பெரிதரிதாந்
 தனித்தலைமை யிறைவா வுன்றன்
அசைத்திடுபே ரருட்செயலா லசைவதன்றி
 யைந்தொழில்செய் நாத ராலுந்
தசைத்திடுபுன் துரும்பினையு மகங்கரித்துத்
 தங்கள்சுதந் தரத்தா லிங்கே
அசைத்திடற்கு முடியாதே லந்தோவிச்
 சிறியேனு லாவ தென்னே. 5

கல்லாய மனத்தையுமோர் கணத்தினிலே
 கனிவித்துக் கருணை யாலே
பல்லாரு மதிசயிக்கப் பக்குவந்தந்
 தருட்பதமும் பாலிக் கின்ருேய்

எல்லாஞ்செய் வல்லோய்சிற் றம்பலத்தே
யாடலிடு கின்றோய் நின்னால்
அல்லாலொன் றுகாதே லந்தோவிச்
சிறியேனு லாவ தென்னே. 6

இன்பேநன் றருளியரு ளியற்கையிலே
வைத்தாலு மிங்கே யென்னைத்
துன்பேசெய் வித்தாலு மென்செய்வே
னின்னருளே துணையென் றந்தோ
என்பேதை மனமடங்கி யிருப்பதன்றி
யெல்லாங்கண் டிருக்கு மென்றன்
அன்பேயென் னம்மேயென் னப்பாவிச்
சிறியேனு லாவ தென்னே. 7

அத்துவிதானந்தத் தனுபவ விடையீடு

திருத்தகுபொன் னம்பலத்தே திருநடஞ்செய் தருளுந்
திருவடிக ளடிச்சிறியேன் சென்னிமிசை வருமோ
உருத்தகுநா னிலத்திடைநீண் மலத்தடைபோய் ஞான
உருப்படிவ மடைவேனோ வொன்றிரண்டென் னுத
பொருத்தமுறு சுத்தசிவா னந்தவெள்ளந் ததும்பிப்
பொங்கியகம் புறங்காணு தெங்குநிறைந் திடுமோ
அருத்தகுமவ் வெள்ளத்தே நான்மூழ்கி நான்போய்
அதுவாகப் பெறுவேனோ அறிந்திலன்மேல் விளைவே.

கரணமெலாங் கரைந்ததனிக் கரைகாண்ப துளதோ
. கரைகண்ட பொழுதெனையுங் கண்டுதெளி வேனோ
அரணமெலாங் கடந்ததிரு வருள்வெளிநேர் படுமோ
அவ்வெளிக்கு ளானந்த வனுபவந்தா னுறுமோ

மரணமெலாந் தவிர்ந்துசிவ மயமாகி நிறைதல்
வாய்த்திடுமோ மூலமல வாதனையும் போமோ
சரணமெலாந் தரமன்றிற் றிருநடஞ்செய் பெருமான்
தனதுதிரு வுளமெதுவோ சற்றுமறிந் திலனே. 2

சிதம்பரத்தே யானந்த சித்தர்திரு நடந்தான்
சிறிதறிந்த படியின்னு முழுதுமறி வேனோ
பதம்பெறத்தேம் பழம்பிழிந்து பாலுநறும் பாகும்
பசுநெய்யுங் கலந்ததெனப் பாடிமகிழ் வேனோ
நிதம்பரவி யானந்த நித்திரைநீங் காத
நித்தர்பணி புரிந்தின்ப சித்திபெறு வேனோ
மதம்பரவு மலைச்செருக்கிற் சிறந்தசிறி யேனுன்
வள்ளல்குரு நாதர்திரு வுள்ளமறி யேனே. 3

களக்கமறப் பொதுநடநான் கண்டுகொண்ட தருணம்
கடைச்சிறியே னுளம்பூத்துக் காய்த்ததொரு காய்தான்
விளக்கமுறப் பழுத்திடுமோ வெம்பியுதிர்ந் திடுமோ
வெம்பாது பழுக்கினுமென் கரத்திலகப் படுமோ
கொளக்கருது மலமாயைக் குரங்குகவர்ந் திடுமோ
குரங்குகவ ராதெனது குறிப்பிலகப் படினுந்
துளக்கமற வுண்ணுவனோ தொண்டைவிக்கிக் கொளுமோ
சோதிதிரு வுளமெதுவோ ஏதுமறிந் திலனே. 4

தாய்கொண்ட திருப்பொதுவி லெங்கள்குரு நாதன்
சந்நிதிபோய் வரவிடுத்த தனிக்கரணப் பூவை
காய்கொண்டு வந்திடுமோ பழங்கொண்டு வருமோ
கனிந்தபழங் கொண்டுவருங் காலதனை மதமாம்

பேய்கொண்டு போய்விடுமோ பிலத்திடைவீழ்ந் திடுமோ
பின்படுமோ முன்படுமோ பிணங்கியொளித் திடுமோ
வாய்கொண்டு வென்றிடுமோ தோற்றிடுமோ வென்னை
மறந்திடுமோ திருவுளத்தின் வண்ணமறிந் திலனே.

தீட்டுமணிப் பொதுநடஞ்செய் திருவடிகண் டேத்தச்
செல்கின்றேன் சிறியேன்முன் சென்றவழி யறியேன்
காட்டுவழி கிடைத்திடுமோ நாட்டுவழி தருமோ
காலிளைப்புக் கண்டிடுமோ காணாதோ களிப்பாம்
மேட்டினிடை விடுத்திடுமோ பள்ளத்தே விடுமோ
விவேகமெனுந் துணையுறுமோ வேடர்பய முறுமோ
ஈட்டுதிரு வடிச்சமுகங் காணவுநேர்ந் திடுமோ
எப்படியோ திருவுளந்தா னேதுமறிந் திலனே. 6

ஞானமணிப் பொதுநடஞ்செய் திருவடிகண் டிடவே
நடக்கின்றே னந்தோமுன் னடந்தவழி யறியேன்
ஊனமிகு மாணவமாம் பாவியெதிர்ப் படுமோ
உடைமையெலாம் பறித்திடுமோ நடைமெலிந்து போமோ
ஈனமுறு மகங்காரப் புலிகுறுக்கே வருமோ
இச்சையெனு மிராக்கதப்பே யெனைப்பிடித்துக் கொளுமோ
ஆனமலத் தடைநீக்க வருட்டுணைதா னுறுமோ
ஐயர்திரு வுளமெதுவோ யாதுமறிந் திலனே. 7

திருக்கதவந் திறத்தல்

திருக்கதவந் திறவாயோ திரைகளெலாந் தவிர்த்தே
திருவருளாம் பெருஞ்ஜோதித் திருவுருக்காட் டாயோ
உருக்கியமு தூற்றெடுத்தென் னுடம்புயிரோ டுளமும்
ஒளிமயமே யாக்குறமெய் யுணர்ச்சியரு ளாயோ

கருக்கருதாத் தனிவடிவோய் நின்னையென் னுட் கலந்தே
கங்குல்பக லின்றியென் றுங் களித்திடச்செய் யாயோ
செருக்கருதா தவர்க்கருளுஞ் சித்திபுரத் தரசே
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே. 1

மணிக்கதவந் திறவாயோ மறைப்பையெலாந் தவிர்த்தே
மாற்றறியாப் பொன்னேநின் வடிவதுகாட் டாயோ
கணிக்கறியாப் பெருநிலையி லென்னொடுநீ கலந்தே
கரைகடந்த பெரும்போகங் கண்டிடச்செய் யாயோ
தணிக்கறியாக் காதல்மிகப் பெருகுகின்ற தரசே
தாங்கமுடி யாதினியென் றனித்தலைமைப் பதியே
திணிக்கலையா தியையெல்லாம் பணிக்கவல்ல சிவமே
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே. 2

உரைகடந்த திருவருட்பே ரொளிவடிவைக் கலந்தே
உவட்டாத பெரும்போக மோங்கியுறும் பொருட்டே
இரைகடந்தென் னுள்ளகத்தே யெழுந்துபொங்கித் ததும்பி
என்காதற் பெருவெள்ள மென்னைமுற்றும் விழுங்கிக்
கரைகடந்து போனதினித் தாங்க முடி யாது
கண்டுகொள்வாய் நீயேயென் கருத்தின்வண்ண மரசே
திரைகடந்த குருமணியே சிவஞான மணியே
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே. 3

உன்புடைநான் பிறர்போலே யுடுக்கவிழைந் தேனோ
உண்ணவிழைந் தேனோவே றுடைமைவிழைந் தேனோ
அன்புடையா யென்றனைநீ யணைந்திடவே விழைந்தேன்
அந்தோவென் னுசைவெள்ள மணைகடந்த தரசே

என்புடைவந் தணைகவென வியம்புகின்றே னுலகோர்
என்சொலினுஞ் சொல்லுகவென் னிலச்சையெலாம் விடுத்தேன்
தென்புடையோர் முகநோக்கித் திருப்பொது நிற்கின்றேய்
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே. 4

இறந்திறந்தே யிளைத்தவெலாம் போதுமிந்த வுடம்பே
இயற்கையுடம் பாகவரு ளின்னமுத மளித்தென்
புறந்தழுவி யகம்புணர்ந்தே கலந்துகொண்டெந் நாளும்
பூரணமாஞ் சிவபோகம் பொங்கியிட விழைந்தேன்
பிறந்திறந்து பொய்க்கதியைப் பெறநினைத்தே மாந்த
பேதையர்போ லெனைநினையேல் பெரியதிருக் கதவம்
திருந்தருளி யணைந்திடுவாய் சிற்சபைவா மரசே
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே. 5

பொய்யுடையார் விழைகின்ற புணர்ச்சிவிழைந் தேனோ
பூணவிழைந் தேனோவான் காணவிழைந் தேனோ
மெய்யுடையா யென்னோடுநீ விளையாட விழைந்தேன்
விளையாட்டென் பதுஞானம் விளையும்விளை யாட்டே
பையுடைப்பாம் பணையரொடு மாடுகின்றோ யெனது
பண்பறிந்தே நண்புவைத்த பண்புடையோ யின்னே
செய்யுடையென் னொடுகூடி யாடவெழுந் தருள்வாய்
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே. 6

கூறுகின்ற சமயமெலா மதங்களெலாம் பிடித்துக்
கூவுகின்றார் பலனொன்றுங் கொண்டறியார் வீணே
நீறுகின்றார் மண்ணாகி நாறுகின்றா ரவர்போல்
நீடுலகி லழிந்துவிட நினைத்தேனோ நிலைமேல்

ஏறுகின்ற திறம்விழைந்தே னேற்றுவித்தா யாங்கே
இலங்குதிருக் கதவுதிறந் தின்னமுத மளித்தே
தேறுகின்ற மெய்ஞ்ஞான சித்தியுறப் புரிவாய்
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே. 7

வேதநெறி யாகமத்தி னெறிபவுரா ணங்கள்
விளம்புநெறி இதிகாசம் விதித்தநெறி முழுதும்
ஓதுகின்ற சூதனைத்து முளவனைத்துங் காட்டி
உள்ளதனை யுள்ளபடி யுணரவுணர்த் தினையே
ஏதமற வுணர்ந்தனன்வீண் போதுகழிப் பதற்கோர்
எள்ளளவு மெண்ணமிலே னென்னொடுநீ புணர்ந்தே
தீதறவே யனைத்தும்வல்ல சித்தாடல் புரிவாய்
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே. 8

கலையுரைத்த கற்பனையே நிலையெனக்கொண் டாடும்
கண்மூடி வழக்கமெலா மண்மூடிப் போக
மலைவறுசன் மார்க்கமொன்றே நிலைபெறவெவ் வுலகும்
வாழ்ந்தோங்கக் கருதியருள் வழங்கினையென் றனக்கே
உலைவறுமிப் பொழுதேநற் றருணமென நீயே
உணர்த்தினைவந் தணைந்தருள்வா யுண்மையுரைத் தவனே
சிலைநிகர்வன் மனங்கரைத்துத் திருவமுத மளித்தோய்
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே. 9

திருத்தகுமோர் தருணமிதிற் றிருக்கதவந் திறந்தே
திருவருட்பே ரொளிகாட்டித் திருவமுத மூட்டிக்
கருத்துமகிழ்ந் தென்னுடம்பிற் கலந்துளத்திற் கலந்து
கனிந்துயிரிற் கலந்தறிவிற் கலந்துலக மனைத்தும்

உருத்தகவே யடங்குகின்ற வூழிதொறும் பிரியா
தொன்றாகிக் காலவரை யுரைப்பவெலாங் கடந்தே
திருத்தியொடு விளங்கியரு ளாடல்செய வேண்டுஞ்
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே. 10

பிள்ளைச்சிறு விண்ணப்பம்

தடித்தவோர் மகனைத் தந்தையீண் டடித்தாற்
றாயுடனணைப்பள் தாயடித்தாற்
பிடித்தொரு தந்தை யணைப்பனிங்
கெனக்குப் பேசிய தந்தையுந் தாயும்
பொடித்திரு மேனி யம்பலத் தாடும்
புனிதநீ யாதலா லென்னை
அடித்தது போது மணைத்திடல் வேண்டும்
அம்மையப் பாவினி யாற்றேன். 1

பெற்றதம் பிள்ளைக் குணங்களை யெல்லாம்
பெற்றவ ரறிவரே யல்லால்
மற்றவ ரறியா ரென்றனை யீன்ற
வள்ளலே மன்றிலே நடிக்குங்
கொற்றவ வோரென் குணத்தவநீ தான்குறிக்
கொண்ட கொடியனேன் குணங்கள்
முற்றுநன் கறிவா யறிந்துமென் றனைநீ
முனிவதென் முனிவுதீர்ந் தருளே. 2

வெம்மதிக் கொடிய மகன்கொடுஞ் செய்கை
விரும்பினு மங்ஙனம் புரியச்
சம்மதிக் கின்றா ரவன்றனைப் பெற்ற
தந்தைதாய் மகன்விருப் பாலே

இம்மதிச் சிறியேன் விழைந்ததொன் றிலைநீ
    யென்றனை விழைவிக்க விழைந்தேன்
செம்மதிக் கருணைத் திருநெறி யிதுநின்
    திருவுள மறியுமே யெந்தாய். 3

பொய்பிழை யனந்தம் புகல்கின்றே னதிலோர்
    புன்முனை யாயினும் பிறர்க்கு
நைபிழை யுளதேல் நவின்றிடேன் பிறர்பால்
    நண்ணிய கருணையாற் பலவே
கைபிழை யாமை கருதுகின் றேனின்
    கழற்பதம் விழைகின்றே னல்லாற்
செய்பிழை வேறென் றறிகிலே னந்தோ
    திருவுள மறியுமே யெந்தாய். 4

பணத்திலே சிறிது மாசையொன் றிலைநான்
    படைத்தவப் பணங்களைப் பலகால்
கிணற்றிலே யெறிந்தேன் குளத்திலு
    மெறிந்தேன் கேணியி லெறிந்தன னெந்தாய்
குணத்திலே நீதான் கொடுக்கின்ற பொருளை
    யெறிகலேன் கொடுக்கின்றேன் பிறர்க்கே
கணத்திலே யெல்லாங் காட்டுநின் னருளைக்
    கண்டன னினிச்சொல்வ தென்னே. 5

சற்சபைக் குரியார் தம்மொடுங் கூடித்
    தனித்தபே ரன்புமெய் யறிவும்
நற்சபைக் குரிய வொழுக்கமு மழியா
    நல்லமெய் வாழ்க்கையும் பெற்றே

சிற்சபை நடமும் பொற்சபை நடமுந்
தினந்தொறும் பாடிநின் றுடித்
தெற்சபை யுலகத் துயிர்க்கெலா மின்பஞ்
செய்வதென் னிச்சையா மெந்தாய். 6

உருமலி யுலகி லுன்னைநான் கலந்தே
யூழிதோ றூழியும் பிரியா
தொருமையுற் றழியாப் பெருமைபெற்
றடியே னுன்னையே பாடிநின் றுடி
இருநிலத் தோங்கிக் களிக்கவும் பிறருக்
கிடுக்கணுற் றுலவை தவிர்த்தே
திருமணிப் பொதுவி லன்புடை யவராய்ச்
செய்யவு மிச்சைகா ணெந்தாய். 7

எவ்வுயிர்த் திரளு மென்னுயி ரெனவே
யெண்ணிநல் லின்புறச் செயவும்
அவ்வுயிர் களுக்கு வருமிடை யூற்றை
யகற்றியே யச்சநீக் கிடவும்
செவ்வையுற் றுனது திருப்பதம் பாடிச்
சிவசிவ வென்றுகூத் தாடி
ஓவ்வுறு களிப்பா லழிவுறு திங்கே
யோங்கவு மிச்சைகா ணெந்தாய். 8

தங்கமே யனையார் கூடிய ஞான
சமரச சுத்தசன் மார்க்கச்
சங்கமே கண்டு களிக்கவுஞ் சங்கஞ்
சார்திருக் கோயில்கண் டிடவுந்

துங்கமே பெறுஞ்சற் சங்கநீ டுழி
துலங்கவுஞ் சங்கத்தி லடியேன்
அங்கமே குளிர நின்றனைப் பாடி
யாடவு மிச்சைகா ணெந்தாய். 9

கருணையே வடிவாய்ப் பிறர்களுக் கடுத்த
கடுந்துய ரச்சமா திகளைத்
தருணநின் னருளாற் றவிர்த்தவர்க் கின்பந்
தரவும்வன் புலைகொலை யிரண்டும்
ஒருவிய நெறியி லுலகெலா நடக்க
உஞற்றவும் அம்பலந் தனிலே
மருவிய புகழை வழுத்தவும் நின்னை
வாழ்த்தவு மிச்சைகா ணெந்தாய். 10

மண்ணுல கதிலே யுயிர்கள்தாம் வருந்தும்
வருத்தத்தை யொருசிறி தெனினுங்
கண்ணுறப் பார்த்துஞ் செவியுறக் கேட்டுங்
கணமுநான் சகித்திட மாட்டேன்
எண்ணுறு மெனக்கே நின்னருள் வலத்தா
லிசைத்தபோ திசைத்தபோ தெல்லாம்
நண்ணுமவ் வருத்தந் தவிர்க்கநல் வரந்தான்
நல்குத லெனக்கிச்சை யெந்தாய்.

தனிப்பெருஞ் ஜோதித் தலைவனே யெனது
தந்தையே திருச்சிற்றம் பலத்தே
கனிப்பெருங் கருணைக் கடவுளே யடியேன்
கருதிநின் றுரைக்கும்விண் ணப்பம்

இனிப்புறு நினது திருவுளத் தடைத்தே
யெனக்கருள் புரிகநீ விரைந்தே
இனிச்சிறு பொழுதுந் தரித்திடே னுன்ற
னிணைமலர்ப் பொன்னடி யாணை. 12

தானலா திறையு முயிர்க்கசை வில்லாத்
தலைவனே திருச்சிற்றம் பலத்தே
வானலால் வேறொன் றிலையென வுரைப்ப
வயங்கிய மெய்யின்ப வாழ்வே
ஊனலா லுயிரு முளமுமுள் ளுணர்வு
முவப்புற வினிக்குந்தெள் ளமுதே
ஞானநா டகஞ்செய் தந்தையே யடியே
னவில்கின்றேன் கேட்டரு ளிதுவே. 13

என்னுயிர்க் குயிராந் தெய்வமே யென்னை
யெழுமையுங் காத்தரு ளிறைவா
என்னுளத் தினிக்குந் தீஞ்சுவைக் கனியே
யெனக்கறி வுணர்த்திய குருவே
என்னுடை யன்பே திருச்சிற்றம் பலத்தே
யெனக்கருள் புரிந்தமெய் யின்பே
என்னையீன் றெடுத்த தந்தையே யடியே
னிசைக்கின்றேன் கேட்கவிம் மொழியே. 14

பிள்ளைப் பெரு விண்ணப்பம்

கருணையா ரமுதே யென்னுயிர்க் குயிரே
கனிந்தசிற் றம்பலக் கனியே
வருணமா மறையின் மெய்ப்பொரு ளாகி
வயங்கிய வள்ளலே யன்பர்

தெருணிறை யுளத்தே திகழ்தனித் தலைமைத்
தெய்வமே திருவருட் சிவமே
தருணமென் ஞெருமைத் தந்தையே தாயே
தரித்தருள் திருச்செவிக் கிதுவே. 1

என்னையாண் டருளி யென்பிழை பொறுத்த
இறைவனே திருச்சிற்றம் பலத்தே
என்னையாண் டஞ்சே லுனக்குநல் லருளிங்
கிருது மென்றவென் குருவே
என்னைவே றெண்ணு துள்ளதே யுணர்த்தி
எனக்குளே விளங்குபே ரொளியே
என்னையீன் றளித்த தந்தையே விரைந்திங்
கேற்றருள் திருச்செவிக் கிதுவே. 2

மலத்திலே கிடந்தேன் றனையெடுத் தருளி
மன்னிய வடிவளித் தறிஞர்
குலத்திலே பயிலுந் தரமுமிங் கெனக்குக்
கொடுத்துளே விளங்குசற் குருவே
பலத்திலே சிற்றம் பலத்திலே பொன்னம்
பலத்திலே யன்பர்தம் அறிவாங்
தலத்திலே யோங்குந் தலைவனே யெனது
தந்தையே கேட்கவென் மொழியே. 3

எட்டரும் பொருளே திருச்சிற்றம் பலத்தே
இலகிய விறைவனே யுலகிற்
பட்டினி யுற்ருர் பசித்தனர் களையால்
பரதவிக் கின்றன ரென்றே

ஓட்டிய பிறராற் கேட்டபோ தெல்லாம்
உளம்பகி ரெனநடுக் குற்றேன்
இட்டவிவ் வுலகிற் பசியெனி லெந்தாய்
என்னுள நடுங்குவ தியல்பே. 4

கருத்துவே ருகிக் கோயிலிற் புகுந்துன்
காட்சியைக் கண்டபோ தெல்லாம்
வருத்தமே யடைந்தேன் பயத்தொடுந் திரும்பி
வந்துநொந் திளைத்தன னெந்தாய்
நிருத்தனே நின்னைத் துதித்தபோ தெல்லாம்
நெகிழ்ச்சியில் லாமையால் நடுங்கிப்
பருத்தவென் னுடம்பைப் பார்த்திடா தஞ்சிப்
படுத்தது மையநீ யறிவாய். 5

புன்புலா லுடம்பி னசுத்தமு மிதனிற்
புகுந்துநா னிருக்கின்ற புணர்ப்பும்
என்பொலா மணியே யெண்ணிநா னெண்ணி
ஏங்கிய வேக்கநீ யறிவாய்
வன்புலா லுண்ணு மனிதரைக் கண்டு
மயங்கியுள் நடுங்கியாற் றுமல்
என்பெலாங் கருக இளைத்தன னந்த
இளைப்பையு மையநீ யறிவாய். 6

அருளினை யளிக்கு மப்பனே யுலகில்
அன்புளார் வலிந்தெனக் கீந்த
பொருளினை வாங்கிப் போனபோதெல்லாம்
புழுங்கிய புழுக்கநீ யறிவாய்

மருளுமப் பொருளைச் சாலகத் தெறிந்து
மனமிக விளைத்ததும் பொருளால்
இருளுறு மெனநா னுளநடுங் கியதும்
எந்தைநின் றிருவுள மறியும். 7

போருளிலே யுலக மிருப்பதா தலினல்
புரிந்துநா மொருவர்பாற் பலகால்
மருவினுற் பொருளி னிச்சையாற் பலகால்
மருவுகின் ருனெனக் கருதி
வெருவுவ ரெனநா னஞ்சியெவ் விடத்தும்
மேவிலே னெந்தைநீ யறிவாய்
ஒருவுமப் பொருளை நினைத்தபோ தெல்லாம்
உவட்டினே னிதுவுநீ யறிவாய். 8

தேட்டிலே மிகுந்த சென்னையி லிருந்தாற்
சிறுகுறு மென்றுளம் பயந்தே
நாட்டிலே சிறிய வூர்ப்புறங் களிலே
நண்ணினே னூர்ப்புற மடுத்த
காட்டிலே பருக்கைக் கல்லிலே புன்செய்க்
களத்திலே திரிந்துற்ற விளைப்பை
ஏட்டிலே யெழுத முடியுமோ விவைகள்
எந்தைநீ யறிந்தது தானே. 9

பிதிர்ந்தமண் ணுடம்பை மறைத்திட வலியார்
பின்முன்னேக் காதுமேல் நோக்கி
அதிர்ந்திட நடந்த போதெலாம் பயந்தேன்
அவர்புகன் றிட்டதீ மொழிகள்

பொதிந்திரு செவியிற் புகுந்தொறும் பயந்தேன்
புண்ணியா நின்றுதி யெனுமோர்
முதிர்ந்ததீங் கனியைக் கண்டிலேன் வேர்த்து
முறிந்தகாய் கண்டுளந் தளர்ந்தேன். 10

வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன் பசியினா லிளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின் றோரென்
நேருறக் கண்டுளந் துடித்தேன்
ஈடின்மா னிகளா யேழைக ளாய்நெஞ்
சிளைத்தவர் தமைக்கண்டே யிளைத்தேன் 11

நலிதரு சிறிய தெய்வமென் றையோ
நாட்டிலே பலபெயர் நாட்டிப்
பலிதர ஆடு பன்றிகுக் குடங்கள்
பலிக்கடா முதலிய வுயிரைப்
பொலிவுறக் கொண்டே போகவுங் கண்டே
புந்திநொந் துளநடுக் குற்றேன்
கலியுறு சிறிய தெய்வவெங் கோயில்
கண்டகா லத்திலும் பயந்தேன், 12

துண்ணெனக் கொடியோர் பிறவுயிர் கொல்லத்
தொடங்கிய போதெலாம் பயந்தேன்
கண்ணினாலையோ பிறவுயிர் பதைக்கக்
கண்டகா லத்திலும் பதைத்தேன்

மண்ணினில் வலையுந் தூண்டிலுங் கண்ணி
வகைகளுங் கண்டபோ தெல்லாம்
எண்ணியென் னுள்ள நடுங்கிய நடுக்கம்
எந்தைநின் திருவுள மறியும். 13

நடுநிலை யில்லாக் கூட்டத்தைக் கருணை
நண்ணிடா வரையரை நாளுங்
கெடுநிலை நினைக்குஞ் சிற்றதி காரக்
கேடரைப் பொய்யலாற் கிளத்தாப்
படுநிலை யவரைப் பார்த்தபோ தெல்லாம்
பயந்தனன் சுத்தசன் மார்க்கம்
விடுநிலை யுலக நடையெலாங் கண்டே
வெருவினேன் வெருவினே னெந்தாய். 14

காட்டுய ரணைமே லிருக்கவும் பயந்தேன்
காலின்மேற் கால்வைக்கப் பயந்தேன்
பாட்டயல் கேட்கப் பாடவும் பயந்தேன்
பஞ்சணை படுக்கவும் பயந்தேன்
நாட்டிய வுயர்ந்த திண்ணைமே லிருந்து
நன்குறக் களித்துக்கால் கீழே
நீட்டவும் பயந்தே னீட்டிப் பேசுதலை
நினைக்கவும் பயந்தன னெந்தாய். 15

ஐயநா னுடும் பருவத்திற் றுனே
அடுத்தநன் னேயனோ டப்பா
பொய்யுல காசை யெனக்கிலை யுனக்கென்
புகலென வவனுமங் கிசைந்தே

மெய்யுறத் துறப்போ மென்றுபோய் நினது
மெய்யருள் மீட்டிட மீண்டேம்
துய்யநின் னுள்ள மறிந்ததே யெந்தாய்
இன்றுநான் சொல்லுவ தென்னே. 16

ஆரண முரைத்த வரைப்பெலாம் பலவாம்
ஆகம முரைவரைப் பெல்லாம்
காரண நினது திருவருட் செங்கோல்
கணிப்பருங் களிப்பிலே யோங்கி
நாரணர் முதலோர் போற்றிட விளங்கி
நடக்கின்ற பெருமைநா னறிந்துந்
தாரணி யிடையித் துன்பமா திகளாற்
றனையனேன் றளருத லழகோ. 17

சித்திக ளெல்லாம் வல்லதோர் ஞானத்
திருச்சபை தன்னிலே திகழுஞ்
சத்திக ளெல்லாஞ் சத்தர்க ளெல்லாந்
தழைத்திடத் தனியருட் செங்கோல்
சத்திய ஞானம் விளக்கியே நடத்துந்
தனிமுதற் றந்தையே தலைவா
பித்திய லுடையே னெனினுநின் றனக்கே
பிள்ளைநான் வாடுத லழகோ. 18

சாற்றுபே ரண்டப பகுதிக ளனைத்துந்
தனித்தனி யவற்றுளே நிரம்பித்
தோற்றுமா பிண்டப் பகுதிக ளனைத்துஞ்
ஜோதியால் விளக்கியா னந்த

ஆற்றிலே நனைத்து வளர்த்திடும் பொதுவில்
அரும்பெருந் தந்தையே யின்பப்
பேற்றிலே விழைந்தேன் றலைவநின் றனக்கே
பிள்ளைநான் பேதுற லழகோ. 19

வருமுயி ரிரக்கம் பற்றியே யுலக
வழக்கிலென் மனஞ்சென்ற தோறும்
வெருவிநின் னடிக்கே விண்ணப்பித் திருந்தேன்
விண்ணப்பஞ் செய்கின்றே னின்றும்
உருவவென் னுயிர்தா னுயிரிரக் கந்தான்
ஒன்றதே யிரண்டிலை இரக்கம்
ஒருவிலென் னுயிரு மொருவும் என்னுள்ளத்
தொருவனே நின்பதத் தாணை. 20

என்னையு மிரக்கந் தன்னையு மொன்றாய்
இருக்கவே யிசைவித்திவ் வுலகில்
மன்னிவாழ் வுறவே வருவித்த கருணை
வள்ளல்நீ நினக்கிது விடயம்
பன்னலென் னடியே னுயினும் பிள்ளைப்
பாங்கினு லுரைக்கின்றே னெந்தாய்
இன்னவா றெனநீ சொன்னவா றியற்று
திருந்ததோ ரிறையுமிங் கிலையே. 21

தன்னைநே ரில்லாத் தந்தையே யுலகிற்
றந்தையர் தங்களை யழைத்தே
சொன்னசொன் மறுத்தே மக்கடம் மனம்போஞ்
சூழலே போகின்று ரடியேன்

என்னைநீ யுணர்த்தல் யாதது மலையின்
இலக்கெனக் கொள்கின்றேன் னல்லாற்
பின்னையோ ரிறையு மறுத்ததொன் றுண்டோ
பெரியநின் னாணைநா னறியேன். 22

திருவளர் திருவம் பலத்திலே யந்நாள்
செப்பிய மெய்ம்மொழிப் பொருளும்
உருவளர் திருமந் திரத்திரு முறையால்
உணர்த்திய மெய்ம்மொழிப் பொருளுங்
கருவள ரடியே னுளத்திலே நின்று
காட்டிய மெய்ம்மொழிப் பொருளும்
மருவியென் னுளத்தே நம்பிநா னிருக்கும்
வண்ணமுந் திருவுள மறியும். 23

பன்னிரண் டாண்டு தொடங்கிநா னிற்றைப்
பகல்வரை யடைந்தவை யெல்லாம்
உன்னிநின் றுரைத்தா லுலப்புறு ததனல்
ஒருசில வுரைத்தன னெனினும்
என்னுளத் தகத்தும் புறத்துமுட் புறத்தும்
இயல்புறப் புறத்தினும் விளங்கி
மன்னிய ஜோதி யாவுநீ யறிந்த
வண்ணமே வகுப்பதென் னினக்கே. 24

இதுவரை யடியே னடைந்தவெம் பயமும்
இடர்களுந் துன்பமு மெல்லாம்
பொதுவளர் பொருளே பிறர்பொருட் டல்லாற்
புலையனேன் பொருட்டல விதுநின்

மதுவளர் மலர்ப்பொற் பதத்துணை யறிய
வகுத்தன னடியனேன் றனக்கே
எதிலுமோ ராசை யிலையிலை பயமும்
இடருமற் றிலையிலை யெந்தாய். 25

என்னள விலையே யென்னினும் பிறர்பால்
எய்திய கருணையால் எந்தாய்
உன்னுறு பயமு மிடருமென் றன்னை
உயிரொடுந் தின்கின்ற தந்தோ
இன்னுமென் றனக்கிவ் விடரொடு பயமும்
இருந்திடி லென்னுயிர் தரியா
தன்னையுங் குருவு மப்பனு மான
அமுதனே யளித்தரு ளனையே. 26

என்னுயிர்க் காத்தல் கடனுனக் கடியேன்
இசைத்தவிண் ணப்பமேற் றருளி
உன்னுமென் னுள்ளத் துறும்பய மிடர்கள்
உறுகண்மற் றிவையெலா மொழித்தே
நின்னரு ளமுத மளித்தென தெண்ணம்
நிரப்பியாட் கொள்ளுதல் வேண்டும்
மன்னுபொற் சபையில் வயங்கிய மணியே
வள்ளலே சிற்சபை வாழ்வே. 27

பரிக்கிலேன் பயமு மிடரும்வெந் துயரும்
பற்றறத் தவிர்த்தரு ளினிநான்
தரிக்கிலேன் சிறிதுந் தரிக்கிலே னுள்ளந்
தரிக்கிலேன் தரிக்கிலே னந்தோ

புரிக்கிலே சத்தை யகற்றியாட் கொள்ளும்
பொற்சபை யண்ணலே கருணை
வரிக்கணே ரின்ப வல்லியை மணந்த
வள்ளலே சிற்சபை வாழ்வே. 28

சுத்தசன்மார்க்க வேண்டுகோள்

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாநா னன்புசெயல் வேண்டும்
எப்பாரு மெப்பதமு மெங்கணுநான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேற் சுத்தசிவ மார்க்கந்
திகழ்ந்தோங்க அருட்ஜோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினு நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும்வேண் டுவனே. 1

அண்ணாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அழியாத தனிவடிவம் யானடைதல் வேண்டும்
கண்ணார நினையெங்குங் கண்டுவத்தல் வேண்டும்
காணாத காட்சியெலாங் கண்டுகொளல் வேண்டும்
பண்ணார நின்றனையே பாடியுறல் வேண்டும்
பரமானந் தப்பெருங்கூத் தாடியிடல் வேண்டும்
உண்ணாடி யுயிர்களுறுந் துயர்தவிர்த்தல் வேண்டும்
உனைப்பிரியா துறுகின்ற வுறவதுவேண் டுவனே. 2

அத்தாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அருட்பெருஞ்ஜோ தியைப்பெற்றே யகங்களித்தல் வேண்டும்
செத்தாரை மீட்டுமிங்கே யெழுப்பியிடல் வேண்டும்
திருச்சபைக்கே யடிமைகளாச் செய்வித்தல் வேண்டும்

ஒத்தாரு முயர்ந்தாருந் தாழ்ந்தாரு மெவரும்
ஒருமையுள ராகியுல கியல்நடத்தல் வேண்டும்
எத்தாலு மழியாத வடிவதிலே நானும்
எந்தாயு மொன்ருக வினிதுறல்வேண் டுவனே. 3

அச்சாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆறந்த நிலைகளெல்லா மறிந்தடைதல் வேண்டும்
எச்சார்பு மாகியுயிர்க் கிதம்புரிதல் வேண்டும்
எனையடுத்தார் தமக்கெல்லா மின்புதரல் வேண்டும்
இச்சாதி சமயவிகற் பங்களெலாந் தவிர்ந்தே
எவ்வுலகுஞ் சன்மார்க்கப் பொதுவடைதல் வேண்டும்
உச்சாதி யந்தமிலாத் திருவடிவில் யானும்
உடையாயுங் கலந்தோங்கு மொருமையும்வேண் டுவனே.

அருளாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அணுத்துணையுஞ் சினங்காம மடையாமை வேண்டும்
மருளாய வுலகமெலா மருணீங்கி ஞான
மன்றிடத்தே வள்ளலுனை வாழ்த்தியிடல் வேண்டும்
இருளாமை யுறல்வேண்டும் எனையடுத்தார் சுகம்வாய்ந்
திடல்வேண்டு மெவ்வுயிரு மின்படைதல் வேண்டும்
பொருளாமோர் திருவடிவி லுடையாயும் நானும்
புணர்ந்துகலந் தொன்ருகிப் பொருந்துதல்வேண் டுவனே. 5

ஆன்ம தரிசனம்

திருவெலாந் தருமோர் தெய்வமா மொருவன்
திருச்சிற்றம்பலந் திகழ் கின்ருன்
உருவெலா முணர்ச்சி யுடல்பொரு ளாவி
யுளவெலா மாங்கவன் றனக்கே

தெருவெலா மறியக் கொடுத்தனன் வேறு
செயலிலே னெனநினைத் திருந்தேன்
அருவெலா முடையாய் நீயறிந் ததுவே
யடிக்கடி யுரைப்பதென் னினக்கே. 1

உண்டதும் பொருந்தி யுவந்தது
முறங்கி யுணர்ந்தது முலகிய லுணர்வாற்
கண்டதுங் கருதிக் களித்ததுங் கலைகள்
கற்றதுங் கரைந்ததுங் காதல்
கொண்டது நின்னோ டன்றிநான் றனித்தென்
குறிப்பினிற் குறித்ததொன் றிலையே
ஒண்டகு முனது திருவுள மறிந்த
துரைப்பதென் னடிக்கடி யுனக்கே. 2

சாதியு மதமுஞ் சமயமுந் தவிர்ந்தேன்
சாத்திரக் குப்பையுந் தணந்தேன்
நீதியு நிலையுஞ் சத்தியப் பொருளு
நித்திய வாழ்க்கையுஞ் சுகமும்
ஆதியு நடுவு மந்தமு மெல்லா
அருட்பெருஞ் ஜோதியென் றறிந்தேன்
ஓதிய வனைத்து நீயறிந் ததுநா
னுரைப்பதென் னடிக்கடி யுனக்கே. 3

கள்ளவா தனையைக் களைந்தருள் நெறியைக்
காதலித் தொருமையிற் கலந்தே
உள்ளவா றிந்த வுலகெலாங் களிப்புற்
றோங்குத லென்றுவந் துறுமோ

வள்ளலே யதுகண்ட டடியனே னுள்ள
மகிழ்தலென் றேவெனத் துயர்ந்தேன்
ஒள்ளியோய் நினது திருவுள மறிந்த
துரைப்பதென் னடிக்கடி யுனக்கே. 4

சித்திவிளைவு

திருவுடையாய் சிற்சபைவாழ் சிவபதியே யெல்லாஞ்
செய்யவல்ல தனித்தலைமைச் சித்தசிகா மணியே
உருவுடையென் னுயிர்க்குயிரா யொளிர்கின்ற வொளியே
உன்னுதொறு மென்னுளத்தே யூறுகின்ற வமுதே
அருவுடைய பெருவெளியா யதுவிளங்கு வெளியாய்
அப்பாலு மாய்நிறைந்த அருட்பெருஞ் ஜோதியனே
மருவுடையாள் சிவகாம வல்லிமண வாளா
வந்தருள்க அருட்ஜோதி தந்தருள்க விரைந்தே. 1

மறப்பறியாப் பேரறிவில் வாய்த்தபெருஞ் சுகமே
மலைவறியா நிலைநிரம்ப வயங்கியசெம் பொருளே
இறப்பறியாத் திருநிலையி லென்னைவளர்த் தருளும்
என்னுடைய நற்றுயே யெந்தாயே நினது
சிறப்பறியா வுலகமெலாஞ் சிறப்பறிந்து கொளவே
சித்தசிகா மணியேநீ சித்தியெலாம் விளங்கப்
பிறப்பறியாப் பெருந்தவரும் வியப்பவந்து தருவாய்
பெருங்கருணை யரசேநீ தருந்தருண மிதுவே. 2

விழித்துவிழித் திமைத்தாலுஞ் சுடருதய மிலையேல்
விழிகள்விழித் திளைப்பதலால் விளைவொன்று மிலையே
மொழித்திறஞ்செய் தடிக்கடிநான் முடுகிமுயன் றாலும்
முன்னவநின் பெருங்கருணை முன்னிடலின் றெனிலோ

செழித்துறுநற் பயனெதுவோ திருவுளந்தா னிரங்கில்
சிறுதுரும்போ ரைந்தொழிலுஞ் செய்திடல்சத் தியமே
பழித்துரைப்பா ருரைக்கவெலாம் பசுபதிநின் செயலே
பரிந்தெனையும் பாடுவித்துப் பரிசுமகிழ்ந் தருளே. 3

பாவிமனக் குரங்காட்டம் பார்க்கமுடி யாதே
பதிவெறுத்தே னிதிவெறுத்தேன் பற்றனைத்துந் தவிர்த்தேன்
ஆவியுடல் பொருளையுன்பாற் கொடுத்தேனுன் னருட்பேர்
ஆசைமய மாகியுனை யடுத்துமுயல் கின்றேன்
கூவியெனை யாட்கொளநீ நினையாயோ நினது
குறிப்பறியேன் பற்பலகால் கூவியிளைக் கின்றேன்
தேவிசிவ காமவல்லி மகிழுமண வாளா
தெருணிறைவா னமுதளிக்குந் தருணமிது தானே. 4

காட்டையெலாங் கடந்துவிட்டே னாட்டையடைந் தனது
கடிநகர்ப்பொன் மதிற்காட்சி கண்குளிரக் கண்டேன்
கோட்டையெலாங் கொடிநாட்டிக் கோலமிடப் பார்த்தேன்
கோயிலின்மேல் வாயிலிலே குறைகளெலாந் தவிர்ந்தேன்
சேட்டையற்றுக் கருவியெலா மென்வசநின் றிடவே
சித்தியெலாம் பெற்றேனுன் திருச்சிற்றம் பலமேல்
பாட்டையெலாம் பாடுகின்றே னிதுதருணம் பதியே
பலந்தருமென் னுளந்தனிலே கலந்துநிறைந் தருளே

சித்தியெலாம் வல்லசிவ சித்தனுளங் கலந்தான்
செத்தாரை யெழுப்புகின்ற திருநாள்க ளடுத்த
இத்தினமே தொடங்கியழி யாதநிலை யடைதற்
கேற்றகுறி யேற்றவிடத் திசைந்தியல்கின் றனநாஞ்

சத்தியமே பெருவாழ்விற் பெருங்களிப்புற் றிடுதல்
சந்தேகித் தலையாதே சாற்றியவென் மொழியை
நித்தியவான் மொழியென்ன நினைந்துமகிழ்ந் தமைவாய்
நெஞ்சேநீ யஞ்சேலுன் எஞ்சேலஞ் சேலே. 6

வாதனைக் கழிவு

பொழுது விடிந்த தினிச்சிறிதும்
பொறுத்து முடியே னெனநின்றே
அழுது விழிக ணீர்துளும்பக்
கூவிக் கூவி யயர்கின்றேன்
பழுது தவிர்க்குந் திருச்செவிக்குட்
பட்ட திலையோ பலகாலும்
உழுது களைத்த மாடனையேன்
றுணைவே றறியே னுடையானே. 1

வேண்டா ருளரோ நின்னருளை
மேலோ ரன்றிக் கீழோரும்
ஈண்டார் வதற்கு வேண்டினரா
லின்று புதிதோ யான்வேண்டல்
தூண்டா விளக்கே திருப்பொதுவிற்
ஜோதி மணியே ஆறெடுமூன்
றுண்டா வதிலே முன்னென்னை
யாண்டாய் கருணை யளித்தருளே. 2

தேனே திருச்சிற் றம்பலத்திற்
றெள்ளா ரமுதே சிவஞான
வானே ஞான சித்தசிகா
மணியே யென்கண் மணியேயென்

ஊனே புகுந்தென் னுளங்கலந்த
வுடையா யடியே னுவந்திடநீ
தானே மகிழ்ந்து தந்தாயித்
தருணங் கைம்மா றறியேனே. 3

தந்தா யின்றுந் தருகின்றாய்
தருவாய் மேலுந் தனித்தலைமை
எந்தாய் நினது பெருங்கருணை
யென்னென் றுரைப்பே னிவ்வுலகிற்
சிந்தா குலந்தீர்த் தருளெனநான்
சிறிதே கூவு முன்னென்பால்
வந்தாய் கலந்து மகிழ்கின்றா
யெனது பொழுது வான்பொழுதே. 4

அநுபோக நிலயம

துன்பெலாந் தவிர்க்குந் திருச்சிற்றம் பலத்தே
ஜோதியுட் ஜோதியே யழியா
இன்பெலா மளிக்கு மிறைவனே யென்னை
யீன்றநற் றந்தையே தாயே
அன்பெலா மாகி நிறைந்ததோர் நிறைவே
யண்ணலே யினிப்பிரி வாற்றேன்
பொன்பதந் தருதற் கிதுதகு தருணம்
புணர்ந்தருள் புணர்ந்தரு ளெனையே, 1

ஏதுமொன் றறியாப் பேதையாம் பருவத்
தென்னையாட் கொண்டெனை யுவந்தே
ஓதுமுன் மொழியாற் பாடவே பணித்த
வொருவனே யென்னுயிர்த் துணைவா

வேதமும் பயனு மாகிய பொதுவில்
விளங்கிய விமலனே ஞான
போதகந் தருதற் கிதுதகு தருணம்
புணர்ந்தருள் புணர்ந்தரு ளெனையே. 2

களிப்புறு மடியேன் கையிலே கிடைத்த
கற்பகத் தீஞ்சுவைக் கனியே
வெளிப்புறத் தோங்கும் விளக்கமே
யகத்தே விளங்குமோர் விளக்கமே எனக்கே
ஒளிப்பிலா தன்றே யளித்தசிற் பொதுவி
லொருவனே இனிப்பிரி வாற்றேன்
புளிப்பற வினித்தற் கிதுதகு தருணம்
புணர்ந்தருள் புணர்ந்தரு ளெனையே. 3

தற்போத விழப்பு

நாடுகின்ற மறைகளெலா நாமறியோ மென்று
நாணியுரைத் தலமரவே நல்லமணி மன்றில்
ஆடுகின்ற சேவடிகண் டானந்தக் கடலில்
ஆடுமன்பர் போனமக்கும் அருள்கிடைத்த தெனினும்
வீடுகின்ற பிறர்சிறிது மறியாம லிருக்க
வேண்டுமென விருந்தவென்னை வெளியிலிழுத் திட்டு
வாடுகின்ற வகைபுரிந்த விதியைநினைந் தையோ
மனமாலை பாய்வதுகாண் மன்றினடத் தரசே. 1

அரிபிரம ருருத்திரரு மறிந்துகொள மாட்டா
தலமரவு மீதென்ன வதிசயமோ மலத்தில்
புரிபுழுவி லிழிந்தேனைப் பொருளாக்கி யருளாம்
பொருளளிக்கப் பெற்றனனிப் புதுமைபிற ரறியா

துரிமைபெற விருப்பனென வுள்ளிருந்த வென்னை
உலகறிய வெளியிலிழுத் தலகில்விருத் தியினால்
வரிதலையிட் டாட்டுகின்ற விதியைநினைந் தையோ
மனமாலை பாய்வதுகாண் மன்றினடத் தரசே. 2

அடிபிடித்துத் திரிகின்ற மறைகளெலாங் காணு
அருள்வடிவைக் காட்டிநம்மை யாண்டுகொண்ட கருணைக்
கொடிபிடித்த குருமணியைக் கூடுமட்டும் வேறோர்
குறிப்பின்றி யிருப்பமெனக் கொண்டகத்தே யிருந்தேன்
படிபித்த பலர்பலவும் பகர்ந்திடவிங் கெனைத்தான்
படுவழக்கிட் டுலகியலாம் வெளியிலிழுத் தலைத்தே
மடிபிடித்துப் பறிக்கவந்த விதியைநினைந் தையோ
மனமாலை பாய்வதுகாண் மன்றினடத் தரசே. 3

பிரிவாற்றுமை

கருணைப் பெருக்கே யானந்தக்
கனியே யென்னுட் கலந்தொளிருந்
தருணச் சுடரே யெனையீன்ற
தாயே யென்னைத் தந்தோனே
வருணப் படிக மணிமலையே
மன்றி னடஞ்செய் வாழ்வேநற்
பொருண்மெய்ப் பதியே யினித்துயரம்
பொறுக்க மாட்டேன் கண்டாயே. 1

நாட்டுக் கிசைந்த மணிமன்றில்
ஞானவடிவாய் நடஞ்செ யருள்
ஆட்டுக் கிசைந்த பெருங்கருணை
யப்பா வென்ற னரசேயென்

பாட்டுக் கிசைந்த பதியேயோர்
பரமா னந்தப் பழமேமேல்
வீட்டுக் கிசைந்த விளக்கேயென்
விவேகம் விளங்க விளக்குகவே. 2

வேதந் தலைமேற் கொளவிரும்பி
வேண்டிப் பரவு நினதுமலர்ப்
பாதந் தலைமேற் சூட்டியெனைப்
பணிசெய் திடவும் பணித்தனைநான்
சாதந் தலைமே லெடுத்தொருவர்
தம்பின் செலவுந் தரமில்லேன்
ஏதந் தலைமேற் சுமந்தேனுக்
கிச்சீர் கொடுத்த தெவ்வாறே, 3

பொய்விட் டகலாப் புலைக்கொடியேன்
பொருட்டா விரவிற் போந்தொருநின்
கைவிட் டகலாப் பெரும்பொருளென்
கையிற்கொடுத்தே களிப்பித்தாய்
மைவிட் டகலா விழியின்ப
வல்லி மகிழு மணவாளா
மெய்விட் டகலா மனத்தவர்க்கு
வியப்பா முனது மெய்யருளே. 4

பாதி யிரவி லெழுந்தருளிப்
பாவி யேனை யெழுப்பியருட்
ஜோதி யளித்தென் னுள்ளகத்தே
சூழ்ந்து கலந்து துலங்குகின்றாய்

நீதி நடஞ்செய் பேரின்ப நிதிநான்
பெற்ற நெடும்பேற்றை
ஓதி முடியா தென்போலிவ்
வுலகம் பெறுதல் வேண்டுவனே. 5

பிரியேனென்றல்

அப்பாநான் பற்பலகா லறைவதென்னே யடியேன்
அச்சமெலாந் துன்பமெலா மறுத்துவிரைந் துவந்தே
இப்பாரி லிதுதருண மென்னையடைந் தருளி
எண்ணமெலா முடித்தென்னை யேன்றுகொளா யெனிலோ
தப்பாம லுயிர்விடுவேன் சத்தியஞ்சத் தியநின்
தாளிணைக ளறிகவிது தயவுடையோ யெவர்க்குந்
துப்பாகித் துணையாகித் துலங்கியமெய்த் துணையே
சுத்தசிவா னந்தவருட் ஜோதிநடத் தரசே. 1

படமுடியா தினித்துயரம் படமுடியா தரசே
பட்டதெலாம் போதுமிந்தப் பயந்தீர்த்திப் பொழுதென்
உடலுயிரா தியவெல்லாம் நீயெடுத்துக் கொண்டுன்
உடலுயிரா தியவெல்லாம் உவந்தெனக்கே யளிப்பாய்
வடலுறுசிற் றம்பலத்தே வாழ்வாயென் கண்ணுண்
மணியேயென் குருமணியே மாணிக்க மணியே
நடனசிகா மணியேயென் னவமணியே ஞான
நன்மணியே பொன்மணியே நடராஜ மணியே. 2

வாழையடி வாழையென வந்ததிருக் கூட்ட
மரபினில்யா னொருவனன்றோ வகையறியே னிந்த
ஏழைபடும் பாடுனக்குத் திருவுளச்சம் மதமோ
இதுதகுமோ இதுமுறையோ இதுதருமந் தானோ

மாழைமணிப் பொதுநடஞ்செய் வள்ளால்யா னுனக்கு
மகனலனோ நீயெனக்கு வாய்த்ததந்தை யலையோ
கோழையுல குயிர்த்துயர மினிப்பொறுக்க மாட்டேன்
கொடுத்தருணின் னருளொளியைக்கொடுத்தருளிப் பொழுதே.

உன்னைமறந் திடுவேனோ மறப்பறியேன் மறந்தால்
உயிர்விடுவேன் கணந்தரியே னுன்னாணை யிதுநீ
என்னைமறந் திடுவாயோ மறந்திடுவா யெனில்யான்
என்னசெய்வே னெங்குறுவே னெவர்க்குரைப்பே னெந்தாய்
அன்னையினுந் தயவுடையாய் நீமறந்தா யெனினும்
அகிலமெலா மளித்திடுநின் னருள்மறவா தென்றே
இன்னுமிகக் களித்திங்கே யிருக்கின்றேன் மறவேல்
இதுதருணம் அருட்ஜோதி யெனக்குவிரைந் தருளே.

தெருவிடத்தே விளையாடித் திரிந்தவெனை வலிந்தே
சிவமாலை யணிந்தனையச் சிறுவயதி லிந்த
உருவிடத்தே நினக்கிருந்த ஆசையெலா மிந்நாள்
ஓடியதோ புதியவொரு வுருவுவிழைந் ததுவோ
கருவிடத்தே எனைக்காத்த காவலனே யுனது
கால்பிடித்தேன் விடுவேனோ கைப்பிடியன் றதுதான்
வெருவிடத்தென் னுயிர்ப்பிடிகா ணுயிரகன்று லன்றி
விடமாட்டேன் விடமாட்டேன் விடமாட்டே னனே.

பெரியனருட் பெருஞ்ஜோதிப் பெருங்கருணைப் பெருமான்
பெரும்புகழைப் பேசுதலே பெரும்பேறென் றுணர்ந்தேன்
துரியநிலத் தவரெல்லாந் துதிக்கின்றா ரேழை
துதித்தல்பெரி தலவிங்கே துதித்திடவென் றெழுந்த

அரியபெரும் பேராசைக் கடல்பெரிதே யதுவென்
அளவுகடந் திழுக்கின்ற தாதலினால் விரைந்தே
உரியவரு ளமுதளித்தே நினைத்துதிப்பித் தருள்வாய்
உலகமெலாங் களித்தோங்க வோங்குநடத் தரசே. 6

கவலையெலாந் தவிர்ந்துமிகக் களிப்பினொடு நினையே
கைகுவித்துக் கண்களினீர் கனிந்துசுரந் திடவே
சவலைமனச் சலனமெலாந் தீர்ந்துசுக மயமாய்த்
தானேதா னாகியின்பத் தனிநடஞ்செய் யிணைத்தாள்
தவலருஞ்சீர்ச் சொன்மாலை வனைந்துவனைந் தணிந்து
தானாகி நானாடத் தருணமிது தானே
குவலயத்தா ரதிசயிக்க வெழுந்தருளி வருவாய்
குருவேயென் குற்றமெலாங் குணமாக்கொண் டவனே.

திருவருட்பேறு

படிகளெலா மேற்றுவித்தீர் பரமநடம் புரியும்
பதியையடை வித்திரப் பதிநடுவே விளங்குங்
கொடிகணிறை மணிமாடக் கோயிலையுங் காட்டிக்
கொடுத்திரக் கோயிலிலே கோபுரவா யிலிலே
செடிகளிலாத் திருக்கதவந் திறப்பித்துக் காட்டித்
திரும்பவுநீர் மூடுவித்தீர் திறந்திடுதல் வேண்டும்
அடிகளிது தருணமினி யரைக்கணமுந் தரியேன்
அம்பலத்தே நடம்புரிவீர் வந்தருள்வீர் விரைந்தே. 1

பெட்டியிதி லுலவாத பெரும்பொருளுண் டிதுநீ
பெறுகவென வதுதிறக்கும் பெருந்திறவு கோலும்
எட்டிரண்டுந் தெரியாதே னென்கையிலே கொடுத்தீர்
இதுதருணந் திறந்ததனை யெடுக்கமுயல் கின்றேன்

அட்டிசெய நினையாதி ரரைக்கணமுந் தரியேன்
அரைக்கணத்துக் காயிரமா யிரங்கோடி யாக
வட்டியிட்டு நும்மிடத்தே வாங்குவனும் மாணே
மணிமன்றில் நடம்புரிவீர் வந்தருள்வீர் விரைந்தே. 2

பரிகலத்தே திருவமுதம் படைத்துணவே பணித்தீர்
பணித்தபின்னே யென்னுடைய பக்குவம்பார்க் கின்றீர்
இருநிலத்தே பசித்தவர்க்குப் பசிநீக்க வல்லார்
இவர்சிறிய ரிவர்பெரிய ரென்னல்வழக் கலவே
உரிமையுந்றே னுமக்கேயென் னுள்ளமன்றே யறிந்தீர்
உடல்பொருளா விகளையெலா மும்மதெனக் கொண்டீர்
திரிவகத்தே நான்வருந்தப் பார்த்திருத்த லழகோ
சிவகாம வல்லிமகிழ் திருநடநா யகரே. 3

கோளறிந்த பெருந்தவர்தங் குறிப்பறிந்தே யுதவுங்
கொடையாளா சிவகாமக் கொடிக்கிசைந்த கொழுநா
ஆளறிந்திங் கெனையாண்ட வரசேயென் னமுதே
அம்பலத்தே நடம்புரியு மரும்பெருஞ் ஜோதியனே
தாளறிந்தே னின்வர வுசத்தியஞ்சத் தியமே
சந்தேக மில்லையந்தத் தனித்ததிரு வரவின்
நாளறிந்து கொளல்வேண்டு நவிலுகநீ யெனது
நனவிடையா யினுமன்றிக் கனவிடையா யினுமே. 4

அன்றெனக்கு நீயுரைத்த தருணமிது வெனவே
அறிந்திருக்கின் றேனடியே னாயினுமென் மனந்தான்
கன்றெனச்சென் றடிக்கடியுட் கலங்குகின்ற தரசே
கண்ணுடைய கரும்பேயென் கவலைமனக் கலக்கம்

பொன்றிடப்பே ரின்பவெள்ளம் பொங்கிடவிவ் வுலகிற்
புண்ணியர்க ளுளங்களிப்பப் பொருந்திவிளங் கிடநீ
இன்றெனக்கு வெளிப்படவென் னிதயமலர் மிசைநின்
றெழுந்தருளி யருள்வதெலா மினிதருள்க விரைந்தே.

இதுதருண நமையாளற் கெழுந்தருளுந் தருணம்
இனித்தடையொன் றிலைகண்டா யென்மனனே நீதான்
மதுவிழுமோ ரீப்போல மயங்காதே கயங்கி
வாடாதே மலங்காதே மலர்ந்துமகிழ்ந் திருப்பாய்
குதுகலமே யிதுதொடங்கிக் குறைவிலைகா ணமது
குருவாணை நமதுபெருங் குலதெய்வத் தாணை
பொதுவில்நடம் புரிகின்ற புண்ணியனு ரெனக்குட்
புணர்ந்துரைத்த திருவார்த்தை பொன்வார்த்தை யிதுவே. 6

சிவானந்தத்தழுந்தல்

காரண காரியக் கல்விக ளெல்லாங்
கற்பித்தென் னுள்ளே கலந்துகொண் டென்னை
நாரணர் நான்முகர் போற்றமே லேற்றி
நாதாந்த நாட்டுக்கோர் நாயக னாக்கிப்
பூரண மாமின்பம் பொங்கித் ததும்பப்
புத்தமு தாமருட் போனகந் தந்தே
ஆரண வீதியி லாடச்செய் தீரே
அருட்பெருஞ் ஜோதியென் னுண்டவர் நீரே. 1

இத்தனை யென்றுநின் றெண்ணிட வொண்ணு
என்பிழை யாவையு மன்பினிற் கொண்டே
சத்திய மாஞ்சிவ சித்தியை யென்பால்
தந்தெனை யாவரும் வந்தனை செயவே

நித்திய ஞக்கிமெய்ச் சுத்தசன் மார்க்க
நீதியை யோதியோர் சுத்தபோ தாந்த
அத்தனி விதியி லாடச்செய் திரே
அருட்பெருஞ் ஜோதியென் ஞண்டவர் நீரே. 2

இருளான மலமறுத் திகபரங் கண்டே
எல்லா வுயிர்களு மின்புற்று வாழ
மருளான பற்பல மார்க்கங்க ளெல்லாம்
வழிதுறை தெரியாமல் மண்மூடிப் போகத்
தெருளான சுத்தசன் மார்க்கம தொன்றே
சிறந்து விளங்கவோர் சிற்சபை காட்டும்
அருளான வீதியி லாடச்செய் திரே
அருட்பெருஞ் ஜோதியென் ஞண்டவர் நீரே. 3

இருட்சாதி தத்துவச் சாத்திரக் குப்பை
இருவாய்ப் புன்செயி லெருவாக்கிப் போட்டு
மருட்சாதி சமயங்கள் மதங்களாச் சிரம
வழக்கெலாங் குழிக்கொட்டி மண்மூடிப்போட்டுத்
தெருட்சாருஞ் சுத்தசன் மார்க்கநன் வீதி
சிறந்து விளங்கவோர் சிற்சபை காட்டும்
அருட்ஜோதி விதியி லாடச்செய் திரே
அருட்பெருஞ் ஜோதியென் ஞண்டவர் நீரே. 4

திருமுன் விண்ணப்பம்

மாழை மாமணிப் பொதுநடம்
புரிகின்ற வள்ளலே யழிகின்ற
வாழை வான்பழச் சுவையெனப்
பத்தர்தம் மனத்துளே தித்திப்பே

ஏழை நாயினேன் விண்ணப்பந்
திருச்செவிக் கேற்றருள் செயல்வேண்டும்
கோழை மானிடப் பிறப்பிதி
லுன்னருட் குருவுருக் கொளுமாறே. 1

திட்டு பொன்னணி யம்பலத்
தருணடஞ் செய்துயிர்த் திரட்கின்பங்
காட்டு கின்றதோர் கருணையங்
கடவுணின் கழலிணை கருதாதே
நீட்டு கின்றவென் விண்ணப்பந்
திருச்செவி நேர்ந்தருள் செயல்வேண்டும்
வாட்டு மிவ்வுட லிம்மையே
யழிவுறு வளமடைந் திடுமாறே. 2

வாதனைக்கிரங்கல்

படமாட்டேன் றுயர்சிறிதும் படமாட்டே னினிநான்
பயப்படவு மாட்டேனுன் பதத்துணையே பிடித்தேன்
விடமாட்டே னெமாந்து விடமாட்டேன் கண்டீர்
மெய்ம்மையிது நும்மாணை விளம்பினனும் மடியேன்
கெடமாட்டேன் பிறர்மொழிகள் கேட்டிடவு மாட்டேன்
கிளரொளியம் பலத்தாடல் வளரொளிநும் மல்லால்
நடமாட்டே னென்னுளத்தே நான்சாக மாட்டேன்
நல்லதிரு வருளாலே நான்றுறு னேனே. 1

பாயிரமா மறைகளெலாம் பாடுகின்ற பாட்டுன்
பாட்டேயென் றறிந்துகொண்டேன் பரம்பொருளுன் பெருமை
ஆயிரமா யிரங்கோடி நாவுடையோ ரெனினும்
அணுத்துணையும் புகலரிதே லந்தோவிச் சிறியேன்

வாயிரங்கா வகைபுகலத் துணிந்தேனென் னுடைய
மனத்தாசை யொருகடலோ வெழுகடலிற் பெரிதே
சேயிரங்கா முனமெடுத்தே யணைத்திடுந்தா யனையாய்
திருச்சிற்றம் பலம்விளங்குஞ் சிவஞான குருவே. 2

கண்ணுடையீர் பெருங்கருணைக் கடலுடையீ ரெனது
கணக்கறிந்தீர் வழக்கறிந்தீர் களித்துவந்தன் றுரைத்தீர்
எண்ணுடையா ரெழுத்துடையா ரெல்லாரும் போற்ற
என்னிதய மலர்மிசைநின் றெழுந்தருளி வாமப்
பெண்ணுடைய மனங்களிக்கப் பேருலகங் களிக்கப்
பெத்தருமுத் தருமகிழப் பத்தரெலாம் பரவ
விண்ணுடைய வருட்ஜோதி விளையாடல் புரிய
வேண்டுமென்றே னென்பதன்முன் விரைந்திசைந்தி ரதற்கே.

கரும்பின்மிக வினிக்கின்ற கருணையமு தளித்தீர்
கண்ணனையீர் கனகசபை கருதியசிற் சபைமுன்
துரும்பின்மிகச் சிறியேனு னன்றுநின்று துயர்ந்தேன்
துயரேலென் றெல்லையிட்டீர் துரையேயவ் வெல்லை
விரும்புறவா யிற்றிதுதான் தருணமிந்தத் தருணம்
விரைந்தருள வேண்டுமென விளம்பிநின்றே னடியேன்
பெரும்பிழைக ளனைத்தினையும் பொறுத்தருளி யிந்நாள்
பெரிதளித்தீர் அருட்பெருமை பெற்றவளிற் பெரிதே.

அந்நாளி லடிச்சிறியே னம்பலவா யிலிலே
அருளைநினைந் தொருபுறத்தே யயர்ந்தழுது நின்றேன்
முன்னாளில் யான்புரிந்த பெருந்தவத்தா லெனக்கு
முகமலர்ந்து மொழிந்தவருண் மொழியைநினைந் தந்தச்

செந்நாளை யெதிர்பார்த்தே பன்னாளுங் களித்தேன்
சிந்தைமலர்ந் திருந்தேனச் செல்வமிகு திருநாள்
இந்நாளே யாதலினு லெனக்கருள்வி ரென்றேன்
என்பதன்முன் னளித்தீர்நும் அன்புலகிற் பெரிதே.

உண்மை கூறல்

திருந்துமென் னுள்ளத் திருக்கோயில் ஞான
சித்தி புரமெனச் சத்தியங் கண்டேன்
இருந்தருள் கின்றநீ ரென்னிரு கண்கள்
இன்புற வன்றுவந் தெழிலுருக் காட்டி
வருந்தலே யென்றெனைத் தேற்றிய வாறே
வள்ளலே யின்றுநும் வரவுகண் டல்லால்
அருந்தவர் நேரினும் பொருந்தவு மாட்டேன்
அருட்பெருஞ் ஜோதியி ராணைநும் மீதே. 1

மடுக்கநும் பேரருட் டண்ணமு தெனக்கே
மாலையுங் காலையு மத்தியா னத்துங்
கடுக்கு மிரவினும் யாமத்தும் விடியற்
காலையி னுந்தந்தென் கடும்பசி தீர்த்தே
எடுக்குநற் றுயொடு மிணைந்துநிற் கின்றீர்
இறையவ ரேயுமை யிங்குகண் டல்லால்
அடுக்கவிழ் கலையெடுத் துடுக்கவு மாட்டேன்
அருட்பெருஞ் ஜோதியி ராணைநும் மீதே. 2

அருள் விளக்க மாலை

அருள்விளக்கே யருட்சுடரே யருட்ஜோதிச் சிவமே
அருளமுதே யருணிறைவே யருள்வடிவப் பொருளே
இருள்கடிந்தென் னுளமுழுது மிடங்கொண்ட பதியே
என்னறிவே யென்னுயிரே யெனக்கினிய வுறவே
மருள்கடிந்த மாமணியே மாற்றறியாப் பொன்னே
மன்றில்நடம் புரிகின்ற மணவாளா எனக்கே
தெருளளித்த திருவாளா ஞானவுரு வாளா
தெய்வநடத் தரசேநான் செய்மொழியேற் றருளே.

கோடையிலே யிளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே யூறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே.
உகந்ததண்ணீ ரிடைமலர்ந்த சுகந்தமண மலரே.
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே,
ஆடையிலே யெனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற வரசேயென் அலங்கலணிந் தருளே, 2

அண்டவள வெவ்வளவோ அவ்வளவு மவற்றில்
அமைந்தசரா சரவளவெவ் வளவோஅவ் வளவும்
கண்டதுவா யாங்கவைகள் தனித்தனியே யகத்துங்
காண்புறத்து மகப்புறத்தும் புறப்புறத்தும் விளங்க
விண்டகுபே ரருட்ஜோதிப் பெருவெளிக்கு நடுவே
விளங்கியொரு பெருங்கருணைக் கொடிநாட்டி யருளாந்
தண்டகுமோர் தனிச்செங்கோல் நடத்திமன்றில் நடிக்குந்
தனியரசே யென்மாலை தாளிலணிந் தருளே. 3

நாட்டார்கள் சூழ்ந்துமதித் திடமணிமே டையிலே
நடுவிருக்க வென்றனையே நாட்டியபே ரிறைவா
பாட்டாளர் பாடுதொறும் பரிசளிக்குந் துரையே
பன்னுமறைப் பாட்டேமெய்ப் பாட்டினது பயனே
கூட்டாளா சிவகாமக் கொடிக்கிசைந்த கொழுநா
கோவேயென் கணவாவென் குரவாவெண் குணவா
நீட்டாளர் புகழ்ந்தேத்த மணிமன்றில் நடிக்கும்
நீதிநடத் தரசேயென் நெடுமொழி கொண் டருளே.

தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்தொன்றாக் கூட்டிச்
சர்க்கரையுங் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே
தனித்தநறுந் தேன்பெய்து பசும்பாலுந் தேங்கின்
தனிப்பாலுஞ் சேர்த்தொருதீம் பருப்பிடியும் விரவி
இனித்தநறு நெய்யளைந்தே யிளஞ்சூட்டி னிறக்கி
எடுத்தசுவைக் கட்டியினு மினித்திடுந்தெள் ளமுதே
அனித்தமறத் திருப்பொதுவில் விளங்குநடத் தரசே
அடிமலர்க்கென் சொல்லணியா மலங்கலணிந் தருளே. 5

கண்களிக்கப் புகைசிறிதுங் காட்டாதே புருவக்
கலைநடுவே விளங்குகின்ற கற்பூர விளக்கே
பண்களிக்கப் பாடுகின்ற பாட்டில்விளை சுகமே
பத்தருளே தித்திக்கப் பழுத்ததனிப் பழமே
மண்களிக்க வான்களிக்க மணந்தசிவ காம
வல்லியென மறைகளெலாம் வாழ்த்துகின்ற வாமப்
பெண்களிக்கப் பொதுநடஞ்செய் நடத்தரசே நினது
பெரும்புகழ்சே வடிகளுக்கென் னரும்புமணிந் தருளே. 6

சாதிகுலஞ் சமயமெலாந் தவிர்த்தெனைமே லேற்றித்
தனித்ததிரு வமுதளித்த தனித்தலைமைப் பொருளே
ஆதிநடுக் கடைகாட்டா தண்டபகி ரண்டம்
ஆருயிர்க ளகம்புறமற் றனைத்துநிறை யொளியே
ஓதியுணர்ந் தவரெல்லா மெனைக்கேட்க வெனைத்தான்
ஓதாம லுணர்ந்துணர்வா முருவுறச்செய் யுறவே
சோதிமய மாய்விளங்கித் தனிப்பொதுவில் நடிக்குந்
தூயநடத் தரசேயென் சொல்லுமணிந் தருளே. 7

அறையாத மிகுபெருங்காற் றடித்தாலுஞ் சிறிதும்
அசையாதே யவியாதே யண்டபகி ரண்டத்
துறையாவும் பிண்டவகைத் துறைமுழுதும் விளங்கத்
தூண்டாதே விளங்குகின்ற ஜோதிமணி விளக்கே
மறையாதே குறையாதே களங்கமுமில் லாதே
மயக்காதே பனிக்காதே வயங்குகின்ற மதியே
இறையாயெவ் வுயிரகத்து மகப்புறத்தும் புறத்தும்
இலங்குநடத் தரசேயென் னிசையுமணிந் தருளே. 8

பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும் படிக்கப்
பக்கநின்று கேட்டாலும் பரிந்துணர்ந் தாலும்
ஈர்த்தாலும் பிடித்தாலுங் கட்டியணைத் தாலும்
இத்தனைக்குந் தித்திக்கும் இனித்தசுவைக் கரும்பே
வேர்த்தாவி மயங்காது கனிந்தநறுங் கனியே
மெய்ம்மையறி வானந்தம் விளக்குமரு ளமுதே
தீர்த்தாவென் றன்பரெலாந் தொழப்பொதுவில் நடிக்குந்
தெய்வநடத் தரசேயென் சிறுமொழியேற் றருளே.

கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளுங் களிப்பே
காணார்க்குங் கண்டவர்க்குங் கண்ணளிக்குங் கண்ணே
வல்லார்க்கு மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கு மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே
நரர்களுக்குஞ் சுரர்களுக்கும் நலங்கொடுக்கு நலமே
எல்லார்க்கும் பொதுவில்நட மிடுகின்ற சிவமே
என்னரசே யான்புகலு மிசையுமணிந் தருளே. 10

காட்சியுறக் கண்களுக்குக் களிக்கும்வண்ண முளதாய்க்
கையுமெய்யும் பரிசிக்கச் சுகபரிசத் ததுவாய்ச்
சூழ்ச்சியுற நாசிக்குச் சுகந்தஞ்செய் குவதாய்த்
தூயசெவிக் கினியதொரு சுகநாதத் ததுவாய்
மாட்சியுற வாய்க்கினிய பெருஞ்சுவை யீகுவதாய்
மறைமுடிமேல் பழுத்தெனக்கு வாய்த்தபெரும் பழமே
ஆட்சியுற வருளொளியாற் றிருச்சிற்றம் பலத்தே
ஆடல்புரி யரசேயென் அலங்கலணிந் தருளே. 11

தாய்முதலோ ரோடுசிறு பருவத்திற் றில்லைத்
தலத்திடையே திரைதூக்கத் தரிசித்த போது
வேய்வகைமேற் காட்டாதே யென்றனக்கே யெல்லாம்
வெளியாகக் காட்டியவென் மெய்யுறவாம் பொருளே
காய்வகையில் லாதுளத்தே கனிந்தநறுங் கனியே
கனவிடத்தும் நனவிடத்து மெனைப்பிரியாக் களிப்பே
தூய்வகையோர் போற்றமணி மன்றினடம் புரியுஞ்
ஜோதிநடத் தரசேயென் சொல்லுமணிந் தருளே. 12

ஓங்கியவோர் துணையின்றிப் பாதியிர வதிலே
உயர்ந்தவொட்டுத் திண்ணையிலே படுத்தகடைச் சிறியேன்
தூங்கிமிகப் புரண்டுவிழத் தரையில் விழா தெனையே
தூக்கியெடுத் தணைத்துக்கீழ்க் கிடத்தியமெய்த் துணையே
தாங்கியவென் னுயிர்க்கின்பந் தந்தபெருந் தகையே
சற்குருவே நான்செய்பெருந் தவப்பயனும் பொருளே
ஏங்கியவென் னேக்கமெலாந் தவிர்த்தருளிப் பொதுவில்
இலங்குநடத் தரசேயென் னிசையுமணிந் தருளே. 13

நினைத்த நன்மையெலாம் யாமறிந்தோம் நினையே
நேர்காண வந்தனமென் றென்முடிமேல் மலர்க்கால்
தானிலக்க வைத்தருளிப் படுத்திடநான் செருக்கித்
தாள்களெடுத் தப்புறத்தே வைத்திடத்தா னகைத்தே
ஏனினைத்தா யிவ்வளவு சுதந்தரமென் மகனே
எனக்கிலையோ வென்றருளி யெனையாண்ட குருவே
தேனிலைத்த தீம்பாகே சர்க்கரையே கனியே
தெய்வநடத் தரசேயென் சிறுமொழியேற் றருளே.

மன்னுகின்ற பொன்வடிவு மந்திரமாம் வடிவும்
வான்வடிவும் கொடுத்தெனக்கு மணிமுடியுஞ் சூட்டிப்
பன்னுகின்ற தொழிலைந்துஞ் செய்திடவே பணித்துப்
பண்புறவென் னகம்புறமும் விளங்குகின்ற பதியே
உன்னுகின்ற தோறுமெனக் குள்ளமெலா மினித்தே
ஊறுகின்ற தெள்ளமுதே யொருதனிப்பே ரொளியே
மின்னுகின்ற மணிமன்றில் விளங்குநடத் தரசே
மெய்யுமணிந் தருள்வோயென் பொய்யுமணிந் தருளே.

மதமென்றுஞ் சமயமென்றுஞ் சாத்திரங்க ளென்றும்
மன்னுகின்ற தேவரென்றும் மற்றவர்கள் வாழும்
பதமென்றும் பதமடைந்த பத்தரனு பவிக்கப்
பட்டவனு பவங்களென்றும் பற்பலவா விரிந்த
விதமொன்றுந் தெரியாதே மயங்கியவென் றனக்கே
வெட்டவெளி யாயறிவித் திட்டவரு ளிறையே
சதமொன்றுஞ் சுத்தசிவ சன்மார்க்கப் பொதுவில்
தனிநடஞ்செய் யரசேயென் சாற்றுமணிந் தருளே.

கொலைபுரிவார் தவிரமற்றை யெல்லாரு நினது
குலத்தாரே நீயெனது குலத்துமுதன் மகனே
மலைவறவே சுதத்தசிவ சமரசசன் மார்க்கம்
வளரவளர்ந் திருக்கவென வாழ்த்தியவென் குருவே
நிலைவிழைவார் தமைக்காக்கு நித்தியனே யெல்லா
நிலையும்விளங் குறவருளில் நிறுத்தியசிற் குணனே
புலையறியாப் பெருந்தவர்கள் போற்றமணிப் பொதுவில்
புனிதநடத் தரசேயென் புகலுமணிந் தருளே. 17

உயிர்க்கொலையும் புலைப்புசிப்பு முடையவர்க ளெல்லாம்
உறவினத்தா ரல்லரவர் புறவினத்தா ரவர்க்குப்
பயிர்ப்புறுமோர் பசிதவிர்த்தல் மாத்திரமே புரிக
பரிந்துமற்றைப் பண்புரையேல் நண்புதவே லிங்கே
நயப்புறுசன் மார்க்கமவ ரடையளவு மிதுதான்
நம்மாணை யென்றெனக்கு நவின்றவரு ளிறையே
மயர்ப்பறுமெய்த் தவர்போற்றப் பொதுவில்நடம் புரியும்
மாநடத்தென் னரசேயென் மாலையணிந் தருளே. 18

வன்புடையார் கொலைகண்டு புலையுண்பார் சிறிதும்
மரபினரன் றாதலினால் வகுத்தவவ ரளவில்
அன்புடைய வென்மகனே பசிதவிர்த்தல் புரிக
அன்றியருட் செயலொன்றுஞ் செயத்துணியே லென்றே
இன்புறவென் றனக்கிசைத்த வென்குருவே யெனைத்தான்
ஈன்றதனித் தந்தையே தாயேயென் னிறையே
துன்பறுமெய்த் தவர்சூழ்ந்து போற்றுதிருப் பொதுவில்
தூயநடத் தரசேயென் சொல்லுமணிந் தருளே. 19

அருளுடையா ரெல்லாருஞ் சமரசசன் மார்க்கம்
அடைந்தவரே யாதலினா லவருடனே கூடித்
தெருளுடைய வருணெறியிற் களித்துவிளை யாடிச்
செழித்திடுக வாழ்கவெனச் செப்பியசற் குருவே
பொருளுடைய பெருங்கருணைப் பூரணமெய்ச் சிவமே
போதாந்த முதலாறும் நிறைந்தொளிரு மொளியே
மருளுடையார் தமக்கமத னிக்கமணிம் பொதுவில்
வயங்குநடத் தரசேயென் மாலையுமேற் றருளே. 20

வெம்மாலைச் சிறுவரொடும் விளையாடித் திரியும்
மிகச்சிறிய பருவத்தே வியந்துநினை நமது
பெம்மானென் றடிகுறித்துப் பாடும்வகை புரிந்த
பெருமானே நான்செய்த பெருந்தவமெய்ப் பயனே
செம்மாந்த சிறியேனைச் சிறுநெறியிற் சிறிதுஞ்
செலுத்தாமற் பெருநெறியிற் செலுத்தியநற் றுணையே
அம்மானே யென்னுவிக் கானபெரும் பொருளே
அம்பலத்தென் னரசேயென் அலங்கலணிந் தருளே.

அண்டவகை யெவ்வளவோ வவ்வளவு மவற்றில்
அமைந்தவுயி ரெவ்வளவோ வவ்வளவு மவைகள்
கண்டபொரு ளெவ்வளவோ வவ்வளவு மவற்றில்
கலந்தகலப் பெவ்வளவோ வவ்வளவு நிறைந்தே
விண்டகுமோர் நாதவெளி சுத்தவெளி மோன
வெளிஞான வெளிமுதலாம் வெளிகளெலாம் நிரம்பிக்
கொண்டதுவாய் விளங்குகின்ற சுத்தசிவ மயமே
குலவுநடத் தரசேயென் குற்றமுங்கொண் டருளே.

உண்ணுகின்ற வூண்வெறுத்து வற்றியும்புற் றெழுந்தும்
ஒருகோடிப் பெருந்தலைவ ராங்காங்கே வருந்திப்
பண்ணுகின்ற பெருந்தவத்துங் கிடைப்பரிதாய்ச் சிறிய
பயல்களினுஞ் சிறியேற்குக் கிடைத்தபெரும் பதியே
நண்ணுகின்ற பெருங்கருணை யமுதளித்தென் னுளத்தே
நானுகித் தானுகி யமர்ந்தருளி நான்றுன்
எண்ணுகின்ற படியெல்லா மருள்கின்ற சிவமே
இலங்குநடத் தரசேயென் இசையுமணிந் தருளே. 23

கொள்ளைவினைக் கூட்டுறவால் கூட்டியபல் சமயக்
கூட்டமுமக் கூட்டத்தே கூவுகின்ற கலையுங்
கள்ளமுறு மக்கலைகள் காட்டியபல் கதியுங்
காட்சிகளுங் காட்சிதரு கடவுளரு மெல்லாம்
பிள்ளைவிளை யாட்டெனநன் கறிவித்திங் கெனையே
பிள்ளையெனக் கொண்டுபிள்ளைப் பெயரிட்ட பதியே
தள்ளரிய மெய்யடியார் போற்றமணி மன்றில்
தனிநடஞ்செய் யரசேயென் சாற்றுமணிந் தருளே.

நான்முகர்நல் லுருத்திரர்கள் நாரணரிந் திரர்கள்
நவிலருகர் புத்தர்முதன் மதத்தலைவ ரெல்லாம்
வான்முகத்திற் றோன்றியரு ளொளிசிறிதே யடைந்து
வானகத்தும் வையகத்தும் மனம்போன படியே
தேன்முகந்துண் டவரெனவே விளையாடா நின்ற
சிறுபிள்ளைக் கூட்டமென அருட்பெருஞ்ஜோதி யினற்
றுன்மிகக்கண் டறிகவெனச் சாற்றியசற் குருவே
சபையினிடத் தரசேயென் சாற்றுமணிந் தருளே.

காலையிலே யென்றனக்கே கிடைத்தபெரும் பொருளே
களிப்பேயென் கருத்தகத்தே கனிந்தநறுங் கனியே
மேலையிலே யிம்மையிலே வொருமையிலே தவத்தால்
மேவுகின்ற பெரும்பயனும் விளைவையெலாந் தருமச்
சாலையிலே யொருபகலிற் றந்ததனிப் பதியே
சமரசசன் மார்க்கசங்கத் தலையமர்ந்த நிதியே
மாலையிலே சிறந்தமொழி மாலையணிந் தாடும்
மாநடத்தென் னரசேயென் மாலையணிந் தருளே. 26

ஆதியிலே யெனையாண்டென் னறிவகத்தே யமர்ந்த
அப்பாவென் னன்பேயென் னுருயிரே யமுதே
வீதியிலே விளையாடித் திரிந்தபிள்ளைப் பருவ
மிகப்பெரிய பருவமென வியந்தருளி யருளாஞ்
ஜோதியிலே விழைவுறச்செய் தினியமொழி மாலை
தொடுத்திடச்செய் தணிந்துகொண்ட துரையேசிற்பொதுவாம்
நீதியிலே நிறைந்தநடத் தரசேயின் றடியேன்
நிகழ்த்தியசொன் மாலையுநீ திகழ்த்தியணிந் தருளே.

தலைகாலிங் கறியாதே திரிந்தசிறி யேனைத்
தான்வலிந்தாட் கொண்டருளித் தடைமுழுதுந் தவிர்த்தே
மலைவறுமெய் யறிவளித்தே யருளமுத மருத்தி
வல்லபசத் திகளெல்லா மருவியிடப் புரிந்து
நிலையுறவே தானுமடி யேனுமொரு வடிவாய்
நிறையநிறை வித்துயர்ந்த நிலையதன்மே லமர்த்தி
அலர்தலைப்பே ரருட்ஜோதி யரசுகொடுத் தருளி
ஆடுகின்ற வரசேயென் அலங்கலணிந் தருளே. 28

வரம்பில் வியப்பு

பொன்புனை புயனு மயனுமற் றவரும்
புகலரும் பெரியவோர் நிலையில்
இன்புரு வாகி யருளொடும் விளங்கி
இயற்றலே யாதியைந் தொழிலுந்
தன்பொதுச் சமுகத் தைவர்க ளியற்றத்
தனியர சியற்றுமோர் தலைவன்
அன்பெனும் குடிசை நுழைந்தன னுனல்
அவன்றனை மறுப்பவர் யாரே. 1

மன்பதை வகுக்கும் பிரமர்நா ரணர்கள்
மன்னுருத் திரர்களே முதலாம்
ஒன்பது கோடித் தலைவர்க ளாங்காங்
குறுபெருந் தொழில்பல வியற்றி
இன்புறச் சிறிதே கடைக்கணித் தருளி
இலங்குமோ ரிறைவனின் றடியேன்
அன்பெனுங் குடிசை நுழைந்தன னந்தோ
அவன்றனை மறுப்பவர் யாரே. 2

கருமுதற் கருவாய்க் கருவினுட் கருவாய்க்
கருவெலாங் காட்டுமோர் கருவாய்க்
குருமுதற் குருவாய்க் குருவெலாங் கிடைத்த
கொள்கையாய்க் கொள்கையோ டளவா
அருமுத லருவா யல்லவா யப்பால்
அருட்பெருஞ் ஜோதியாங் தலைவன்
மருவியென் னுளத்திற் புகுந்தன னவன்றன்
வண்மையைத் தடுப்பவர் யாரே. 3

திருவடிப் புகழ்ச்சி

வானிருக்கும் பிரமர்களு நாரணரும் பிறரும்
மாதவம்பன் னாட்புரிந்து மணிமாட நடுவே
தேனிருக்கு மலரணைமேற் பளிக்கறையி னூடே
திருவடிசேர்த் தருள்கவெனச் செப்பிவருந் திடவும்
நானிருக்கும் குடிசையிலே வலிந்துநுழைந் தெனக்கே
நல்லதிரு வருளமுத நல்கியதன் றியுமென்
ஊனிருக்கும் குடிசையினு முவந்துநுழைந் தெளியேன்
உள்ளமெனுஞ் சிறுகுடிசை யுள்ளுநுழைந் தனையே.

பற்றியபற் றனைத்தினையும் பற்றறவிட் டறிவாம்
பான்மையொன்றே வடிவாகிப் பழுத்தபெரி யவரும்
உற்றறிதற் கரியவொரு பெருவெளிமேல் வெளியில்
ஓங்குமணி மேடையமர்ந் தோங்கியசே வடிகள்
பெற்றறியப் பெயர்த்துவந்தென் கருத்தனைத்துங் கொடுத்தே
பிறவாம லிறவாமற் பிறங்கவைத்த வரசே
கொற்றமுளேன் றனக்கிதுதான் போதாதோ கொடியேன்
குடிசையிலுங் கோணாதே குலவிநுழைந் தனையே. 2

கருவியொடு கரணமெலாங் கடந்துகடந் ததன்மேற்
காட்சியெலாங் கடந்ததன்மேற் காணாது கடந்து
ஒருநிலையி னனுபவமே யுருவாகிப் பழுத்த
உணர்ச்சியினுங் காணாம லோங்குமொரு வெளியில்
மருவியதோர் மேடையிலே வயங்கியசே வடிகள்
மலர்த்திவந்தென் கருத்தனைத்தும் வழங்கினையின் புறவே
குருமணியே யென்னரசே யெனக்கிதுபோ தாதோ
கொடும்புலையேன் குடிசையினுங் குலவினுமைந் தனையே. 3

உடையானை யருட்ஜோதி யுருவி னானை
ஓவானை மூவானை யுலவா வின்பக்
கொடையானை யென்குறைதீர்த் தென்னை யாண்டு
கொண்டானைக் கொல்லாமை குறித்தி டாரை
அடையானைத் திருச்சிற்றம் பலத்தி னானை
அடியேனுக் கருளமுத மளிக்க வேபின்
இடையானை யென்னுளை யெல்லாந் தந்த
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 4

உள்ளானைக் கதவுதிறந் துள்ளே காண
உளவெனக்கே யுரைத்தானை யுணரார் பாட்டைக்
கொள்ளானை யென்பாட்டைக் குறிக்கொண் டானைக்
கொல்லாமை விரதமெனக் கொண்டார் தம்மைத்
தள்ளானைக் கொலைபுலையைத் தள்ளா தாரைத்
தழுவானை யான்புரிந்த தவறு நோக்கி
எள்ளானை யிடர்தவிர்த்திங் கென்னை யாண்ட
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 5

ஆன்ருனை யறிவானை யறிவி லானை
அருட்பெருஞ் ஜோதியினுனை யலர்ந்த ஜோதி
மூன்ருனை யிரண்டானை யொன்று னுனை
முன்னுனைப் பின்னுனை மூட நெஞ்சில்
தோன்ருனைத் தூயருளே தோன்றி னுனைச்
சுத்தசிவ சன்மார்க்கந் துலங்க வென்னை
ஈன்ருனை யெல்லாமா யல்லா தானை
எம்மானைக் கண்டுகளித் திருக்கின்றேனே. 6

மருணெறிசேர் மலவுடம்பை
யழியாத விமல
வடிவாக்கி யெல்லாஞ்செய்
வல்லசித்தாம் பொருளைத்
தருணமது தெரிந்தெனக்குத்
தானேவந் தளித்த
தயாநிதியை யெனையீன்ற
தந்தையை யென்ருயைப்
பொருணிறைசிற் றம்பலத்தே
விளங்குகின்ற பதியைப்
புகலரிதாஞ் சுத்தசிவ
பூரணமெய்ச் சுகத்தைக்
கருணையருட் பெருஞ்ஜோதிக்
கடவுளையென் கண்ணுற்
கண்டுகொண்டேன் களிந்துகொண்டேன்
கலந்துகொண்டேன் களித்தே. 7

சிதத்திலே யூறித் தெளிந்ததெள் ளமுதைச்
சித்தெலாம் வல்லமெய்ச் சிவத்தைப்
பதத்திலே பழுத்த தனிப்பெரும் பழத்தைப்
பரம்பர வாழ்வையெம் பதியை
மதத்திலே மயங்கா மதியிலே விளைந்த
மருந்தைமா மந்திரந் தன்னை
இதத்திலே யென்னை யிருத்தியாட் கொண்ட
இறைவனைக் கண்டுகொண் டேனே. 8

சமயமு மதமுங் கடந்ததோர் ஞான
சபைநடம் புரிகின்ற தனியைத்
தமையறிந் தவருட் சார்ந்தமெய்ச் சார்பைச்
சத்துவ நித்தசற் குருவை
அமையவென் மனத்தைத் திருத்திநல் லருளா
ரமுதளித் தமர்ந்தவற் புதத்தை
நிமலநிர்க் குணத்தைச் சிற்குணாகார
நீதியைக் கண்டுகொண் டேனே. 9

உத்தர ஞான சித்திமா புரத்தின்
ஓங்கிய வொருபெரும் பதியை
உத்தரஞான சிதம்பர வொளியை
உண்மையை யொருதனி யுணர்வை
உத்தர ஞான நடம்புரி கின்ற
ஒருவனை யுலகெலாம் வழுத்தும்
உத்தர ஞான சுத்தசன் மார்க்கம்
ஓதியைக் கண்டுகொண் டேனே. 10

திருவடி நிலை

உலகுபல் கோடி கோடிக ளிடங்கொ
ளுலப்பிலா வண்டத்தின் பகுதி
அலகுகாண் பரிய பெரியகூட் டத்த
வளவையெலாம் புறத்திறைச் சார்பில்
விலகுறு வகுவிற் கோடியி லொருகூற்
றிருந்தென விருந்தன மிடைந்தே
இலகுபொற் பொதுவி னடம்புரி
கருணை யிணையடிச் சமுகத்தோ ரிடத்தே. 1

தடையுறுப் பிரமன் விண்டுருத்
திரன்மயேச்சுரன் சதாசிவன் விந்து
நடையுறுப் பிரம முயர்பரா சத்தி
நவில்பர சிவமெனு மிவர்கள்
இடையுறுத் திருச்சிற் றம்பலத் தாடு
மிடதுகாற் கடைவிர லகத்தின்
கடையுறு துகளென் றறிந்தன னதன்மேற்
கண்டனன் திருவடி நிலையே. 2

பேசுமோங் கார மிறதாய்ப் பேசாப்
பெரியவோங் காரமே முதலாய்
ஏசறு மங்க முபாங்கம்வே றங்க
மென்றவற் றவணவ ணிசைந்த
மாசறு சத்தி சத்தராண் டமைத்து
மன்னதி காரமைந் தியற்றத்
தேசுசெய் தணிபொன் னம்பலத்
தாடு மென்பராற் றிருவடி நிலையே. 3

பரைதரு சுத்த நிலைமுத லிதப்
பதிவரை நிறுவியாங் கதன்மேல்
உரைதர வொண்ணு வெறுவெளி
வெட்ட வெறுவெளி யெனவுல குணர்ந்த
புரையறு மின்ப வனுபவந் தரற்கோற்
திருவுருக் கொண்டுபொற் பொதுவில்
திரையறு மின்ப நடம்புரி கின்ற
வென்பராற் றிருவடி நிலையே. 4

பரசிவ நிலை

அருட்ஜோதித் தெய்வமெனை யாண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே யாடுகின்ற வானந்தத் தெய்வம்
பொருட்சாரு மறைகளெலாம் போற்றுகின்ற தெய்வம்
போதாந்தத் தெய்வமுயர் நாதாந்தத் தெய்வம்
இருட்பாடு நீக்கியொளி யீந்தருளுந் தெய்வம்
எண்ணியநா னெண்ணியவா றெனக்கருளுந் தெய்வம்
தெருட்பாட லுவந்தெனையுஞ் சிவமாக்குந் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம். 1

எல்லாஞ்செய் வல்லதெய்வ மெங்குநிறை தெய்வம்
என்னுயிரிற் கலந்தெனக்கே யின்பநல்குந் தெய்வம்
நல்லார்க்கு நல்லதெய்வம் நடுவான தெய்வம்
நற்சபையி லாடுகின்ற நடராஜத் தெய்வம்
கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளுந் தெய்வம்
காரணமாந் தெய்வமருட் பூரணமாந் தெய்வம்
செல்லாத நிலைகளெலாஞ் செல்லுகின்ற தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்.

தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம்
தன்னைநிக ரில்லாத தனித்தலைமைத் தெய்வம்
வாயார வாழ்த்துகின்றோர் மனத்தமர்ந்த தெய்வம்
மலரடியென் சென்னிமிசை வைத்தபெருந் தெய்வம்
காயாது கனியாகிக் கலந்தினிக்குந் தெய்வம்
கருணைநிதித் தெய்வமுற்றுங் காட்டுவிக்குந் தெய்வம்
சேயாக வெனைவளர்க்குந் தெய்வமகா தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்.

இச்சையெலா மெனக்களித்தே யெனைக்கலந்த தெய்வம்
இறந்தவர்க ளனைவரையு மெழுப்புகின்ற தெய்வம்
எச்சமயத் தெய்வமுந்தா னெனநிறைந்த தெய்வம்
எல்லாஞ்செய் வல்லதெய்வ மெனதுகுல தெய்வம்
பிச்சகற்றும் பெருந்தெய்வஞ் சிவகாமி யெனுமோர்
பெண்கொண்ட தெய்வமெங்குங் கண்கண்ட தெய்வம்
செச்சைமல ரெனவிளங்குந் திருமேனித் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம். 4

தூண்டாத மணிவிளக்காய்த் துலங்குகின்ற தெய்வம்
துரியதெய்வ மரியதெய்வம் பெரியபெருந் தெய்வம்
மாண்டாரை யெழுப்புகின்ற மருந்தான தெய்வம்
மாணிக்க வல்லியையோர் வலத்தில்வைத்த தெய்வம்
ஆண்டாரை யாண்டதெய்வம் அருட்ஜோதித் தெய்வம்
ஆகமவே தாதியெலா மறிவரிதாந் தெய்வம்
தீண்டாத வெளியில்வளர் தீண்டாத தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்.

சத்தியமாந் தனித்தெய்வந் தடையறியாத் தெய்வம்
சத்திகளெல் லாம்விளங்கத் தானோங்குந் தெய்வம்
நித்தியதன் மயமாகி நின்றதெய்வ மெல்லா
நிலைகளுந்தன் னருள்வெளியில் நிலைக்கவைத்த தெய்வம்
பத்திவலைப் படுகின்ற தெய்வமெனக் கெல்லாப்
பரிசுமளித் தழியாத பதத்தில்வைத்த தெய்வம்
சித்தியெலாந் தருந்தெய்வஞ் சித்தாந்தத் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்.

திருநடப் புகழ்ச்சி

உடுத்ததுகி லவிழ்த்துவிரித் தொருதரையிற் றனித்தே
உன்னுது முன்னியுளத் துறுகலக்கத் தோடே
படுத்தயர்ந்த சிறியேன்ற னருகணைந்து மகனே
பயமுனக்கென் னென்றென்னைப் பரிந்துதிருக் கரத்தால்
அடுத்தணைத்துக் கொண்டெடுத்துப் போய்ப்பிறிதோ ரிடத்தே
அமர்த்திநகைத் தருளியவென் னுண்டவனே யரசே
தொடுத்தணியென் மொழிமாலை யணிந்துகொண்டென் னுளத்
சுத்தநடம் புரிகின்ற சித்தசிகா மணியே. [தே

படிப்படக்கிக் கேள்வியெலாம் பற்றறவிட் டடக்கிப்
பார்த்திடலு மடக்கியுறும் பரிசமெலா மடக்கித்
தடிப்புறுமூண் சுவையடக்கிக் கந்தமெலா மடக்கிச்
சாதிமதஞ் சமயமெனுஞ் சழக்கையும்விட் டடக்கி
மடிப்படக்கி நின்றாலும் நில்லேனு னெனவே
வனக்குரங்கும் வியப்பவென்றன் மனக்குரங்கு குதித்த
துடிப்படக்கி யாட்கொண்ட துரையேயென் னுளத்தே
சுத்தநடம் புரிகின்ற சித்தசிகா மணியே. 2

பணிந்தறியே னன்புடனே பாடுதலு மறியேன்
படித்தறியேன் கேட்டறியேன் பத்தியிற்பூ மாலை
அணிந்தறியேன் மனமுருகக் கண்களினீர் பெருக
அழுதறியேன் தொழுதறியேன் அகங்காரஞ் சிறிதுந்
தணிந்தறியேன் தயவறியேன் சத்தியவா சகமுந்
தானறியே னுழுந்தடித்த தடியதுபோ லிருந்தேன்
துணிந்தெனக்குங் கருணைசெய்த துரையேயென் னுளத்தே
சுத்தநடம் புரிகின்ற சித்தசிகா மணியே. 3

தாங்காதே பசிபெருக்கிக் கடைநாய்போ லுலம்பித்
தவம்விடுத்தே யவந்தொடுத்தே தனித்துண்டு வயிறும்
வீங்காதே லெழுந்திருக்கேன் வீங்கிவெடித் திடல்போல்
விம்முமெனி லெழுந்துடனே வெறுந்தடிபோல் விழுந்தே
வாங்காது தூங்கியதோர் வழக்கமுடை யேனை
வலிந்தடிமை கொண்டருளி மறப்பொழித்தெந் நாளுந்
தூங்காதே விழிக்கவைத்த துரையேயென் னுளத்தே
சுத்தநடம் புரிகின்ற சித்தசிகா மணியே. 4

பற்றறுகை

ஆடகப்பொற் சபைநடுவே நாடகஞ்செய் தருளும்
அம்மையென் னப்பாவென் னையாவென் னரசே
ஏடகத்தே யெழுதாத மறைகளெலாங் களித்தே
என்னுளத்தே யெழுதுவித்த வென்னுரிமைப் பதியே
பாடகக்கால் மடந்தையரு மைந்தருஞ்சன் மார்க்கப்
பயன்பெறநல் லருளளித்த பரம்பரனே மாயைக்
காடகத்தை வளஞ்செறிந்த நாடகமாப் புரிந்த
கருணையனே சிற்சபையிற் கனிந்தநறுங் கனியே.

திருவருட் பெருமை

விரைசேர் பொன்மலரே யதின் மேவிய செந்தேனே
கரைசேர் முக்கனியே கனி யிற்சுவை யின்பயனே
பரைசே ருள்ளொளியே பெரும் பற்றம்பல நடஞ்செய்
அரசே தந்தனையே யரு ளாரமு தந்தனையே. 1

துப்பார் செஞ்சடையா யருட் ஜோதி சுகக்கடலே
செப்பா மேனிலைக்கே சிறி யேனைச் செலுத்தியவா
எப்பா லும்புகழும் பொது வின்ப நடம்புரியும்
அப்பா தந்தனையே யரு ளாரமு தந்தனையே. 2

தேனுய்த் தீம்பழமாய்ச் சுவை சேர்கரும் பாயமுதம்
தானு யன்பருளே யிலிக் கின்ற தனிப்பொருளே
வானுய்க் காலனலாய்ப் புன லாயதில் வாழ்புவியாய்
ஆனுய் தந்தனையே யரு ளாரமு தந்தனையே. 3

உபதேச உண்மை

கண்ணே கண்மணியே-கருத்-தேகருத் தின்கனிவே
விண்ணே விண்ணிறைவே-சிவ-மேதனி மெய்ப்பொருளே
தண்ணே ரொண்மதியே-யெனைத்-தந்த தயாநிதியே
உண்ணே ருள்ளொளியே-யெனக்-குண்மை யுரைத்தருளே

வளியே வெண்ணெருப்பே-குளிர்-மாமதி யேகனலே
வெளியே மெய்ப்பொருளே-பொருள்-மேவிய மேனிலையே
அளியே யற்புதமே-யமு-தேயறி வேயரசே
ஒளியே யுத்தமனே-யெனக்-குண்மை யுரைத்தருளே. 2

அன்பே யென்னரசே-திரு-வம்பலத் தாரமுதே
என்பே யுள்ளுருகக்-கலந்-தென்னு ளிருந்தவனே
இன்பே யென்னறிவே-பர-மேசிவ மேயெனவே
உன்பே ரோதுகின்றேன்-எனக்-குண்மை யுரைத்தருளே

நன்று லுங்கடந்தே-யொளிர்-ஞான சபாபதியே
பொன்று ருஞ்சபையாய்-அருட்-பூரண புண்ணியனே
என்று லாவதொன்றும்-உனக்-கில்லையெனினு மெந்தாய்
உன்னுல் வாழுகின்றேன்-எனக்-குண்மையுரைத்தருளே

கைம்மாறின்மை

போதுதான் வீணே போக்கிப்
புலையனேன் புரிந்த பொல்லாத்
தீதுதான் பொறுத்த வுன்றன்
றிருவருட் பெருமைக் கந்தோ
ஏதுதான் புரிவே னேகோ
வென்னென்று புகழ்வேன் ஞான
மாதுதா விடங்கொண் டோங்க
வயங்குமா மன்று ளானே. 1

இருமையு மொருமை தன்னில்
ஈந்தனை யெந்தா யுன்றன்
பெருமையென் னென்று நான்றுன்
பேசுவேன் பேத மின்றி
உரிமையால் யானும் நீயும்
ஒன்றெனக் கலந்து கொண்ட
ஒருமையை நினைக்கின் றேனென்
னுள்ளகங் குழைக்கின் றேனே. 2

வேண்டுகோள்

பங்கமோ ரணுவும் பற்றிடா வறிவாற்
பற்றிய பெற்றியா ருளத்தே
தங்குமோர் ஜோதித் தனிப்பெருங் கருணைத்
தரந்திகழ் சத்தியத் தலைவா
துங்கமுற் றழியா நிலைதரு மியற்கைத்
தொன்மையாஞ் சுத்தசன் மார்க்கச்
சங்கநின் றேத்துஞ் சத்திய ஞான
சபையவா வபயவாழ் வருளே. 1

இனித்தசெங் கரும்பி லெடுத்த தீஞ்சாற்றி
னிளம்பதப் பாகொடு தேனுங்
கனித்ததீங் கனியி னிரதமுங் கலந்து
கருத்தெலாங் களித்திட வுண்ட
மனித்தரு மமுத வுணவுகொண் டருந்தும்
வானநாட் டவர்களும் வியக்கத்
தனித்தமெய்ஞ் ஞான வமுதெனக் களித்த
தனியவா வினியவாழ் வருளே. 2

திருவருட்பேறு

அருளே பழுத்த சிவதருவி லளிந்த
பழந்தந் தடியேனைத்
தெருளே சிற்றம் பலவாநின்
செல்வப் பிள்ளை யாக்கினையே
மருளே முதலாந் தடையெல்லாந்
தீர்ந்தே னின்பால் வளர்கின்றேன்
பொருளே யினிநின் றனைப்பாடி
யாடும் வண்ண முரைத்தருளே. 1

மெய்யைப் பறியா நிலைக்கேற்றி
விளங்கு மமுத மிகவளித்தே
தெய்வப் பதியே சிவமேநின்
செல்வப் பிள்ளை யாக்கினையே
ஐவைப் பறிந்தேன் துரிசெல்லா
மறுத்தே னின்பால் வளர்கின்றேன்
பொய்வைப் படையேன் இவ்வுலகிற்
புரியும் பணியைப் புகன்றருளே 2

திருப்பள்ளி யெழுச்சி

பொழுது விடிந்ததென் னுள்ளமென் கமலம்
பூத்தது பொன்னொளி பொங்கிய தெங்குந்
தொழுதுநிற் கின்றனன் செய்பணி யெல்லாஞ்
சொல்லுதல் வேண்டுமென் வல்லசற் குருவே
முழுதுமா னுனென வாகம வேத
முறைகளெ லாமொழி கின்றமுன் னவனே
எழுதுத லரியசிர் அருட்பெருஞ் ஜோதி
என்தந்தை யேபள்ளி யெழுந்தருள் வாயே. 1

துற்குண மாயைபோய்த் தொலைந்தது ஞானந்
தோன்றிடப் பொன்னொளி தோற்றிய கதிர்தான்
சிற்குண வரைமிசை யுதயஞ்செய் ததுமா
சித்திகள் அடிப்பணிச் செய்திடச் சூழ்ந்த
நற்குண சன்மார்க்க சங்கத்தா ரெல்லாம்
நண்ணினர் தோத்திரம் பண்ணிநிற் கின்றார்
எற்குண வளித்தவென் அருட்பெருஞ் ஜோதி
என்னம்மை யேபள்ளி யெழுந்தருள் வாயே. 2

நிலந்தெளிந் ததுகண மழுங்கின சுவண
நீடொளி தோன்றிற் றுக் கோடொலிக் கின்ற
அலர்ந்தது தாமரை யாணவ விருள்போய்
அழிந்தது கழிந்தது மாயைமா விரவு
புலர்ந்தது தொண்டரோ டண்டருங் கூடிப்
போற்றியோ சிவசிவ போற்றியென் கின்றார்
இலங்குரு வளித்தவென் அருட்பெருஞ் ஜோதி
என்குரு வேபள்ளி யெழுந்தருள் வாயே. 3

மதம்பிடித் தவரெலாம் வாய்பிடிப் புண்டு
வந்துநிற் கின்றனர் கிவாய்திறப் பிப்பான்
கதம்பிடித் தவரெல்லாங் கடும்பிணி யாலே
கலங்கினர் சூழ்ந்தன ருலம்புறு கின்றார்
பதம்பிடித் தவரெல்லாம் அம்பலப் பாட்டே
பாடின ராடினர் பரவிநிற் கின்றார்
இதம்பிடித் தெனையாண்ட அருட்பெருஞ் ஜோதி
என்னைய னேபள்ளி யெழுந்தருள் வாயே. 4

மருளொடு மாயைபோய்த் தொலைந்தது மதங்கள்
வாய்மூடிக் கொண்டன மலர்ந்தது கமலம்
அருளொளி விளங்கிய தொருதிருச் சபையும்
அலங்கரிக் கின்றனர் துலங்கிவிற் றிருக்கத்
தெருளொடு பொருளுமேன் மேலெனக் களித்துச்
சித்தெலாஞ் செய்திடத் திருவருள் புரிந்தே
இருளறுத் தெனையாண்ட அருட்பெருஞ் ஜோதி
என்வள்ள லேபள்ளி யெழுந்தருள் வாயே. 5

அலங்கரிக் கின்றேமோர் திருச்சபை யதிலே
அமர்ந்தருட் ஜோதிகொண் டடிச்சிறி யோமை
வலம்பெறு பிறவாத வாழ்வில்வைத் திடவே
வாழ்த்துகின் றேமுன்னர் வணங்கிநிற் கின்றேம்
விலங்கிய திருளெலாம் விடிந்தது பொழுது
விரைந்தெமக் கருளுதல் வேண்டுமித் தருணம்
இலங்குநற் றருணமெம் அருட்பெருஞ் ஜோதி
எம்தந்தை யேபள்ளி யெழுந்தருள் வாயே. 6

திருவுந்தியார்

இரவு விடிந்த திணையடி வாய்த்தன
பரவி மகிழ்ந்தேனென் றுந்தீ பற
பாலமு துண்டேனென் றுந்தீ பற. 1

பொழுது விடிந்தது பொற்பதம் வாய்த்தன
தொழுது மகிழ்ந்தேனென் றுந்தீ பற
தூயவ னானேனென் றுந்தீ பற. 2

ஞான முதித்தது நாத மொலித்தது
தீனந் தவிர்ந்ததென் றுந்தீ பற
சிற்சபை கண்டேனென் றுந்தீ பற. 3

எந்தையைக் கண்டே னிடரெலா நீங்கினேன்
சிந்தை மகிழ்ந்தேனென் றுந்தீ பற
சித்திகள் பெற்றேனென் றுந்தீ பற. 4

முத்தியைப் பெற்றேனம் முத்தியினுல் ஞான
சித்தியை யுற்றேனென் றுந்தீ பற
சித்தனு மானேனென் றுந்தீ பற. 5

சரணடைதல்

இகத்தும் பரத்தும் பெரும்பலன்கள்
எல்லாம் பெறுவித் திம்மையிலே
முகத்து மூளத் துங் களிதுளும்ப
மூவா வின்ப நிலையமர்த்திச்
சகத்து ளவர்கண் மிகத்துதிப்பத்
தக்கோ னெனவைத் தென்னுடைய
அகத்தும் புறத்தும் விளங்குகின்றோய்
அடியே னுன்ற னடைக்கலமே. 1

இருளைக் கெடுத்தென் னெண்ணமெலாம்
இனிது முடிய நிரம்புவித்து
மருளைத் தொலைத்து மெய்ஞ்ஞான
வாழ்வை யடையும் வகைபுரிந்து
தெருளத் தெளிவித் தெல்லாஞ்செய்
சித்தி நிலையைச் சேர்வித்தே
அருளைக் கொடுத்தென் றனையாண்டோய்
அடியே னுன்ற னடைக்கலமே. 2

பற்றறுத்தல்

சத்தியஞ் சத்திய மருட்பெருஞ் ஜோதித்
தந்தையி ரேயெனைத் தாங்குகின் றீரே
உத்தம மாகுநுந் திருச்சமு கத்தென்
உடல்பொரு ளாவியை யுவப்புட னளித்தேன்
இத்தகை யுலகிடை யவைக்குமென் றனக்கும்
ஏதுஞ் சுதந்தர மில்லையிங் கினிநீர்
எத்தகை யாயினுஞ் செய்து கொள்கிற்பீர்
எனைப்பள்ளி யெழுப்பிமெய் யின்பந்தந் திரே. 1

தித்திக்கப் பேசிக் கசப்புள்ளே காட்டுந்
திருட்டுப்பேச் சன்றுநுந் திருவுள மறியும்
எத்திக்கு மறியவென் னுடல்பொரு ளாவி
என்பவை மூன்றுமுள் ளன்பொடு கொடுத்தேன்
சித்திக்கு மூலத்தைத் தெளிவித்தென் னுள்ளே
திருநடஞ் செய்கின்ற தேவரீர் தாமே
இத்திக்கி லெப்படி யேனுஞ்செய் கிற்பீர்
எனைப்பள்ளி யெழுப்பிமெய் யின்பந்தந் திரே. 2

புன்மார்க்கத் துள்ளும் புறத்தும் வேறாகிப்
புகன்றசொல் லன்றுநும் பொன்னடி கண்ட
சன்மார்க்க சங்கத்துச் சாதுக்கள் காணச்
சத்தியஞ் சத்தியஞ் சத்தியஞ் சொன்னேன்
தன்மார்க்கத் தென்னுட லாதியை நுமக்கே
தந்தனன் றிருவருட் சந்நிதி முன்னே
என்மார்க்கத் தெப்படி யேனுஞ்செய் கிற்பீர்
எனைப்பள்ளி யெழுப்பிமெய் யின்பந்தந் திரே. 3

தெய்வங்கள் பலபல சிந்தைசெய் வாரும்
சேர்கதி பலபல செப்புகின் றாரும்
பொய்வந்த கலைபல புகன்றிடு வாரும்
பொய்ச்சம யாதியை மெச்சுகின் றாரும்
மெய்வந்த திருவருள் விளக்கமொன் றில்லார்
மேல்வினை யறிகிலர் வீண்கழிக் கின்றார்
எய்வந்த துன்பொழித் தவர்க்கறி வருள்வீர்
எனைப்பள்ளி யெழுப்பிமெய் யின்பந்தந் திரே. 4

சிற்சத்தி துதி

ஜோதிக் கொடியே யானந்த
சொரூபக் கொடியே ஜோதியுருப்
பாதிக் கொடியே ஜோதிவலப்
பாகக் கொடியே யெனையீன்ற
ஆதிக் கொடியே யுலகுகட்டி
யாளுங் கொடியே சன்மார்க்க
நீதிக் கொடியே சிவகாம
நிமலக் கொடியே யருளுகவே. 1

பொருணற் கொடியே மாற்றுயர்ந்த
பொன்னங் கொடியே போதாந்த
வருணக் கொடியே யெல்லாஞ்செய்
வல்லா ரிடஞ்சேர் மணிக்கொடியே
தருணக் கொடியே யென்றனைத்
தாங்கி யோங்குந் தனிக்கொடியே
கருணைக் கொடியே ஞானசிவ
காமக்கொடியே யருளுகவே. 2

நீட்டுக் கொடியே சன்மார்க்க
நீதிக் கொடியே சிவகிதப்
பாட்டுக் கொடியே யிறைவர்வலப்
பாகக் கொடியே பரநாத
நாட்டுக் கோடியே யெனையீன்ற
ஞானக் கொடியே யென்னுறவாங்
கூட்டுக் கொடியே சிவ்காமக்
கொடியே யடியேற் கருளுகவே. 3

மாலக் கொடியேன் குற்றமெலா
மன்னித் தருளி மரணமெனுஞ்
சாலக் கொடியை யொடித்தெனக்குட்
சார்ந்து விளங்குந் தவக்கொடியே
காலக் கருவைக் கடந்தொளிர்வான்
கருவுங் கடந்து வயங்குகின்ற
கோலக் கொடியே சிவஞானக்
கொடியே யடியேற் கருளுகவே. 4

நாடாக் கொடிய மனமடக்கி
நல்ல மனத்தைக் கனிவித்துப்
பாடாப் பிழையைப் பொறுத்தெனக்கும்
பதமீந் தாண்ட பதிக்கொடியே
தேடாக் கரும சித்தியெலாந்
திகழத் தயவாற் றெரிவித்த
கோடாக் கொடியே சிவதருமக்
கொடியே யடியேற் கருளுகவே. 5

மணங்கொள் கொடிப்பூ முதனுன்கு
வகைப்பூ வடிவுள் வயங்குகின்ற
வணங்கொள் கொடியே யைம்பூவு
மலிய மலர்ந்த வான்கொடியே
கணங்கொள் யோக சித்தியெலாங்
காட்டுங் கொடியே கலங்காத
குணங்கொள் கொடியே சிவபோகக்
கொடியே யடியேற் கருளுகவே, 6

புலங்கொள் கொடிய மனம்போன
போக்கிற் போகா தெனைமீட்டு
நலங்கொள் கருணைச் சன்மார்க்க
நாட்டில் விடுத்த நற்கொடியே
வலங்கொண் ஞான சித்தியெலாம்
வயங்க விளங்கு மணிமன்றிற்
குலங்கொள் கொடியே மெய்ஞ்ஞானக்
கொடியே யடியேற் கருளுகவே. 7

வெறிக்குஞ் சமயக் குழியில்விழ
விரைந்தேன் றனை விழாதவகை
மறிக்கு மொருபே ரறிவளித்த
வள்ளற் கொடியே மனக்கொடியைச்
செறிக்கும் பெரிய ருளத்தோங்குந்
தெய்வக் கொடியே சிவஞானங்
குறிக்குங் கொடியே யானந்தக்
கொடியே யடியேற் கருளுகவே. 8

தடுத்த லரிய பயங்கவலை
யெல்லாந் தவிர்த்துக் கருத்துள்ளே
அடுத்த கொடியே யருளமுத
மளித்தென் றனைமெய் யருட்கரத்தால்
எடுத்த கொடியே சித்தியெலா
மிந்தா மகனே யென்றெனக்கே
கொடுத்த கொடியே யானந்தக்
கொடியே யடியேற் கருளுகவே. 9

ஏட்டைத் தவிர்த்தென் னெண்ணமெலா
மெய்த வொளிதந் தியான்வனைந்த
பாட்டைப் புனைந்து பசிசளித்த
பரம ஞானப் பதிக்கொடியே
நேட்டைத் தனிப்பே ரருட்செங்கோல்
செலுத்துஞ் சுத்த சன்மார்க்கக்
கோட்டைக் கொடியே யானந்தக்
கொடியே யடியேற் கருளுகவே. 10

பிரிவாற்றாமை

மாயையாற் கலங்கி வருந்தியபோதும்
வள்ளலுன் றன்னையே மதித்துன்
சாயையாப் பிறரைப் பார்த்ததே யல்லாற்
றலைவவே றெண்ணிய துண்டோ
தூயபொற் பாத மறியநா னறியேன்
துயரினிச் சிறிதுமிங் காற்றேன்
நாயகா வெனது மயக்கெலாந் தவிர்த்தே
நன்றருள் புரிவதுன் கடனே. 1

ஊடல்செய் மதமுஞ் சமயமு மிவற்றி
னுற்றகற் பனைகளுந் தவிர்த்தேன்
வாடல்செய் மனத்தாற் கலங்கினே னெனினு
மன்றினை மறந்ததிங் குண்டோ
ஆடல்செய் பாத மறியநா னறியேன்
ஐயவோ சிறிதுமிங் காற்றேன்
பாடல்செய் கின்றேன் படிக்கின்றே னெனக்குப்
பரிந்தருள் புரிவதுன் கடனே. 2

எம்மத நிலையு நின்னருள் நிலையி
லிலங்குத லறிந்தன னெல்லாஞ்
சம்மத மாக்கிக் கொள்கின்றே னல்லாற்
றனித்துவே றெண்ணிய துண்டோ
செம்மலுன் பாத மறியநா னறியேன்
சிறிதுமிங் கினித்துய ராற்றேன்
இம்மதிக் கடியேன் குறித்தவா றுள்ள
தியற்றுவ துன்கட னெந்தாய் 3

சிவபுண்ணியப்பேறு

மாலிலே மயங்கி மண்ணிலே யழித்த
வாழ்விலே வரவிலே மலஞ்சார்
தோலிலே யாசை வைத்துவிண் பொழுது
தொலைக்கின்றார் தொலைக்கநா னுனது
காலிலே யாசை வைத்தன னியுங்
கனவினு நனவினு மெனைநின்
பாலிலே வைத்தா யெனக்கிது போதும்
பண்ணிய தவம்பலித் ததுவே.

மதத்திலே சமய வழக்கிலே மாயை
மருட்டிலே யிருட்டிலே மறவாக்
கதத்திலே மனத்தை வைத்துவீண் பொழுது
கழிக்கின்றார் கழிக்கநா னுன்பூம்
பதத்திலே மனத்தை வைத்தன னீயும்
பரிந்தெனை யழிவிலா நல்ல
பதத்திலே வைத்தா யெனக்கிது போதும்
பண்ணிய தவம்பலித் ததுவே. 2

புரிசைவா னுலகிற் பூவுல கெல்லாம்
புண்ணிய உலகமாய்ப் பொலிந்தே
கரிசெலாந் தவிர்ந்து களிப்பெலா மடைந்து
கருத்தொடு வாழவுங் கருத்தின்
துரிசெலாந் தவிர்க்குஞ் சுத்தசன் மார்க்கந்
துலங்கவுந் திருவருட் ஜோதிப்
பரிசெலாம் பெற்றே னெனக்கிது போதும்
பண்ணிய தவம்பலித் ததுவே. 3

கட்டமுங் கழன்றேன் கவலைவிட் டொழிந்தேன்
கலக்கமுந் தீர்ந்தனன் பிறவிச்
சட்டமுங் கிழித்தேன் தூக்கமுந் துறந்தேன்
சாவையு நோவையுந் தவிர்ந்தேன்
சிட்டமு மடைந்தேன் சிற்சபை யுடையான்
செல்வமெய்ப் பிள்ளையென் றொருபேர்ப்
பட்டமுந் தரித்தே னெனக்கிது போதும்
பண்ணிய தவம்பலித் ததுவே. 4

சமரச நிலை

சித்தி புரத்தே தினந்தோறுஞ் சீர்கொளருட்
சத்திவிழா நீடித் தழைத்தோங்க—எத்திசையில்
உள்ள வரும்வந்தே யுவகை யுறுகமதத்
துள்ள லொழிக தொலைந்து. 1

கருணையிலா ஆட்சி கடுகி யொழிக
அருணயந்த நன்மார்க்க ராள்க—தெருணயந்த
நல்லோர் நினைத்த நலம்பெறுக நன்றுநினைத்
தெல்லோரும் வாழ்க விசைந்து. 2

செத்தவர்க ளெல்லாந் திரும்ப வெழுந்துவரச்
சித்தம்வைத்துச் செய்கின்ற சித்தியனே—சுத்தசிவ
சன்மார்க்க சங்கத் தலைவனே நிற்போற்றும்
என்மார்க்க நின்மார்க்க மே. 3

நோவாது நோன்பெனைப்போல் நோற்றவரு மெஞ்ஞான்றும்
சாவா வரமெனைப்போற் சார்ந்தவருந்—தேவாநின்
பேரருளை யென்போலப் பெற்றவரு வெவ்வுலகில்
யாருளர்நீ சற்றே யறை! 4

தலைவி பாங்கிக் குரைத்தல்

வேதாந்த நிலையொடு சித்தாந்த நிலையும்
மேவும் பொதுநடம் நான்காணல் வேண்டும்
நாதாந்தத் திருவீதி நடப்பாயோ தோழி
நடவாம லென்மொழி கடப்பாயோ தோழி. 1

தொம்பத வுருவொடு தற்பத வெளியிற்
 றேன்றசி பதநடம் நான்காணல் வேண்டும்
எம்பத மாகி யிசைவாயோ தோழி
 இசையாமல் வீணிலே யசைவாயோ தோழி 2

சின்மய வெளியிடைத் தன்மய மாகித்
 திகழும் பொதுநடம் நான்காணல் வேண்டும்
என்மய மாகி யிருப்பாயோ தோழி
 இச்சை மயமா யிருப்பாயோ தோழி. 3

நவநிலை மேற்பர நாதத் தலத்தே
 ஞானத் திருநடம் நான்காணல் வேண்டும்
மவுனத் திருவீதி வருவாயோ தோழி
 வாராமல் வீண்பழி தருவாயோ தோழி. 4

துரியத்திற் கப்பாலுந் தோன்றும் பொதுவில்
 ஜோதித் திருநடம் நான்காணல் வேண்டும்
கரியைக்கண் டாங்கது காண்பாயோ தோழி
 காணாது பொய்ப்பணி பூண்பாயெர தோழு. 5

பாங்கி தலைவிபெற்றி யுரைத்தல்

புல்லவரே பொய்யுலக போகமுற விழைவார்
 புண்ணியரே சிவபோகம் பொருந்துதற்கு விழைவார்
கல்லவரே மணியிவரே யென்றறிந்தா ளதனாற்
 கனவிடையும் பொய்யுறவு கருதுகிலாள் சிறிதும்
நல்லவரே யெனினுமுமை நாடாரே லவரை
 நன்குமதி யாளிவளை நண்ணவெண்ண முளதோ
வல்லவரே நுமதுதிரு வாய்மலர வேண்டும்
 வயங்குதிரு மணிமன்றில் வாழ்பெரிய துரையே. 1

தத்துவருந் தத்துவஞ்செய் தலைவர்களும் பிறருந்
தனித்தனியே வலிந்துவந்து தன்னெதிர்நிற் கின்றார்
எத்துணையும் மற்றவரை யேறெடுத்துப் பாராள்
இருவிழிக ணீர்சொரிவா ளென்னுயிர்நா யகனே
ஒத்துயிரிற் கலந்துகொண்ட வுடையாயென் றுமையே
ஓதுகின்றா ளிவளளவி னுத்தமரே யுமது
சித்தமெது தேவர்திரு வாய்மலர வேண்டுஞ்
சிற்சபையிற் பொற்சபையிற் றிகழ்பெரிய துரையே

அன்னையைக்கண் டம்மாநீ யம்பலத்தென் கணவர்
அடியவளேல் நிகவருக வல்லளெனி லிங்கே
என்னையுனக் கிருக்கின்ற தேகுகவென் றுரைப்பாள்
இச்சையெலா மும்மிடத்தே யிசைந்தனளிங் கிவளை
முன்னையளென் றெண்ணுதிர் தாழ்த்திருப்பி ரானல்
முடுகியுயிர் விடுத்திடுவாள் கடுகிவர லுளதேல்
மன்னவரே யுமதுதிரு வாய்மலர வேண்டும்
வயங்குதிரு மணிமன்றில் வாழ்பெரிய துரையே. 3

என்னுயிரிற் கலந்துகொண்டா ரவரிலைஃ தவர்தாம்
இருக்கவிடம் புனைகவென்றா ளிச்சைமய மாகித்
தன்னுயிர்தன் னுடல்மறந்தா ளிருந்தறியாள்படுத்துந்
தரித்தறியா ளெழுந்தெழுந்து தனித்தொருசார் திரிவாள்
அன்னமுண வழைத்தாலுங் கேட்பதிலா ளுலகில்
அணங்கனையா ரதிசயிக்குங் குணங்கள்பல பெற்றாள்
மின்னிவளை விழைவதுண்டேல் வாய்மலர வேண்டும்
மெய்ப்பொதுவில் நடம்புரிய மிகப்பெரியு துரையே.

அம்பலத்தே நடம்புரியு மெனதுதனித் தலைவர்
அன்புடனென் னுளங்கலந்தே அருட்பெருஞ் ஜோதியினால்
தம்பலத்தே பெரும்போகந் தந்திடுவா ரிதுதான்
சத்தியஞ்சத் தியமதனாற் சார்ந்தவர்தா மிருக்க
எம்பலத்தே மலரணையைப் புனைகவெனப் பலகால்
இயம்புகின்றாள் இவளளவி லிசைந்துநும தருளாஞ்
செம்பலத்தே யுறுதருணம் வாய்மலர வேண்டுஞ்
சிற்சபைபொற் சபையோங்கித் திகழ்பெரிய துரையே

தலைவி தலைவன்செயலைத் தாய்க்குரைத்தல்

அந்நாள்வந் தென்றனை யாண்டருள் செய்த
ஐய ரமுதரென் னப்ப ரழகர்
நன்னாள் கழிக்கின்ற நங்கைய ரோடு
நானம் பலம்பாடி நண்ணுறும் போது
பின்னா ளென்றெண்ணிப் பிதற்றாதே பெண்ணே
பேரருட் ஜோதி பெருமணஞ் செய்நாள்
இந்நாளே யென்கின்றா ரென்னடி யம்மா
என்கை பிடிக்கின்றா ரென்னடி யம்மா. 1

மறப்பற்ற நெஞ்சிடை வாழ்கின்ற வள்ளல்
மலப்பற் றறுத்தவர் வாழ்த்து மணாளர்
சிறப்புற்ற மங்கையர் தம்மொடு நான்றான்
சிற்றம் பலம்பாடிச் செல்கின்ற போது
புறப்பற் றகற்றத் தொடங்காத பெண்ணே
புலையகப் பற்றை யறுத்தாய் நினக்கே
இறப்பற்ற தென்கின்றா ரென்னடி யம்மா
என்கை பிடிக்கின்றா ரென்னடி யம்மா. 2

நற்றாய் செவிலிக்குக் கூறல்

சத்திய ஞான சபாபதி யெனக்கே
தனிப்பதி யாயின னென்றாள்
நித்திய வாழ்வு பெற்றுநா னின்ப
நிலைதனில் நிறைந்தன னென்றாள்
பித்திய லுலகிர் காண்மினோ சித்திப்
பேறெலா மென்வசத் தென்றாள்
எத்திசை யீரு மொத்திவண் வருக
வென்றன ளெனதுமெல் லியலே. 1

வாழிமா மணிமன் றிறைவனே யெனக்கு
மாலைவந் தணிந்தன னென்றாள்
ஊழிதோ றூழி யுலவினு முலவா
வுடம்பெனக் களித்தன னென்றாள்
ஆழிசூ முலகோ டண்டங்க ளனைத்து
மளிக்கவென் றருளின னென்றாள்
ஏழியன் மாட மிசையுற வைத்தா
னென்றன ளெனதுமெல் லியலே. 2

அநுபவமாலை

அம்பலத்தே திருநடஞ்செய் யடிமலரென் முடிமேல்
அணிந்துகொண்டே னன்பொடுமென் னுருயிர்க்குமணிந்தேன்
எம்பரத்தே மணக்குமந்த மலர்மணத்தைத் தோழி
என்னுரைப்பே னுரைக்கவென்று லென்னளவன் றதுவே

வம்பிசைத்தெ னன்றடிநீ யென்னருகே யிருந்துன்
மணிநாசி யடைப்பதனைத் திறந்துமுகந் தறிகாண்
நம்புறுபார் முதல்நாத வரையுளநாட் டவரும்
நன்குமுகர்ந் தனர்வியந்தார் நன்மணமீ தெனவே. 1

எல்லாஞ்செய் வல்லதுரை யென்னைமணம் புரிந்தார்
எவ்வுலகில் யாரெனக்கிங் கிடுரைநீ தோழி
நல்லாய்மிக் கூற்றுடையா ரிந்திரர்மா முனிவர்
நான்முகர்நா ரணரெல்லாம் வான்முகராய் நின்றே
பல்லாரி லிவள்புரிந்த பெருந்தவத்தை நம்மாற்
பகர்வரிதென் கின்றார்சிற் பதியில்நடம் புரியும்
வல்லானை மணந்திடவும் பெற்றனளிங் கிவளே
வல்லாளென் றுரைக்கின்றார் நல்லார்கள் பலரே. 2

அன்னமுண வழைக்கின்றாய் தோழியிங்கே நான்றான்
அம்பலத்தே யாடுகின்ற அண்ணலடி மலர்த்தேன்
உன்னைநினைத் துண்டேனென் னுள்ளகத்தே வாழும்
ஒருதலைமைப் பெருந்தலைவ ருடையவருட் புகழாம்
இன்னமுதி லென்னுடையன் பென்னுநறுங் கனியின்
இரதமுமென் றனிக்கணவ ருருக்காட்சி யெனுமோர்
கன்னலுளே தனித்தெடுத்த தேம்பாகுங் கலந்தே
களித்துண்டேன் பசிசிறிதுங் கண்டிலனுள் ளகத்தே

கற்பூர மணக்கின்ற தென்னுடம்பு முழுதுங்
கணவர்திரு மேனியிலே கலந்தமண மதுதான்
இற்பூத மணம்போலே மறைவதன்று கண்டாய்
இயற்கைமணந் துரியநிறை யிறைவடிவத் துளதே

பொற்பூவு நறுமணமுங் கண்டறியா ருலகர்
புண்ணியனுர் திருவடிவி னண்ணியவா றதுவே
நற்பூதி யணிந்ததிரு வடிவுமுற்றுந் தோழி
நான்கண்டேன் நான்புணர்ந்தே னதுவா னேனே.

அனுபவ மாலை

மாலையிலே யுலகியலார் மகிழ்நரோடு கலத்தல்
வழக்கமது கண்டனநீ மணவாள ருடனே
காலையிலே கலப்பதற்கிங் கெனைப் புறம்போ வென்ருய்
கண்டிலனீ ததிசயமென் றுரையேலென் ரேழி
ஓலையிலே பொறித்ததைநீ யுன்னுளத்தே கருதி
உழல்கின்ரு யாதலிலிவ் வுளவறியாய் தருமச்
சாலையிலே சமரசசன் மார்க்கசங்கந் தனிலே
சற்றிருந்தா யெனிலிதனை யுற்றுணர்வாய் காணே.

அறியாத பருவத்தே யென்னைவலிந் தழைத்தே
ஆடல்செயுந் திருவடிக்கே பாடல்செயப் பணித்தார்
செறியாத மனச்சிறியேன் செய்தபிழை யெல்லாந்
திருவிளையாட் டெனக்கொண்டே திருமாலை யணிந்தார்
பிறியாம லென்னுயிரிற் கலந்துகலந் தினிக்கும்
பெருந்தலைவர் நடராய ரெனைப்புணர்ந்தா ரருளாம்
அறிவாளர் புறப்புணர்ச்சி யெனையழியா தோங்க
அருளியதீண் டகப்புணர்ச்சி யளவுரைக்க லாமே. 2

உத்தரஞான சிதம்பர மான்மியம்

ஒத்தா ரையுமிழிந் தாரையு நேர்கண் டுவக்கவொரு
மித்தா ரைவாழ்விப்ப தேற்ருர்க் கமுதம் விளம்பியிடு
வித்தாரைக் காப்பது சித்தாடு கின்றது மேதினிமேற்
செத்தாரை மீட்கின்றது உத்தர ஞான சிதம்பரமே. 1

கொல்லா நெறியது கோடா நிலையது கோபமிலார்
சொல்லா லுவந்தது சுத்தசன் மார்க்கந் துணிந்ததுல
கெல்லா மளிப்ப திறந்தா லெழுப்புவ தேதமொன்றுஞ்
சொல்லா வளத்தினது உத்தர ஞான சிதம்பரமே. 2

ஏகாந்த மாகிவெளியா யிருந்ததிங் கென்னை முன்னே
மோகாந்த காரத்தின் மீட்டதென் னெஞ்ச முயங்கிரும்பின்
மாகாந்த மானது வல்வினை தீர்த்தெனை வாழ்வித்தென்றன்
தேகாந்த நீக்கியது உத்தர ஞான சிதம்பரமே. 3

திருவருட்பேறு

சீர்விளங்கு சுத்தத் திருமேனி தான்றரித்துப்
பார்விளங்க நான்படுத்த பாயலிலே—தார்விளங்க
வந்தா யெனைத்தூக்கி மற்றொருசார் வைத்தனையே
எந்தாய்நின் னுள்ள மறியேன். 1

வாழி யெனைத் தூக்கிவைத்த கர தலங்கள்
வாழியெலாம் வல்ல மணிமன்றம்—வாழிநடம்
வாழி அருட்ஜோதி வாழி நடராஜன்
வாழிசிவ ஞான வழி. 2

இன்பத்திறன்

நாடுகலந் தாள்கின்றோ ரெல்லாரும் வியப்ப
நண்ணியெனை மாலையிட்ட நாயகனே நாட்டில்
ஈடுகரைந் திடற்கரிதாந் திருச்சிற்றம் பலத்தே
இன்பநடம் புரிகின்ற இறையவனே யெனைநீ

பாடுகவென் றேடுகலந் தாடுகவென் வெனக்கே
பணியிட்டாய் நான்செய்பெரும் பாக்கியமென் றுவந்தேன்
கோடுதவ ருதுணைநான் பாடுதற்கிங் கேற்ற
குணப்பொருளு மிலக்கியமுங் கொடுத்துமகிழ்ந் தருளே. 1

வாக்கொழிந்து மனமொழிந்து மதியொழிந்து மதியின்
வாதனையு மொழிந்தறிவாய் வயங்கிநின்ற விடத்தும்
போக்கொழிந்தும் வரவொழிந்தும் பூரணமா யதுவும்
போனபொழு துள்ளபடி புகலுவதெப் படியோ
நீக்கொழிந்த நிறைவேமெய்ந் நிலையேயென் னுடைய
நேயமே யானந்த நிருத்தமிடும் பதியே
ஏக்கொழிந்தா ருளத்திருக்கு மிறையேயென் திருவே
எல்லாமா யல்லதுமா யிலங்கியமெய்ப் பொருளே. 2

சிவயோக நிலை

மதிமண்ட லத்தமுதம் வாயார வுண்டே
பதிமண்ட லத்தரசு பண்ண—நிதிய
நவநேய மாக்கு நடராஜ னேயெஞ்
சிவனே கதவைத் திற. 1

இந்தா ரருளமுதம் யானருந்தல் வேண்டுமிங்கே
நந்தா மணிவிளக்கே ஞானசபை—எந்தாயே
கோவே யெனது குருவே யெனையாண்ட
தேவே கதவைத் திற. 2

சாகா வருளமுதந் தானருந்தி நான்களிக்க
நாகா திபர்சூழ் நடராஜா—ஏகா
பவனே பரனே பராபரனே யெங்கள்
சிவனே கதவைத் திற. 3

அருளோங்கு தண்ணமுத மன்பா லருந்தி
மருணீங்கி நான்களித்து வாழப்—பொருளாந்
தவநேயர் போற்றுந் தயாநிதியே யெங்கள்
சிவனே கதவைத் திற. 4

வானோர்க் கரிதெனவே மாமறைகள் சாற்றுகின்ற
ஞானே தயவமுத நானருந்த—ஆனத்
திறப்பா வலர்போற்றுஞ் சிற்றம் பலவா
சிறப்பா கதவைத் திற. 5

எல்லாமும் வல்லசித்தென் றெல்லா மறைகளுஞ்சொல்
நல்லா ரமுதமது நானருந்த—நல்லார்க்கு
நல்வாழ் வளிக்கு நடராயா மன்றோங்கு
செல்வா கதவைத் திற. 6

ஏழ்நிலைக்கு மேற்பா லிருக்கின்ற தண்ணமுதம்
வாழ்நிலைக்க நானுண்டு மாண்புறவே—கேழ்நிலைக்க
ஆவாவென் றென்னையுவந் தாண்டதிரு வம்பலமா
தேவா கதவைத் திற. 7

ஈன வுலகத் திடர்நீங்கி யின்புறவே
ஞான வமுதமது நானருந்த—ஞான
உருவே யுணர்வே யொளியே வெளியே
திருவே கதவைத் திற. 8

திரையோ தசத்தே திகழ்கின்ற வென்றே
வரையோது தண்ணமுதம் வாய்ப்ப—உரையோது
வானேயெம் மானேயெம் மானே மணிமன்றிற்
றேனே கதவைத் திற. 9

ஜோதிமலை மேல்வீட்டிற் றூய திருவமுதம்
மேதினிமே ஞானுண்ண வேண்டினேன்—ஓதரிய
ஏகா வனேகா வெழிற்பொதுவில் வாழ்ஞான
தேகா கதவைத் திற. 10

நடராஜபதி மாலை

அருணிலை விளங்குசிற் றம்பல மெனுஞ்சிவ
சுகாதீத வெளி நடுவிலே
அண்டபகி ரண்டகோ டிகளுஞ் சராசர
மனைத்துமவை யாக்கன் முதலாம்
பொருணிலைச் சத்தரொடு சத்திக ளனந்தமும்
பொற்பொடு விளங்கி யோங்கப்
புறப்புற மகப்புறம் புறமக மிவற்றின்மேற்
பூரணா கார மாகித்
தெருணிலைச் சச்சிதா னந்தகிர ணாதிகள்
சிறப்பமுத லந்த மின்றித்
திகழ்கின்ற மெய்ஞ்ஞான சித்தியனு பவநிலை
தெளிந்திட வயங்கு சுடரே
சுருணிலைக் குழலம்மை யானந்த வல்லிசிவ
சுந்தரிக் கினிய துணையே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
ஜோதிநட ராஜ பதியே. 1

கரையிலாக் கடலிலே கடலுப்பி லேகடற்
கடையிலே கடலிடை யிலே
கடன்முதலி லேகடற் றிரையிலே நுரையிலே
கடலோசை யதனடு விலே

அருளோங்கு தண்ணமுத மன்பா லருந்தி
மருணீங்கி நான்களித்து வாழப்--பொருளாந்
தவநேயர் போற்றுந் தயாநிதியே யெங்கள்
சிவனே கதவைத் திற. 4

வானோர்க் கரிதெனவே மாமறைகள் சாற்றுகின்ற
ஞானோ தயவமுத நானருந்த—ஆனத்
திறப்பா வலர்போற்றுஞ் சிற்றம் பலவா
சிறப்பா கதவைத் திற. 5

எல்லாமும் வல்லசித்தென் றெல்லா மறைகளுஞ்சொல்
நல்லா ரமுதமது நானருந்த—நல்லார்க்கு
நல்வாழ் வளிக்கு நடராயா மன்றோங்கு
செல்வா கதவைத் திற. 6

ஏழ்நிலைக்கு மேற்பா லிருக்கின்ற தண்ணமுதம்
வாழ்நிலைக்க நானுண்டு மாண்புறவே—கேழ்நிலைக்க
ஆவாவென் றென்னையுவந் தாண்டதிரு வம்பலமா
தேவா கதவைத் திற. 7

ஈன வுலகத் திடர்நீங்கி யின்புறவே
ஞான வமுதமது நானருந்த—ஞான
உருவே யுணர்வே யொளியே வெளியே
திருவே கதவைத் திற. 8

திரையோ தசத்தே திகழ்கின்ற வென்றே
வரையோது தண்ணமுதம் வாய்ப்ப—உரையோது
வானேயெம் மானேயெம் மானே மணிமன்றிற்
றேனே கதவைத் திற. 9

ஜோதிமலை மேல்வீட்டிற் றாய திருவமுதம்
மேதினிமே ஞுண்ண வேண்டினேன்—ஓதரிய
ஏகா வனேகா வெழிற்பொதுவில் வாழ்ஞான
தேகா கதவைத் திற. 10

நடராஜபதி மாலை

அருணிலை விளங்குசிற் றம்பல மெனுஞ்சிவ
சுகாதீத வெளி நடுவிலே
அண்டபகி ரண்டகோ டிகளுஞ் சராசர
மனைத்துமவை யாக்கன் முதலாம்
பொருணிலைச் சத்தரொடு சத்திக ளனந்தமும்
பொற்பொடு விளங்கி யோங்கப்
புறப்புற மகப்புறம் புறமக மிவற்றின்மேற்
பூரணா கார மாகித்
தெருணிலைச் சச்சிதா னந்தகிர ணாதிகள்
சிறப்பமுத லந்த மின்றித்
திகழ்கின்ற மெய்ஞ்ஞான சித்தியனு பவநிலை
தெளிந்திட வயங்கு சுடரே
சுருணிலைக் குழலம்மை யானந்த வல்லிசிவ
சுந்தரிக் கினிய துணையே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
ஜோதிநட ராஜ பதியே. 1

கரையிலாக் கடலிலே கடலுப்பி லேகடற்
கடையிலே கடலிடை யிலே
கடன்முதலி லேகடற் றிரையிலே நுரையிலே
கடலோசை யதனடு விலே

வரையிலா வெள்ளப் பெருக்கத்தி லேவட்ட
வடிவிலே வண்ண மதிலே
மற்றதன் வளத்திலே யுற்றபல சத்தியுள்
வயங்கியவை காக்கு மொளியே

புரையிலா வொருதெய்வ மணியேயெ னுள்ளே
புகுந்தறி வளித்த பொருளே
பொய்யாத செல்வமே நையாத கல்வியே
புடம்வைத் திடாத பொன்னே

மரையிலா வாழ்வே மறைப்பிலா வைப்பே
மறுப்பிலா தருள் வள்ளலே
மணிமன்றி னடுநின்ற வொருதெய்வ மேயெலாம்
வல்லநட ராஜ பதியே. 2

ஒருபிரம னண்டங்க ளடிமுடிப் பெருமையே
உன்ன முடியா வவற்றின்
ஓரா யிரங்கோடி மாலண்ட மரனண்டம்
உற்றகோ டாகோ டியே

திருகலறு பலகோடி யீசனண் டஞ்சதா
சிவவண்ட மெண்ணி றந்த
திகழ்கின்ற மற்றைப் பெருஞ்சத்தி சத்தர்தஞ்
சிரண்ட மென்புக லுவேன்

உருவுறுமிவ் வண்டங்க ளத்தனையும் அருள்வெளியில்
உறுசிறு வணுக்க ளாக
ஊடசைய வவ்வெளியி னடுநின்று நடனமிடும்
ஒருபெருங் கருணை யரசே

மருவியெனை யாட்கொண்டு மகனாக்கி யழியா
வரந்தந்த மெய்த்தந் தையே
மணிமன்றி னடுநின்ற வொருதெய்வ மேயெலாம்
வல்லநட ராஜ பதியே. 3

துன்பெலாந் தீர்ந்தன சுகம்பலித் ததுநினைச்
சூழ்ந்ததரு ளொளி நிறைந்தே
சுத்தசன் மார்க்கநிலை யனுபவம் நினக்கே
சுதந்தரம தான துலகில்
வன்பெலா நீக்கிநல் வழியெலா மாக்கிமெய்
வாழ்வெலாம் பெற்று மிகவும்
மன்னுயி ரெலாங்களித் திடநினைத் தனையுன்றன்
மனநினைப் பின்படிக்கே
அன்பநீ பெறுகவுல வாதுநீ டூழிவிளை
யாடுக அருட் ஜோதியாம்
ஆட்சிதந் தோமுனைக் கைவிடோங் கைவிடோம்
ஆணைநம் மாணை யென்றே
இன்புறத் திருவாக் களித்தெனுள் ளேகலந்
திசைவுட னிருந்த குருவே
எல்லாஞ்செய் வல்லசித் தாகிமணி மன்றினில்
இலங்குநட ராஜ பதியே. 4

ஓங்கிய பெருங்கருணை பொழிகின்ற வானமே
ஒருமைநிலை யுறுஞா னமே
உபயபத சததளமு மெனதிதய சததளத்
தோங்கநடு வோங்கு சிவமே

பாங்கிய லளித்தென்னை யறியாத வொரு சிறிய
பருவத்தி லாண்ட பதியே
பாசநெறி செல்லாத நேசர்தமை யீசராம்
படிவைக்க வல்ல பரமே
ஆங்கியல்வ தென்றுமற் றிங்கியல்வ தென்றும்வா
யாடுவோர்க் கரிய சுகமே
ஆனந்த மயமாகி யதுவுங் கடந்தவெளி
யாகிநிறை கின்ற நிறைவே
தூங்கிவிழு சிறியனைத் தாங்கியெழு கென்றெனது
தூக்கந் தொலைத்த துணையே
துரியவெளி நடுநின்ற பெரியபொரு ளேயருட்
ஜோதிநட ராஜ குருவே. 5

சற்குருமணி மாலை

மாற்றறி யாத செழும்பசும் பொன்னே
மாணிக்க மேசுடர் வண்ணக் கொழுந்தே
கூற்றறி யாத பெருந்தவ ருள்ளக்
கோயி லிருந்த குணப்பெருங் குன்றே
வேற்றறி யாதசிற் றம்பலக் கனியே
விச்சையில் வல்லவர் மெச்சும் விருந்தே
சாற்றறி யாதவென் சாற்றுங் களித்தாய்
தனிநட ராஜவென் சற்குரு மணியே. 1

ஏகாவ னேகாவென் றேத்திடு மறைக்கே
எட்டாத நிலையேநா னெட்டிய மலையே
ஓகாள மதங்களை முழுவது மாற்றி
ஒருநிலை யாக்கவென் றுரைத்தமெய்ப் பரமே

ஈகாத லுடையவர்க் கிருநிதி யளித்தே
இன்புறப் புரிகின்ற வியல்புடை யிறையே
சாகாத வரந்தந்திங் கெனைக்காத்த வரசே
தனிநட ராஜவென் சற்குரு மணியே. 2

உறுதி கூறல்

கட்டோடே கனத்தோடே வாழ்கின்றோ மென்பீர்
கண்ணோடே கருத்தோடே கருத்தனைக் கருதீர்
பட்டோடே பணியோடே திரிகின்றீர் தெருவில்
பசியோடே வந்தாரைப் பார்க்கவு நேரீர்
கொட்டோடே முழக்கோடே கோலங்காண் கின்றீர்
குணத்தோடே குறிப்போடே குறிப்பதைக் குறியீர்
எட்டோடே யிரண்டுசேர்த் தெண்ணவு மறியீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே. 1

துன்மார்க்க நடையிடைத் தூங்குகின் றீரே
தூக்கத்தை விடுகின்ற துணையொன்றுங் கருதீர்
சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்திட விழையீர்
சாவையும் பிறப்பையுந் தவிர்ந்திட விரும்பீர்
பன்மார்க்கஞ் செல்கின்ற படிற்றுள மடக்கீர்
பசித்தவர் தம்முகம் பார்த்துண வளியீர்
என்மார்க்க மெச்சுகம் யாதுநும் வாழ்க்கை
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே. 2

சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச்சண் டையிலே
ஆதியிலே யபிமானித் தலைகின்ற வுலகீர்
அலைந்தலைந்து வீணேநீ ரழிதலழ கலவே

நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே ஞான
நிருத்தமிடுந் தனித்தலைவ ரொருத்தரவர் தாமே
விதியிலே அருட்ஜோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணமிது கூவுகின்றே னுமையே. 3

உடம்புவரு வகையறியீ ருயிர்வகையை யறியீர்
உடல்பருக்க வுண்டுநித முறங்குதற்கே யறிவீர்
மடம்புகுபேய் மனத்தாலே மயங்குகின்றீர் மனத்தை
வசப்படுத்தீர் வசப்படுத்தும் வழிதுறைகற் றறியீர்
இடம்பெறுபொய் வாழ்க்கையிலே யின்பதுன்ப மடுத்தே
எண்ணியெண்ணி யிளைக்கின்றீ ரேழையுல கீரே
நடம்புரியென் றனித்தந்தை வருகின்ற தருணம்
நண்ணியது நண்ணுமினோ புண்ணியஞ்சார் வீரே. 4

சுத்தசிவ நிலை

கண்ணிற் கலந்தான் கருத்திற் கலந்தானென்
எண்ணிற் கலந்தே யிருக்கின்றான்—பண்ணிற்
கலந்தானென் பாட்டிற் கலந்தா னுயிரிற்
கலந்தான் கருணை கலந்து. 1

ஒன்றே சிவமென் றுணர்ந்தே னுணர்ந்தாங்கு
நின்றேமெய்ஞ் ஞான நிலைப்பெற்றேன்—நன்றேமெய்ச்
சித்தியெலாம் பெற்றேன் றிருவம் பலத்தாடி
பத்தியெலாம் பெற்ற பலன். 2

பன்மார்க்க மெல்லாம் பசையற் றொழிந்தனவே
சன்மார்க்க மொன்றே தழைத்ததுவே—சொன்மார்க்கத்
தெல்லா வுலகு மிசைந்தனவே யெம்பெருமான்
கொல்லா நெறியருளைக் கொண்டு. 3

சாத்திரங்க ளெல்லாந் தடுமாற்றஞ் சொல்வதன்றி
நேத்திரங்கள் போற்காட்ட நேராவே—நேத்திரங்கள்
சிற்றம் பலவன் றிருவருள்சீர் வண்ணமென்றே
உற்றிங் கறிந்தே னுவந்து. 4

ஆளுடையா னம்முடைய வப்பன் வருகின்ற
நாளெதுவோ வென்று நலியாதீர்—நீள
நினையாதிர் சத்தியநா னேர்ந்துரைத்தே னிந்நாள்
அணையான் வருகின்றா னய்ந்து. 5

ஞானசரியை

நினைந்துநினைந் துணர்ந்துணர்ந்து நெகிழ்ந்துநெகிழ்ந் தன்பே
நிறைந்துநிறைந் தூற்றெழுங்கண் ணீரதனா லுடம்பு
நனைந்துநனைந் தருளமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே யென்னுரிமை நாயகனே யென்று
வணைந்துவணைந் தேத்துதுநாம் வம்மினுல கியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாங் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல் கின்றேன்
பொற்சபையிற் சிற்சபையிற் புகுந்தருண மிதுவே.

பேரன்புக் கண்ணிகள்

கற்றதென்றுஞ் சாகாத கல்வியென்று கண்டுகொண்டுன்
அற்புதச்சிற் றம்பலத்தில் அன்புவைத்தேன் ஐயாவே.

ஈடணைகள் நீக்கிநமக் கின்பளிக்கு மென்றுமன்றில்
ஆடுந் திருவடிக்கே ஆசைவைத்தேன் ஐயாவே. 2

நானந்த மெய்தா நலம்பெறவே யெண்ணிமன்றில்
ஆனந்த நாடகத்துக் கன்புவைத்தேன் ஐயாவே 3

வாடலறச் சாகா வரங்கொடுக்கு மென்றுமன்றில்
ஆடலடிப் பொன்மலர்க்கே அன்புவைத்தேன் ஐயாவே.
பொற்புறவே பொன்றுப் பொருளளிக்கு மென்றுமன்றில்
அற்புதப்பொற் சேவடிக்கே அன்புவைத்தேன் ஐயாவே.
ஈன மறுத்தென்றும் இறவாமை நல்குமென்றே
ஞானமணி மன்றிடத்தே நண்புவைத்தேன் ஐயாவே.6
ஓர்துணைநின் பொன்னடியென் றுன்னுகின்றே னுன்னையன்றி
யார்துணையும் வேண்டேனென் அன்புடைய ஐயாவே.7
பூசைசெய்து பெற்றவுன் றன் பொன்னடிமே லன்றியயல்
ஆசையொன்று மில்லையெனக் கன்புடைய ஐயாவே. 8
இச்சைநின்மே லன்றியெனக் கெள்ளளவும் வேறுமொன்றில்
இச்சையிலை நின்னுணை யென்னருமை ஐயாவே. 9
எப்படி நின்னுள்ள மிருக்கின்ற தென்னளவில்
அப்படிநீ செய்கவெனக் கன்புடைய ஐயாவே. 10
எவ்வண்ணம் நின்கருத்திங் கென்னளவி லெண்ணியதோ
அவ்வண்ணஞ் செய்கவெனக் கன்புடைய ஐயாவே. 11
தேசுறுநின் றண்ணருளாந் தெள்ளமுதங் கொள்ளவுள்ளே
ஆசைபொங்கு கின்றதெனக் கன்புடைய ஐயாவே. 13
நாசமிலா நின்னருளாம் ஞானமருந் துண்ணவுள்ளே
ஆசைபொங்கு கின்றதெனக் கன்புடைய ஐயாவே. 14

நெஞ்சொடு கிளத்தல்

அடங்குநா ளில்லா தமர்ந்தானைக் காணற்கே
தொடங்குநாள் நல்ல தன்றோ—நெஞ்சே
தொடங்குநாள் நல்ல தன்றோ. 1

வல்லவ ரெல்லாமும் வல்லானைக் காணற்கே
நல்லநா ளெண்ணிய நாள்—நெஞ்சே
நல்லநா ளெண்ணிய நாள். 2

காலங் கடந்த கடவுளைக் காணற்குக்
காலங் கருதுவ தேன்—நெஞ்சே
காலங் கருதுவ தேன். 3

ஆல மமுதாக்கு மண்ணலைக் காணற்குக்
காலங் கருதுவ தேன் நெஞ்சே
காலங் கருதுவ தேன். 4

தடையாது மில்லாத் தலைவனைக் காணற்கே
தடையாது மில்லை கண்டாய்—நெஞ்சே
தடையாது மில்லை கண்டாய். 5

கையு ளமுதத்தை வாயு ளமுதாக்கப்
பையு ளுனக் கென்னையோ—நெஞ்சே
பையு ளுனக் கென்னையோ. 6

என்னுயிர் நாதனை யான்கண் டனைதற்கே
உன்னுவ தென்னை கண்டாய்—நெஞ்சே
உன்னுவ தென்னை கண்டரய் 7

நான்பெற்ற செல்வத்தை நான்பற்றிக் கொள்ளற்கே
ஏன்பற்று வாயென்ப தார்—நெஞ்சே
ஏன்பற்று வாயென்ப தார். 8

தத்துவா தீதத் தலைவனைக் காணற்குத்
தத்துவ முன்னுவ தேன்—நெஞ்சே
தத்துவ முன்னுவ தேன். 9

ஒக்க வமுதத்தை யுண்டோ மினிச்சற்றும்
விக்கல் வராது கண்டாய்—நெஞ்சே
விக்கல் வராது கண்டாய். 10

மெய்யருள் வியப்பு

எனக்கு முனக்கும் இசைந்த பொருத்தம் என்ன பொருத்தமோ
இந்தப் பொருத்தம் உலகில் பிறருக் கெய்தும் பொருத்தமோ.

தனக்கு நிகரிங் கில்லா துயர்ந்த தம்ப மொன்றதே
தாவிப் போகப் போக நூலின் தரத்தில் நின்றதே
கனக்கத் திகைப்புற் றங்கே நானுங் கலங்கி வருந்தவே
கலக்க நீக்கித் தூக்கி வைத்தாய் நிலை பொருந்தவே. எ

நினைக்க நினைக்க தித்திப் பெனது நினைவிற் கொடுக்குதே
நின்பா லன்றிப் பிறர்பாற் செல்ல நெஞ்ச நடுக்குதே
எனைத்துன் பொழித்தாட் கொண்ட நின்னை யன்னை யென்பனோ
எந்தா யன்பிலேனின் னடிக்கு முன்னை யன்பனே. எ

வள்ளா லுன்னைப் பாடப் பாட வாய் மணக்குதே
வஞ்ச வினைக ளெனைவிட் டோடித் தலை வணக்குதே.
எள்ளா துனது புகழைக் கேட்கச் செவி நயக்குதே
எந்தாய் தயவை எண்ணுந் தோறும் உளம் வியக்குதே எ

இறைவா நின்னைக் கனவி லேனும் யான் மறப்பனோ
எந்தா யுலகத் தவர்கள் போல்நா னினி யிறப்பனோ
மறைவா சகமும் பொருளும் பயனு மதிக்கு மதியிலே
வாய்க்கக் கருணை புரிந்துவைத்தா யுயர்ந்த பதியிலே. எ

சுத்த சிவசன் மார்க்க நீதி ஜோதி போற்றியே
சுகவாழ் வளித்த சிற்றம் பலத்து ஜோதி போற்றியே
சுத்த சுடர்ப்பொற் சபையி லாடுஞ் ஜோதி போற்றியே
ஜோதி முழுதும் விளங்க விளங்குஞ் ஜோதி போற்றியே.

ஆனந்தக் களிப்பு

ஜோதியுட் ஜோதியுட் ஜோதி—சுத்த
ஜோதி சிவஜோதி ஜோதியுட் ஜோதி
ஜோதியுட் ஜோதியுட் ஜோதி.

சிவமே பொருளென்று தேற்றி—என்னைச்
சிவவெளிக் கேறுஞ் சிகரத்தி லேற்றி
சிவமாக்கிக் கொண்டது பாரீர்—திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி ஜோதி

வித்தெல்லா மொன்றென்று நாட்டி—அதில்
விளைவு பலபல வேறென்று காட்டி
சித்தெல்லாந் தந்தது பாரீர்—திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 1

ஆபத்தை நீக்கி வளர்த்தே—சற்றும்
அசையாமல் அவியாம லடியே னுளத்தே
தீபத்தை வைத்தது பாரீர்—திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 2

ஆபத்தை நீக்கி வளர்த்தே—சற்றும்
அசையாமல் அவியாம லடியே னுளத்தே
தீபத்தை வைத்தது பாரீர்—திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 3

மெய்யொன்று சன்மார்க்க மேதான்—என்றும்
விளங்கப் படைப்பாதி மெய்த்தொழில் நீதான்
செய்யென்று தந்தது பாரீர்—திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 4

தருநெறி யெல்லாமுள் வாங்கும்—சுத்த
சன்மார்க்க மென்றோர் தனிப்பேர்கொண் டோங்குந்
திருநெறிக் கேசென்று பாரீர்—திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 5

எம்பொரு ளெம்பொரு ளென்றே—சொல்லும்
எல்லாச் சமயத்துள் எல்லார்க்கும் ஒன்றே
செம்பொரு ளென்பது பாரீர்—திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 6

சைவ முதலாக நாட்டும்—பல
சமயங்க ளெல்லாந் தனித்தனிக் காட்டுந்
தெய்வ மிதுவந்து பாரீர்—திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 7

பேருல கெல்லா மதிக்கத்—தன்
பிள்ளையென் றென்னைப் பெயரிட் டழைத்தே
சீருறச் செய்தது பாரீர்—திருச்
சிற்றம்பலத்தே திருநட ஜோதி. ஜோதி 8

ஜோதியுட் ஜோதியுட் ஜோதி—சுத்த
ஜோதி சிவஜோதி ஜோதியுட் ஜோதி
ஜோதியுட் ஜோதியுட் ஜோதி. 9

அபயம்

அருட்பெருஞ்ஜோதி அபயம் அபயம்
அருட்பெருஞ் ஜோதி அபயம்—அருட்பெருஞ்
ஜோதி அபயஞ் சிற்ஜோதி அபயம்பொற்
ஜோதி அபயந் துணை. 1

துணைவா வபயந் துயரகல வென்பால்
அணைவா யபய மபயம்—பணைவாய்
வடலா வபயம் வரதா வபயம்
நடநா யகாவபய நான். 2

சற்குரு துதிகள்

உலகந் தழைக்க வந்துதித்த வுருவே வருக வோதாதே
உற்றகலைக ளனைத்தினையு முணர்ந்தோய்வருக வொன்றிரண்டற்
றிலகும் பரமானந்தசுக இயல்பே வருக யிம்பர்தமை
இறவாக் கதியி லேற்றுகின்ற யிறையே வருகயென்போல்வார்
கலகந் தவிர்த்துக் கதியளிக்குங் கண்ணே வருக கண்ணிறைந்த
களிப்பே களிப்பி லூறுகின்ற கனிவே வருக கலைமதிதோய்
வலகஞ் செறிந்த வடற்பதியின் வாழ்வே வருக இராமலிங்க
வள்ள லெனுமோர் மாணிக்க மணியே வருக வருகவே.

பொன்னாலே சூழுலகம் புகழுகின்ற
இராமலிங்கப் புனிதஞான
மன்னாலே வாய்மலர்ந்த மன்னருட்பா
மாமுறையை மகிழ்வி னெடு
சொன்னாலே நாவினிக்குங் கேட்டாலே
வுளமினிக்குந் துதித்தபேர்க்கு
முன்னாலே செய்தவினை முற்றொழிந்து
கைகூடு மோக்கந் தானே.

மைக்காலன் றனையுதைத்து மறையவனுக்
கருள்புரிந்த வள்ளன்மீதே
அக்காலம் பெரியரெலா மரியநறுந்
தமிழுரைத்தா ரதனை யோர்ந்தே
இக்காலந் தெளிநடையா லருட்பாவென்
றொருநூலை யியம்ப வுன்னை
முக்கால மறிந்தபிரான் ஏவினனோ
இராமலிங்க முனிவ ரேறே.

தந்தையினுந் தயவுடைய தனிராம
லிங்கஅருட் டலைவா நின்னை
வந்தனைசெய் கின்றவர்கள் வானுலகத்
தின்பமெலாம் வலிய வெய்தி
இந்திரர்போல் நீண்டிருந்திங் கிறுதிதனி
லெவராலு மிசைக்கொ ணாத
சுந்தரமாம் பெரும்போகந் தோய்ந்திருப்பா
ரெனிலுன்சீர் சொல்லற் பாற்றோ.

ஜோதி

ஜோதி ஜோதி ஜோதி சுயஞ்
ஜோதி ஜோதி ஜோதி பரம்
ஜோதி ஜோதி ஜோதி யருள்
ஜோதி ஜோதி ஜோதி சிவம்.

வாமஜோதி சோமஜோதி வானஜோதி ஞானஜோதி
மாகஜோதி யோகஜோதி வாதஜோதி நாதஜோதி
ஏமஜோதி வியோமஜோதி யேறுஜோதி வீறுஜோதி
யேகஜோதி யேகஜோதி யேகஜோதி யேகஜோதி.

ஆதிநீதி வேதனே—ஆடல் நீடு பாதனே
வாதி ஞான போதனே—வாழ்க வாழ்க நாதனே.

சித்திவளாகத் திருமாளிகையில் திருக்காப்பிட்டுக்கொண்ட
காலத்து (ஸ்ரீமுகஹு தைமீ 19௳) அருளிய திருப்பாடல்

பிச்சுலகர் மெச்சப் பிதற்றி நின்ற பேதையனேன்
இச்சையெலாம் எய்த இசைந்தருளிச் செய்தனையே
அச்சமெலாம் தீர்ந்தேன் அருளமுத முண்கின்றேன்
நிச்சலும் பேரானந்த நித்திரை செய்கின்றேனே.

அருட்பெருஞ்ஜோதி! தனிப்பெருங்கருணை!
அருட்பெருஞ்ஜோதி! அருட்பெருஞ்ஜோதி!